பேராசிரியர் தாஹா ஜாபிர் அல்–அல்வானி

# இஸ்லாமிய சிந்தனைச் சீர்திருத்தம்

## நவீன இஸ்லாமிய சிந்தனையின் உரையாடல் வடிவங்கள்

# இஸ்லாமிய சிந்தனைச் சீர்திருத்தம்

## நவீன இஸ்லாமிய சிந்தனையின் உரையாடல் வடிவங்கள்

பேராசிரியர்
தாஹா ஜாபிர் அல்-அல்வானி

தமிழில்:
கலாநிதி பீ.எம்.எம். இர்ஃபான்

# Islamic Thought
# An Approach to Reform

by Taha Jabir Al-Alwani

Originally published (2006) by
The International Institute of Islamic Thought (IIIT)
P.O.Box 669 Herndon, VA 20172 U.S.A.
www.iiit.org

London Office
P.O. Box126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

ISBN 1-56564-426-3

Tamil Edition (2022)
Translated from
إصلاح الفكر الإسلامي - مدخل إلى نظام الخطاب في الفكر الإسلامي المعاصر
(طه جابر العلواني)

by PMM Irfan

ISBN 978-624-5832-06-4

Published by
Fuzin Texts
23/3, Market Road, Dharga Town -12090, Sri Lanka
Cover design by Azar Wazeer
Printed by Millennium Graphics, Maharagama

# *பதிப்புரை*

*‘இஸ்லாமிய சிந்தனைச் சீர்திருத்தம் - நவீன இஸ்லாமிய சிந்தனையின் உரையாடல் வடிவங்கள்’ என்னும் தலைப்பில் ஆன இந்த நூலை வெளியிடுவதில் நாம் அளவிறந்த உவகை கொள்கின்றோம்.*

*நவீன இஸ்லாமிய உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவராக விளங்கிய கலாநிதி தாஹா ஜாபிர் அல்வானி அவர்கள் ஆற்றியுள்ள அரும் பணிகள் பல. அவற்றுள் ஒன்று,* International Institute of Islamic Thought (IIIT) *இன் ஸ்தாபக நிறுவனர்களுள் ஒருவராக அவர் செயலாற்றியுள்ளமை. அந்நிறுவனத்தின் சிந்தனை கட்டமைப்பினை உருவாக்குவதன் பின்னணி குறித்த தெளிவினை பாராட்டத்தக்க வகையில் இந்நூலில் அவர் வழங்கியுள்ளார்.*

*கலாநிதி அல்வானி அவர்களது ‘குர்ஆனும் ஸுன்னாவும் - கால இட பரிமாணங்கள்’, ‘இஸ்லாமிய சட்டவியலில் பெண்களின் சாட்சியம்’, ‘முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்’, ‘இஸ்லாத்தில் மதம் மாறுதல்’, இஸ்லாத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்’, ‘முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து முரண்பாட்டுத் தவிர்ப்பை நோக்கி’ ஆகிய நூல்களை நாம் வெளியிட்டிருந்தோம். ஏராளமான வாசகர்கள் அல்வானி ஆக்கங்களை விதந்து பேசி உள்ளனர். நாம் வெளியிடும் இந்த நூலும் தமிழ் கூறும் நல்லுலக வாசகர்களுக்குப் பெரும் பயனளிக்கும் என்பது எமது நம்பிக்கை.*

**إصلاح الفكر الإسلامي – مدخل إلى نظام الخطاب في الفكر الإسلامي المعاصر** *என்னும் அரபு மூலநூலில் இருந்தே கலாநிதி பீ.எம்.எம். இர்ஃபான் தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்துள்ளார். இதன் ஆங்கிலப் பதிப்பு 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.*

*இந்த நூலின் செம்மையாக்கத்தையும் அச்சுக்கான செப்பமிடலையும் செய்து தந்தவர் ஹாபிஸ் இஸ்ஸதீன். அவர் ஆற்றும் பணிகளுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.*

***பூஸின் டெக்ஸ்ட்ஸ்***
*15 டிசம்பர் 2022*

# உள்ளடக்கம்


நுழைவாயில் 01

அத்தியாயம் ஒன்று
சமகால இஸ்லாமியக் கருத்தாடல்.... 33

அத்தியாயம் இரண்டு
நெருக்கடியின் மனப்பாங்கும் பெருக்கமும் 56

அத்தியாயம் மூன்று
சிந்தனாமுறைகளின் சீர்திருத்தம் 71

அத்தியாயம் நான்கு
இஸ்லாமியத் திட்டத்தை வடிவமைத்தல் 81

அத்தியாயம் ஐந்து
உரையாடலும் உரையாடப்படுவோரும் 158

அத்தியாயம் ஆறு
தடைகளும் இடர்பாடுகளும் 205

முடிவுரை 214

பின்னிணைப்பு 226

## வாசகர் கடன்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும் அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும்போது ரழியல்லாஹு அன்ஹு -அன்ஹா, அன்ஹும்- (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டு வானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும் போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.

# நுழைவாயில்

## அறிவை இஸ்லாமியப் படுத்துவதற்கான அழைப்பு எதற்காக?

எந்த இஸ்லாமிய செயற்பாடும் தாக்கமுள்ளதாகவும் வினைத் திறன் மிக்கதாகவும் அமைவதற்கு அது சார்ந்த உரையாடலை (discourse) எதிர்கொள்ளும் முஸ்லிம் அந்த உரையாடலின் உள்ளடக்கத்தை நுணுக்கமாகப் புரிந்து கொள்வது அவசியம் என்பது மிக முக்கியமான நிபந்தனையாகும். குறித்த உரையாடல் தாங்கி நிற்கும் சிந்தனை, அதன் தளங்கள், இலக்குகள் என்பவற்றை அவர் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அது நடைமுறைக்கு எவ்வளவு ஏற்புடையது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த உரையாடல் அவரது ஆன்மாவினுள் ஆழ ஊடுருவி, இறைவனுக்கும் சமூகத்துக்கும் முன்னால் தனது பொறுப்பு எத்தகையது என்பதை அவருக்கு உணர்த்த வேண்டும். நிகழ் யதார்த்தத்துக்கும் நாகரிகம் சார்ந்த எதிர்பார்ப்புக்கும் இடையிலான பாரிய முரண்பாட்டை அவருக்குப் புரிய வைக்க வேண்டும். எவ்வளவு சவால்களையும் தடைகளையும் தாண்டி அந்த எதிர்பார்ப்பு சாத்தியப்படுத்தப்படவேண்டியுள்ளது என்ற பிரக்ஞை அவரிடம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

குறித்த உரையாடல் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டுமாயின், சில அடிப்படையான விடயங்கள் நடந்தேறுவது தவிர்க்க முடியாததாகும். அவற்றுள் முக்கியமானவை வருமாறு:

உரையாடலை முன்வைப்பவர் எதிரே இருப்பவரது இயல்பைப் புரிந்துகொள்ள வேண்டும். குறித்த நபர் வாழும் சமூகச் சூழமைவின் சமூக - உளவியல் - வரலாற்றுக் கட்டொழுங்குகளைத் தெரிந்து

கொள்ள வேண்டும். அவரது ஆளுமைப் பரிமாணங்களைக் கற்றறிந்து, எவ்வகையான உரை அவரில் தாக்கமேற்படுத்தும் என்பதைத் தெளிவாகக் கண்டறிய வேண்டும்.

முன்வைக்கப்படும் உரையானது சிக்கலாக்குதல், அதிக பொது மைப்படுத்தல், மிகைச் சுருக்கம் என்பன அற்றதாக அமைதல் வேண்டும். இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாகவும், தவறு களற்ற வசனக் கட்டமைப்பு கொண்டதாகவும் இருக்க வேண்டும். எளிமையான வடிவத்தில் அது முன்வைக்கப்படுவதோடு, எடுத் தாள்வதற்கு இலகுவானதாகவும் அமைய வேண்டும்.

உரையாடல் முன்வைக்கும் பணியில் தனது வகிபாத்திரம் என்ன என்ற பிரக்ஞை உரையாடப்படுபவரிடம் ஏற்படுத்தப் பட வேண்டும். அந்த வகிபாத்திரத்தின் பண்புகளையும், இலக்கு களையும், சாதனங்களையும், தடைகளையும், சவால்களையும், குறித்த நிகழ்ச்சிநிரலில் தனது இடம் என்ன என்பதையும், முன்னுரிமைப்பட்டியலில் அது பெறக்கூடிய இடம் என்ன என்பதையும் அவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

உரையாடப்படும் நபரை செயலூக்கப்படுத்தும் நோக்கம் கொண்ட எத்தகைய உரையாடலுக்கும் இவ்விடயங்கள் அவசியமாயினும், இஸ்லாமிய உரையாடலையும் அதன் உள்ளடக்கத்தையும் பரிமாணங்களையும் பொதுமக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு இவை மிக அவசியமானவையாகும். ஏனெனில், இஸ்லாமிய உரையாடல் வஹி, சிந்தனை, பிரச்சாரம் எனப் பல்பரிமாணம் கொண்டது. அதனை எதிர்கொள்ளும் வெகுமக்கள் வேறுபட்ட மொழிகளையும், வழக்காறுகளையும், புரிதல் மட்டங்களையும் கொண்டவர்கள். மட்டுமன்றி, குறித்த இஸ்லாமிய உரையாடல் ஒரு நபருடன் அல்லது ஒரு தலை முறையுடன் மாத்திரம் சுருங்கியதல்ல. மாற்றமாக, அது நிகழ்காலத் தலைமுறைகளையும் எதிர்காலத் தலைமுறைகளையும் உள்ளிட்ட முழு உம்மாவை உள்ளடக்கியது. உம்மாவின் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமான வழிகாட்டலையும் அக்கறையையும் கொண்ட உரையாடல் அது.

*சிந்தனாமுறைமைகளின் சீர்திருத்தமும் அறிவை இஸ்லாமியப் படுத்தலுமே 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்' (IIIT) பொறுப்பேற்றுப் பிரச்சாரப்படுத்த முனைகின்ற மைய விவகாரமாகும். ஏனெனில், இதுவே இன்று மிகப் பலமாக மேலெழும் மைய விவகாரம் என நிறுவனம் ஆழ்ந்து நம்புகிறது. மேற்கத்திய நாகரிகத் திட்டத்துக்கான பதிலீடாக அமையத்தக்க சமகால பரிபூரண இஸ்லாமியத் திட்டத்தின் மிக முக்கியமான அடிப்படைகளுள் ஒன்றாகவும் இதனை அது கருதுகிறது. மேற்கத்திய நாகரிகத் திட்டமானது பல வகைகளில் நம் உம்மாவை கடும் சிரமத்திற்கு உள்ளாக்கிவிட்டது. அது உம்மாவின் நம்பிக்கைக் கோட்பாட்டைப் புறமொதுக்கியதும், உம்மாவின் சமூக -உளவியல் சமன்பாட்டைக் கவனத்தில் கொள்ளாததும், உம்மாவின் வரலாற்று - நாகரிக ஆளுமை உருவாக்கத்தைக் கண்டு கொள்ளாது விட்டமையுமே இந்நிலைக்குக் காரணமாக அமைந்ததெனலாம்.*

*'சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்துதல்' என்ற இவ்விவகாரம் மிக முக்கிய மானதாகவும் பாரதூரமானதாகவும் இருந்தபோதிலும், முஸ்லிம்களது வாழ்வில் உரிய கவனயீர்ப்பையும் ஈடுபாட்டையும் பெறவில்லை என நாம் கருதுகிறோம். இத்தகைய கவனக் குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிவதற்கான நுணுக்க மான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் கோளாறுகளைக் கண்டறியவும், செயற்பாட்டுக்கான படிமுறைகளை மதிப்பீடு செய்யவும் அத்தகைய ஆய்வுகள் அவசியமாகும். இதற்கான வினைமை மிக்க சில முயற்சிகள் இங்கும் அங்குமாக நிகழ்ந்து வந்துள்ள போதிலும், அவை தனி நபர் முயற்சிகள் என்ற நிலையைத் தாண்டி நிறுவன ரீதியான முயற்சிகளாக மாறவில்லை. இத்தனிநபர் முயற்சிகள் கலாசாரச் சீர்திருத்த முயற்சிகளில் ஒரு தொடர்ச்சியைப் பேணுவதற்கு - ஏதோவொருவகையில்- பங்களிப்புச் செய்தாலும் உரிய பரிமாணத்தை எட்டவில்லை.*

*இஸ்லாமிய நாகரிகத் திட்டத்தைத் தேவையான விதத்தில் வார்த்தெடுக்க வேண்டுமாயின், நவீன இஸ்லாமியக் கருத்தாடலானது சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தத்திற்கும், அறிவை*

இஸ்லாமியப்படுத்தும் பணிக்கும் உரிய இடத்தை வழங்குவது அவசியம். இப்பணிக்கு அது முன்னுரிமையளிக்க வேண்டும். நெருக்கடியின் பலகோணங்களைக் கையாள்வதற்கான திறவு கோல் இதுவே என்பதை அது ஏற்றுக்கொள்ள வேண்டும். சிந்தனா-அறிவுக் குழப்பத்தினால் பரவிய இருளை விலக்குவதற்கு அவசியமான விளக்காக நவீன இஸ்லாமிய உரையாடல் இதனைக் கொள்ள வேண்டும். ஏனெனில், இச்சிந்தனா-அறிவுக் குழப்ப நிலையில்தான் இஸ்லாமிய யதார்த்தம் கடந்த அரை நூற்றாண்டுக்கும் அதிக காலம் தட்டுத் தடுமாறிக் கொண்டு இருந்திருக்கிறது.

இஸ்லாமிய சீர்த்திருத்த இயக்கம் கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் முன் அரைப்பகுதியிலும் பல பாரிய முயற்சிகளையும் பெரும் அர்ப்பணங்களையும் மேற்கொண் டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. அது பல சாதனைகளைச் சாத்தியப்படுத்தியிருக்கிறது என்பதும் மறுக்க முடியாது. ஆயினும் நுணுகிக் கவனிக்கும்போது, செலவிடப்பட்ட தியாகங் களின் தரத்தை அந்தச்சாதனைகள் எட்டவில்லை என்பதே நிதர்சனமாகும்.

அதேபோல், அத்தனை முயற்சிகளை மேற்கொண்டும் முஸ்லிம் களது நெருக்கடி நிலையை தாண்டிச் செல்லப் போதுமான 'வகை மாதிரியான நகர்வு' எதுவும் நிகழவில்லை என்பதும் வெளிப்படையானது. அம்முயற்சிகள் அனைத்தையும் நுணுக்க மாக மீள் பரிசீலனை செய்யும் கட்டாயத்தினை இது நமக்கு ஏற்படுத்துகிறது. அப்போதுதான், புதிய சீர்திருத்த முனைப் புகளை தோல்வியிலிருந்து காத்து, சரியான புத்தாக்க உள்ளீடு கொண்டவையாக அமைத்துக் கொள்ள முடியும்.

மேற்குறித்த காலப்பகுதியில் உம்மா மேற்கொண்ட சீர்திருத்த - புனர்நிர்மாண யத்தனங்கள் சில விவகாரங்களைக் கவனத்தில் கொண்ட அதேவேளை வேறு சில விவகாரங்களைத் தவறவிட்டதே சீர்திருத்த முயற்சியின் சாதனைகள் அதற்காகச் செலவிடப்பட்ட

அர்ப்பணங்களின் அளவை எட்டாமைக்குக் காரணம் என்பது எமது அவதானமாகும். புத்தாக்கமும் சீர்திருத்தமும் நெருக்கடியின் பல்வேறு காரணங்களை முழுமையாக உள்வாங்கவோ அவற்றிலிருந்து முழுமையாக வெளியேறும் வகையில் உம்மாவைத் தயார் படுத்தவோ இல்லை. பெரும்பாலான சீர்திருத்த இயக்கங்கள் நெருக்கடியின் வெளிப்பாடுகளுக்கும், அவற்றின் நேரடியான அன்றாடத் தாக்கங்களுக்கும் சிகிச்சையளிப்பதிலேயே ஈடுபட்டிருந்தன. நெருக்கடியின் உண்மையான வேர்களோ ஊற்றுக்களோ ஆய்வுகளிலும் தீர்வுகளிலும் போதியளவு கண்டுகொள்ளப்படவில்லை.

ஆயினும், இது அந்த இயக்கங்களது முயற்சிகளைக் குறை காண்பதன்று. அவை உம்மாவுக்கு வழங்கிய சேவைகளையும், ஏற்படுத்திக் கொடுத்த அடைவுகளையும் குறைத்து மதிப்பிடுவதுமன்று. அந்த வகையில், உம்மாவின் அடையாளத்தையும் தொடர்ச்சியையும் பாதுகாத்துக் கொடுத்தமை அவற்றின் அடைவுகளுள் முதன்மையானது என்பதை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

அதேவேளை, முறைவழிப்பட்ட, அறிவார்ந்த, சீர்திருத்த முயற்சியொன்றுக்கான தேவை இன்னும் அப்படியே உள்ளது என்பதை இங்கு நாம் கவனயீர்ப்புச் செய்கிறோம். அத்தகைய முயற்சியானது நெருக்கடியின் அனைத்துக் காரணங்களையும் அவற்றின் ஊற்றுகளையும், அவற்றினால் விளைந்த தாக்கங்களையும், பிரதிபலிப்புகளையும் தேடிக்கண்டறிய வேண்டும்; மீள் கட்டுமானத்துக்குரிய ஆரோக்கியமான முறைமையொன்றை முன்வைக்க வேண்டும். இஸ்லாத்தின் நாகரிகம் முன்பு கட்டியெழுப்பப்பட்ட அதே அடிப்படையின் மீதே அந்த முறைமை மீண்டும் கட்டமைக்கப்பட வேண்டும். மனிதனது மனிதப் பண்புக்கு மீள உயிரூட்டுவதே அந்த அடிப்படையாகும். மனிதனை அவனது அனைத்துப் பின்னொட்டுகளிலிருந்தும் விடுவித்து, பிற எல்லா மனிதர்களோடும் கூட்டிணைந்து ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அழைப்பதாக அந்த முறைமை அமைய வேண்டும். அவ்வாறு கட்டியெழுப்பப்படும் சமூகத்தின்

அனைத்துக் கூறுகளும் திறந்த சமுதாய ஒப்பந்தமொன்றினால் பிணைக்கப்படல் வேண்டும். இனத்துவேசம், வர்க்கபேதம், பிரதேசவாதம் என்பவற்றிலிருந்து விடுபட்ட தூய இணைப்பாக அது இருக்க வேண்டும். ஏனெனில் அதன் மூலமாகத்தான் இன்று சமுதாயங்கள் முரண்பட்டு நிற்கும் விவகாரங்களில் உடன்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான வழி பிறக்கும். ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு நிகரானவனே என்ற உணர்வுநிலை அப்படி உடன்பாடு காணப்பட வேண்டிய அம்சங் களுள் தலையாயதாகும். சடப்பொருளோடும், சடஉலகுக்கு அப் பால் உள்ளவற்றோடும் தொடர்பான அனைத்து உண்மைகளும் மனிதன் புரிந்து கொள்ளச் சாத்தியமானவைதான் என்ற உணர்வு நிலை உடன்பாட்டுக்குரிய இரண்டாவது அம்சமா கும். ஏனெனில், மனிதன் தனது பல்வேறு படிமுறையான அறிதல்களால் அந்த உண்மைகளைக் கண்டறிய முடியும். அந்த அறிதல்கள் ஒன்றையொன்று சார்ந்து நிற்பனவேயன்றி ஒன்றுக்கொன்று எதிரானவையோ முரண்பட்டவையோ அல்ல. அந்த வகையில், உள்ளுணர்வு சார்ந்த அறிவுக்குப் பின்னால் புலன்கள் சார்ந்த அறிவும், புலன்கள் சார்ந்த அறிவுக்குப் பின்னால் பகுத்தறிவும் நின்று தொழிற்படுகின்றன. பின்னர் பகுத்தறிவு ரீதியான புரிதல்கள் வேதவெளிப்பாடு என்னும் 'வஹி'யிலிருந்து வரும் மறைவான உண்மைகளை உள்வாங்கிப் பணியும் நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

இவ்வாறு மனிதனின் மனிதம் என்ற முற்றுண்மையை மன தில் கொண்டு, முன்னர் எவ்வடிவத்தில் இந்த அழைப்பு முன் வைக்கப்பட்டதோ அதே வடிவத்தில்தான் மீண்டும் முன்வைக் கப்பட வேண்டும். மனித ஆற்றலை அதன் பரிபூரணத் தயார் நிலையில் வெளிக்கொண்டு வருவதற்கும் அதன் சுதந்திரமான இயக்கத்துக்கும் இதுவே உத்தரவாத மளிக்கக்கூடியதாகும்.

இப்படித்தான் மனிதனிடம் ஒரு வித உள்ளார்ந்த பாதுகாப் புணர்வும் சுய உறுதியும் உருவாக முடியும். மனிதம் என்ற தனது இயல்பின் அனைத்துப் பரிமாணங்களையும் ஒரே விகிதாசாரத்தில்

கவனித்து அமைதி காணவும் அவனைத் தூண்ட முடியும். இந்நிலையில்தான் அவனது அறிவு, நம்பிக்கை, புலனுணர்வு, இயல்பூக்கங்கள் முதலிய அனைத்தும் ஒன்றோடொன்று இணக்கமடைகின்றன; பரஸ்பரம் ஒத்துழைக்கின்றன; ஒன்றைக் கண்டு மற்றொன்று அஞ்சாததவையாகவும், ஒன்றோடொன்று பகைமை பாராட்டாததவையாகவும் மாறுகின்றன.

எனினும், இந்த எதுவுமே மனிதத் திட்டமிடலாலோ மனித சிந்தனையினாலோ கைவரப் பெறுவதில்லை மாறாக, அனைத் தையும் அறிந்தவனும் ஞானம் மிக்கவனும் செவியேற்பவனும் பார்ப்பவனுமாகிய அல்லாஹ்விடமிருந்து பெற்ற நம்பிக்கைக் கோட்பாட்டிலிருந்தே இந்த அனைத்தும் பிறக்கின்றன. அதிலிருந் தே பிரதிநிதித்துவப் பணிகளை மேற் கொள்ளவும், 'சோதனை' என்ற பொறுப்பைச்சுமக்கவும் சக்தியுள்ள வினைத்திறன் மிக்க மனிதன் உருவாகிறான்.

ஆக, முஸ்லிம்கள் செயலூக்கத்தை மீட்டெடுக்க இன்று அவசியமாக இருப்பது மதத்தைப் புதிதாகக் கட்டமைப்பதோ புதுப்பிப்பதோ அன்று. மாறாக, அவர்களுக்குத் தேவை யானது அறிவார்ந்ததும் முறைவழிப்பட்டதுமான பிரக்ஞை மட்டுமே. அந்தப் பிரக்ஞை புரிதல் முறைமைகளைப் புத்தாக்கம் செய்வதற்கான நாட்டசக்தியையும், ஆற்றலையும், உறுதியையும், செயலூக்கத்தையும் பிறப்பிக்க வேண்டும். அடுத்ததாக, நம்பிக்கைக் கோட்பாட்டையும் சமய மூலா தாரங்களையும் அடிப்படையாகக் கொண்ட சிந்தனைகளின் மூலமாக முஸ்லிம்களது நடைமுறை வாழ்வுப் பயணத்தை மதிப்பீடு செய்யும் ஆற்றலும் இன்று அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

இந்த வகையில், உண்மையான சீர்திருத்தத்துக்கும் புத்தாக்கத் துக்குமான பயணமானது மனிதம் என்ற பண்பை நிதர்சனப் படுத்துவதன் மூலமாகவும், முஸ்லிம் மனிதனின் மனச் சாட்சியில் உள்ளார்ந்த பாதுகாப்புணர்வைக் கட்டியெழுப்பு வதன் மூலமாகவுமே ஆரம்பிக்கப்பட முடியும். அதில் அவனது

*அறிவாற்றல்கள் யாவும் இணக்கமடைய வேண்டும். அதன் மூல மாகத்தான் குழப்பம், தடுமாற்றம் என்பவற்றையும், சிந்தனை கள், நம்பிக்கைகள், உணர்வுகள் என்பவற்றுக்கிடையிலான முரண்பாட்டையும் அவனால் தாண்டிச் செல்ல முடியும். பகுத்தறிவு சார்ந்தவற்றுக்கும், நம்பிக்கை சார்ந்த வற்றுக்கும் இடையிலான இணக்கநிலையொன்றும் அப்போதுதான் சாத் தியமாகும். ஆன்மீகம் சார்ந்தவற்றுக்கும், லௌகீகம் சார்ந்த வற்றுக்கும் இடையில் பிரக்ஞை பூர்வமான இணக்கமும் அப் போதுதான் சாத்தியமாகும். மட்டு மன்றி, அவன் ஆய்வுப் பார்வையுடன் பூமியில் பயணம் செய்து முழுச்சுதந்திரத்துடன் பிரபஞ்சத்தை வாசிக்கவும் இதனால் வாய்ப்பேற்படும். அந்த ஆய்வுப் பார்வையானது உண்மையான இலக்கையும் பாதையின் இயல்பையும் கண்டறிவதில் குழம்பித் தடுமாறும்போது 'வஹி' வந்து பயணத்தைச் சீராக்கி வழிப்படுத்தும். சீர்திருத்தத்துக்கும் நேர்வழி பெறவுமாக தன்னை வாசிக்குமாறு அந்த வஹி அவனை அழைக்கும். இந்நிலையில் மனிதன் இரு வகையான வாசிப்புகளை தனக்குள் ஒன்றிணைத்தவனாகிறான்: ஒன்று 'வஹி' மீதான வாசிப்பு; மற்றையது பிரபஞ்சத்தின் மீதான வாசிப்பு. இங்கு பிரபஞ்சம் குறித்த வாசிப்பில் மனிதனுக்கு உதவுவதாகவும், அவனை ஸ்திரப்படுத்தும் நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாகவும் 'வஹி' திகழ்கிறது. இதன் மூலமாக மனிதன் தனது சக்தியையும் செயலூக்கத்தையும் மீட்டெடுக்கிறான். உணர்ச்சிகள் தனியாதிக்கம் செலுத்திவிடாத வகையில் நாகரிக அடைவுக்கான நிபந்தனைகளை சாத்தியப்படுத்தும் ஆற்ற லையும் பெறுகிறான்.*

*மேலே நாம் சுட்டிக்காட்டிய காலப்பகுதியில் மேற்கொள்ளப் பட்ட புத்துயிர்ப்புவாத முயற்சிகள் அனேகமாக சில முன் தீர்மானங்களிலிருந்து பிறந்தவையாகும். உண்மையில் அவை நுணுக்கமான மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், சிந்தனை, முறைமை, நம்பிக்கைக் கோட்பாடு, சட்டவாக்கம், அறிவு ஆகிய தளங்களில்*

காணப்படுகின்ற நமது அறிவு முதுசங்கள் பூரணமானவை எனவும், மீளாய்வுக்கு அவசியமற்றவை எனவும் சில புத்துயிர்ப்புவாத - சீர்திருத்த இயக்கங்கள் கருதிவிட்டன. உம்மாவின் கரம்பற்றி வந்து அந்த முதுசங்கள் மீது வைத்து, அவற்றினுள்ளிருக்கும் புதையல்கள் பற்றிய விழிப்புணர்வைக் கொடுத்து விட்டால் போதும் தேவையான அனைத்தும் கிடைத்துவிடும் எனவும் அவை எண்ணிவிட்டன. அந்த அறிவு முதுசங்கள் உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் உம்மா சிறந்த நிலையில் இருந்ததும், இன்று அது இருக்கும் நிலை அப் போது இருக்கவில்லை என்பதுமே இவ்வாறு அச்சீர்திருத்த இயக்கங்கள் எண்ணியமைக்குக் காரணம் எனலாம். அந்த வகையில், உம்மா தனது முதுசங்களிலுள்ளவற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, தனக்குத் தேவையான உற்பத்திகளையும் பௌதீகத் தொழிநுட்பங்களையும் மேற்கிடமிருந்து நகர்த்தி வர வேண்டியதுதான் அது செய்ய வேண்டிய பணி எனவும், அவ்வாறு செய்து விட்டால் தேவையான நாகரிக மாற்றம் ஏற்பட்டுவிடும் எனவும் அவை கற்பிதம் செய்து கொண்டன.

இத்தகைய அறிவு முதுசங்களில் மீளாய்வுகளை மேற் கொண்டு, மீட்டுருவாக்கம் செய்து, தற்கால மொழியில் அவற்றைப் போதித்து, அவை பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்துவதுதான் உண்மையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணி எனவும், அவ்வாறு செய்துவிட்டால் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியும் எனவும் இன்னும் சில இயக்கங்கள் கருதின.

நவீன சிந்தனைக்கு நெருக்கமான வகையில் அல்லது அத னுடன் ஒப்பிடும் வகையில் நமது அறிவு முதுசங்களை விளக்கி வியாக்கியானப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் புத்தாக்க-சீர்திருத்தப் பணி இலகுவாகிவிடும் எனவும், மாற்றச் சக்கரம் உரிய திசையில் உருளத் தொடங்கிவிடும் எனவும் வேறு சில இயக்கங்கள் கருதின.

“இந்த உம்மாவின் ஆரம்பம் எதன்மூலமாகச் சீரடைந்ததோ அதன் மூலமாகத்தான் இறுதியும் சீரடையும்” என்ற இமாம் மாலிக்கின் பிரபல்யமான கூற்றை அனைவரும் எடுத்தாள்கின்றனர்.

ஆயினும் (உம்மாவின் ஆரம்பத்தைச் சீர்படுத்தியது எது வென்பது தெளிவாகத் தெரிந்த போதிலும்) வஹியையும் பிரபஞ்சத்தையும் வாசிப்பதன் மூலமாக வாசிப்பு முறைமையையும், மனித அறிவைக் கட்டியெழுப்புதலையும் நோக்கித் திரும்பும் பணி புனர்நிர்மாண - சீர்திருத்த இயக்கங்களிடம் உரிய இடத்தைப் பெறவில்லை என்பதுதான் யதார்த்தம்.

இந்நிலையில், சீர்திருத்த இயக்கங்கள் புனித அல்-குர்ஆனை மீள்வாசிப்புச் செய்வதிலிருந்துதான் தமது பயணத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் பல பிரச்சினைகளுக்குமுகம்கொடுக்கவேண்டியிருந்தது.அல்-குர்ஆன் அது இறங்கி உரையாடிய ஆரம்பச் சூழமைவுடன் கொண்டிருந்த தொடர்பு எத்தகையது என்பதை அடையாளப்படுத்துவது அப் பிரச்சினைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அல்-குர்ஆனின் மாற்றிய வசனங்களும் மாற்றப்பட்ட வசனங்களும், பொருள் தெளிவாக வரையறுக்க முடியுமான வசனங்களும் வரையறுக்க முடியாத வசனங்களும், வசனங்கள் இறங்கிய பின்னணிக் காரணங்கள், அல்-குர்ஆன் விளக்கவுரை முதலிய 'அல்குர்ஆனியக் கலைகள்' (உலூம்அல்-குர்ஆன்) என அறியப்படுகின்ற - அதன் வசனங்களைச் சூழ உருவாக்கப்பட்ட - கலைகளுக்கும் அல்-குர்ஆனுக்கும் இடையிலான தொடர்பு எத்தகையது என்பதைக் கண்டறிவது அப்பிரச்சினைகளுக்கான மற்றோர் எடுத்துக்காட்டாகும். ஏனெனில், அல்-குர்ஆனிய வசனங்கள் குறிப்பிட்டதொரு வரலாற்று-கலாசாரப் பின்புலத்தில்தான் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்ற தனித்ததொரு சிந்தனைப் போக்கு இங்கு நிலவுகிறது. அப்புரிதலுக்கு மாற்றமான எத்தகைய புரிதலையும் அது குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி சந்தேகத்துடன் பார்க்கிறது. அவ்வாறான மாற்றுப் புரிதல்களை வலிந்த வியாக்கியானம் அல்லது தனிப்பட்ட புரிதல் அல்லது சான்றாகக் கொள்ள முடியாதவை என அது ஒதுக்கி விடுகிறது.

இதனால், சீர்த்திருத்த இயக்கங்களால் புனித அல்-குர்ஆனை தம் காலத்துக்குகந்த வகையில் தமக்காகவென்றே இறக்கப்

பட்டது என்ற நோக்கின் வழியாக வாசிக்கும் முறைமையொன் றைக் கண்டடைய முடியாமல் போனது. அதற்கான அவசியப் பாட்டைக்கூட அவற்றினால் உணரமுடியாது போனது. ஆனால் உண்மையில் அவை அல்-குர்ஆனை இத்தகைய நோக்கின் வழியாக அணுகினால்தான் சிந்தனை, முறைமை, அறிவு, வாழ்வு என்பவற்றின் மீதான வகை மாதிரியான, வேர்நிலை மாற்றங்களை அல்-குர்ஆனை ஆதாரமாகக் கொண்டு அணுக முடியும். ஏனெனில், இன்றைய சர்வதேச நாகரிகம் எழுப்பிக்கொண்டிருக்கும் எல்லாக் கேள்விகளுக் கும் சவால்களுக்கும் - இஜ்திஹாத் என்னும் - மனித அறிவு முயற்சிகளால் மாத்திரம் பதிலளித்து விட முடியாது. முன் சென்றோரது கூற்றுகள் மீதான ஒப்புநோக்கும் (கியாஸ்), அவர்களது சிந்தனைப் பள்ளிகளின் வழியாக கருத்துகளைப் பெறுவதும் கூட அதற்குப் போதுமானதன்று. மாற்றமாக, அந்தக் கேள்விகளுக்கும் சவால்களுக்கும் பதில் தருவதற்கு கீர்த்தி மிகு அல்-குர்ஆனின் பால் மீள்வதே ஒரேயொரு வழியாகும். ஏனெனில், அதனால் மட்டுமே அகிலத்துவப் பதில்களையும், திருப்தி தரும் வகையிலான அபாரத்தீர்வுகளையும் தர முடியும்.

இங்கு வேண்டப்படுவது ஓர் அணுகுமுறையை அல்லது ஒப்பீட் டை அல்லது வியாக்கியானத்தைச் சார்ந்து நின்று அல்-குர்ஆனை புதியதொரு வாசிப்புக்கு உட்படுத்துவதன்று. மாறாக, அல்-குர்ஆனைப் பேசவிடும் வகையிலான பாராயணமொன்றே இப் போது நமக்குத் தேவைப்படுகிறது. எல்லாக் காலத்திலும் எல்லாத் தலைமுறையிலும்தோன்றும்சவால்களுக்கும்கேள்விகளுக்குமான நிறைவான பதில்களையும் தீர்வுகளையும் அல்-குர்ஆன் தானா கவே முன்வைக்கும் வகையிலான பாராயணமாக அது அமைய வேண்டும். ஏனெனில் அது மறுமை நாள் வரை தோன்றும் அனைத்து விவகாரங்களையும் தெளிவுபடுத்தும் வகையில் இறக்கி வைக்கப்பட்ட வேதம். அது திரிபுகளிலிருந்து பாது காக்கப்பட்டிருப்பதும், அதன் முழுமைத் தன்மையும் பொதுப் பண்புமே நபிமார்களின் வருகை முற்றுப் பெற்றுவிட்டதை ருசுப்படுத்துகின்ற மிக முக்கிய நியாயங்களாகும்.

நமது முன்னோர்களது அறிவு முதுசங்களைப் புதுப்பிப்பதை சன்மார்க்கப் புனர்நிர்மாணமாகக் கருத முடியாது. ஏனெனில் அந்த முதுசங்கள் சன்மார்க்கம் பற்றிய அவர்களது புரிதலதும் சிந்தனையினதும் சாரமாகும். மறுபுறத்தில், மேற்குலகை கண்மூடிப் பின்பற்றுவதோ அச்சொட்டாகப் பின்பற்றுவதோகூட மார்க்கத்தை நவீனமயப்படுத்துவதாகாது. உண்மையான புனர் நிர்மாணம் என்பது முஸ்லிம் பகுத்தறிவை மீட்டுருவாக்கம் செய்வதன் மூலமாகவே மேற்கொள்ளப்படமுடியும். முஸ்லிம் பகுத்தறிவுக்கும் அல்லாஹ்வின் வேதத்துக்கும் இடையில் அறுபட்டிருக்கும் தொடர்பு மீண்டும் இணைக்கப்பட வேண்டும். ஏனெனில், அந்தப் பகுத்தறிவே பிரபஞ்சத்துடன் இணைந்து சிந்தனையையும்,அறிவையும், நம்பிக்கைக் கோட்பாட்டையும், சட்டவாக்கத்தையும், இயங்குநெறியையும் உருவாக்கும் ஏக மூலமாக உள்ளதெனலாம். மட்டுமன்றி, அப்பகுத்தறிவுக்கும் இறைத் தூதர் (ஸல்) அவர்களது வாழ்வியலுக்குமிடையில் அறுபட்டிருக்கும் தொடர்பும் கூட - நபித்துவக்காலத்தின் அனைத்துத் தரவுகளோடும் சேர்த்து - மீளிணைக்கப்படுவது அவசியமாகும். ஏனெனில் நபியவர்களது வாழ்வியலே அல்-குர்ஆனை விளக்கித் தெளிவுபடுத்தும் பொறுப்பு வழங்கப்பட்ட ஏக மூலாதாரமாக அமைந்திருந்தது.

இந்த வகையில்தான், அறிவை இஸ்லாமியப்படுத்துதல் என்பது சன்மார்க்கப் புனர்நிர்மாணத்துக்கும், உம்மாவின் மீள்கட்டுமானத்துக்கும், நவீன இஸ்லாமிய நாகரிகத் திட்ட உருவாக்கத்துக்குமான மிக முக்கியமான அடிப்படைகளுள் ஒன்றாக அமைகிறது. அறிவை இஸ்லாமியப்படுத்துதலானது புனர்நிர்மாணத் திட்டங்களின் மறைவான பரிமாண மொன்றாக அல்லது அத்திட்டங்களில் உரிய அவதானத்தைப் பெறாத ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. இந்நிலையிலேயே 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்' (IIIT) அந்த இடைவெளியை நிரப்பவும், அத்தியாவசியமான அப்பரிமாணத்தை மீளக் கொண்டுவரவும் உழைத்துக்

கொண்டிருக்கிறது. எந்தவொரு தனிநபரையோ அல்லது குழு வையோ அல்லது இயக்கத்தையோ புறக்கணிப்பது இதன் நோக்கமல்ல. மாறாக, இது நிரப்பப்பட வேண்டிய இடைவெளி. ஏனைய பல முன்னரங்குகளின் பாதுகாப்பும் இம்முன்னரங்கு பாதுகாப்பாக நிலை நிறுத்தப்படுவதில்தான் தங்கியுள்ளது.

ஏனைய இஸ்லாமிய இயக்கங்களும் நிறுவனங்களும் தமது ஏரா ளமான அன்றாடக் கவலைகளிலும் சவால்களிலும் மூழ்கியிருக்கும் நிலையில், மேற்குறித்த பணிக்கென சிலர் முன்வந்திருப்பதற்காக அவை மகிழ்ந்து இறைவனைப் புகழ்வதுடன், அப்பணியை ஆசீர்வதித்து நெறிப்படுத்தவும் வேண்டும். அப்போதுதான் செலவிடப்படும் முயற்சிகளுக்குப் பலன்கிட்டும்; சற்றுக் காலம் கழித்தாவது எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைஅடையவும் முடியும்.

மேற்கைப் பின்பற்றுதல் என்ற சட்டகத்தினுள் நின்று மேற்கொள்ளப்பட்ட நவீனப்படுத்தல் அல்லது இற்றைப்படுத்தல் திட்டம் ஏலவே தோல்வியடைந்து, கடந்த நூற்றாண்டின் எண்பதுகளில் இஸ்லாமிய எழுச்சிக் குழுக்களிடம் கொடியை ஒப்படைக்கும் நிலையில்தான் இருந்தது. ஆனால் அப்போது எழுச்சியானது உலகின் பல பாகங்களில் பரவிச் செல்வதில் தீவிரமாக ஈடு பட்டிருந்தது. சில இடங்களில் அது சீர்திருத்தவாதிகளது புத்தாக்க முதுசங்களில் முழுமையாகத் தங்கியும் இருந்தது. ஆயினும் பின்னர் திரும்பிப்பார்த்த போது, அம் முதுசங்கள் கொண்டிருந்த தடைகள் நவீனப்படுத்தலின் தடை களைவிட எவ்வகையிலும் குறைந்தவையாக இருக்க வில்லை. பின்னர் அனேக இடங்களில் எழுச்சியின் வேகம் குறையத் தொடங்கியதுடன், பல இடங்களில் பின்னடையவும் ஆரம்பித்தது. இது இறைத்தூதர்கள் கொண்டு வந்த தூதுகளின் மீது அல்லாஹ் ஏற்படுத்திய நியதிக்கு மாற்றமான நிலையாகும். ஏனெனில், இறைத்தூதுகள் தமது இலக்குகளை எய்தாமல் தொடக்க நிலை உத்வேகத்துடன் அடங்கிப் பின் வாங்குவதில்லை.

இப்பின்னடைவின் நிழலில் நவீனமயமாக்கல் திட்டங்கள் - குறிப்பாக மதச் சார்பற்ற திட்டங்கள் - தூசுதட்டித் துலக் கப்பட்டன. மேற்குலகு சட்டென்று மார்க்ஸிய, லெனினிய அனாதைகளுடன் பங்காளியாகி அவர்களை ஊதிப் பருக்க வைத்தது. அவர்களுக்கு உயிரூட்டுவதன் மூலமாக இஸ்லாமிய எழுச்சியை அல்லது நீட்சியை எதிர்கொள்ள அது முயன்றது. முன்னைய நவீனமயமாக்கல் திட்டம் பற்றியும், அது முன்னர் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் பற்றியும் ஆய்வுகள் வரத்தொடங்கின. உம்மாவின் கவனத்தை மீண்டும் அதில் மூழ்கடித்து எழுச்சியின் எஞ்சியிருந்த வினைத்திறனையும் யதார்த்தத்தையும் நிர்மூலமாக்கிவிடுவதே அவ்வாய்வுகளின் நோக்கமாக இருந்தது. மேற்கத்திய நவீன மயமாக்கல் திட்டம் தோல்வியடைந்தமைக்குச் சில காரணங்கள் இருப்பதாகவும், அந்தக் காரணங்களை வேரறுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கையறு நிலையிலிருக்கும் உம்மாவை நம்ப வைக்க அவை முயன்றன. அக்காரணங்களுள் பிரதானமான இரண்டு காரணங்களாவன:

முதல் காரணம்: முஸ்லிம் மனப்பாங்கின் இயல்பு. இம்மனப் பாங்கும் அதன் கட்டமைப்பும்தான் இஸ்லாமிய உலகில் மேற்கொள்ளப்பட்ட மேற்குமயப்படுத்தல் நாகரிகத் திட்டம் தோல்வியடைந்தமைக்கு முழுமுதல் பொறுப்பாகும். ஏனெனில், முஸ்லிம் மனப்பாங்கும் அதன் பாரம்பரிய உள் ளீடுகளும் அந்தத் திட்டத்தைப் புரிந்து கொள்ளவில்லை; அல்லது அதனை உரியவர்களிடமிருந்து சரியாகப்பெற்றுக் கொள்ளாமல் தவறாகப் புரிந்து நிராகரித்து விட்டன; அல்லது வேறு நியாயங்களும் இருக்க முடியும். எவ்வாறாயினும், இத் தகைய நிலைமைகள் இல்லாதிருந்திருப்பின் - அவர்களது நோக்கில் - அத்திட்டம் இயல்பாகவே வெற்றிகரமான தொரு திட்டம்தான் என்பதில் விவாதத்துக்கு இடமில்லை என்பது மட்டுமன்றி, எல்லாக் காலங்களிலும் இடங்களிலும் அது வெற்றி பெறக்கூடியதும் விஞ்ஞான பூர்வமானதுமான

திட்டம்தான். ஏனெனில் அது ஓர் அறிவார்ந்த சர்வதேசத் திட்டம். ஜப்பான், கொரியா, இந்தியா முதலிய பல உலக நாடுகளில் அது பெற்ற வெற்றி இதனை உறுதிப்படுத்துகிறது. அத்தகைய வெற்றிகரமான திட்டம் தோல்வி கண்டமைக் கானஅல்லது தோற்கடிக்கப்பட்டமைக்கான முழுமுதல் பொறுப்பை முஸ்லிம் பகுத்தறிவும் இஸ்லாமிய வரலாற்றுக் கலாசாரமுமே ஏற்க வேண்டும். முஸ்லிம் மனிதனின் பகுத் தறிவு, மனக் கட்டமைப்பு, உளவியல், முதுசங்கள், சிந்தனை, வரலாற்றுத் தன்மை, மொழி முதலிய அனைத்தும் அந்த மேற்குமய நாகரிகத்திட்டத்தைத் தோல்வியடையச் செய்யும் குற்றத்திற்குப் பங்களித்திருக்கின்றன. எனவே, முஸ்லிம் சிந் தையானது மேற்கத்திய உடற்கூறியல் பகுப்பாய்வு மேஜையில் போடப்பட்டு அதன் நோய்க் கூறுகள் கண்டறியப்பட வேண்டும்; அதிலுள்ள சில பாகங்கள் வெட்டி அகற்றப்பட வேண்டும்; அதனை மீட்டுருவாக்கம் செய்யும் பணி ஆரம்பிக்கப்பட வேண்டும். இதற்காக அந்த முஸ்லிம் மனப்பாங்குடன் தொடர்புபட்ட கலாசாரம், அறிவு, மூலாதாரங்கள், ஒழுங்குகள், முதுசங்கள், வர லாறு, மொழி முதலிய அனைத்தும் வாசிக்கப்படுவது அவசியம். மேற்கத்திய சிந்தனையை அதனிடம் முன்வைப்பதற்கும் ஏற்கச்செய்வதற்குமான வழிகள் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேற்கு மயமாக்கல் திட்டத்தை ஏற்கவிடாமல் தடுத்த சில பாகங்களை அகற்றி அவற்றின் வினைத்திறனை அழிப்பதன் மூலமாகவே இது சாத்தியமாகும். ஏனெனில், கிறிஸ்தவ மேற்கில் கிடைத்த நல்விளைவுகள் இஸ்லாமியக் கிழக்கில் கிடைக்காமல் தடுத்தவை அந்தப்பாகங்கள்தான். அப்படிச் செய்தால் இம் மேற்குமயப்படுத்தல் முயற்சி இம்முறை வெற்றி பெறும் என எதிர்பார்க்கலாம். அதன் மூலமாக மேற்குமயமாக்கல் திட்டம் வெற்றிகரமான சுழற்சித் திட்டமாக இஸ்லாமிய உலகில் நிலை பெறலாம். ஆயினும், இதற்காகப் பல மேற்கத்திய ஆய்வாளர்களும் அவர்களது கலாசாரச் சட்டகத்தினுள் செயற்படக்கூடிய முஸ்லிம்களும் முழு மூச்சாக இறங்க வேண்டும். இஸ்லாமிய

*சிந்தனையினுள் கவனமாக நுழைய முடியுமான வாயில்களை அவர்கள் கண்டறிய வேண்டும். மேற்கத்திய சிந்தனை எவ்வளவு ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதும் என்பதை எடுத்துக் காட்டக் கூடிய சான்றுகளை இஸ்லாமிய சிந்தனையிலிருந்தே - இலக்கியம், வரலாறு முதலிய துறைகளில் குறிப்பாகவும், மானிட அறிவியல்கலைகளில் பொதுவாகவும் - அவர்கள் வெளிக் கொணர வேண்டும்.*

*இவ்விவகாரத்தில் கீழைத்தேயவாதிகளது முயற்சிகள் உரிய வெற்றியைப் பெறவில்லை என்பதே இம்முதலாவது கார ணத்தை முன்வைப்பவர்களது எண்ணமாகும். கீழைத்தேய வாதிகளும், ஆரம்ப மேற்குமயப்படுத்தற் பிரசாரங்களை வழி நடாத்தியவர்களும் இஸ்லாமிய முதுசங்களை திறம்பட வாசிக்கவில்லை என இவர்கள் கருதுகின்றனர். அவர்கள் பின் பற்றிய பொறிமுறைகளும் வழிமுறைகளும் முஸ்லிம் பகுத்தறிவை கட்டமைப்பு ரீதியாகவோ உள்ளமைப்பு ரீதியாகவோ பகுப் பாய்வு செய்யுமளவு முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை எனவும் இவர்கள் கருதுகின்றனர். அந்த வகையில்தான், பாரம்பரிய முதுசமும் நவீனத்துவமும், அரேபிய மனப்பாங்கின் உள்ளமைப்பு, அரேபிய மனப்பாங்கின் கட்டமைப்பும் அதனை அழித்தலும், இஸ்லாமிய சிந்தனையின் கட்டமைப்பு, இஸ்லாமிய சிந்தனையின் வரலாற்றுத் தன்மை. .. என்ற வகையிலான எழுத்துகளும் ஆய்வுகளும் கீழைத்தேயவாதச் சந்தையில் நிறைந்திருக்கின்றன என்பது இவர்களது அபிப்பிராயமாகும். ஆனால், கீழைத்தேயவாதிகள் பல்கலைக்கழகங்களிலும் கலாநிலையங்களிலும் பாடசாலைகளிலும் அத்தகைய சிந்தனா முறைமைகளையும் அறிவுச் சூழலையும் உருவாக்குவதில் பெரு மளவு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றே நாம் நம்புகிறோம். அவர்கள் உருவாக்கிய முறைமைகளைப் பின் பற்றிப் பயணத்தைத் தொடரும் முன்னோடிகள் இஸ்லாமிய உலகினுள்ளேயே உருவாக்கப்பட்டிருக்கின்றனர்.*

*இரண்டாவது காரணம்: இதுவும் - மேற்குறித்த ஆய்வாளர் களைப் பொறுத்த வரை - முன்னைய காரணத்துடன்*

தொடர்புபட்டதுதான். அதாவது, இஸ்லாமிய அறிவு முதுசங்களின் கலைச் சொற்களை உரிய வகையில் பிர யோகிக்க வேண்டிய முக்கியத்துவத்தையும், மேற்கு மய மாக்கல் கருத்தாக்கங்களை முஸ்லிம்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு அவசியமான நுழைவாயில்கள் உருவாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் கீழைத்தேய வாதிகள் கண்டுகொள்ளவில்லை என்பதே இந்த இரண்டாவது கார ணமாகும். உதாரணமாக, சோஷலிசக் கொள்கையானது கார்ல் மாக்ஸினதும், ஏன்ஜல்சினதும், அவர்கள் போன்றோரினதும் கோட்பாடுகள்தான் என்றவாறாக முன்வைக்கப்படும்போது முஸ்லிம் மனப்பாங்கு அவற்றை ஏற்கத் தயங்கும். ஆனால் அதே கோட்பாடு அதன் எல்லா அம்சங்களோடும் அபூதர் அல்-கிபாரி (றழி), அலீ பின் அபீதாலிப் (றழி) முதலிய நபித்தோழர்களது சிந்தனையிலிருந்தும், இப்னு ஃகல்தூனின் முன் வைப்புகளிலிருந்தும் வேறுபட்டதல்ல என்றோ,அல்லது குறிப்பிட்டதொரு இமாமின் நியாயவியல் கோட்பாட்டினுள் அடங்குகின்ற கோட்பாடுதான் என்றோ முன் வைக்கப்பட்டால் முஸ்லிம்மனிதன்அதனைஉடனடியாகஏற்றுக்கொள்ளவும்தனது கோட்பாடாகத் தத்தெடுத்துக்கொள்ளவும் தயங்கமாட்டான். அந்த வகையில், சர்வதேச சோஷலிஸ இயக்கம் என்பது சுரண்டலுக்கும் காலனியத்துக்கும் எதிராக நலிவுற்றோரதும் ஏழைகளதும் நலனுக்காக மேற்கொள்ளப்படும் போராட்டம் என்ற வகையில் அதனோடு இணைந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டால் முஸ்லிம் மனிதன் அதனை ஏற்றுக்கொள் வான். அதிலும் குறிப்பாக, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த அழைப்பின் வேர்கள் இஸ்லாத்திலிருந்துதான் ஆரம் பிக்கின்றன என்றும், அதே கோஷங்களை உயர்த்திப் பிடித்த பல இயக்கங்களும் சிந்தனைகளும் காணப்படுகின்றன என் பதும் அவனுக்கு எடுத்துக் காட்டப்பட வேண்டும். அதன் மூலமாக, 'கறாமிதா' போன்ற மறுப்பு இயக்கங்கள் மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு, இஸ்லாமிய வரலாற்றில் உரிய பரிமாணத்தையும் அங்கீகாரத்தையும் பெறும் நிலை உருவாகும்.

அவ்வாறே, ஜனநாயகத்தை 'ஷூறா' என்பதாகவும், மக்கள் குடியரசை 'ஃகிலாஃபா' என்பதாகவும் எடுத்துக் காட்ட முடியும். இப்படிப் பல விடயங்களை அவர்கள் விவாதிக்கிறார்கள்.

முஸ்லிம் உம்மா தனது இஸ்லாமியக் கலாசார மாதிரியிலிருந்து வெளியேறி, இத்தகைய கலாசாரப் பிறழ்விலும் அப்பியாசத்திலும் சிக்கிக் கொள்ளாது பாதுகாக்கப்படுவது அவசியம் என நாம் கருதுகிறோம். ஏனெனில், மேற்கத்திய சிந்தனை என்பது அதன் அனைத்து கிரேக்க -சிலை வணக்க-சிலுவை வழிபாட்டு வேர்களோடும்,டார்வினிய-ஃபிராய்டிய-மார்க்ஸிய-சார்ட்டரிய - சோஷலிஸ - தாராளவாத சிந்தனைப் பள்ளிகளோடும் சேர்த்து, கஸ்ஸாலி, இப்னுருஷ்த், இப்னுஸீனா, இப்னுஃகல்தூன் முதலியோர் முன்வைத்த அதே சிந்தனையாகத்தான் உள்ளது என்றவாறாக முன் வைக்கப்படும்போது முஸ்லிம் சிந்தை அதனை இலகுவாக ஏற்றுவிடும் அபாயம் காணப்படுகிறது.

இப்பின்புலத்தில் தான், அவர்களில் ஒரு குழுவினர் இன்று இஸ்லாமிய வரலாறு மற்றும் இஸ்லாமிய முதுசங்கள் என்பன பற்றிய ஆழமான - சிறப்புத்துறை ஆய்வுகளில் கவனம் செலுத்துவதை நாம் காண்கிறோம். ஒரு நூற்றாண்டு ஆயுளைக்கூட கடந்திராத பல சிந்தனைகள் இஸ்லாமிய மூலாதாரங்களுடன் தொடர்புபடுத்தப்படும் செயற்பாடுகளும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இஸ்லாமிய இடதுசாரி, இஸ்லாமிய வலதுசாரி என்பன போன்ற போலியாகப் புனையப்பட்ட சொற்பிரயோகங்கள் இஸ்லாமியக் களத்தை நோக்கிப் படை யெடுத்துக் கொண்டும் இருக்கின்றன. நபித் தோழர்களையும் தாபிஈன்களையும் லிபரல்வாதிகள் என்றும், ஜனநாயகவாதிகள் என்றும், சோஷலிஸவாதிகள் என்றும் பலவாறாக வகுப்பாக்கம் செய்யும் முயற்சிகளும் இடம் பெற்று வருகின்றன. நவீன மேற்கத்தியக் கருத்தாக்கங்கள் மீதும் சிந்தனைகள் மீதும் இஸ்லாமிய பாரம்பரியக் கருத்தாங் களை ஏற்றிக் காணும் முனைவுகளும் நடந்தேறி வருகின்றன. இஸ்லாமியப் பாரம்பரிய சொற்பிரயோகங்களுக்குக் கிடைக்கும்

அதே அங்கீகாரம் நவீன மேற்குமயப் படுத்தலுக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் இங்கு அவர்களது ஒரே நோக்கம். இந்த வகையில், அவர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் 'இஜ்திஹாத்' என்ற பெயரிலேயே முன்வைக்கப்படுகின்றன. அவை சுமந்திருக்கும் மறுப்புக்களும் வெளியேறல்களும்கூட புனர்நிர்மாணமாகவே பார்க்கப்படுகின்றன. அரைகுறை ஆடைக் கலாசாரம் இங்கு கலை என்னும் போர்வையை அணிந்து கொள்கிறது.

ஆக, கருத்தியல்கள் மற்றும் சிந்தனைகள் என்ற இவ்விவகாரம் மிக முக்கியத்துவமும் அபாயகரத் தன்மையும் கொண்டது என்பதும், தனியான ஆய்வை வேண்டி நிற்பது என்பதும் மிகத் தெளிவு.

இந்நிலையில்...

## இஸ்லாமியத் திட்டம் செய்தது என்ன?

இஸ்லாமியத் திட்டம் - அது முன்வைக்கப்பட்ட வடிவத்தில் - சிந்தனைப் பரிமாணத்துக்கு உரிய கவனம் கொடுக்கவில்லை. அது தன் இலக்கை அடையாமல் போனதற்கு இதுவும் ஒரு காரணம் எனலாம். கண்மூடித்தனமான கூட்டுப்பின்பற்றல், நியதிகளைக் கவனிக்காமை, இஸ்லாத்தின் சர்வதேசத் தன் மையைப் புறக்கணித்தல் அல்லது பிழையாகப் புரிந்து கொள்ளல் முதலிய கொடிய நோய்கள் செயற்களத்தை தொடர்ச்சியாகப் பாதிப்பதற்கும் இது காரணமாக அமைந் தது. மட்டுமன்றி, இஸ்லாமியத்திட்டத்துக்காக உழைத்துக் கொண்டிருந்தவர்கள் மீது திணிக்கப்பட்ட புறவுலக மோதல்களும் சிந்தனா விவகாரத்துக்கு உரிய கவனம் செலுத் தும் வாய்ப்பை அவர்களை விட்டுத் தடுத்து விட்டன. எவ்வாறாயினும், இத்தகைய மோதல்கள் மிக முக்கியமான - களம் சார்ந்த 'பிக்ஹ்' அறிவைப் பெற்றுக் கொடுத்துள்ள துடன், சிந்தனா விவகாரம் எவ்வளவு முக்கியமானது என்பதையும் உணர்த்தியிருக்கின்றன.

*மேற்குமயமாக்கல் திட்டக் கருத்தாக்கங்கள் தோல்வி கண்டமைக்கான காரணங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, இஸ்லாமிய சிந்தனைச் சீர்திருத்தமும் அறிவை இஸ் லாமியப்படுத்தும் பணியும் எவ்வளவு அவசரமும் முக்கியத் துவமும் கொண்டவை என்பது தெளிவாகிறது. இப்பணிகளை மேற்கொள்வதன் மூலமாக இஸ்லாமியத் திட்டம் தனது பலவீனத்துக்கான காரணங்களைக் கண்டறிய முடிவதோடு, தனது அறிவுப் பலத்துக்கான வழிவகைகளை பூரணப் படுத்திக்கொள்ளவும் வழி பிறக்கும்.*

*அந்த வகையில்தான், இங்கு முன்வைக்கப்பட்டுள்ள சிந்தனா-கலாசாரத் திட்டமானது முன்னைய திட்டங்கள் தோல்வி யடைந்தமைக்கும், அவற்றினால் உரிய பரிமாணங்களை எட்ட முடியாமல் போனமைக்குமான காரணங்களைக் கண்டறிந்து நிவர்த்திக்க முயல்கிறது. அதற்கு அவசியமான அடிப்படையான இஸ்லாமிய இயங்கு தளங்களையும், முழு மொத்த நோக்கையும் இத்திட்டம் கொண்டிருக்கும் வேளை, சமநிலை, நடுநிலைத் தன்மை, பல்வேறு பரிமாணங்களுக்கு மத்தியில் ஒப்பீட்டளவான விகிதாசாரங்களை நியமப்படுத்தல் என்பவற்றிலும் அது கவனம் செலுத்துகிறது.*

*இவ்விவகாரங்கள் அனைத்தும் இங்கு பரிந்துரைக்கப் பட்டுள்ள சிந்தனா - கலாசாரத்திட்டத்தின் தனிச் சிறப்புகளாகவும், பிரமாண்டமான பொறுப்புகளாகவும் அமைந் துள்ளன எனலாம். ஏனெனில், நடுநிலைத் தன்மை வாய்ந்த இத்திட்டத்தின் மீதுதான் நமது உம்மாவின் எழுச்சி தங்கியிருக்கிறது என நாம் நம்புகிறோம். பின்னடைவின் இடைவெளியை நிரப்பிக் கொண்டு, சர்வதேச நாகரிகச் சுழற்சியொன்றை மீள ஆரம்பிப்பதற்கான உம்மாவின் முயற்சி முன்னேற்றம் காண்பதுகூட இத்திட்டத்தில்தான் தங்கியுள்ளது. அது முஸ்லிம் உம்மாவைக் காப்பாற்றி, மீண்டும் கட்டியெழுப்பி, இஸ்லாமிய வாழ்வை மீளக் கொண்டு வரும் முயற்சி மட்டுமல்ல; இன்று அழிவின் அபாயத்தில் சிக்கியிருக்கும் மனித இனத்தைக் காப்பாற்றும் முயற்சியும் கூட. எனவே*

இப்பணியை நிதர்சனப்படுத்துவதன் மூலமாகவே முஸ்லிம் உம்மா - அதன் தூதின் உட்கரு வலியுறுத்துவது போல் - நாகரிகப்பிரசன்ன அந்தஸ்தை அடைய முடியும்.

ஆயினும், முன்னைய சிந்தனா-சீர்திருத்தத் திட்டங்களை எவ் வகையிலும் ஒதுக்குவதோ புறக்கணித்துச் செல்வதோ இதன் பொருளன்று. அத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற் றிலுள்ள சாதகமான பக்கங்களிலிருந்து நாம் பயன் பெறுவது அவசியம். மட்டுமன்றி, பல்வேறு இஸ்லாமிய எழுச்சித் திட்டங்களின் கள அனுபவங்களிலிருந்தும் நாம் பயன்பெற வேண்டும்.

## 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' பணி இஸ்லாமிய எழுச் சிக்கும், உம்மாவுக்கும், உலகுக்கும் எதனை வழங்க முடியும்?

இந்தக் கேள்வி நியாயமானது. விடையளிக்கப்பட வேண்டிய முக்கியமான கேள்வியும்கூட. 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' செயல்வாதமானது அல்-குர்ஆனை நமது உம்மாவைக் காப் பாற்றும் ஆற்றல் கொண்ட வேதமாக மட்டுமன்றி, இன்றைய முழு மனித சமுதாயத்தைக் காப்பாற்றும் இயலுமை கொண்ட ஒரே வேதமாகவும் முன்னிறுத்த முயல்கிறது.

மகத்துவம் மிக்க அல்-குர்ஆன் மட்டுமே பிரபஞ்ச அளவில் முறைமை சார்ந்ததும் அறிவார்ந்ததுமான மாற்றுப் பார் வையொன்றைக் கொண்டிருக்கிறது. ஆயினும் அல்-குர் ஆனைச் சுமந்தவர்கள் இந்த அறிவு மற்றும் முறைமை சார்ந்த நெருக்கடியை இன்னும் அனுபவிக்கவோ, அதன் அதீத முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவோ இல்லை. ஏனெனில், மேற்காக அத்திலாந்திக் சமுத்திரத்துக்கும், கிழக்காக பசுபிக் சமுத்திரத்துக்கும் இடைப்பட்ட பிராந்தியத்தில் பரந்து கிடக்கும் அவர்களது பொருளாதார - சமூக - அறிவியல் யதார்த்தம் (அதாவது ஒட்டுமொத்த நாகரிக யதார்த்தம்) அதன் ஆரம்ப அறிவுப் பாரம்பரியத்தின் மீதே இன்னும் வாழ்ந்து கொண் டிருக்கிறது. முரணிலை இருமைகளின் (contrasting dualities)

*மனநிலை தான் இன்னும் அதனை ஆக்கிரமித்திருக்கிறது. சிந்தனா - அறிவு ரீதியான இப்பின்னடைவே அதனிடம் சிந்தனாரீதியான அல்லது அறிவாய்வு ரீதியான கலக்கநிலை (*cognitive dissonance*) தோன்றவிடாமலும், தனக்கென ஒரு முறைமை அல்லது அறிவுக் கோட்பாடு அவசியமாக இருப்பதை உணரவிடாமலும் தடுத்துக் கொண்டிருக்கிறது.இலகுவாகப்பெறக்கூடிய நிலையில் அதனிடம் காணப்படும் அல்-குர்ஆனியக் கலைகள் மற்றும் விளக்கவுரைகள் உள்ளிட்ட ஏராளமான உசாத்துணை முதுசங்கள் அல்-குர்ஆனை அணுகுவதற்கும் புரிந்து கொள்வதற்குமான அறிவுசார் முறை மையொன்றின் தேவையை உணரும் வாய்ப்பைத் தடுத்து நிற் கின்றன.*

*மறுபுறத்தில், நவீன மேற்கத்திய சிந்தனையோடும் கலாசாரத் தோடும் உறவாடுபவர்களைப் பொறுத்தவரை, அந்த மேற்கத்திய சிந்தனையும்கலாசாரமும்தான் மனித இனத்தின் நெருக்கடிகளைத் தீர்க்கவும் மாற்றீடுகளை வழங்கவும் ஆற்றல் கொண்டவை என நம்ப வைக்கப்பட்டிருக்கின்றனர். அந்த வகையில், மேற்கு சிந்தனை மற்றும் மேற்குக்கலாசாரம் என்ற சட்டகத்துக்கு வெளியிலிருந்து அதனைக் கொண்டு வரும் சாத்தியப்பாட்டையும் அவர்கள் நிராகரிக்கின்றனர்.*

*தற்கால நாகரிகச் செல்நெறிகளின் வழி நின்று நவீனத்துவத்தை நோக்கி அழைத்த சிலர் (அவர்கள் இஸ்லாமியப் புத்துயிர்ப்பு வாதச்சட்டகத்தினுள் நின்று அதனைச் செய்த போதிலும்) தோல்வி கண்டமைக்கான மற்றொரு காரணமும் உள் ளது. நமது இஸ்லாமிய யதார்த்தக் கட்டமைப்பானது வகைமாதிரியான மாற்றத்தையோ முன்னேற்றத்தையோ இன்னும் காணவில்லை என்பதுதான் அந்தக் காரணமாகும். அதனால்தான், இஸ்லாமிய உலகில் தோன்றிய நவீனத்துவ வெளிப்பாடுகளானவை (சிந்தனைகளைப் போலவே) இந் நாடுகளின் சொந்த வரலாற்று-நாகரிக அனுபவத்திலிருந்து பிறக் காமல் இறக்குமதி செய்யப்பட்ட வடிவங்களாக இருக்கின்றன. இன்றைய சிந்தனா - இஸ்லாமிய - சமூக உரையாடலானது*

பாரம்பரிய முதுசங்களைத் தனது தொடங்கு தளமாகக் கொண்டிருந்தாலும், அதில் சமகாலத் தன்மை இல்லாமலில்லை. ஆயினும், அந்த சமகாலத்தன்மையானது வடிவத்திலும் சட்டகத்திலும் மட்டுமே உள்ளது. உள்ளடக்கமோ இன்னும் பாரம் பரியத்தன்மை கொண்டதாகவே உள்ளது. அந்த உரையாடலை உருவாக்கிய சிந்தை இன்னும் பாரம்பரிய முதுசங்களில்தான் மூடுண்டு கிடக்கிறது என்பதையே இது சுட்டுகிறது. இந்த வகையில், அது இன்றைய யுகத்துடன் பௌதீக ரீதியாக மாத்திரம் இணைந்து, அறிவாய்வு, சிந்தனா மற்றும் முறைமை ரீதியாக வேறுபட்டு நிற்கின்ற தெனலாம்.

இத்தகைய உரையாடலை வடிவமைத்தவர்கள் சமகால சர்வதேச நாகரிகத்தை உருவாக்கியவர்கள் அனுபவித்த சிரமங்களை அனுபவித்திராதவர்கள் என்பதால், சிந்தனையையும் அந்தச் சிந்தனையை முன்வைக்கப் பயன்படும் சாதனங்களையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்க்கலாம் என்று எண்ணுகின்றனர். குறைந்தபட்சம் பெருநகர்ப் பகுதிகளின் கடினமான உருவாக்கத்தைக்கூட அவர்கள் பார்த்தவர்களல்லர். அவற்றின் பிதா மகன்கள் அக்காலப் பகுதிகளில் நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்த போதும், அதிலிருந்து கைத்தொழில் புரட்சிக்கு நகர்ந்த போதும், நவீன தொழிநுட்பத்துக்கும் தொடர்பாடல் யுகத்துக்கும் அடுத்தடுத்து நகர்ந்த போதும் அனுபவித்த சிரமங்களையும் பார்த்தறியாதவர்கள் அவர்கள். அந்தச்சாதனங்களை உருவாக்கியோரது அறிவும் சிந்தனையும் ஒவ்வொரு புத்தாக்கக் கட்டத்திலும் எவ்வாறு மீள மீள புதிதாகத் தகவமைந்தன என்பதோ, அந்த நாகரிக முன்னேற்றத்துடன் இணைந்த வகையில் அறிவுசார் வளர்ச்சியும் சமாந்தரமாக எவ்வாறு இடம் பெற்றது என்பதோ கூட அவர்களுக்குத் தெரியாது.

எவ்வாறாயினும், சமகாலநாகரிகத்தை உருவாக்கப்பாடுபட்டவர்கள் கூட அந்நாகரிகம் தனதுஅறிவாய்வின் உச்சத்தை எட்டும் போதுதான், முறைமை மற்றும் அறிவாய்வு என்பவற்றின்

பொருளையும் அவசியத்தையும் இலகுவாகப் புரிந்து கொள்வார்கள். சிந்தனா-அறிவுப்புத்துயிர்ப்புச் செயற்பாடு களின் மீது அந்த முறைமையும் அறிவாய்வும் எவ்வளவு தூரம் தாக்கம் செலுத்த முடியும் என்பதையும் அப்போது அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

இக்கூற்றின் உண்மைத்தன்மையைப் புரிந்து கொள்வதற்கு சமகால அறிவியல்கலைகளின் வரலாற்றையும் தத்துவத் தையும் நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். அக்கலைகள் இயற்கை விஞ்ஞானம் சார்ந்தவையாகவும் இருக்கலாம்; மானிடவியல் கலைகளாகவும் இருக்கலாம்; சமூகவியல் கலை களாகவும் இருக்கலாம். ஆயினும், இயற்கை விஞ்ஞானத்தின் தத்துவம் குறித்து நாம் அதிகம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்போதுதான் கலாசார-நாகரிகக் கட்டுருவாக்கத்திற்குச் சமாந்தரமாக எவ்வாறு சிந்தனா-அறிவியல் கட்டுருவாக்கம் இடம்பெற்று வந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். நவீன நாகரிகம் இறுதியாகச் சந்தித்த நெருக்கடி நிலைவரை இவ்விரு கட்டுருவாக்கங்களும் எவ்வாறு பரஸ்பரம் ஒன்றன் மீது மற்றொன்று தாக்கம் செலுத்தி வந்திருக்கின்றன என்பதைக் கண்டுகொள்ளவும் நமக்கு வாய்ப்புக் கிட்டும். நவீன நாகரிகம் மற்றும் அதன் சிந்தனா -அறிவியல் உச்சம் ஆகிய இரண்டும் ஒன்றாகவே இந்நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டு விட்டதாக நாம் உணரு மளவுக்கு இரு கட்டுருவாக்கங்களும் நெருங்கிய தொடர்பைப் பெற்று வந்திருக்கின்றன என்பது இங்கு கவனிக் கத்தக்கது.

இப்பின்னணியில்தான், நவீனத்துவ சிந்தனையின் தோல்வி பற்றியும், அது ஏற்படுத்திய பிளவு பற்றியும் பல அபயக்குரல்கள் எழுந்தன. பின் நவீனத்துவ சிந்தனையால் கூட அந்தப் பிளவை ஒட்ட முடியாது போனது மட்டுமன்றி, இறுதியில் அதுவும் அதே பிளவுபடுத்தும் சிந்தனையுடன் இணைந்து கொண்டது. உண்மையில், நவீனத்துவம் மதத்தையும் பிரபஞ்சத்தையும் இயற்கையையும் வேறு வேறாகப் பிளவுபடுத்திவிட்டதெனில்,

நவீனத்துவ சிந்தனை மனிதனையே பல கூறுகளாகச் சிதைத்து விட்டது எனலாம். பிளவுபடுத்திச் சிதைக்கும் இச்செயற்பாடு இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. நெருக்கடி எவ்வளவு ஆழமானது என்பதும், அது எவ்வளவு ஆழ்ந்து புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதும் இங்கு தெளிவாகத் தெரிகிறது. மனிதன் பிளவு படுத்திச் சிதைத்ததை மீண்டும் ஒட்ட வைக்க உதவக் கூடிய அகிலம் தழுவிய, முறைமையளவிலான மாற்று ஒன்று தேடிப்பெறப்பட வேண்டிய அவசியமும் தெளிவாகிறது.

இந்நெருக்கடி அகிலம் தழுவியது என்பதை அறிவை இஸ்லாமியப்படுத்துவதற்கான நமது சிந்தனைப் பள்ளி புரிந்து வைத்திருக்கிறது. சாஸ்வதமானவனும் எல்லையற்றவனுமாகிய அல்லாஹ்வின் வேதத்தின் துணை கொண்டு தவிர இந் நெருக்கடியிலிருந்து வெளியேற வேறு மார்க்கம் கிடையாது என்பதையும் நாம் புரிந்து வைத்திருக்கிறோம். அந்த வேதத்தை எவ்வகையிலும் அசத்தியம் அணுக முடியாது. அது மட்டுமே தனது அத்தியாயங்களிலும் வசனங்களிலும் நவீன மனித நாகரிகத்தைத் தத்துவார்த்தரீதியாக மீள்வார்ப்புச் செய்யும் அகிலத்துவ முறைமையொன்றைச் சுமந் திருக்கிறது.

அதேவேளை, - கவலைக்குரிய வகையில்- நவீன நாகரிகத்தை வடிவமைத்த உலகுடன் இயைந்து பயணிக்காத ஒரு சமுதாயத்தின் கையில்தான் அந்த வேதம் இருக்கிறது. சிந்தனா-அறிவு சார்ந்ததும் நாகரிகம் சார்ந்ததுமான இரட்டைப்பின்னடைவு நெருக்கடியொன்றில் நாம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதைக் கூட அந்தச் சமுதாயத்தினால் உணர முடியவில்லை. இதனால், கீர்த்திமிகு அவ்வேதத்தின் மகத்துவத்தை தனது காலத்தின் தரத்துக்கேற்ப அச்சமுதாயத்தினால் புரிந்து கொள்ள முடியாமல் போனது. அதில் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரவோ, இன்றைய உலகின் அறிவியல்-நாகரிக உச்சத்துக்கமைவாக அவற்றை முன்வைக்கவோ முடியாமலும் போனது. அல்-குர்ஆன் பற்றிய தனது பாரம்பரியப் புரிதலின் மீதே அது தொடர்ந்தும் தங்கியிருக்கிறது.

நெருக்கடியை உண்மையாகப் புரிந்து கொண்டு தீர்வைத் தேடிக் கொண்டிருக்கும் மேற்கத்தியர்களால்கூட அல்-குர் ஆனிலிருந்து அகில முறைமையொன்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் அல்-குர்ஆனை ஒரு மதநூல் என்ற கருத்தாக்கத்துடனேயே அணுகுகின்றனர். மதத்தை அவர்கள் பல பகுதிகளாகச் சிதைத்து வெகுநாளாயிற்று. மதத்துக்கும் அறிவியலுக்கும் இடையிலான எந்த உறவையும் அவர்கள் ஏற்பதில்லை. எனவேதான், அகிலம் தழுவிய மாற்று முறை மையொன்றை அவர்கள் தங்களுக்குத் தெரிந்த - இஸ்லாம் தவிர்ந்த -அனைத்துத் தத்துவ மார்க்கங்களிலும், மானிட முதுசங்களிலும் தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இஸ் லாத்தை மட்டும் ஒரு விரோதியைப் போல் அல்லது பழைய பகைவனைப் போல் நோக்குகின்றனர்.

நமது நிலங்கள் கொண்டிருக்கின்ற இயற்கையின் புதையல்களை ஒத்ததுதான் இவ்விடயமும். தமது நிலங்களில் புதைந்திருக்கும் செல்வங்களை - நமது பின்னடைவின் காரணமாக- நாமாகக் கண்டுபிடிக்கத் தவறிவிட்டோம். பிறர் முன்னேற்றமடைந்து தங்களது நாகரிகத்துக்கு அவ்வளங்கள் அவசியமானவை எனப் புரிந்துகொண்டு வெளிக்கொணரும்வரை அவை நமது நிலங்களில் தான் மறைந்து கிடந்தன. அதே போன்றுதான் நமது தலைவிதியும் அவர்களது கைகளில் அகப்பட்டுக்கிடக்கிறது. நமது நாகரிக நெருக்கடியை இன்னும் நம்மால் தாண்டிச் செல்ல முடியவில்லை. நமது நிலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட செல்வங்களை வைத்துப் பிறருடன் நாகரிகப்பங்காளிகளாக மாறும் நிலையையும் நாம் எட்டவில்லை. அதற்கு மாறாக, நமது பின்னடைவும், பிற்போக்கும், பிறரில் தங்கிநிற்கும் பண்பும் இன்னும் அதிகரித்துள்ளன. அல்-குர்ஆனின் அகிலத்துவ அறிவாய்வு முறைமை அந்த அல்-குர்ஆனிலேயே உள்ளடங்கி இருக்கிறது. ஆனால் நமது அறிவு-நாகரிகப் போதாமை அதனைக் கண்டுகொள்ளக் கூடிய நிலையிலில்லை. அதில் நாம் கண்டெடுப்பதைக் கூட அல்-குர்ஆன் விளக்கவுரை என்ற பெயரிலும், அல்-குர் ஆனியக் கலைகள்

என்ற பெயரிலும் பல நூற்றாண்டுகளாகத் திரட்சியடைந்து வந்திருக்கும் பிரமாண்டமான பாரம்பரிய முதுசங்கள் பறித்துச் சென்று மற்றொரு முதுசமாக மறுவுற்பத்தி செய்து கொள்கின்றன. தாகத்தோடு இருப்பவன் அதனை தண்ணீர் என நினைத்து வருகிறான். ஆனால் அருகில் நெருங்கிப் பார்க்கும் போது தான் அது நாகரிக உத்வேகத்தையோ செயலூக்கத்தையோ செயல்திறனையோ படைக்கவியலாத கானலாக இருப்பதைக் காண்கிறான்.

இன்னொரு புறத்தில், கடந்த கால மற்றும் நிகழ்கால இஸ்றாஈலிய்ய மௌட்டீகங்களும், இஸ்லாமியமான எல்லா வற்றுக்கும் எதிரான வரலாற்று நினைவோட்டங்களும் உள்ளடங்கிய வரலாற்று முதுசங்களின் தொகுப்பொன்று அல்-குர்ஆனை நெருங்க விடாது வேறு சிலரைத் தடுத்துக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய அல்லது மேற்குமையவாதக் காலனித்துவமும், அகங்காரமும், வெள்ளைத் திமிரும் உண்டுபண்ணிய ஏராளமான பிரச்சினைகளும்கூட மேற்கத் தியருக்கும் அல்-குர்ஆனைச் சுமந்திருப்பவர்களுக்கும் இடையில் அனைத்து வகையான முரண்பாடுகளையும் பகைமையையும் மோதலையும் பற்றவைத்துவிட்டன. இதனால், நெருக்கடியில் அவதியுற்றுக் கொண்டிருக்கும் மேற்குக்கும், அதற்கு நிவாரணம் அளிக்கக் கூடிய அல்-குர்ஆனுக்கும் இடையிலான திரை இன்னும் அடர்த்தியாகி விட்டது.

இதோ இன்று எல்லா இடங்களிலும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் நவீன மனித நாகரிகத்துக்கெதிரான அச்சுறுத்தலாகப் பார்க்கும் நிலை உருவாகியிருக்கிறது. அல்-குர்ஆனும்கூட பயங்கரவாதம், தீவிரவாதம் என்பவற்றுடன் தொடர்பு படுத்தப்பட்டு அச்சுறுத்தலொன்றாகவே பார்க்கப் படுகிறது. அதனைச் சுமந்திருப்பவர்கள் எல்லா இடங்களிலும் நசுக்கப்படுகிறார்கள். அவர்களை வேரறுப்பதற்கு முழு உலகும் தூண்டப்படுகிறது. மத்திய கிழக்குச் சூழமைவில் மேற்கொள்ளப்படும் ‘தொடர்புகளை இயல்பு நிலைக்குக்

கொண்டு வருதல்' (normalization of relations) சார்ந்த முயற்சிகள்கூட - மறுதரப்பினரின் பார்வையில் அல்-குர் ஆனிலிருந்து குறிப்பிட்ட சில வசனங்களை அகற்றினால் மாத்திரமே சாத்தியம் என்ற நிலை உருவாகியிருக்கிறது. ஏற் கனவே 'வஹீ'யின் வசனங்களை அவற்றின் இடங்களிலிருந்து அகற்றிப் பொருள்திரிபு ஏற்படுத்துவதில் அனுபவம் பெற்றவர்கள் அல்-குர்ஆனிலும் அத்தகைய வசனங்களை தேடித் திரட்டும் திருப்பணியை திறம்படவே செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் மூலமாக அல்-குர்ஆனின் ஆகர்ஷணத்தையும் ஆக்கத் திறனையும் நீர்த்துப்போகச் செய்து, முஸ்லிம்கள் அதனை தொடர்பற்றுச் சிதறிய பாகங்களாக ஓதும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவர்களது நோக்கம். அப்போதுதான் அல்-குர்ஆனின் முறைமையோ ஒழுங்கு விதிகளோ கொள்கைகளோ கண்டுகொள்ளப்படாமல், முஸ்லிம்கள் பிற்போக்கிலேயே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அல்-குர்ஆனும் உயிர்வாழ்பவர்களுக்கோ உலக வாழ்க்கைக்கோ பயன்படாமல், மரணித்தவர்களுக்கும் மறுமைக்கும் மாத்திரம் பயன்படும் நூலாக எஞ்சியிருக்கும்.

மனித இனத்துக்கெதிராக இவ்வாறு தாம் இழைத்துக் கொண்டிருக்கும் துரோகமும், மனித இனம் தனது பிணிகளைக் கண்டறிந்து சிகிச்சை பெறும் வாய்ப்பை இல்லாதொழிக்கும் குற்றமும் எவ்வளவு பாரதூரமானவை என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வார்களாயின், கைசேதத்தால் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டு விடுவார்கள். அப்படி மாய்ந்து போவதே அவர்களுக்கும் மனித இனத்துக்கும் பயனுள்ள முடிவாகவும் அமையும். அதன் பிறகாவது துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மனித இனத்துக்கும் அல்-குர்ஆனுக்கும் இடை யிலான தடைகள் நீங்க ஓரளவு வாய்ப்பேற்படலாம்.

அறிவை இஸ்லாமியப்படுத்தும் செயல்வாதமானது மிகக் கடினமும் சிக்கலும் கொண்ட இருமுனைப் பணியை முன்னெடுக்க முயல்கிறது. முதலில் அது முஸ்லிம்கள் அல்-

குர்ஆனைக் கைவிட்டிருக்கும் நிலையை இல்லாதொழித்து, அல்-குர்ஆனின் முறையியல் மற்றும் அறிவாய்வியல் சார் தனிப்பண்புகள் பற்றிய பிரக்ஞையை முஸ்லிம் உம்மாவிடம் ஏற்படுத்த முனைகிறது. அப்போதுதான் உம்மா தான் வாழும் காலத்தின் தரத்துக்கேற்ப அல்-குர்ஆனை எப்படி வாசிப்பதென்பதைக் கற்றுக் கொள்ளும். அந்த வாசிப்பையும் பிரபஞ்சத்தின் மீதான வாசிப்பையும் ஒன்றிணைத்து, மேற்குமையவாத அடையாள அழிப்பு முயற்சிகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வது எப்படியென்றும் கற்றுக் கொள்ளும். ஏனெனில், மேற்குமையவாதம் இன்று உலகக் கட்டமைப்பைத் தனது நோக்கிற்கும் அதிகாரத்திற்கும் இசைவாக மீட்டுருவாக்கம் செய்யப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறது. மேற்கத்திய அதிகார மையத்தின் உள்ளீர்ப்பு விசைகளிலிருந்து அல்-குர்ஆனிய சமூகத்தைப் பாதுகாப்பதற்கு காலாவதியாகிச் செயலிழந்த தர்க்கங்கள் பயன்படப் போவதில்லை என அறிவை இஸ்லாமியப் படுத்தும் இயக்கம் தெளிவாகப் புரிந்திருக்கிறது.

இஸ்லாமிய அறிவு மாதிரியோ அதன் எச்சங்களோ நாகரிக முன்னேற்ற மாதிரிக்கு முரணானது என்றே மேற்கு அதிகார மையம் கருதுகிறது. ஏனெனில் அந்த மேற்கு மாதிரியானது அதிகார வர்க்கங்களிடம் குவிமையம் கொண்டு, பிறரது சக்தி மீதும் வளங்கள் மீதும் மேலாதிக்கம் செலுத்தி, அவற்றை மேற்கு அதிகார மையத்துக்கு இசைவாகப் பணிய வைப்பதை தனது அடிப்படைப் பணியாகக் கொண்டது. எனவேதான், இஸ்லாத்தை முற்றுகையிடவும், முடிந்தால் அதனை நீர்த் துப் போகச் செய்யவும் தனது ஆற்றல்கள் முழுவதையும் பயன்படுத்தி அது முயற்சி செய்கிறது. அந்த வகையில், ஷரீஆவை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் - அதன் பார்வையில்- நவீன மானிடநாகரிகத்துக்குஎதிரானஅத்துமீறலாகவேகருதப்படுகிறது. அத்தகைய முயற்சிகள் அனைத்தும் இராணுவப் புரட்சிகள் மற்றும் ஆயுதக்கிளர்ச்சிகள் உள்ளிட்ட எல்லா வழி முறைகளூடாகவும்

முறியடிக்கப்பட வேண்டும் என அது கருதுகிறது. இஸ்லாமியப் பணியைப் பலப்படுத்தும் எத்தகைய செயற்பாடும் -அது எந்த வடிவத்தைப் பெற்றிருந்தாலும்- பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் பலப்படுத்தும் செயற்பாடாகக் கருதப்பட்டு அதன் அனைத்து மூல ஊற்றுக்களும் அழிக்கப்பட வேண்டுமென்றும், அது மூச்சுவிட இடமளிக்கும் அனைத்து ஜன்னல்களும் அடைக்கப்பட வேண்டுமெனவும் மேற்கு அதிகார மையம் பிரசாரப்படுத்துகிறது.

இந்த அநியாயமான தாக்குதலின் நிழலில், உண்மையான தீவிரவாதி யார்? மைய நீரோட்டமுஸ்லிம் யார்? சீரிய முஸ்லிம் யார்? பிறழ்வுற்ற முஸ்லிம் யார்?.. என்பதையெல்லாம் பலரால் வேறுபடுத்திப் புரிந்துகொள்ள முடியாமல் போயிற்று. இதனால், பெயர், தோற்றம், வடிவம் என்பவை தொடர்பாகக்கூட இங்கு மோதல் நடந்து கொண்டிருக்கிறது. தொலை தூரத்தில்கூட இஸ்லாத்துடன் தொடர்புபட்டிருக்கும் அனைத்தும் அழித் தொழிக்கப்படுகிறது. அவர்கள் தீவிரவாதிகள் எனப் பெயர் குறிக்கும் அனைவரும் தாக்கப்படுகின்றனர். அத்தகைய ஒருவருக்கு ஆதரவாக நடுநிலையாளர் எனப்படும் எவராவது பேசிவிட்டால், அல்லது நடக்கும் அநியாயத்தை எதிர்த்து விட்டால் அவரும் தீவிரவாதியாக விரல் நீட்டப்படுகிறார். ஏனெனில் இறுதி இலக்கு இஸ்லாமும் முஸ்லிம்களும் சுவடு தெரியாமல் அழிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

இப்பின்னணியில், அறிவை இஸ்லாமியப்படுத்தும் இயக்கமானது மேலே சுட்டிக் காட்டிய விடயங்களை முஸ்லிம்களுக்கு மத்தியில் சாத்தியப்படுத்த உழைக்கும் அதே வேளை, இஸ்லாத்தின் சர்வேதசக் கருத்தாடலை வடிவமைக்கவும் முயன்று கொண்டிருக்கிறது. நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் உலகம் தனக்குரிய மருந்தையும் நிவாரணத்தையும் அல்-குர்ஆனின் மூலமாகவும் அதன் அறிவு முறைமை மூலமாகவும் கண்டடைய உதவும் முயற்சி இது. மனித அறிவியல் சாதனைகளை அவற்றின் தத்துவப் பின்புலத்திலிருந்து வேறாக்கியெடுக்கும்

*முயற்சியாகவும் இது அமைந்துள்ளது. ஏனெனில், அப் போதுதான் அறிவுக்கும், விஞ்ஞானக் கலைகளுக்கும், பெறுமானங்களுக்கும் இடையிலான தொடர்பை மீள நிலை நிறுத்துவதற்கு மனித இனம் இயலுமை பெறும். மனித இனம் கண்டடைந்த அறிவையும் அறிவியல் கலைகளையும் இஸ் லாமிய அறிவு முறைமையொன்றின் சூழமைவில் வைத்துப் பயன்படுத்தும் சாத்தியமும் உருவாகும். அறிவியல் கோட் பாடுகளை அவற்றின் நிலை கோடலான பரி மாணங்களிலிருந்து (*positivistic dimension*) வேறாக்கி, அந்த அறிவியல் கலைகளின் தத்துவார்த்தக் கோட்பாடுகளை இஸ்லாமியப்படுத்தவும் இது வே வழிவகுக்கும். மட்டுமன்றி, பிரபஞ்சம், வாழ்வு, இயக்கம் என்பவற்றில் பொதிந்துள்ள தெய்வீக இலக்கை உள்ளடக்கிய வகையிலான அகிலத்துவச் சட்டகமொன்றை மீட்டுருவாக்கம் செய்துகொள்ளவும் இதனால் வழி பிறக்கும்.*

*அறிவை இஸ்லாமியப்படுத்துவது இஸ்லாமிய மட்டத்தில் மட்டுமன்றி,சர்வதேசஅளவிலும்எவ்வளவுமுக்கியத்துவம்மிக்கது என்பது மேற்சொன்ன உண்மைகளிலிருந்து தெளிவாகிறது. அந்த வகையில், இவ்வறிவாய்வியல் முறைமை விவகாரமானது பின்வரும் ஆறு அடிப்படைகளை உள்ளடக்கியிருக்கிறது என லாம்:*

*1.நவீனஇஸ்லாமியஅறிவொழுங்குஒன்றைக்கட்டியெழுப்புதல்.*

*2. அல்-குர்ஆனிய அறிவு முறைமையை மீட்டுருவாக்குதல்.*

*3. சங்கைமிகு அல்-குர்ஆன் சிந்தனைக்கும் அறிவுக்கும் நாகரிகத்துக்குமான மூலாதாரம் என்ற வகையில் அதனை அணுகு வதற்கான முறைமைகளை உருவாக்குதல்.*

*4. சிந்தனைக்கும் அறிவுக்கும் நாகரிகத்துக்குமான மூலாதாரம் என்ற வகையில் புனித ஸுன்னாவை அணுகுவதற்கான முறை மைகளை உருவாக்குதல்.*

*5. இஸ்லாமிய அறிவு முதுசங்களில் காணப்படும் கண்மூடிப் பின்பற்றலையும் இடைவெளிகளையும் தாண்டி அவற்றை அணுகு வதற்கான முறைமைகளை உருவாக்குதல்.*

*6. மனித சிந்தனையிலும் நாகரிகத்திலும் உள்ள குறைபாடு களையும் நெருக்கடிகளையும் தாண்டி, அவற்றுடன் தொடர் பாடுவதற்கு ஏதுவான வகையில் நவீன மானிட அறிவு முதுசத்தை அணுகும் முறைமைகளைக் கட்டியெழுப்புதல்.*

*முக்கியதுமானதும் அத்தியாவசியமானதுமான இவ்விவகா ரம் - குறிப்பாக- பேராசிரியர்களையும், விஞ்ஞானிகளையும், சிந்தனையாளர்களையும், உயர்கற்கை மாணவர்களையும் அவர்களது தூதுத்துவக் கடமைகளுக்கு நேருக்கு நேர் நிறுத்து கிறது; அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பாரிய பணியை உணர்த்தி நிற்கிறது; அறிவாய்வுப் பணியை ஒரு தூதாக முன் னிறுத்துகிறது; பல்கலைக்கழகங்களையும் கலாநிலையங் களையும் அறிவாய்வு மன்றங்களையும் உண்மையான அல்-குர்ஆனிய எழுச்சியின் தளங்களாக மாற்ற வேண்டிய தேவை யை வற்புறுத்துகிறது. ஏனெனில், அத்தகைய எழுச்சியால் மட்டுமே இன்றைய உலகத்தை அல்-குர்ஆனின் மூலமாக இருள்களிலிருந்து ஒளியை நோக்கி அழைத்து வர முடியும்; சக்தியும் புகழும் மிக்கவனது பாதையில் மனித இனத்தை மீண்டும் கொண்டுவந்து நிறுத்த முடியும்.*

*“மனிதர்களை அவர்களது ரட்சகனின் நாட்டப்படி இருள் களிலிருந்து ஒளியை நோக்கி நீர் அழைத்து வர வேண்டும் என்பதற்காக உமக்கு நாம் இறக்கிய வேதம் இது. சக்தியும் புகழும் மிக்கவனாகிய அந்த இறைவனின் பாதைக்கு அவர்கள் வர வேண்டும். வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அவனுக்கே சொந்தம். சத்தியத்தை மன முரண்டாக ஏற்க மறுப் போருக்குக் கேடுதான். அவர்களுக்குக் கடுமையான வேதனை காத்திருக்கிறது. அவர்கள் மறுமையை விட இவ்வுலக வாழ்வையே மேலாக விரும்புவார்கள். பிறரை அவர்கள் அல்லாஹ்வின் பாதையை விட்டுத் திருப்புவ தோடு, அந்தப் பாதை உருக்குலைந்து விட வேண்டும் எனவும் விரும்புவார்கள். அவர்கள்தான் அதிக தூரம் வழி கெட்டுச் சென்றவர்கள்!” (இப்றாஹீம்: 1 - 3)*

# அத்தியாயம் ஒன்று

## சமகால இஸ்லாமியக் கருத்தாடல் எதிர்கொள்ளும் நெருக்கடி:

### நெருக்கடியின் ஊக்கிகளும் நெருக்கடியாக்கும் மனப்பாங்கும்

*முஸ்லிம் உம்மாவின் அனைத்துச் சமூகங்களும் (அவற்றின் முன்னணியில் அறபுச் சமூகம் இருப்பது வெளிப்படை) ஒரு சிந்தனா நெருக்கடியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மையில் உம்மாவின் கற்றறிவாளர்கள் - வேறெப்போதும் இல்லாதளவு - ஏகமனதாக உடன்பட்டிருக்கின்றனர். உம்மாவின் கலாசாரப் பிரசன்னமின்மை (*cultural absence*), அறிவியல் பின்னடைவு, நாகரிக மறைவு என்பவற்றில் அந்த நெருக்கடி தெளிவாகத் தெரிகிறது. அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னா, சட்டவாக்கம், விழுமியங்கள் என்பவற்றின் உள்ளடக்கமாய் அமைந்த ஆரோக்கியமான இஸ்லாமியக் கருத்தாடலை பிறருக்குக் கொண்டு சேர்ப்பதில் உம்மாவின் நவீன சிந்தனா உரையாடல் கொண்டிருக்கும் இயலாமையிலும் அந்த நெருக் கடி ஸ்தூலமாக வெளிப்படுகிறது. அந்த நெருக்கடிக்கான காரணங்கள் என்ன என்பதையும், அதற்கான சிகிச்சைகள் என்ன என்பதையும் வரையறை செய்வதில் உம்மாவின் கற்றறிவாளர்கள் மத்தியில் முரண்பாடு காணப்பட்டாலும், குறித்த நெருக்கடி உண்மையானது என்பதில் முரண்பாடு கிடையாது.*

*நெருக்கடி பற்றிய இப்புரிதலானது முஸ்லிம் சிந்தைக்கு முன் னால் எழுச்சிக்கும் சீர்திருத்தத்துக்குமான பல திட்டங்கள் முன்மொழியப்பட வழி வகுத்திருப்பது இயல்பானதே. அந்த வகையில், பலவித அறிவார்ந்த முயற்சிகளும் அபிப்பிராயங்*

களும் திட்டங்களும் முன்வைக்கப்பட்டிருப்பதைக் காண்கி றோம். அதேபோல், மேற்கத்தியத் திட்டமும் கூட பல்வேறு வழிகளிலும் முறைகளிலும் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. குறித்த நெருக்கடியானது அம்மேற்குத் திட்டத்தைப் பிழையாக நடைமுறைப்படுத்தியதால் ஏற்பட்டதேயன்றி, அது முறைமையின் தவறோ சிந்தனையின் தவறோ அல்ல எனவும் விளக்கம் சொல்லப்பட்டது. போலியாகச் சோடிக்கப்பட்ட வேறு சில திட்டங்கள் முன்வைக்கப்படும் முயற்சிகளும் நடந்தேறியிருக்கின்றன. அவை மேற்கத்தியத் திட்டங்களை உள் ளடக்கமாகவும், இஸ்லாமியத் திட்டங்களிலிருந்து பெறப்பட்ட சில ஆடைகளையும் வர்ணங்களையும் வெளித்தோற்றமாகவும் கொண்டிருந்தன.

மேற்குநாகரிகத் திட்டத்தின் அழுத்தத்தினாலும், அதன் பல்முனை உத்திகளுடன் கூடிய கருத்தாடலின் ஆதிக்கத்தினாலும், பிரச்சினைகளின் சிந்தனாரீதியான காரணங்களை விட்டுவிட்டு அப்பிரச்சினைகளால் விளைந்த தாக்கங்களைக் கவனிப்பதில் மூழ்கியிருந்ததாலும் எழுச்சிக்காக முன்வைக்கப்பட்ட பெரும் பாலான திட்டங்கள் பொருட்களின் உலகத்தை (world of things) திருத்தியமைத்தல் பற்றியே கவனத்தில் கொண்டிருந்தன. சிந்தனைகளின் உலகத்துக்கு (world of ideas) அவை போதியளவு முக்கியத்துவம் வழங்கவில்லை. இதனால் அவற்றிடம் உரிய திட்டமிடலோ, புறநிலையான (objective) முழுமொத்தப் பார்வையோ, தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யும் ஆற்றலோ, பகுப்பாய்வோ இல்லாது போயிற்று. இது அவற்றின் வீழ்ச்சிக்கும் அவநம்பிக்கைக்கும் வழியமைத்ததுடன், பிரச்சினையை இன்னு மின்னும் சிக்கலடையவும் செய்தது.

### 1) இஸ்லாமியத் திட்டம்.

இஸ்லாமியத்திட்டத்திலிருந்து பிறந்த கருத்தாடலனாது, உம்மாவுக்கும் அதன் எதிரிகளுக்கும் இடையிலான கசப்பு நிறைந்த போராட்டச் சூழமைவின் காரணமாக, அந்தப்

போராட்டத்துக்கான தயாரிப்பிலேயே பெருமளவு கவனத்தைக் குவித்துவிட்டது. கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முஸ்லிம் நிலங்களில் அனேகமானவையும் முக்கிய மானவையும் ஆக்கிரமிக்கப்பட்டதிலிருந்து அந்தப் போராட்டம் ஆரம்பமாகியது. அவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட சில நிலங்கள் பாதுகாப்பும் செல்வாக்கும் கொண்ட பிராந்தியங்களாகவும், மற்றும் சில நிலங்கள் சந்தைகளாகவும் உயிராதாரப் பிரதேசங் களாகவும் மாற்றப்பட்டிருந்தன. இந் நிலையானது உம்மாவின் பாதுகாப்புக் குறித்த கரிசனைக்கு வழியமைத்ததோடு, உம்மாவின் சக்திகளையும் பரிசீலனைகளையும் இரு அடிப்படையான விவகா ரங்களை நோக்கித் திருப்பியது:

**அ) இஸ்லாமிய இறையியல் (அகீதா) கோட்பாட்டைப் பாதுகாத்தல்.**

**ஆ) உம்மாவை அரசியல் மோதலுக்கும், சிலபோது சில இடங்களில் இராணுவ மோதலுக்கும் தயார்படுத்துதல்.**

இவ்விவகாரங்களுக்கு அப்பால் எஞ்சிய ஆற்றல்கள் சட்ட நியாயவியல் விவகாரங்களை நோக்கித் திருப்பப்பட்டன. சட்ட நியாயவியல் விவகாரங்களை புதிய வடிவத்தில் முன்வைத்தல், வியாக்கியானம் வழங்குதல், சுருக்கித் தருதல், மேற்கத்திய சட்டப் பிரச்சினைகளோடு ஒப்பிட்டு விளக்குதல் முதலிய பணிகளுக்கு அவ்வாற்றல்கள் செலவிடப்பட்டன.

ஆனால், சிந்தனா நெருக்கடியைக் கையாளும் விடயத்தில் இஸ்லாமியக் கருத்தாடலானது - மிக அண்மைக்காலம் வரை- உரிய கவனம் எடுக்கவோ, உரிய வகையில் அதனை கற்றலுக் கும் ஆய்வுக்கும் உட்படுத்தவோ இல்லை. அந்த நெருக்கடி ஏற்பட்டமைக்கான காரணங்கள் என்ன? மோதலால் கிட்டிய களப்புரிதலிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் பயன்பெறுவது எப்படி? அவற்றின் ஒளியில் அறிவாய்வு மற்றும் கலாசார மாளிகையைக் கட்டியெழுப்புவது எவ்வாறு?... என்றவாறான பரிசீலனைகளை அந்த இஸ்லாமியக் கருத்தாடல் மேற் கொள்ளவில்லை.

### *(அ) இஸ்லாமிய இறையியல்(அகீதா) கோட்பாட்டைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தல்.*

*இஸ்லாமிய இறையியல் நம்பிக்கைக் கோட்பாட்டைப் பாதுகாக்கும் அழைப்பின் மீதுதான் பெருமளவு முயற்சிகள் செலவிடப்பட்டுள்ளன என்பது கவனிக்கத் தக்கதாகும். உம்மாவின் அங்கத்தவர்களது அறிவும் உள்ளமும் அடிப்படையான நம்பிக்கைகள் குறித்தான சாட்சியத்தை நிராகரிக்காத வரையில், சரியான இஸ்லாமியக் கருத்தாக்கங்களில் பெரிய பிறழ்வெதுவும் ஏற்படப்போவதில்லை எனச் சிலர் நம்பியதே இதற்குக் காரணமாகும். இது பெருமளவுக்கு உண்மையாயினும் மொத்தமாக ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில், உள்ளங்கள் இறைவன் பற்றியும் இறைத்தூதர் பற்றியுமான நம்பிக்கையால் நிறைந்திருந்தாலும், அவற்றின் இஸ்லாமியக் கருத்தாக்கங்களில் பெரும் திரிபும் மாற்றமும் ஏற்பட்டுள்ளன. இந்த உண்மையை நாம் மனதில் கொண்டு கவனமாகச் செயல்பட்டால், சரியான முறைமையின் அடிப்படையில் அறிவாய்வியல் இயலுமையை நிர்மாணித்து, இறையியல் நம்பிக்கைக் கோட்பாட்டை ஒரு சிந்தனா - அறிவுத் தளமாக மாற்றியமைத்துக் கொள்வது சாத்தியமாகி விடும்.*

*பொதுவாக நம் மத்தியில் ஒரு தவறான நம்பிக்கை நிலவுகிறது. கொஞ்சம் ஆக்ரோஷமான உரைகள், ஓர் ஆன்மீகப் பாய்ச்சல், கீர்த்தி மிகு வரலாற்றுப் பக்கங்கள் குறித்த நினைவூட்டல்... இவ்வளவும் போதும்; உம்மா மீண்டும் வளம் மிக்க இஸ்லாமிய வாழ்வையும், புதிய இஸ்லாமிய நாகரிகத்தையும், முழுமை தழுவிய இஸ்லாமிய ஒருமைப்பாட்டையும் நோக்கி உத்வேகத்துடன் பயணிக்கத் தொடங்கிவிடும்; உம்மாவின் இயக்கத்தைத் திசைப்படுத்தி, பயணவிதிகளை ஆழமாக ஸ்தாபிக்கக்கூடிய சரியான சிந்தனா - கோட்பாட்டாக்க-கலாசார - அறிவாய்வு உலக மொன்றைக் கட்டியெழுப்பாமலே அந்தப் பயணம் நிறைவேறிவிட முடியும். இதுதான் அந்தப் பிரமை. அபாயகரமான இந்நிலை நமது பார்வைத் தெளிவும், பிரச்சினை குறித்த விடயவாரியான பிரக்ஞையும், தீர்வு*

*பற்றிய வினைமைமிக்க சிந்திப்பும் தொலைந்து விடுவதற்கான சமிக்ஞையாகும். உம்மா இன்று அனுபவித்துக் கொண்டிருக்கும் மோசமான யதார்த்தமே இதற்குப் போதுமான சான்று.*

*சிந்தனா நெருக்கடி என்பது இறையியல் நம்பிக்கைக் கோட்பாட்டில் ஏற்பட்ட கோளாறின் வடிவங்களுள் ஒன்றுதான் என்று சிலரை எண்ணச் செய்ததும் இந்தப்பிரமைதான். அதனால் தான் நம்பிக்கைக் கோட்பாட்டைச் சீரமைத்துவிட்டால் நிச்சய மாக அது சிந்தனைச் சிக்கலை அவிழ்க்க வழியேற்படுத்திவிடும் என அவர்கள் எண்ணினர்.*

*இஸ்லாமிய வரலாற்று யதார்த்தத்தைக் கற்றல், உம்மாவின் பழம்பெரும் கீர்த்திகளை நினைவுபடுத்தல், அதன் நாகரிக ஆளு மைப் பரிமாணங்கள் காலத்துக்குக் காலம் வளர்ச்சி கண்டுவந்த விதத்தை அறிதல் என்பன இன்று எதிர்பார்க்கப்படும் அறிவுக் கட்டுருவாக்கத்துக்கு நாகரிக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் - மிக அவசியமானவை என்பதை எவராலும் மறுக்க முடியாது என்று தான் நாமும் கருதுகிறோம். ஆயினும், சிந்தனா மற்றும் கோட்பாட்டுப் 'பதிவேற்றம்'(*loading*) மற்றும் 'வெறுமையாக்கம்' (*unloading*) தொடர்பான முன் நிபந்தனைகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாதிருப்பதே இங்குள்ள பிரச்சினையாகும். பகுப்பாய்வு செய்யும் ஆற்றலின்மை, வெற்றிக்கான நிபந்தனை களைக் கண்டறிய முடியாமை, வரலாற்றுச் செயல்வாதத்தின் சூழமைவுகளை மதிப்பீடு செய்ய முடியாமை என்பனவும் மேற் குறித்த பிரச்சினையுடன் இணைந்தவை தான். இவ்விவகாரங்கள் உரிய முறையில் அணுகப்பட்டால்தான், பழம்பெருமை பேசி நிகழ்கால இயலாமையை மறைத்துக் கொள்ளும் நிலை தவிர்க்கப்பட்டு, வீழ்ச்சியையும் எழுச்சியையும் ஆளுகை செய்கின்ற நியமங்களைப் புரிந்து கொள்ளும் நிலை உருவாகும். சிந்தனையை உம்மாவின் நாடி நரம்புகளின் ஊடுருவிச் செல்லும் சக்தியாகவும் செயல்திறனாகவும் மாற்றுகின்ற ஆற்றல் நம்மிடம் இல்லையெனில், வரலாறும் பாரம்பரியமும் எழுச்சிக்கும் கட்டுரு வாக்கத்துக்குமான காரணியாக அமைவதற்குப் பதிலாக நாகரிக - கலாசாரத் தடைகளாகமாறி விடும்.*

ஆக, நமது இப்பகுப்பாய்வின் நோக்கம் இறையியல் கோட்பாடு பாதுகாக்கப்படுவதன் முக்கியத்துவத்தை குறைத்துக் காட்டுவதல்ல. ஏனெனில், அந்த நம்பிக்கைக் கோட்பாட்டின் பாதுகாப்பே இஸ்லாமிய அறிவு - நாகரிகக் கட்டுருவாக்கத்தின் அச்சாணியாகும். மட்டுமன்றி, ஆரம்பகால முஸ்லிம்கள் நம்பிக்கைக் கோட்பாட்டின் பல்வேறு பரிமாணங்களைப் புரிந்திருந்தமைதான் அக்கோட்பாட்டை பொது வாழ்வில் பிரயோகிக்கவும், நடத்தையைச் சீரமைக்கும் வகையில் 'இஜ்திஹாத்' செய்யவும் அவர்களைத் தூண்டியது. அதன் மூலமாக, ஓர் ஆரோக்கியமான அறிவாய்வுக் கலாசாரக் கட்டொழுங்கு உருவாக்கப்பட்டதுடன், உலக வரலாறு என்றுமே கண்டிராத நாகரிகமொன்று ஆழ வேரூன்றவும் வழியேற்பட்டது.

எனினும், அகீதா தொடர்பான ஆய்வுகள் பிற்காலப் பிரிவுகளில், குறிப்பாக பிற்கால தர்க்க இறையியல் கோட்பாட்டாளர்களிடம், வெறும் சட்டகங்களாகவும் கூற்றுக் களாகவும் தேக்கமடைந்தன. அதன் கருத்தாக்கங்கள் அவர் களது தர்க்க வரையறைகளாலும் வாத முறைமைகளாலும் இஸ்லாமிய அணியினுள் முற்றுகையிடப்பட்டுக் கிடந்தன. இதனால், கோட்பாட்டைச் செயலுருவாக்கம் செய்வதால் உருவாகும் சிந்தனை என்ற பெறுபேறு அங்கு காணாமல் போனது. அடிப்படைகளைப் பாதுகாத்துக் கொண்டு யதார்த்தமான பிரயோகத்தில் அதனை மீள்வார்ப்புச் செய்யவும் முடியாமல் போனது. அப்படிச்செய்திருந்தால், அது காலத்துக்கேற்ற புத்துயிர்ப்பை ஏற்படுத்தி, முழுமொத்த நோக்கிலான சட்டகமொன்றையும், முழு மொத்த அறிவு மாதிரி யொன்றையும் அளித்திருக்கும்.

'இல்முல்கலாம்' என்னும் தர்க்க இறையியல் கோட்பாட்டுச் சட்டகத்தினுள்ளும், வெறும் தத்துவார்த்தப் புரிதலின் அடிப் படையிலும் 'அகீதா' ரீதியான சீர்த்திருத்தமொன்றை ஏற் படுத்துவதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டன. இன்னொரு வகையில் சொன்னால், அது இஸ்லா

மிய வணக்கங்களுக்கு அப்பால் யதார்த்தத்தின் மீது பிர யோகிக்கப்படவில்லை; மனித நடத்தையைச் சீரமைக்கப் பயன்படுத்தப்பட வில்லை; முறைமைகளாகவும் ஒழுங்குகளாவும் பரிவர்த்தனை செய்யப்படவுமில்லை. இதனால் அது தொடர்பான ஆய்வுகள், கனியற்ற மரம் போன்று, நடை முறைப் பயனற்ற வெற்றுக் கருத்தாக்கங்களாக மாறிப்போயின.

**(ஆ) அரசியல் ரீதியாக முகம் கொடுக்க உம்மாவைத் தயார் படுத்தல்.**

(பார்க்க: பின்னிணைப்பு - உரு: 1.1)

காலனியப் படையெடுப்புகளுக்கும், அவற்றின் வழியாக வந்த நாகரிகத்துக்கும் முன்னால் ஏற்பட்ட பலவீன உணர்வும் அதிர்ச்சியும் உம்மாவின் பெரும்பாலான அணிகளைப் பாதித்தன. இப்பாதிப்பு அவ்வணிகளை இரு பிரிவுகளாக கூறுபடுத்தியது:

ஒரு பிரிவினர் படையெடுத்து வந்த கலாசாரத்தினால் பிரமிப் படைந்து மேற்கத்திய மாதிரிகளுக்கு அமைவாக அரசியல், பொருளாதார, சமூகவியல், கல்விச்சீர்த்திருத் தங்களை நோக்கி அழைக்கலாயினர். இஸ்லாத்தை நவீனமயமாதலுக்கு ஈடுகொடுக்க முடியாத மார்க்கமாகவும் சித்தரிக்கலாயினர். இஸ்லாத்தையும் அதன் மரபுகளையும் முழுமையாகக் கைவிட வேண்டும் எனக் கூறியோரும், மதத்துடன் இணக்கமாக இருந்து கொண்டே அதன் சட்டவாக்கத்துக்குத் தொடர்பற்ற வகையில் சிவில் சமூகம் மீள்வார்ப்புச் செய்யப்பட வேண்டும் எனக்கூறியோரும்கூட இப் பிரிவினுள் அடங்குவர்.

இஸ்லாத்தையும் அதன் பெறுமானங்களையும் விட்டுத் தூர மாவது தான் பின்னடைவுக்குக் காரணம் என இரண்டாவது பிரிவு கருதியது. இப்பிரிவினுள்ளும் இரு சாரார் இருந்தனர். ஒரு சாரார் நம்பிக்கைப் பலவீனம், ஆடம்பர மோகம், அகீதாவை விகாரப் படுத்தியவை என்பனவே உம்மா நோயுறுவதற்கு மூல காரணம் எனக் கூறினர். மறு சாரார், ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டிலிருந்து

போராட்டமும் அறிவு சார் உழைப்பும் தடைப்பட்டமைதான் அதற்குக் காரணம் என்றனர்.

அந்த வகையில், கல்வி, சமூக, அரசியல் சீர்திருத்தமே முதலில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என இப்பிரிவின் முதல் சாரார் கருதினர். அத்தகைய முன்னெடுப்பு அரசியல் வன்முறைக்கும், உம்மாவின் கீழ்க்கட்டுமானங்கள் அழிவடைவதற்கும் காரண மாக அமைந்தால் கூட பரவாயில்லை என்பதே இவர்களது நிலைப்பாடாக இருந்தது.

மறுசாராரைப் பொறுத்த வரை, அன்னியச் சிந்தனைக்கு முகம் கொடுத்தல், இஸ்லாமியக் கலாசாரத்தை உயிர்ப்பித்தல், நம்பிக்கைக் கோட்பாட்டை விகாரங்களிலிருந்து தூய்மைப் படுத்தல், அல்-குர்ஆனையும் ஸுன்னாவையும் நோக்கி மீளல் என்பனவே முதலில் கவனம் செலுத்தப்பட வேண்டிய பணிகள் எனக்கருதினர். அதன் பிறகு நவீன நாகரிகத்தை உள்வாங்கி, சுத்தப் படுத்தி, இஸ்லாத்தின் சட்டங்களுக்கும் போதனைகளுக்கும் அமைவாக அவற்றைத் தகவமைக்கலாம் எனவும் கருதினர்.

ஒரு நூற்றாண்டுக்கு அதிக காலம் இவ்விரு சாரருக்குமிடையில் மிகக் கடுமையான முரண்பாடும் கசப்பும் நிறைந்த போராட்டமும் நிகழ்ந்து வந்திருக்கின்றன. முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையானது என எதனை ஒரு சாரார் கருதினார்களோ அதனையே மறுசாரார் வீழ்ச்சிக்கும் பின்னடை வுக்கும் அன்னிய விசுவாசத்துக்கும் அடிப்படைக் காரணமாக நோக்கினர். ஒரு சாரார் தீர்வு எனக்கருதியதை மறு சாரார் பிரச்சினையாகவும் சிக்கலாகவும் கருதினர்.

எனினும், மாற்றத்துக்கான சாதனங்களாக பின்வரும் மூன்று விடயங்களுமே அமைய முடியும் என்பதில் இரு சாராரும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தனர்:

- கல்விசார் தளமொன்றைக் கட்டியெழுப்பியதன் பின்னர் அழைப்பு மற்றும் அரசியல் பணி என்பவற்றினூடாக சீர்திருத்தம் மேற்கொள்ளப்படல்.

*- அதிகாரத்தைப்பெற்று அதனூடாக (பலப்பிரயோகத்தின் மூலமாகவேனும்) மாற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு சக்தி மையங்களைக் கவர்ந்திழுத்தல்.*

*- உம்மாவின் கருத்தாக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி நிகழ் யதார்த்தத்தை நிராகரிக்கச் செய்வதும், அரசியல் கருத்தாடல்கள் மற்றும் கட்சி அரசியல் என்பவற்றினூடாக இலக்கை அடைய உழைக்கச்செய்தலும்.*

*இந்த வகையில்தான், இஸ்லாமிய சீர்திருத்தத் திட்டத்தின் கவனம் கருத்தாடலளவிலும் நிகழ்ச்சித்திட்ட அளவிலும்- அரசியல் பிரவேசத்துடன் தொடர்புபட்டதாக அமைந்திருந்தது. முஸ்லிம் வெகுமக்களை அரசியல் ரீதியான மோதல்களுக்கு அணி திரட்டும் முயற்சிகளில் அது ஈடுபட்டிருந்தது. வெகு மக்களை அரசியல் ரீதியாக அணி திரட்டுவதில் முன்னிலை வகிக்கும் நோக்குடன், அல்லது இஸ்லாத்தையும் அதன் சட்டவாக்கத்தையும் ஏளனம் செய்து விகாரப்படுத்தும் எதிரிகளின் செயற்பாடுகளுக்கு எதிர்வினையாற்றும் வகை யில் இத்தகு முயற்சிகள் இடம்பெற்றன. இந்த அணுகு முறையின் விளைவாக, இஸ்லாமியப் பேணுதலற்ற நபர்கள் ஆட்சி யிலும் அதிகாரத்திலும் இருப்பதுதான் நெருக்கடிக்குக் காரணம் எனக்கூறப்பட்டது. அல்லது குறிப்பிட்ட சில (உத்தியோகபூர்வ/ உத்தியோகபூர்வமற்ற) அமைப்புகளும் நிறுவனங்களும் அதி கார மையங்களில் இருப்பதுதான் அதற்குக் காரணம் என்று கூறப்பட்டது. வேறு வகையான சில வெளிப்பாடுகளும் நெருக்கடிக்குக் காரணமாக முன்வைக்கப்பட்டன. இறுதியில், நெருக்கடிக்கான உண்மையான காரணம் வெளிச் சக்திகளே என்று சிலர் கூறுமளவுக்கு நிலைமை சென்றது. இஸ்லாமிய சட்டங்களை அமுல் படுத்தாத ஆட்சியாளனே பிரச்சினைக்குக் காரணம் என வேறு சிலர் வாதித்தனர். ஐக்கிய அமெரிக்காவும் ஏனைய இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளுமே நோய்க்கான மூல காரணம் என மற்றும் சிலர் வாதித்தனர்.*

*இத்தகைய அவசர வியாக்கியானங்களும் மேலோட்டமான பகுப்பாய்வுகளும் விளைவுகளைக் காரணங்களாகவும்,நோய்க் குறிகளைத் தணிக்கும் தற்காலிக நிவாரணங்களை உண்மை யான சிகிச்சையாகவும் ஆக்கிக்கொள்ளும் கைங்கர்யத்தையே செய்து கொண்டிருந்தன. உம்மாவின் சிந்தனையிலும் உள் ளத்திலும் பகுத்தறிவிலும் மறைந்திருக்கின்ற நோய்களே இந்நெருக்கடிக்கான காரணம் என்பதை இவர்கள் வசதியாக மறந்து விட்டனர். முஸ்லிம் சிந்தையானது மாற்றச் செயன் முறையை நிலையான தெய்வீக நியதிக்கு அமைவாக மேற் கொள்ளாதிருப்பதே நெருக்கடிக்குக் கார ணம் என்பதை இவர்கள் கண்டு கொள்ளவில்லை:*

*“ஒரு சமூகம் தன்னைத் தானேமாற்றிக் கொள்ளாதவரை நிச்சயமாக அல்லாஹ் அந்த சமூகத்தின் நிலையை மாற்றுவ தில்லை”. (அர்-ரஅத்: 11)*

## பல்வேறு சீர்திருத்தத் திட்டங்கள்

### சீர்திருத்தத்தைத் தடுப்பவை:

*நவீன இஸ்லாமிய உரையாடலானது மேற்சொன்னவற்றை கவனத்தில் கொண்டு நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு பின்வரும் விவகாரங்களை தெளிவுபடுத்திக்கொள்வது அவசிய மாகும்; ஏனெனில் இவ்விவகாரங்களே சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தத்துக்கும் அறிவை இஸ்லாமியப் படுத்துவதற்கும் தடை யாக நிற்பவையாகும்:*

### இறையியல் நம்பிக்கைக் கோட்பாட்டையும் சிந்தனையையும் தெளிவாகப் பிரித்தறியாமை.

*சிலரது சிந்தையில் நம்பிக்கை, சிந்தனை ஆகிய இரண்டுக்கு மிடையிலான வேறுபாடு தெளிவற்றிருப்பதற்குக் காரணம், அவ்விரண்டினதும் மூலாதாரங்களை அவர்களால் தெளிவா கப் பிரித்தறிய முடியாதிருப்பதே ஆகும். ‘இறையியல் நம்பிக்*

கைக் கோட்பாடு' (அகீதா) என்பது வரையறுக்கப்பட்ட அடிப்படைகளையும் எல்லைகளையும் பண்புகளையும் கொண்ட வகையில் இறைவனால் அருளப்பட்ட 'வஹீ' என்னும் வேத வெளிப்பாடாகும். ஆனால் சிந்தனை என்பது முழுமையாக மனிதனது அறிவுச் செயல்பாடாகும். அது சரியாகவும் அமைய லாம்; தவறாகவும் அமையலாம். சிந்தனைக்கென்று துறைகளும் முறைமைகளும் சாதனங்களும் உண்டு. மனிதப் பகுத்தறிவும் வஹீயும் இடைவினையாற்றுதல், வஹீயை யதார்த்தத்தின் மீது பிரயோகித்தல், பொருத்தமான தீர்வுகளினதும் அறிவுசார் கட் டமைப்புகளினதும் வெளிச்சத்தில் அந்த யதார்த்தத்தை மதிப்பீடு செய்தல் என்பவற்றின் பெறுபேறே மனித சிந்தனையாகும்.

சீர்திருத்தத்தை வேண்டிநிற்கும் சூழமைவைப் பகுப்பாய்வு செய்யும் முறைமையிலேற்படும் தோல்வியே அனேகமாக இக் குழப்பம் ஏற்படக் காரணமாகும். அதனால்தான், இஸ்லா மிய உரையாடலில் முதன்மைப்படுத்த வேண்டிய அம் சங்களுள் ஒன்றாக 'சிந்தனா முறைமைகளின் சீர்திருத் தம்' அமைகிறது என நாம் முன்னர் குறிப்பிட்டோம். ஏனெனில், சிந்தனை மூலமாக எதிர்பார்க்கப்படும் பணி முழுமையாக நிறைவேற வேண்டுமாயின், அச்சிந்தனை பயணிப் பதற்கான தெளிவான, ஆரோக்கியமான முறைமையொன்றும் அதனுடன் இருப்பது அவசியம்.

**'அறிவு என்பது மதமற்றது' என்ற நம்பிக்கை.**

இறையியல் கோட்பாட்டையும் சிந்தனையையும் குழப்பிக் கொள்பவர்களுடன் அறிவுக்கு மதமில்லை என்று கூறுவோரையும் சேர்த்துக் கொள்ளலாம். அறிவு அதனைச் சுமந்திருப்பவரின் மதத்தையே ஏற்றிருக்கும் என இவர்கள் எண்ணுகின்றனர். இவர்களைப் பொறுத்த வரை, குறித்த மதம் அறிவை உற்பத்தி செய்திருக்காவிட்டாலும், அந்த அறிவு தனது தத்துவம், இலக் குகள், இயங்குதளங்கள் முதலிய அனைத்தையும் துறந்து விட்டு தன்னைச் சுமந்திருப்பவரின் மதத்தின் பின்னால் சென்றுவிடும். அறிவின் கட்டுருவாக்கம், அதன் அடிப்படைகள், அதற்கான

முன் நிபந்தனைகள் என்பவை பற்றிய புரிதல் குறைபாடே இதற்குக் காரணமாகும். இதனால், ஒரு மனிதர் அகீதா ரீதியில் முஸ்லிமாகவும் சீரான நடத்தை கொண்டவராகவும் இருந்து விட்டால், அவர் பெறும் அறிவும் கலாசாரமும் இயல்பாகவே இஸ்லாமிய அறிவாகவும் இஸ்லாமியக் கலாசாரமாகவும் மாறிவிடும் என இத்தகையோர் கருதுகின்றனர். குறித்த அறிவு டார்வின், ஃபிராய்ட், மார்க்ஸ், டூராண்ட், ஜோன் டூவீ, டுர்கேய்ம் என்போரிடமிருந்து வந்ததா அல்லது கஸ்ஸாலி, இப்னுதைமியா, இப்னுருஷ்த், இப்னுஃகல்தூன் என்போரிடமிருந்து வந்ததா... என்பதெல்லாம் முக்கியமில்லை. அந்த அறிவைச் சுமந்திருக்கும் மனிதர் தொழுகைக்காக மஸ்ஜிதில் நுழைவதனாலும், ஹஜ்ஜிலும் உம்றாவிலும் கலந்து கொள்வதனாலும் அந்த அறிவும் முஸ்லி மாகிவிடும் என இவர்கள் நம்புகின்றனர்.

இதனால்தான், கலாசாரத்துக்கும் சிந்தனைக்கும் மதமோ தேசமோ இல்லையென்றும், இரண்டையும் பூகோள எல்லை களால் தடுக்க முடியாது என்றும் இவர்களால் பல சந்தர்ப்பங்களில் தவறான வாதமொன்று முன்வைக்கப்படுகிறது. பூகோள-அரசியல் செல்வாக்கினால் உலகில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்ற மேற்கு சிந்தனைக்கும், அதிலிருந்து பிறந்த கலாசாரத்துக்கும், நாகரிகத்துக்கும் பிறரை அடிபணியச் செய்வதற்காகவே இவ் வாறான வாதங்கள் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகின்றன. சிந்தனையும் கலாசாரமும் -‘ஈதர்’ போன்று- ஒருவர் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் அவரது காது வழியாக நுழைந்து மனதில் பதிந்துவிடும் என்ற தவறான நம்பிக்கையை பதியச் செய்வதற்காக இவர்கள் இத்தகைய கூற்றுகளை மீட்டிமீட்டிச் சொல்கின்றனர். (மேற்கத்திய) சிந்தனையையும் கலாசாரத்தையும் அவற்றின் முறைமையையும் ஏற்றுப் பின்பற்றாமல் எழுச்சியோ முன்னேற்றமோ நவீன யுகத்துக்குள் பிரவேசிக்கும் வாய்ப்போ கிட்டப்போவதில்லை என்றும், அதுவே உலகின் மாற்றமுடி யாத தலைவிதி என்றும் மக்களை நம்பச் செய்ய இவர்கள் முயல்கின்றனர்.

ஆனால் இக்கருதுகோளே குழப்பத்தின் உச்சமெனலாம். ஏனெனில், அறிவு என்பது ஒரு சித்தாந்தத்தின் பெறுபேறாகும். ஒரு நம்பிக்கையும் முழுமொத்தக் கோட்பாட்டுப் பார்வையுமே அந்த அறிவை உற்பத்தி செய்கிறது என்பது மட்டு மன்றி, அதனுடன் அவை இணைபிரியாமலும் இருக்கும். இறுதியில், ஒரு சமுதாயத்தின் கலாசாரப் பிறப்பாக்கியாகச் செயற்படுபவை அந்த நம்பிக்கையும் சித்தாந்தமும் முழு மொத்தப் பார்வையும் கோட்பாடும்தான். ஒவ்வொரு நம்பிக்கைக் கோட்பாட்டுக்குப் பின்னாலும் பிரபஞ்சம், வாழ்வு, மனிதன் என்பவை பற்றிய சித்தாந்தப் பார்வையொன்று இருக்கும். ஒவ்வோர் அறிவுக்குமென தனியான இலக்குகளும் இயங்கு தளங்களும் இருக்கும். அந்த வகையில், அறிவை இன்னொரு கலாசாரத்திடமிருந்து இரவல் பெறுவதென்பது ஒரு மரத்தின் கனிகளை வேறொரு மரத்தில் பொருத்திவைப்பது போன்றதாகும். மரத்தினால் அந்தக் கனி களுக்கு நீரையோ ஊட்டச்சத்துகளையோ வழங்க முடியாது; கனிகளால் மரத்தின் வழியாக சுவாசித்து உயிர் வாழவும் முடியாது.

### இஸ்லாமியப் பாடங்களுக்கான வகுப்புகளை அதிகரிப்பதுடன் மாத்திரம் போதுமாக்கிக் கொள்ளல்.

அல்-குர்ஆன் ஓதல் பயிற்சி மற்றும் அல்-ஃபிக்ஹ் முதலிய பாடங்களுக்கான வகுப்புகளை அதிகரிப்பதனாலும், ஆரம்பப் பிரிவுகளில் சில இஸ்லாமியச் செய்யுள்களை பழைய முறைகளில் மனனமிடச் செய்வதனாலும் கலாசார - அறிவுக் கட்டுருவாக்கம் சாத்தியமாகிவிடும் என வேறு சிலர் எண்ணுகின்றனர். வாழ்வையும் அதன் இயக்கத்தையும் உள்வாங்கும் தன்மை கொண்ட சிந்தனாரீதியான பாத்திரங்களாக அப்பாடங்களை மாற்றி யமைக்க வேண்டுமென்ற அவசியம் இவர்களைப் பொறுத்த வரை கிடையாது.

இன்றைய கல்விக்கூடங்களில் இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய நாகரிகம் சார்ந்த பாடங்களும், அவற்றின் உள்ளடக்கங்களும், பாடப் புத்தகங்களில் அவை முன்வைக்கப்பட்டிருக்கும் முறை

*யும் பழைய உள்ளடக்கங்களதும் பாரம்பரிய முறைகளதும் புதிய பெயர்களேயன்றி வேறில்லை. கற்பித்தல் செயற்பாட்டில் அவற்றுக்கென திட்டவட்டமான இலக்குகளோ சாதனங்களோ கிடையாது. 'உம்மாவின் முழு மொத்த நோக்கு' என்ற சட்டகத்திலிருந்து பிறந்து, நன்கு வரையறுக்கப்பட்ட பண்புகள் கொண்ட மாதிரியொன்றுக்கு அமைவாக உம்மாவை சரியாகவும் ஆரோக்கியமாகவும் கட்டியெழுப்பும் செயற்பாடும் அவற்றிடமில்லை.*

*(பார்க்க: பின்னிணைப்பு - உரு: 1. 2)*

*ஷரீஆக் கலைகளுக்கான பாட வேளைகளை அதிகரிப்பதனால் அல்லது கல்விக்கூடங்களில் இஸ்லாமிய சுலோகங்களை உயர்த்திப் பிடிப்பதனால் அல்லது பல்கலைக்கழகங்களிலும் கலாசாலைகளிலும் கற்பிக்கப்படுகின்ற பல்வேறு கலாசார-நாகரிகப் பாடங்களில் இஸ்லாமியத் தலைப்புகளை இணைப்பதனால் சிந்தனா - கலாசார நெருக்கடியைத் தீர்க்க முடியாது என்பது நாம் நீண்ட ஆய்வுக்கும் ஆயாசம் மிக்க தேடலுக்கும் பிறகு கண்டடைந்த உண்மையாகும். அந்த வகையில், சமுதாயத்தின் கல்விச் செயற்பாடானது அதன் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கிய வகையில் முழுமையான செயலூக்கத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் அதன் மீள் கட்டுருவாக்கம் ஆரோக்கியமான இஸ்லாமியக் கட்டுருவாக்கமாக அமையும். கண்ணியம் மிக்க அல்-குர்ஆன், நபியவர்களது புனித ஸுன்னா மற்றும் வாழ்வியல், பிரபஞ்சம் என்பவற்றிலிருந்து அறிவுக்கும் கலாசாரத்துக்கும் நாகரிகத்துக்குமான ஒரு முகப்படுத்தப்பட்ட அடிப்படையை அக்கட்டுருவாக்கம் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*ஷரீஆக்கலைகளின் சில வசனங்களை மனனமிடல், சில அல்-குர்ஆனிய அத்தியாயங்களை ராகத்துடன் ஓதுதல், 'தஜ்வீத்' சட்டங்களிலும் எழுத்துகளின் உச்சரிப்பிலும் தேர்ச்சி பெறல் என்பவற்றுடன் போதுமாக்கிக் கொண்டு, அல்-குர்ஆனை*

ஆழ்ந்து நோக்குதல், அதிலிருந்து படிப்பினை பெறல், அதன் நோக்கில் வாழ்வைத் தயாரித்தல் முதலிய ஆற்றல்களை இளைய சந்ததிக்கு வழங்கத் தவறுவது இலக்கையும் நோக்கத்தையும் மறந்து விட்டு வழிமுறை குறித்த கவனத்தில் ஆழ்ந்துவிடும் மனோ நிலையையே பிரதிபலிக்கும்.

மஸ்ஜித் இமாம்கள், ஜுமுஆ மிம்பர் பேச்சாளர்கள், தனியார் சட்ட 'காழீ' நீதிபதிகள், இஸ்லாம் பாட ஆசிரியர்கள் முதலியோரை உருவாக்குகின்ற- ஷரீஆக் கற்கைகளுடன் தொடர்புபட்ட- பல பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் கலா நிலையங்ளும் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. அவ்வாறு காணப்படுவது நல்லதும் பயனுள்ள விடயமும் கூட. உம்மாவின் தேவைகளில் முக்கியமான சில பக்கங்களை அது நிறைவு செய்வதும் உண்மைதான். ஆனால், சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்துதல் சார்ந்த பணியில் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்புத் துறை யத்தனங்களுக்கு அது போதுமானதன்று. ஏனெனில், 'அறிவை இஸ்லாமியப்படுத்துதல்' என்பது நமது மறைந்துபோன கலாசாரத்தைத் தேடியெடுக்கும் ஆயாசமான பணி; அக்கலாசாரத்தை மீட்டுருவாக்கம் செய்து உம்மாவுக்கும் உலகுக்கும் கொண்டு சேர்ப்பதற்கான கடினமான பாதையைத் தயார்படுத்தும் உழைப்பு.

**நவீன மேற்குக் கலாசாரம் சர்வதேசத்தன்மை வாய்ந்ததென நம்புதல்.**

முஸ்லிம்கள் இன்று கிரேக்க, சிலுவை வணக்க, சடவாத வேர்களைக் கொண்ட மேற்கத்திய மூலாதாரங்களிலிருந்து பிறக்கும் கலாசாரத்தையும் அறிவையும் மூச்சு விடாமல் பருகிக் கொண்டிருக்கிறார்கள். கல்வி, உளவியல், சமூகவியல், மானிடவியல், அரசியல், பொருளியல், தத்துவம், முகாமைத்துவம், ஊடகம், வரலாறு, சட்டம், கலை, இலக்கியம் முதலிய எந்த மானிடக் கலைகளும் இதற்கு விதிவிலக்கில்லை. இன்று முஸ்லிம் சமுதாயத்தின் கலாசாரத்தையும் ஆளுமையையும் நாகரிக வார்ப்பையும் இக்கலைகளே மேற்கொள்கின்றன.

அந்த வகையில், இவ்விடயத்தில் பிறரைப் போலவே முஸ்லிம் மனிதனும் ஏமாற்றப் பட்டிருக்கிறான். மேற்குலகும் அதன் பின்பற்றாளர்களும் சந்தைப்படுத்திய கோஷமொன்றை அவன் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ ஏற்றுக் கொண்டிருக் கிறான். மேற்கின் கலாசாரமும் அறிவியல் கலைகளும் சர்வ தேசத்தன்மை வாய்ந்தவை என்பதே அந்தக் கோஷமாகும். இது கலாசார அடிமைத்தனத்தின் அபாயகரமான விளைவுகளுள் ஒன்றெனலாம். உலகின் பல பாகங்களிலுமுள்ள மில்லியன் கணக்கான கற்றறிவாளர்களது அறிவிலும் உள்ளத்திலும் இந் நம்பிக்கையை ஆழமாகப் பதியச் செய்வதில் மேற்குலகு-பல காரணங்களால்- வெற்றி பெற்றிருக்கிறது. கலாசார அடிமைத் தனம் என்பது சிந்தனா நெருக்கடியின் மிக அடிப்படையான காரணங்களுள் ஒன்று என்பதற்கு இவ்வெற்றி திடமான சான்றாக அமைகிறது. உண்மையில், தமது கலாசாரங்களை மழுங்கடித்து விட்டு அனைத்துச் சாதகமான வழிமுறைகளையும் ஓரங்கட்டிய சமுதாயங்கள் இப்படியான நெருக்கடி ஒன்றுக்குள் சிக்கிக் கொள்வது இயல்பானதுதான். இதனால், அவை எதிரிகளின் அழுத்தங்களுக்கு உட்படுவதும், தமது சொந்தப் புதல்வர்களாலேயே மறப்புக்கும் புறக்கணிப்புக்கும் உட்படு வதும் கூட இயல்பானதே.

அதேவேளை, குறிப்பிட்டதொரு காலப்பகுதியின் பிரச்சினை களைத் தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட தீர்வுகளை நாம் இன்று வரை போதுமாக்கிக் கொண்டிருப்பது நமது வாழ்வின் பெரும் பகுதியைக் காவுகொண்டு விட்டது. இதனால், நமது யத்தனங்கள், அறிவார்ந்த முயற்சிகள் என்பவற்றினூடாக நமது பிரச்சினைகளைக் கையாள்வதற்கான ஆற்றலை இழந்து நிற்கிறோம்.

அவ்வாறே, நவீன இஸ்லாமிய செயல்திட்டமானது அறிவு சார்ந்த பிரச்சினையைக் கையாள்வதற்குப் போதியளவு சக்தியைச் செலவிடவில்லை என்றும் கூறல்வெண்டும். அறிவுப் பிரச்சினை அதனிடம் அடிப்படையான கவனயீர்ப்பைப் பெறவில்லை.

தனது பார்வையில் முக்கியமாகத் தெரிந்த தற்காப்புக் போராட்டங்களிலும் நிலைப்பாடுகளிலுமே அது பெரிதும் ஈடுபாடு காட்டியது.

மேற்கத்தியக் கலாசாரமும் மானிட அறிவுக்கலைகளும் சர்வ தேசத் தரம் வாய்ந்தவை என்ற நம்பிக்கை பரவலடைவதற்கு வழிவகுத்த காரணங்களை நாம் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1. மேற்குலகு பெற்ற வெற்றியும் மேலாண்மையும், தோல்வியடைந்தவர்களது உளவியலில் அவை ஏற்படுத்திய தாக்கமும்.

2. உள்ளடக்க ரீதியாகவும் சாதனங்கள் ரீதியாகவும் பல் வகைப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய ஊடக விளம்பரம்.

3. மேற்குலகப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பல் கலைக்கழகங்களிலும் சமூகவியல் கலைகளைக் கற்பதற்காக முஸ்லிம் மாணவர்கள் மிகப் பரந்தளவில் அனுப்பி வைக்கப் பட்டமை.

4. இஸ்லாமிய நாடுகளின் தலைநகரங்களில் மேற்கத்திய-திருச்சபைப் பல்கலைக்கழகங்களை நிறுவியமையும், முஸ்லிம் மாணவர்களுக்கு கல்வி வழங்கும் பொறுப்பை அவற்றிடம் ஒப்படைத்தமையும்.

5. மேற்கின் கல்விசார் ஒழுங்குகளையும் கல்விச்செயற் பாட்டின் உள்ளடக்கங்களையும் கண்மூடிப் பின்பற்றிய மையும், சமூகவியல் கலைகளை அதனிடமிருந்து இறக்குமதி செய்தமையும்.

6. புத்தாக்கத்திலிருந்தும் அறிவார்ந்த முயற்சிகளிலிருந்தும் முஸ்லிம்கள் தூரமாகியமை.

இந்தக் காரணங்களும் இவையல்லாத வேறு காரணங்களும் முஸ்லிம்களில் பலரை வெறும் பெறுநர்களாகவும் கண் மூடிப் பின்பற்றுபவர்களாகவும் ஆக்கிவிட்டன. பாரம்பரிய அறிவு முதுசங்களை நன்கு வாசித்துப் பயன்பெற முடியாமல் அவற்றின் பின்னால் ஒளிந்து கொண்டவர்களும், ஆதிக் கம்

பெற்றவர்களது திட்டத்தை ஏற்றுக்கொள்ளல் என்ற மிக இலகுவான பதிலீட்டைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களும் இதில் ஒன்றுதான். இருசாராருக்குமே தமது இலக்கு என்ன என்பதைப் புரிந்து கொள்ளவோ அது பற்றிக் கலந்துரையாடவோ இயலாது போனது; இயலாமை எப்போதும் ஏலவே தயார் படுத்தப் பட்டிருக்கும் தீர்வுகளை நோக்கியே செல்லும்.

பாரம்பரிய முதுசங்களைப் பின்பற்றும் திட்டம் அல்லது மேற்கைப் பின்பற்றும் திட்டம் ஆகிய இரண்டில் எதுவாயினும் அதன் பின்பற்றாளர்கள் அனைவரும் வெறித்தனமான பின் பற்றாளர்களாகவே உள்ளனர். பாரம்பரியத் திட்டத்தின் பின்பற் றாளர்கள் தமது பின்பற்றலில் கண்மூடித்தனமாக நடந்து கொண்டாலும் அவர்கள் தமது கலாசாரப் பாரம்பரியத்தையே பின்பற்றுகிறார்கள்; அதனால்தான் அதில் புத்தாக்கம் புரியவோ நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் பொருத்தமான வகை யில் பயன் பெறவோ அவர்களால் முடியாதுள்ளது... என ஏதோ ஒரு வகையில் நியாயம் கற்பிக்கவும் முடியும். அந்த வகையில், மேற்குத் திட்டத்தின் பின்பற்றாளர்களே மிகவும் பலவீனமானவர்கள். ஏனெனில், அவர்கள் ஏற்கனவே தயார் செய்து இறக்குமதி செய்யப்படுவதை நுகரும் நாட்டம் கொண் டவர்கள். அதனை உற்பத்தி செய்வதில் அவர்களுக்கோ அவர்களது முன்னோர்களுக்கோ எந்தப் பங்குமில்லை. இந்த வகையில் அவர்கள் பின்னடைவை நிரந்தரமாக்கி விடுகிறார்கள்; நெருக்கடியிலிருந்து வெளியேறும் நோக்குடன் சிந்திக்கத் தூண்டு கின்ற நாகரிகம் பற்றிய கரிசனையையும் தந்திரமாகக் கடந்து சென்று விடுகிறார்கள்.

### 2) மேற்கு மயமாக்கல் திட்டத்தின் அடக்குமுறை:

மேற்கு மயமாக்கல் அல்லது மதச்சார்பின்மைத் திட் டம் என்ற கருத்தாடல் எவ்வாறான பெயர்களின் கீழ் அல்லது கோஷங்களின் கீழ் அல்லது நியாயங்களின் கீழ் கொண்டு வரப்பட்டாலும், இன்று அது முஸ்லிம் நாடுகளில் பரவலடைந்து விட்டது. அந்தத்

திட்டத்தின் காவலர்கள் பற்றியோ பின்பற்றாளர்கள் பற்றியோ இங்கு நாம் விவரிக்க வேண்டிய அவசியமில்லை. இஸ்லாமியத் திட்டத்தை ஏற்காமல் மேற்கு சிந்தனையும் கலாசாரமும்தான் சர்வதேசத் தன்மை வாய்ந்தவை என்ற விசுவாசத்துடன் செயற் பட்ட அனைத்துக் குழுமங்களையும் அத்தகைய காவலர்களாகவும் பின்பற்றாளர்களாகவும் நாம் கொள்ள முடியும்.

மேற்குத் திட்டம் முஸ்லிம் நாடுகளின் வாழ்வொழுங்காகவும், முஸ்லிம் சமூகத்தின் நாகரிகக் கட்டுருவாக்கத்துக்கான அடிப் படையாகவும், சிந்தனைக்கும் கலாசாரத்துக்குமான கருத் தாடலாகவும் எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும், அத் திட்டம் மேற்குலகில் சாதித்த அதே பெறுபேறுகளை அல்லது அவற்றின் குறைந்தபட்ச அளவையேனும் முஸ்லிம் நாடுகளில் சாதிக்க முடியாமல் போனது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன:

1. அத்திட்டம் முஸ்லிம் சமூகத்தின் கலாசாரத்திலிருந்து மாறு பட்ட கலாசாரங்களிலிருந்து பிறந்ததாகும். அக்கலாசாரங்கள் மறைவான உலகைப் பொருட்படுத்துவதில்லை; 'வஹீ'யை அறிவுக்கான மூலாதாரமாக ஏற்பதுமில்லை.

2. உம்மாவின் கலாசார-சமூகவியல் சமன்பாட்டை அது கவனத் தில் கொள்ளாமை.

3. முஸ்லிம் சமூகத்தின் தனித்தன்மைகளோடும் அடையாளத் தோடும் உளவியல் கட்டமைப்போடும் அது முரண்பட்டமை.

4. அதன் சடவாதப் பண்பும், உம்மாவின் ஆன்மீக-உளவியல் சம நிலைக்கு எதிராகத் தொழிற்பட்டமையும்.

5. உம்மாவின் வரலாற்று இருப்பை மறுதலித்தமையும், நமது கலாசாரமும் முதுசமும் வெறுமனே கிரேக்க ரோமானியக் கலாசாரத்தின் மறுவுற்பத்தியே என்ற தவறான நம்பிக் கையும்.

6. மேற்கத்திய கலாசார-சிந்தனா மேலாண்மையும், மேற்கு மையவாத சுயநல மனப்பாங்கும், நவீன நாகரிகத்தின் மீது

இஸ்லாமிய சிந்தனையும் நாகரிகமும் ஏற்படுத்திய தாக்கத்தை மறுத்துப் புறமொதுக்கியமையும்.

7. பிற சமூகங்களது தனித்தன்மைகளை நிராகரித்து, மேற்கு மையவாத அதிகாரத்துக்குப் பணியுமாறு அவற்றை நிரப்பந்தித்தமை.

8. மேற்குத் திட்டத்தை எதிர்க்கும் எவரும் எந்த முன்னேற்றமோ சாதனையோ கண்டு விடாமல் தடை செய்தமையும், அதன் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நிற்போருக்கு மட்டும் அத்தகைய முன்னேற்றங்களை அனுமதித்தமையும்.

9. மோதல், இரட்டைத் தன்மை முதலிய பண்புகளை அது தனது அடிப்படையாகக் கொண்டிருந்தமை. சமூகங் களுக்கிடையிலான மோதலையே அது எப்போதும் கூர்மைப்படுத்திக் கொண்டிருந்தது. அது மேற்கொண்ட பனிப்போர் தொடக்கம் சிந்தனைப்படையெடுப்பு, நாகரிகங்களுக்கிடையிலான மோதல், வரலாற்றின் முடிவு மற்றும் இன்று அது வந்து சேர்ந்திருக்கும் நிலை வரை இந்த உண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

பொதுவாக மூன்றாம் உலகில் வாழும் சமுதாயங்களுக்கும், குறிப்பாக முஸ்லிம் உலக நாடுகளுக்கும் மேற்கத்திய கலாசாரக் கட்டமைப்பினால் எதையும் வழங்க முடியவில்லை என்பதற்கு யதார்த்தமும் நடைமுறை அனுபவமும் சான்று பகர்கின்றன. எமது சமுதாயத்தைப் பொறுத்த வரை, அதில் எழுச்சியையும் புத்துயிர்ப்பையும் ஏற்படுத்த இஸ்லாத்துக்கு வெளியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சியும் தோல்வியிலேயே முடிந்திருக்கிறது என்பதை வரலாறும் யதார்த்தம் மீதான வாசிப்பும் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறு தோல்வி நிச்சயமாகிவிட்ட போதும், மேற்குத் திட்டத்தின் ஆதரவாளர்கள் இன்னும் அந்தத் தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை. இஸ்லாமிய சமூகத்தின் நிலைமைகளைச் சீரமைப்பதற்கு அத்திட்டம் பொருந்தாது என்பதை இன்னும் அவர்கள் ஏற்கவில்லை. தோல்வி ஏற்பட்டிருப்பின் அதற்கான

காரணம் முஸ்லிம் சமூகமேயன்றி மேற்கத்தியத் திட்டமல்ல என அவர்கள் வாதிக்கிறார்கள். அதற்கு இரண்டு காரணங்களையும் முன்வைக்கிறார்கள்:

1. முஸ்லிம் மனப்பாங்கின் இயல்பும் கட்டமைப்பும்.

2. மேற்கத்தியக் கருத்தாடலானது இஸ்லாமிய கலைச்சொற்களைச் சரியாகப் புரிந்து பயன்படுத்தத் தவறியமை.

இவ்விரு காரணங்களையும் ஏலவே 'நுழைவாயில்' என்ற பகுதியில் விளக்கியுள்ளோம்.

(பார்க்க: பின்னிணைப்பு - உரு 1. 3)

### 3) நெருக்கடியின் உள்ளடக்கம் சிந்தனை சார்ந்ததாகும்:

இஸ்லாமியத் திட்டத்தின் பலவீனம் மற்றும் மேற்குமயப் படுத்தல் திட்டத்தின் அடக்குமுறை என்பவற்றைக் கூர்ந்து அவதானிக்கும் போது, 'சிந்தனாமுறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்துதல்' என்ற விவகாரத்தின் தவிர்க்க முடியாத தேவை துலங்குகிறது. அதேவேளை, அசலின் அகத்தூண்டலுடன் நவீனத்துவத்தைச் செரிமானம் செய்து கொண்டு, நடுநிலைப் பண்புடன் பயணிக்கும் தனித்தன்மை கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டிய இமாலயப் பொறுப்பும் தெளிவாகிறது.

ஏலவே வேறு பல சந்தர்ப்பங்களிலும் நூல்களிலும் நாம் விளக்கியிருப்பது போன்று, நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் நெருக்கடியானது அடிப்படையில் சிந்தனா நெருக்கடியேயன்றி வேறில்லை. அரசியல், பொருளாதாரம், சமூகவியல் மற்றும் இன்ன பிற நெருக்கடிகள் அனைத்தும் இச்சிந்தனா நெருக்கடியின் கீழ் அடங்குபவைதான். சிந்தனா மூலாதாரங்களைப் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட தடுமாற்றம், சிந்தனா முறைமைகளில் ஏற்பட்ட கோளாறு, பின்வரும் வசனத்தின் அல்லாஹ் வர்ணித்திருக்கும் உம்மாவின் உயர் அந்தஸ்தை விட்டுக் கொடுத்து

வெளியிலிருந்து திணிக்கப்பட்ட சிந்தனையின் வழி காட்டல்களை ஏற்று அதன் அழுத்தங்களுக்குப் பணிந்தமை என்பனவே நெருக் கடியின் மூல வேர்களாகும்:

"நீங்கள் மக்களுக்காக வெளிப்படுத்தப்பட்ட மிகச் சிறந்த சமு தாயம்: நன்மையை ஏவுகிறீர்கள்; தீமையைத் தடுக்கிறீர்கள்".

(பார்க்க: பின்னிணைப்பு - உரு: 1. 4)

உம்மாவின் பல்வேறு ரோகங்களான நோக்குத்தெளிவின்மை, கலாசார அசல் தன்மையும் உளவியல் சமநிலையும் இல்லாது போனமை, கருத்தாக்கங்கள் பற்றிய குழப்ப நிலை, கல்வியின் இரட்டைத் தன்மை, இலக்குத் தெளிவின்மை, நிறுவனங்களின் சரிவு முதலியவற்றை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அப்போதுதான், அந்த ரோகங்களுக்குக் காரணம் உம்மாவின் சிந்தனைக் கட்டமைப்பு குழம்பியமையும், அக்கட்டமைப்பின் உள்ளூறையான அறிவியக்கம் ஸ்தம்பிதம் அடைந்தமையும், புத்துயிர்ப்பை மேற்கொள்ள இயலாது போனமையுமே என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

நமது உம்மாவின் நெருக்கடி சிந்தனா நெருக்கடிதான் என்று நாம் இங்கு சுட்டினாலும், அது ஏனைய நெருக்கடிகளை மறுதலிப்பதாகாது. ஆயினும், ஏனைய நெருக்கடிகள் அனைத் தும் ஏதோ ஒரு விதத்தில் சிந்தனா நெருக்கடியின் விளைவுகள் அல்லது வெளிப்பாடுகள் அல்லது பிரதிபலிப்புகள் என்றே நாம் கருதுகிறோம். எம்மைப் பொறுத்த வரை சிந்தனா நெருக்கடியே தாய் நெருக்கடியும் மிகப் பெரும் ரோகமும் ஆகும்.

எனவே, இந்நெருக்கடி தீர்க்கப்படுவதில் தான் நமது சமுதாயத் தின் எழுச்சியும் முன்னேற்றமும் பிற்போக்குக் கெதிரான போராட்டத்தின் வெற்றியும் தங்கியுள்ளன. அங்கிருந்துதான் அதன் புதிய நாகரிகப் பயணமும் தொடங்குகிறது. அந்தப் பயணமானது முஸ்லிம் உம்மாவைக் காப்பாற்றி, மீட்டுரு

வாக்கம் செய்து, அதன் இஸ்லாமிய வாழ்வை மீள ஆரம்பித்து வைப்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது. அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் முழு மானிட இனத்தையும் அது பாதுகாக்கும்; இஸ்லாமிய சமுதாயம் சுமந்திருக்கும் தூதின் உட்கருவாகிய 'நாகரிகப் பிரசன்னம்' என்ற இடத்திற்கு மீண்டும் அதனைக் கொண்டு வந்து நிறுத்தும்.

இந்நெருக்கடி நமது உம்மாவின் வரலாற்றில் 'கிலாஃபா றாஷிதா'வின் பின்பிருந்து அல்லது அதன் இறுதிப் பகுதி யிலிருந்து தொடங்கியதாயினும், ஆரம்பத்தில் அது கண்டுகொள்ளப்படவில்லை என்றோ அல்லது கண்டு கொள்ளப் பட்டாலும் இன்றுவரை அதனைத் தீர்க்க எவரும் முற்படவில்லை என்றோ நாம் வாதிக்கவில்லை. வாதிப்பது எப்படிப் போனா லும் அப்படி நாம் நினைத்துப் பார்க்கவுமில்லை; எழுத முற்படவுமில்லை. மாறாக, சிந்தனா - கலாசார நெருக்கடியொன்று பல்வேறு விகாரமான தோற்றங்களில் உம்மாவினுள் எட்டிப் பார்க்கத் தொடங்கியது முதல் அது கண்ட சிந்தனா-கலாசார சீர்திருத்த சங்கிலித் தொடரின் நீண்ட வரிசையில் நாங்களும் ஒரு வளையமாக இருக்கிறோம் என்பதை இங்கு உறுதியாகப் பதிவு செய்ய விரும்புகிறோம்.

# அத்தியாயம் இரண்டு

## நெருக்கடியை ஏற்படுத்தும் மனப்பாங்கும் நெருக்கடி யின் பெருக்கமும்

### நெருக்கடியை ஏற்படுத்தும் மனப்பாங்கு:

*சிந்தனா நெருக்கடி என்பது ஓர் ஆபத்தான நோய். சிலபோது அது தீர்க்க முடியாத அபாயகரமான கட்டத்தை அடைந்து விடுவதும் உண்டு. அத்தகைய நிலையில் தீர்வுகளே புதிய நெருக்கடிகளாக மாறிவிடுகின்றன. பலமான நுண்ணங்கிகள் சில வகையான மருந்துகளுக்கு எதிர்வினையாற்றி அம்மருந் தையே உணவாக்கிக் கொண்டு நோயாளியின் உடலில் இன்னும் பலமாகவும் கொடூரமாகவும் வளர்ச்சியடைவது போன்றதே இதுவும்.*

*வரலாற்றின் சில காலப்பிரிவுகளில் சிந்தனா நெருக்கடியின் சில கூறுகளுக்கு சில தீர்வுகள் முன்வைக்கப் பட்டிருந்தாலும், பல காரணங்களால் அத்தீர்வுகளே நெருக்கடிகளாக மாறின. இந்த வகையில், அத்தீர்வுகளும், நெருக்கடியின் பல்வேறு பரி மாணங்களும், உம்மாவின் சமூக -அரசியல் - கலாசார - பொரு ளாதாரச் சூழ்நிலைகளும் ஆழமான ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டியுள்ளன.*

*ஒருதீர்வு வழங்கப்பட்ட பிறகு அதனை ஒரேயடியாக மறுதலித்து விடுபவர்களைவிட, வழங்கப்பட்ட தீர்வை சிக்கலாகவும் நெருக் கடியாகவும் மாற்றி விடுபவர்களைத்தான் அல்-குர்ஆன் அதிகம் கண்டிக்கிறது. இந்த இரண்டாவது பிரிவினருக்கு நபி மூஸா (அலை) அவர்களது சமூகத்தில் வாழ்ந்த ஒரு பிரிவினரை அது*

உதாரணமாக முன்வைக்கிறது. அந்தச்சமூகத்தில் நிகழ்ந்த ஒரு மர்மக் கொலையின் உண்மை நிலையை வெளிக் கொண்டு வருவதற்காக ஒரு பசு மாட்டை அறுக்குமாறு இறைவன் அவர் களுக்குக் கட்டளையிட்டான். ஏனெனில், அந்தக் கொலை அவர்களுக்கு மத்தியிலான உள்நாட்டுப் போராக மாறுமளவுக்கு நிலைமை மோச மடைந்திருந்தது. அந்நிகழ்வு பற்றி அல்-குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது:

“மூஸா தனது சமூகத்தினரை நோக்கி, ‘இறைவன் ஒரு மாட்டை அறுக்குமாறு உங்களை ஏவுகிறான்’ எனக் கூறிய போது, ‘நீர் எங்களைக் கேலி செய்கிறீரா?!’ என அவர்கள் கேட்டனர். அதற்கு மூஸா, ‘நான் மூடர்களில் ஒருவனாக இருந்து விடா திருக்க இறைவனிடம் பாதுகாவல் தேடுகிறேன்’ எனப் பதிலுரைத்தார். பிறகு அவர்கள், ‘அந்த மாடு எப்படியானது என விளக்கும்படி உமது இறைவனிடம் பிரார்த்திப்பீராக!’ எனக் கேட்டனர். அப்போது மூஸா, ‘அது கிழடுமல்ல; இள வயதுடைய கன்றுமல்ல. இரண்டுக்கும் இடைப்பட்டது என அவன் கூறுகிறான். எனவே உங்களுக்குஎதுகட்டளையிடப்படுகிறதோஅதையேசெய்யுங்கள்’ எனக் கூறினார். அப்போது அவர்கள், ‘அதன் நிறம் என்னவென்று விளக்குமாறு உமது இறைவனிடம் பிரார்த்திப்பீராக!’ என்றனர். அதற்கு மூஸா, ‘அது கடும் மஞ்சள் நிறம் கொண்டு பார்ப்போரை மகிழ்விக்கக் கூடிய ஒரு மாடு என அவன் கூறுகிறான்’ என்றார். அதற்கவர்கள், ‘அது எவ்வாறானது என்று தெளிவுபடுத்துமாறு உமது இறைவனிடம் எமக்காகப் பிரார்த்திப்பீராக; மாட்டைத் தெரிவு செய்வது எப்படியென்று எங்களுக்குக் குழப்பமாக இருக்கிறது. இறைவன் நாடினால் அந்தக் குறிப்பிட்ட மாட்டை நாங்கள் சரியாகக் கண்டு கொள்வோம்!’ என்றனர். அப்போது மூஸா, ‘அது பூமியை உழுவதற்கோ, வேளான்மைக்கு நீரிறைக் கவோ பயிற்றுவிக்கப்பட்ட மாடு அல்ல. அதில் எத்தகைய குறைபாடும் இருக்கக் கூடாது.வடுவுள்ளதாகவும் இருக்கக் கூடாது என அவன் கூறுகிறான்’ என்றார். அதற்கவர்கள், ‘இப்போதுதான் நீர் உண்மையை எடுத்துரைத்தீர்’ எனக்கூறினர். பிறகு அவர்கள்

அதனை அறுத்தனர். ஆனாலும் அவர்கள் அதனைச் செய்யவே இருக்கவில்லை. மேலும், வேதம் வழங்கப்பட்டவர்களாகிய நீங்கள் இதனையும் நினைவு கூருங்கள்: நீங்கள் ஒரு மனிதரைக் கொலை செய்தீர்கள். ஒவ்வொருவரும் தாம் குற்றமற்றவர் என கூறிக்கொண்டும்இருந்தீர்கள்.நீங்கள்மறைத்துக்கொண்டிருந்ததை இறைவன் வெளிக் கொண்டுவரச் சித்தமானான். அப்பசுவின் ஒரு பாகத்தை எடுத்துக் கொலையுண்டவரின் உடலில் அடியுங்கள் என நாம் கூறினோம். இவ்வாறுதான் இறைவன் மரணித்தவர்களை எழுப்புகிறான். நீங்கள் சிந்தித்துணரலாம் என்பதற்காக அவன் தனது அத்தாட்சிகளை உங்களுக்குக் காட்டுகிறான்''.

வழங்கப்பட்ட தீர்வு மிக எளிமையாக இருந்ததால், மூஸா நபி தங்களைக் கேலி செய்வதாக அவர்கள் எண்ணி விட்டார்கள் என்பது தனிக்கதை. அதனை விட அவர்களது நோயுற்று உருக்குலைந்த மனப்பாங்கின் காரணமாக மிகச் சாதாரண மனிதனால்கூட இலகுவில் புரிந்து கொள்ள முடியுமான எளிய தீர்வொன்றை மிகச் சிக்கலான ஒன்றாக மாற்றிவிட் டார்கள். ஒரேயொரு மாடு பற்றி எத்தனை விதமான கேள்விகள்: அதன் நிறம் என்ன? அதன் உண்மை நிலை என்ன? வாழ்க்கை முறை என்ன? பெறுமதி என்ன? எங்கிருக்கிறது? யாரிடமுள்ளது?.. குறித்த கொலைக் குற்றத்தையும் அதனால் நெருங்கி வந்து கொண்டிருக்கும் அபாயத்தையும் மறந்து விட்டு இப்படி அவர்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர். பிறகு, குறித்த மாட்டின் விலை அதிகரித்தபோது கஞ்சத்தனத்தினால் அதனை அறுக்காமல் வைத் திருக்கப் பார்த்தார்கள். இறுதியாக, ஒரு கலகத்தை ஏற்படுத்தி விட்டுத்தான் அறுக்க முன்வந்தார்கள். "அதனை அவர்கள் அறுத் தார்கள். ஆனாலும், அதனை அவர்கள் செய்யவே இருக்கவில்லை''. ஓர் எளிய தீர்வை நெருக்கடிகளின் சங்கிலித் தொடராக மாற்றுவது எப்படி என்பதற்கான அற்புதமான எடுத்துக்காட்டு இது.

முஸ்லிம்கள் சிந்திப்பதையும் அறிவாய்வு முயற்சிகளையும் நிறுத்தி, அவை சார்ந்த பொறுப்புகளிலிருந்து விலகி, கண்மூ

டிப் பின்பற்றும் நிலைக்குச் சென்றபோது மிகக் கீழ்மை நிலையை அடைந்தார்கள்; யூத-கிறிஸ்தவர்கள் உட்பட முன்னைய சமுதாயங்களின் வழிமுறைகளை முழுமையாகப் பின்பற்றலானார்கள். இந்தச் சமுதாயத்தின் இறைத் தூதர் (ஸல்) முன்னறிவிப்புச் செய்தது போல், அச்சமுதாயங்களை ஜாணுக்குஜாண், முழத்துக்கு முழம் அவர்கள் பின்பற்றினார்கள். பசுமாட்டுவாசிகளும் காளைமாட்டை வணங்கியவர்களும் செய் தது போன்று, இப்படி எத்தனை தீர்வுகளைத்தான் அவர்கள் சிக்கலாகவும் நெருக்கடியாகவும் மாற்றியிருக்கிறார்கள்! எத்தனை சிகிச்சைகளைத்தான் நோயாக மாற்றியிருக்கிறார்கள்! எத்தனை மருந்துகளின்வீரியத்தைத்தான்செயலிழக்கச்செய்திருக்கிறார்கள்! இந்த உண்மையை உறுதிப்படுத்த நாம் சில உதாரணங்களை இங்கு முன்வைக்கிறோம். குறிப்பிட்டதோர் இஸ்லாமிய விவ காரத்தில் அளவு கடந்து கவனம் செலுத்திய அதேவேளை, அது தொடர்பாகப் பெறப்பட்ட சட்டங்கள் கண்டுகொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டமையை அவ்வுதாரணங்கள் சுட்டுகின்றன.

### 1) ஸுன்னாவைப் பாதுகாத்தல் என்ற மாயையால் ஏற்பட்ட நெருக்கடி.

நபிவழியாகிய தூய ஸுன்னாவை ஒன்று திரட்டியமை, பதிவு செய்தமை, ஹதீஸ்களது உள்ளடக்கம் மற்றும் அறிவிப்பாளர்கள் தொடர்பான அடிப்படை விதிகளை உருவாக்கியமை முதலிய பணிகள் இந்த உம்மாவின் கீர்த்திமிகு பெருமைகளுள் ஒன்று என்பதில் ஐயமில்லை. ஸுன்னாவின் வசனங்களைத் திரட்டவும், பலவீனமான செய்திகளிலிருந்து பலமான செய்திகளை வேறுபடுத்தவும், அவற்றின் அறிவிப்பாளர்களை தராதரப் படுத்துவதற்கான அளவுகோல்களை உருவாக்கவும் முன்னைய அறிஞர்கள் மகத்தான முயற்சிகளை மேற்கொண்டனர். அதன் மூலமாக இறைத்தூதர் (ஸல்) அவர்களது வாழ்வியல் நிரந்தரமாக பேணிப் பாதுகாக்கப்பட்டது. நபியவர்களது வாழ்வியலை வாசிப்பவர்கள் அல்லது ஆழ்ந்து கற்பவர்கள்

அன்னாருடன் உள்ளத்தாலும் அறிவாலும் உணர்வாலும் வாழக் கூடிய நிலை ஏற்பட்டது. அந்த வகையில், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முழு மனித இனத்துக்குமான வழிகாட்டி யாகவும் முன்மாதிரியாகவும் தொடர்ந்து நின்றார்கள். அன்னாரது சுகந்தம் நிறைந்த வாழ்வியலிலிருந்தும், தூய வழிமுறையிலிருந்தும் மனித இனம் தனது பிரச்சினைகளுக் கான தீர்வுகளையும், ரோகங்களுக்கான சிகிச்சைகளையும் தொடர்ந்து உய்த்தறிய முடிந்தது. ஸுன்னாவை அணுகுவதற்கான ஆரோக்கியமான முறைமையொன்றின் வழியாக அல்-குர்ஆனியப் பெறுமானங்களையும் நிகழ் யதார்த்தத்தை யும் தொடர்புபடுத்திப் பார்க்கும் ஆற்றலை உம்மா பெற்றது. ஏனெனில், அல்-குர்ஆன் என்பது சிந்தனையையும் அறிவையும் நாகரிகத்தையும் உருவாக்குகின்ற முழுமொத்த மூலா தாரமாகும். ஸுன்னா என்பது அல்-குர்ஆனின் சட்டங்களையும் பெறுமானங்களையும் நன்கு வரையறுக்கப்பட்ட பண்புகள் கொண்ட யதார்த்தமொன்றுடன் தொடர்புபடுத்திப் புரிந்து கொள்வதற்கான முறைமையாகும்.

ஆனாலும், பின்னால் வந்த வீழ்ச்சிக்காலப் பிரிவுகளில் நடந்த தோ வேறு. முன்பு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பான மேலோட்டமான சம்பிரதாயங்களும் சொல் விளையாட்டுச் சர்ச்சைகளுமே அங்கு ஆதிக்கம் பெறத் தொடங்கின. இச் சர்ச்சைகள் அடிப்படையான (மகாஸித்) நோக்கங்களைப் பின்தள்ளி, சட்ட சிந்தனைப்பள்ளிகளுக்கு (மதாஹிப்) ஆதரவு திரட்டுதல் என்ற தோற்றப்பாட்டை விஸ்வரூபம் அடையச் செய்தன. சமூக நலன்கள் புறக்கணிக்கப்பட்டு, கண்மூடிப் பின்பற்றும் முனைப்புப் பலமடைந்தது. தொடர்ச்சியான அபிவிருத்திக்கும் பங்களிப்புக்கும் அவசியமான ‘இஜ்திஹாத்’ என்னும் அறிவாய்வு முயற்சிகள் மூர்க்கமாக எதிர்க்கப்பட்டன. ஒவ்வொரு சட்டப்பள்ளியும் அல்லது குழுவும் தனது நிலைப்பாடுகளுக்கு உடன்பாடான பகுதிகளை மாத்திரம் ஸுன்னாவிலிருந்து எடுத்துக் கொண்டு ஏனைய பகுதிகளைப் புறக்கணித்து விட்டன. மட்டுமன்றி, அல்-குர்ஆனும் ஏறக் குறைய

கவனயீர்ப்பை இழந்தது.

ஆரம்ப கால முன்மாதிரித் தலைமுறையை உருவாக்குவதற்கான முழு நிறைவான முறைமையாக ஸுன்னா இயங்கியமையைப் புரிந்து கொண்டு அதன் வழிகாட்டலின் கீழ் சிந்தனை, நாகரிகம், கலாசாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதும் உம்மாவை மீள நிலை நிறுத்துவதும் எவ்வாறு என்ற பார்வை மிகப் பலவீனமடைந்திருந்தது. இறைத் தூதரது ஸுன்னாவையும் வாழ்வியலையும் அதன் இலக்குகள், வழிகாட்டல்கள் என்பவற்றின் வழியாகப் புரிந்து கொள்வதற்கான முயற்சிகள் நலிவடைந்தன. குறிப்பிட்டதொரு நபிமொழி தொடர்பான அறிவிப்பு பலமானதா அல்லது பலவீனமானதா என்பதைக் கண்டறிவது தொடர்பான ஆய்வுகளாக மாத்திரம் அவை சுருங்கிப் போயின. அறிஞர்களது உழைப்பு இவ்வாறு நபி மொழிகளை ஆதாரப்படுத்திப் பதிவு செய்தல் தொடர்பான முயற்சிகளிலும் சம்பிரதாயங்களிலும் அளவு கடந்து பிரயோகிக்கப்பட்டதால், முழுமொத்தப் புரிதல் மற்றும் அதியுயர் இலக்குகள் என்பவை தொடர்பான ஆய்வுகள் பின்தள்ளப்பட்டன. இதனால், பலர் ஸுன்னாவுக்கும் அல்-குர்ஆனுக்குமிடையில் முரண்பாடுள்ளது என்ற மாயையில் விழுந்தது மட்டுமன்றி, ஒரு ஸுன்னாவுக்கும் மற்றொரு ஸுன்னாவுக்குமிடையில்கூட முரண்பாடு காணப்படு வதாக எண்ணலாயினர். ஸுன்னாவுக்கும் மனித நலன்களுக்கு மிடையில் கூட முரண்பாடு காணப்படுவதான மாயையை இந்நிலை தோற்றுவித்தது. இதன் விளைவாக, ஸுன்னாவின் மூலாதாரத் தன்மை தொடர்பான மிக விரிவான கருத்தாடல்கள் மீண்டுமொரு முறை மேலெழுந்தன. ஹதீஸ் அறிவிப்புகள் மற்றும் அவற்றின் தராதரங்கள் தொடர்பான ஆய்வுகள் அல்-குர்ஆனின் அறிவு முறைமையின் ஒளியிலேயே தீர்வுகளைக் கண்டடைய முடியும் என்ற உண்மை அங்கு கண்டு கொள்ளப் படவில்லை.

'அஹ்லுல்ஃபிக்ஹ்' எனப்படும் உள்ளடக்க ஆய்வாளர்களுக்கும், 'அஹ்லுர் ரிவாயா' எனப்படும் அறிவிப்புகளை தராதரப்படுத்தும்

ஆய்வாளர்களுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்போடும் சமநிலையோடும் மேற்குறித்த முயற்சிகள் தொடர்ந்திருக்கு மாயின், நிச்சயமாக அக்கூட்டு முயற்சி உரிய பலன்களைத் தந்திருக்கும். ஸுன்னா தொடர்பான முரண்பட்ட நிலைப் பாடுகளும் உம்மாவினுள் தவிர்க்கப்பட்டிருக்கும். முயற்சிகள் திரட்சியடைந்து, அறிஞர்களில் ஒரு குழு ஸுன்னாவில் ஒட்டிக் கொண்ட களங்கங்களைக் களைந்து சரியாக உறுதிப்படுத்தப் பட்டவசனங்களைமாத்திரம்முன்வைக்க,அறிஞர்களில்மற்றொரு குழு அவற்றைப் புரிந்து பகுப்பாய்வு செய்து ஸுன்னாவின் ஒளியில் வாழ்வியல் விவகாரங்களைக் கையாள்வதற்கான தீர்வுகளை முன்வைக்கும் வழியும் பிறந்திருக்கும். அதன் மூல மாக, அகிலத்தாருக்கு அருளாக வந்த அண்ணல் நபியின் ஸுன்னாவை மக்களில் ஒரு சாரார் மேலதிகத் தளையாகக் கருதி விடுபட முயலும் நிலையும் தவிர்க்கப்பட்டிருக்கும். ஸுன்னாவின் மூலாதாரத் தன்மையை மொத்தமாக மறுப்போர் மற்றும் அதன் சில வகைகளை மறுப்போர் (உதாரணமாக 'ஆஹாத்' ஆன ஹதீஸ்களை மறுப்போர்) என இரு வகையினர் இவர்களுள் உள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### 2) அகீதாவைப் பாதுகாத்தல் என்ற மாயையால் ஏற்பட்ட நெருக்கடி.

'இல்முல்கலாம்' என்னும் தர்க்க இறையியல் கலையைக் கையாள்வதில் ஏற்பட்ட பிறழ்வும்கூட சிந்தனா நெருக்கடியின் ஒரு பகுதியாக அமைந்ததெனலாம். தீர்வையே சிக்கலாக்கிக் கொள்வதற்கான மற்றோர் எடுத்துக்காட்டாக அது அமைந் திருந்தது. ஏனெனில், 'இல்முல்கலாம்' என்னும் தர்க்க இறையியல் கலை முதலில் ஒரு தீர்வாகவும், சிந்தனா மற்றும் நம்பிக்கை சார்ந்த சீர்திருத்தச் செயற்பாட்டின் பகுதியொன்றாகவுமே உருவாக்கப்பட்டிருந்தது இஸ்லாமிய இறையியல் நம்பிக்கைக் கோட்பாட்டைப் பாதுகாத்து, அதன் அடிப்படைகளைத் திடப்படுத்தி, சிந்தனா அழைப்புக் களத்தில் இஸ்லாமியக்

கருத்தாடலைப் பலப்படுத்துவதற்காகவே அது ஏற்படுத்தப் பட்டது. ஆனால் நெருக்கடி மனப்பாங்கானது அதனை உரிய இலக்கிலிருந்து திசைமாற்றி, தீர்வின் பகுதியாக அன்றி நெருக்கடியின் பகுதியொன்றாகி விட்டது.

முஸ்லிம் சமுதாயத்தின் இறையியல் நம்பிக்கைகளைப் பாதுகாக்கும் சாதனமொன்றாகவே முஸ்லிம் அறிஞர்கள் 'இல்முல்கலாம்' கலையை உருவாக்கினர். எதிர் நம்பிக்கைகள் கிரேக்க சிந்தனையையும் தர்க்கத்தையும் ஆயுதமாகக் கொண்டு இஸ்லாமிய இறைநம்பிக்கையை தாக்கத்தொடங்கியிருந்த பின்னணியில் அதனைப் பாதுகாக்கவே 'இல்மும்கலாம்' உருவாக்கப்பட்டது. குழப்பத்தில் தடுமாறிக் கொண்டிருந்த ஆரம்பகால தத்துவவியலாளர்களும் விக்கிரக சிந்தனையாளர் களும் உருவாக்கிய கலைகளும்கூட இஸ்லாமிய இறையியல் நம்பிக்கைக்கு எதிரான இத் தாக்குதலில் பங்கு கொண்டிருந்தன.

இத்தாக்குதலை எதிர் கொள்ளும் பணியில் மொழிபெயர்ப்பு இயக்கமும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியதெனலாம். ஏனெனில், இஸ்லாமிய இறையியல் நம்பிக்கைகளுக்கு எதி ரான சிந்தனை கொண்டிருந்தோர் எத்தகைய ஐயவாதங் களைக் கிளப்புகிறார்கள் என்பதையும், அதற்காக எத்தகைய வழிமுறைகளைக் கையாள்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை முஸ்லிம் அறிஞர்களுக்கு இருந்தது. இந்த வகையில் சில அறிஞர்கள் முஸ்லிமல்லாத நாடுகளுக்குச் சென்று அங்கிருக்கும் ஆட்சியாளர்களோடும் அறிஞர்களோடும்கூட தர்க்கம் புரிந்திருக்கின்றனர். இத்தகைய பயணங்களை மேற் கொண்டோருக்கு எடுத்துக் காட்டாக அபூ பக்கர் அல்-பாகில்லானியைக் குறிப்பிடலாம்.

ஆனால், தீர்வுகளை நெருக்கடிக்குள் தள்ளிவிடும் மனப் பாங்கானது 'இல்மும்கலாம்' கலையை அதன் அடிப்படைப் பணியிலிருந்து திசை திருப்பிவிட்டது. விளைவாக, உம்மா வின் நாகரிகப் பணியின் பகுதியொன்றாகவும், இஸ்லாமிய வளப்படுத்தல் மற்றும் விடுதலை சார்ந்த அழைப் புப்பணியின்

கருவியொன்றாகவும் இருந்த இக்கலையானது முஸ்லிம்கள் தமக்கிடையில் மோதிக்கொள்வதற்கான கருவியாக மாறிப் போனது. இஸ்லாமியக் கருத்தாடலின் இலக்குகளுக்கு எதிரான உரையாடலைப் போஷிக்கும் உணவாகவும் அது மாற்ற மடைந்தது. இதனால் இஸ்லாமிய அணிக்குள்ளேயே குழப்பமும் பிரிவினையும் இறையியல் சிந்தனைப் பள்ளிகள் மீதான வெறித்தனமான பற்றும் தோன்றி வளரலாயின. இஸ்லாமிய நம்பிக்கையையும் சிந்தனையையும் பாதுகாக்க உருவாக்கப்பட்ட புத்தாக்கக் கருவிகளே முஸ்லிம்களது ஒற்றுமையை சீர்குலைக்கப் பயன்படுத்தப்பட்டன. முஸ்லிம் களது வாழ்வில் ஆரோக்கியமான இறையியல் கோட்பாடு வகிக்கவேண்டிய பாத்திரத்தையும் அவை செயலிழக்கச் செய்தன.

அரசியல் அதிகாரத் தரப்பின் ஆசியுடன் பல்வேறு சிந்தனைப் பள்ளிகளைச் சேர்ந்த அறிஞர்களுக்கு மத்தியில் விவாதங்கள் நடாத்தப்பட்டன. சிலருக்கு எதிராக மற்றும் சிலர் தூண்டி விடப்பட்டனர். மட்டுமன்றி, இதே நோக்கங்களுடன் சட்ட நியாயவியல் சார்ந்த விவாதங்களும் அரங்கேற்றப்பட்டன. இறையியல் மற்றும் சட்ட நியாயவியல் சார்ந்த இவ் விவாதிகள் - தெளிவான இஸ்லாமிய முறையியலின் அடிப் படைகளையும் இலக்குகளையும் வைத்து நோக்கும்போது - தாம் விவாதத்துக்கு எடுத்தாளத்தகாத விவகாரங்களை எடுத் துக் கொண்டனர். அவற்றிலிருந்து சொல்லாக்கங்களையும் வரைவிலக்கணங்களையும் உருவாக்கிக்கொண்டு அவைதொடர் பான விவாதங்களிலும் ஈடுபடலாயினர் தர்க்கம் புரிவதும் எதிராளியை வீழ்த்துவதும் மட்டுமே அவர்களது ஒரே இலக்காக இருந்தது. இது பிரிவினையும் பரஸ்பரக் கழுத்தறுப்பையும் வெறித்தனத்தையும் பாரிய முரண்பாடுகளையும் உருவாக்கி விட்டது.

‘இல்முல்கலாம்‘ கலையிலும் அதன் முறைமையிலும் ஏற் பட்ட பிறழ்வினால் பல மோசமான விளைவுகள் ஏற்பட்டன. உம்மாவின் சிந்தனா நெருக்கடியையும் பிரிவினையையும்

மேலும் கூர்மையடையச் செய்யும் விவகாரங்களில் சமூக செயற் பாட்டாளர்கள் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டனர் என்பது அதன் முக்கியமானதொரு விளைவெனலாம். உம்மாவின் ஏராளமான சக்தியை விரயமாக்கி, அதன் கருத்தாடலின் தாக் கத்தைக் குறுகச் செய்வதில் அவ்விவகாரங்கள் பெருமளவு பங்களிப்புச் செய்தன. 'அல்-குர்ஆன் படைக்கப்பட்டதா? இல்லை யா?' என்ற சர்ச்சையையும், உம்மாவின் சிந்தனா-கலாசார-அரசியல் தளங்களில் மட்டுமன்றி நாகரிகத்தளத்தில்கூட அது ஏற்படுத்திய தாக்கங்களையும் இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். 'மனித செயல்களை மதிப்பீடு செய்வதற்கான மூலாதாரங்கள்', 'வஹீக்கும் பகுத்தறிவுக்கும் இடையிலான மோதல்' முதலிய விவகாரங்களையும் உதாரணங்களாகக் குறிப் பிடலாம்.

### 3) ஃபிக்ஹைப் பாதுகாத்தல் என்ற மாயையால் ஏற்பட்ட நெருக்கடி.

'ஃபிக்ஹு' என்னும் சட்ட நியாயவியல் கலைகள் தோற்றம் பெற்றமையும், இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவற்றை ஒன்று திரட்டிப் பதிவு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும் ஏலவே இருந்த இறைவனின் சட்ட வாக்கத்துக்கு இணையான மற்றொரு சட்டவாக்கமாக அவை இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, ஒவ்வொரு காலத்தின் பிரச்சினைகளுக்கும் தீர்வாக, அவ்வக்கால அறிஞர்கள் தமது அறிவுக்கும் புரிதலுக்கும் அமைவாக- மேற்கொண்ட முயற்சிகளே அவை. ஆனால் பின்னால் வரவிருப்பவர்கள் இறை வனின் சட்டவாக்கத்தை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு இவ்வறிவு முயற்சிகளின் பின்னால் சென்று விடுவார்கள் என அந்த அறிஞர்கள் ஒருபோதும் நினைத்திருக்க மாட்டார்கள். அறிவுக் கலைகளை ஒன்று சேர்ப்பதும், பதிவு செய்வதும், பின்னால் வரவிருப்போருக்கு அவற்றை வழங்குவதுமே அவ்வறிஞர்களது

நோக்கமாக இருந்தது. பின்னால் வருவோரும் தங்களைப் போலவே இறை வேதத்தைப் பற்றிப் பிடித்து, அதன் சட்டங்களை வாழ்வின் அனைத்து விவகாரங்களிலும் பிரயோகிக்க வேண்டும் என்பதே அவர்களது எதிர்பார்ப்பாகவும் இருந்தது. பின் தோன்றும் சந்ததிகள் புதிது புதிதாகத் தோன்றும் விவகா ரங்களையும் சூழ்நிலைகளையும் ஷரீஆவின் அதியுயர் இலக்குகளுக்கும் முழு மொத்த விதிகளுக்கும் அமைவாகக் கையாள்வார்கள் எனவும், ஷரீஆவின் அடிப்படைகளும் இலக்குகளும் நடைமுறை வாழ்வுடன் கொண்டுள்ள தொடர்பை அனைத்துக் கால-தேச வர்த்தமானங்களிலும் பேணிப் பாதுகாப்பார்கள் எனவும் அவ்வறிஞர்கள் எண்ணினார்கள்.

ஆனால், பின்தோன்றிய நெருக்கடி மனப்பாங்கானது முன்னைய சட்டவியல் அறிஞர்களது கூற்றுகளை மற்றொரு சட்டவாக்கமாக மாற்றி விட்டது. இதனால், மனிதப் புரிதலே சட்டவாக்கம் என்ற நிலை தோன்றியது. அறிஞர் கூற்றுகளும், மார்க்கத் தீர்ப்புகளும், தெளிவுரைகளும், பிற்சேர்க்கைகளும், விமர்சனங்களும், தனிப் பட்ட அபிப்பிராயங்களும், எடுகோள்களும்... என ஒரு மாபெரும் திரட்டு தனியான சட்டவாக்கமொன்றாக மாற்றப்படும் நிலை உருவாகியது. அவை தனிப்பட்ட நிகழ்வுகள் அல்லது பொது விவகாரங்கள் அல்லது தனிநபர்கள் அல்லது தனித்துவமான சூழ்நிலைகள் என எவ்வகையைச் சார்ந்திருந்தாலும் சரியே! எத்தகைய மாறுபட்ட நிகழ்வுகளிலும், புதிய சூழ்நிலைகளிலும் இம் மனித உற்பத்திகளே அனைவரும் பின்பற்ற வேண்டிய சட்ட நெறி என்ற நிலை உருவாக்கப்பட்டது.

பல்வேறு தோற்றப்பாடுகளாலும் காரணிகளாலும் உம்மா வின் உளவியலில் ஆழ்ந்து ஊடுருவி விட்ட இந்நெருக்கடி மனப்பாங்கானது யதார்த்தத்தோடும் நிகழ்வுகளோடும் இயைந் து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அறிவார்ந்த இயக்க நிலையிலிருந்து முஸ்லிம் பகுத்தறிவைச் சிறைப்படுத்தும் தளையாக சட்ட நியாயவியலை மாற்றிவிட்டது. இதனால் சட்டநியாயவியலின் இயங்கு நிலை ஸ்தம்பித்து, செயலிழந்து,

வெறும் சட்டங்களுக்குள் மாத்திரம் அடங்கிப்போனது. தந் திரங்களை அடிப்படையாகக் கொண்ட பகுதியளவிலான அணுகு முறைகள் உருவாக்கிய தனியாள் வாதத்துக்கும் சுயநலத்துக்கும் முன்னால், சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான இஸ்லாத்தின் அதியுயர் இலக்குகளையும் முழுமொத்த விதிகளை யும், சட்டங்களையும், அவற்றுக்கான காரணங்களையும் அந்த நியாயவியல் மறந்துவிட்டது இந்நிலையில், வாழ்வின் கேள்விகளுக்கு வழங்கப்பட்ட இஸ்லாமியப் பதில்கள் வெறும் மேலோட்டமான வடிவங்களாக மாத்திரம் மாறிப்போயின. அவை தமது இலக்குகளையும் உள்ளீடுகளையும் ஆன்மாவையும் முற்றாக இழந்திருந்தாலும், வெளிப்படையான சட்ட அமைப்பைப் பெற் றிருப்பது மாத்திரமே போதுமானதாக மாறியது.

இஸ்லாமியக் கருத்தாடல் பலவீனமடையவும், அதன் சமூ கத் தாக்கம் குறைவடையவும், உம்மாவின் சிந்தனா நெருக்கடி திரட்சியடையவும் இந்நிலை காரணமாகியது என்பதில் ஐய மில்லை. இந்நெருக்கடி மனவமைப்பானது அடிப்படைத் தீர்வுகளாக இருந்த பல்வேறு அறிவுகளை புதிய நெருக்கடி களாக மாற்றின. இதனால், 'கோட்பாட்டுக்கும் நடைமுறைக் கும் இடையிலான பிளவு' என்ற புதிய நெருக்கடியொன்று உருவாகியது. உம்மாவின் நம்பிக்கை மற்றும் சிந்தனா அடித்தளம் தளர்வுற்றுச் சிதைந்து, உம்மாவின் இயங்கியல் அடை யாள மொன்றாகவும் அந்நெருக்கடி மாறியது.

### 4) கோட்பாட்டையும் நடைமுறையையும் மீளிணைத்தல் என்ற மாயையால் ஏற்பட்ட நெருக்கடி.

இஸ்லாமிய சிந்தனையும் கருத்தாடலும் எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிநிலை சில சிரேஷ்ட அறிஞர்களைக் கவலையிலாழ்த் தியது. கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கு மிடையிலான முரண் பாட்டின் உண்மை நிலையையும் இயல்பையும், அதனால் ஏற் படக்கூடிய தீங்குகளையும் நன்கு புரிந்து கொண்டவர்கள் அவர்கள். இந்நிலை தொடர்ந்து நீடித்தால் அது இஸ்லாத்தை

உள்ளீடற்றதாக மாற்றிவிடும் என்ற புரிதல் அவர்களுக்கிருந்தது. அதனால், கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையிலான தொடர்பை மீள நிலைநிறுத்துவதற்கு தொடர்ச்சியான உழைப்பும் முயற்சியும் அவசியம் என அவர்கள் கருதினர். இத்துறையில் அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் வழிகாட்டல்கள் முன் வைக்கப்பட வேண்டும் எனவும், நபித்தோழர்களும் அவர்களைத் தொடர்ந்து வந்தவர்களும் இதில் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்று நினைவூட்டப்பட வேண்டும் எனவும் அவர்கள் விரும்பினர். அப்போதுதான் ஆன்மிகப் பயிற்றுவித்தல் சார்ந்த விவகாரங்களில் ஒரு தூய்மையான புரிதல் ஏற்பட முடியும் என்பது அவர்களது நிலைப்பாடாக இருந்தது, மட்டுமன்றி, வெறும் வடிவங்களோடும் வெளிப்படையான தோற்றங்களோடும் மாத்திரம் நின்று கொள்ளாமல், நம்பகமான அறிவிப்புகளையும் ‘மகாஸித்’களையும் ஆராய்ந்து பார்க்கத் தூண்டுதலளிக்கப்பட வேண்டும் என்பதும் அவர்களது கருத்தாக இருந்தது.

அந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அப்போதைக்கு - விழுமியம் மற்றும் நடத்தைசார் அறிவாக்கங்கள் தோன்ற வழியமைத்தன. சிலர் அவற்றுக்கு ‘இல்முல்-ஹகீகா’ (உண்மையின் கலை) எனப் பெயரிட்டனர். ‘ஷரீஆக் கலை’ என்பதன் மறுமுகமாக அக்கலை அமைந்திருந்தது. இன்னும் சிலர் அதற்கு ‘தஸவ்வுப்’ எனப் பெயரிட்டனர். அவர்களே சொல்வது போல், ‘ஹகீகா’ என்னும் உண்மைக்கும், ‘ஷரீஆ’ என்னும் வழிகாட்டலுக்கும் இடையிலான தொடர்பை மீளநிலை நிறுத்துவதற்கு அறிஞர்கள் மேற்கொண்ட இதய சுத்தியான முயற்சியாகவே அது அமைந்திருந்தது. அல்லது ‘கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையில் நேர்ந்த பிளவை’ இல்லாதொழித்து, இரண்டுக்குமிடையிலான தொப்புள்கொடி உறவை உயிர்ப்பிப்பதும், வெறும் சட்ட நியாயவியல் சட்டகத்தைக் கடந்து அச்சட்டங்களின் நடத்தை சார்ந்த விளைவுகளைக் கவனிப்பதுமே அவர்களது நோக்கமாக இருந்தது. அந்த வகையில், ஒவ்வொரு விடயமும் அதன் நோக்கத்துடன் (மக்ஸத்) தொடர்பு

படுத்தப்பட வேண்டுமெனவும், ஒவ்வொரு வழிமுறையும் அதன் முடிவுடன் தொடர்பு படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் கருதினர். ஏனெனில், ஒன்றின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கம் நிறைவேறாவிட்டால், -அது 'பர்ளு' என்றோ 'வாஜிப்' என்றோ அழைக்கப்பட்டாலும்- அதில் எந்த நன்மையும் கிடையாது.

எனினும், இக்கலையும் பின்னர் சிந்தனா நெருக்கடியின் தாக்கங்களுக்கு உட்பட்டது. அந்த வகையில் ஏலவே நாம் குறிப்பிட்ட கலைகளுக்கு நேர்ந்த கதியே இதற்கும் நேர்ந்தது. முன்னர் காணப்பட்ட நெருக்கடியொன்றுக்கான தீர்வாகவும், பிறகு தோன்றவிருக்கும் நெருக்கடிகளின் தாக்குதலைத் தடுக்கும் வேலியாகவும் தோன்றிய இக்கலை மீது அதே சிந்தனா நெருக்கடி முழுத் திணிவுடன் பிரதிபலித்து நெருக்கடியின் பகுதியொன்றாக அதனை மாற்றி விட்டது. இதனால், 'தஸவ்வுப்' என்பது பிற சமுதாயங்களது ஏராளமான பிறழ்வுகள் உம்மாவினுள் நுழைவதற்கான வாயிலாக மாறிப்போனது. சமூக விவகாரங் களையும் உம்மாவின் பிரச்சினைகளையும் அது புறக்கணித்து, தனித்திருப்பதை நோக்கிய அழைப்பாக மாறி இன்னொரு வகை யான எதிர்மறை வடிவத்தினுள் மூழ்கிப்போனது. இதனால் உம்மாவின் நெருக்கடி சில புதிய பரிமாணங்களைப் பெற்றது. முஸ்லிம் சிந்தையை புதிய பிரச்சினைகள் அலைக்கழிக்கத் தொடங்கின.இஸ்லாமிய வாழ்வில் பல பிரச்சினைகள் விஸ்வரூபம் எடுத்தன. அற்பமான உலக வாழ்வியல் விவகாரங்களில் மூழ்கி விடக்கூடாது என்ற வாதத்தின் பேரில், அவற்றிலிருந்து முற்றாக ஒதுங்கித் தனித்து வாழ்வதை நோக்கி ஆர்வமூட்டும் நிலை தோன்றியமையை அத்தகைய பிரச்சினைகளுள் மிகச் சிறிய ஒன்றாக அடையாளப்படுத்தலாம்.

இதனால் உம்மாவின் பெரும்பகுதியினர் வினைத்திறன் குன்றிச் செயலிழந்து போயினர். மட்டுமன்றி, தேக்கநிலை யடைந்து உருமாறிப் போயிருந்த இப்போக்கானது எல்லா வகையான வினைத்திறனான செயற்பாடுகளையும் 'மறுமை விவகாரங்களைப் புறக்கணித்து உலக வாழ்வில் மூழ்கிப் போகும் செயற்பாடுகள்'

எனக் குற்றம் சாட்டியது. உலகம் மறுமையின் விளைநிலம் என்றும், விசாரணைக்கும் கூலிக்குமான உலகத்தில் நுழைவதற்கான செயல்களின் களமே இவ்வுலகம் என்றும், இது அறிவுக்கும் செயல்வாதத் துக்குமான இடமென்றும், தூதை எடுத்துச் சொல்லி, பிரதிநிதித்துவப் பொறுப்பையும் வளப்படுத்தல் கடமையையும் நாகரிகப் பிரசன்னப் பணியையும் மேற்கொள்வதற்கான வாய்ப்பே இவ்வுலக வாழ்க்கை என்றும் ஆரம்பகால 'தஸவ்வுப்' இமாம் கள் வலியுறுத்திய அடிப்படைகளை பிற்காலத்தில் தோன்றிய 'தஸவ்வுப்' வழிகாட்டிகள் வசதியாக மறந்து போயினர்.

# அத்தியாயம் மூன்று

## சிந்தனாமுறைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்துதல் வழியாக நெருக்கடியைத் தீர்த்தல்

### சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தமும் அறிவை இஸ்லாமியப் படுத்தலும் பற்றிய கருத்தாடல்

*சிந்தனையையும், அதன் மீதான கருத்தாடலையும், அதனை நோக்கிய அழைப்பையும் தமது ஏகபோக உரிமையாக வைத்துக் கொண்ட சித்தாந்தங்களது எதிர்ப்பே 'சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்தல்' என்ற விவகாரம் போதிய கவனயீர்ப்பைப் பெறாமைக்கான காரண மாகும். ஆயினும், 'விசை-எதிர்விசை' என்னும் தெய்வீக நியதிக்கு அமைவாகவும், 'சத்தியம் அசத்தியத்தை நிர்மூலமாக்கும்' என்ற நியதியின் விளைவாகவும் 'சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்தல்' சார்ந்த கருத்தாடலானது தன்னை நிராகரித்த அல்லது எதிர்த்துப் போரிட்ட அல்லது தனது இருப்பைக் கண்டுகொள்ளாதிருந்த பல்வேறு சிந்தனா - கலாசாரச் சித்தாந்தங்களை எதிர்த்து நின்று பிடித்திருக்கிறது. மட்டுமன்றி, தனது உள்ளடக்கத்தைப் புரிந்து, உள்வாங்கி, ஏற்றுக் கொண்ட வினைத்திறன் மிக்க பலரின் முயற்சிகளையும் அது உதவியாகப்பெற்றிருக்கிறது.*

*இஸ்லாமிய சிந்தனா முறைமைகளைச் சீர்திருத்துதல் தொடர் பான கருத்தாடல் மிக அண்மைக்காலம் வரை கடுமையான புறக்கணிப்பையே சந்தித்து வந்தது. சிலபோது ஏளனத்துக்கும்*

வெளிப்படையான கண்டனத்துக்கும்கூட அது உட்பட்டது. அப்படியொரு கருத்தாடல் இருப்பதே கண்டுகொள்ளப் படாமல் நிராகரிக்கப்பட்டது. அதன் உள்ளடக்கம் பற்றிய அறியாமை, உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாத பலவீனம், அதன் நோக்கங்களையும் இலக்குகளையும் கவனிக்காமை, அதன் வினைத்திறனையும் தாக்கத்தையும் கண்டு கொள்ளாமை, அதன் குரலையும் அதற்குக் கிடைக்கும் மேடைகளையும் ஆதரவையும் தாக்கியழிக்கும் யத்தனம் முதலான பல விடயங்களை இதற்கான காரணங்களாகக் குறிப்பிடலாம்.

சிந்தனைச் சீர்திருத்தம் பற்றிய கருத்தாடலை சுகபோகிகளின் கதையாடலாகவும், அரசியல் - ஆயுதப்போராட்டங்கள் போன்ற முக்கியமான போராட்ட வகைகளைப் புறக்கணித்தவர்களது கதையாடலாகவுமே அதன் உள்ளடக்கத்தையும் கருவையும் புரிந்து கொள்ளாதவர்கள் கருதினர். ஆயினும், உம்மாவின் சிந்தனை, கலாசாரம், நாகரிகம், அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றில் அடுத்தடுத்து ஏற்பட்ட தாக்கங்களும் நெருக்கடிகளும் பின்னடைவுகளும் தோல்விகளும் முஸ்லிம் பகுத்தறிவின் முன்னால் பல கேள்விகளை எழுப்பிவிட்டன. நிகழ் யதார்த்தத்துடன் முரண்படும் அல்லது அதனை முற்றாக நிராகரித்துவிடும் எல்லைக்குக்கூட அக்கேள்விகள் முஸ் லிம் பகுத்தறிவைக் கொண்டுவந்து நிறுத்தின. முன்வைக்கப்பட்டிருக்கும் .அனைத்துக் கருத்தாடல்களையும் கருதுகோள்களையும் முழுமையான மீளாய்வுக்கு உட்படுத்தவும் முஸ்லிம் பகுத்தறிவு துணிந்தது. ஏனெனில், உம்மா மேற்கொண்டு வந்த தொடர் போராட்டமும், மில்லியன் கணக்கான மனிதர்களது இழப்பும், ஆயிரக்கணக்கான அழைப்பாளர்களது உயிர்த் தியாகமும் அது சாதிக்க விரும்பிய அனேகமான நோக்கங்களுக்கு உதவவில்லை என்பதை ஆரோக்கியமான சிந்தனை கொண்ட அனைவரும் புரிந்து கொண்டனர். உம்மாவின் நாகரிகச் செல்நெறியைச் சீரமைக்கவோ, அதன் சிந்தனா நெருக்கடி விஸ்வரூபம்

அடைவதைத் தடுக்கவோ அவை வழிவகுக்கவில்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

சிந்தனா முறைமைகளை சீர்திருத்துதல் தொடர்பான கருத்தாடலும் மாற்றச் செயற்பாட்டில் அது வகிக்கும் பாத்திரம் பற்றிய புரிதலும் - மேலே குறிப்பிட்டது போல் - அண்மைக் காலம் வரை நிராகரிப்புக்கு உட்பட்டு வந்துள்ளதென்றால், அறிவை இஸ்லாமியப்படுத்துதல் பற்றிய கருத்தாடலானது அதனை விடக் கடுமையான எதிர்ப்புக்கு உட்பட்டு வந்திருக்கிறது என்றே கூற வேண்டும். அதுபற்றிய எந்தவொரு விரிவுரை நிகழ்ந்தாலும், அல்லது கட்டுரை எழுதப்பட்டாலும், அறிவையும் இஸ்லாமியத்தையும் இணைப்பதற்கெதிராக பல குரல்கள் எழுந்துவிடும் நிலைதான் அண்மைக்காலம் வரை காணப்பட்டது.

ஏனெனில், இத்தகையோரது பார்வையில் அறிவு என்பது - எந்த மூலாதாரத்திலிருந்து பெறப்பட்டாலும் - தனித்ததோர் ஆகிருதி; சர்வதேச தன்மையும் மாற்றமும் வளர்ச்சியும் கொண்ட மானிடப்பொதுமை; பல்வேறு மதங்களையும் சித்தாந்தங்களையும் பின்பற்றுகின்ற மனித இனத்தின் பொதுச் சொத்து. இவர்களது எண்ணத்தின் படி, அறிவியல் கலைகள் என்பவை மானிடப் பரிசோதனை முயற்சிகளும், பல்வேறு வாழ்வியல் துறைகளில் தனிமனிதர்களும் சமூகங்களும் பெற்று வந்த அனுபவங்களுமே ஆகும். அவற்றுக்கென்று வரையறுக்கப்பட்ட நிலையான அறிவியல் முறைகள் உள்ளன. அவற்றில் மதக் கோட்பாடுகள் எவ்வகையிலும் தாக்கம் செலுத்த முடியாது. அதேபோல், அறிவியல் கலைகளும் மதங்களின் மீது தாக்கம் செலுத்துவதில்லை.இந்தவகையில்,அறிவைஇஸ்லாமியப்படுத்தல் என்ற கருத்தாடலை எதிர்ப்போர் ஐயத்துடன் எழுப்புகின்ற கேள்வி இதுதான்: தனி மனிதனை அவனது இறைவனுடன் தொடர்புபடுத்தி மனித நடத்தையைச் சீரமைக்கின்ற இயல்பு கொண்ட இஸ்லாம் மதத்தை மேற்குறித்தவாறான அறிவியல் கலைகளுக்குள் ஏன் வலிந்து நுழைக்க வேண்டும்?

ஆனால் அறிவியலை ஒரு புறமாகவும், அதன் அடிப்படைகள், இலக்குகள், பெறுமானங்கள், பின்னணித் தத்துவம் என்பவற்றை மற்றொரு புறமாகவும் வேறுபிரித்துப் பார்க்கத் தெரியாத இயலாமைதான் அறிவை இஸ்லாமியப்படுத்துவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல் தடுக்கிறது என்பதை அவர்கள் கவனிக்கத் தவறிவிட்டனர். அறிவு என்பது உலகளாவிய தன்மை வாய்ந்தது என்ற பிரமைதான் இவ்வியலாமைக்குக் காரணமாகும். முஸ்லிம் உம்மா எதிர்கொண்ட கலாசாரப் படையெடுப்பே இப்பிரமையை விதைத்ததெனலாம்.

எவ்வாறாயினும், இக்கருத்தாக்கத்தைக் குழப்பிக்கொண்டவர்களதும், கண்ணை மூடிக் கொண்டு பின்தொடர்ந்தவர்களதும் குரல்கள் காலப்போக்கில் ஓய்ந்து தணிந்து பலவீனப்படலாயின. ஏனெனில், அறிவியலின் பயணத்தை நியாயப்படுத்துவதில் பெறுமானங்கள் வகிக்கும் முக்கியத்துவம் குறித்து சில மேற்கத்தியர்களே மெச்சிப் பேசத் தொடங்கிவிட்டனர். அறிவியல், பெறுமானங்கள் ஆகிய இரண்டுக்குமிடையிலான தொடர்பை மீள நிலைநிறுத்தவும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். மதத்துக்கும் அறிவியலுக்கும் இடையில் அல்லது அறிவியலுக்கும் ஞானத்துக்குமிடையில் ஏற்பட்ட பிளவினால் மனித இனத்துக்கு எவ்வளவு பாரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்த லாயினர்.

கடந்த நூற்றாண்டுகளில் ஆய்வாளர்கள் மீது கிறிஸ்தவத் திருச்சபை கட்டவிழ்த்த அக்கிரமங்களாலும், அறிவியல் மீது அது தொடுத்த போரினாலும், சிந்தனையை கொடூரமாகத் தடை செய்ததாலுமே அறிவியலும் மத நம்பிக்கையும் அல்லது அறிவும் பெறுமானங்களும் தனித்தனியாகப் பிரிந்தனவெனினும், இஸ்லாமிய சிந்தனை வரலாற்றின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் இப்பிரிவினை ஏற்கப்படாமலே இருந்து வந்திருக்கிறது.

ஆயினும், இஸ்லாமிய உலக நாடுகளின் கடிவாளத்தை அதிகாரப் பித்துக்கொண்டவர்களும் 'ஷூறா'வை எதிர்ப்பவர்

களுமே மாறி மாறிக் கைப்பற்றி வந்ததாலும், அவர்களுக்கும் அறிஞர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த பிரிவினையாலும், அரசியல்-அறிவியல் நிறுவனங்களின் செயல்வாதத்தை விட்டு அவர்கள் சிந்தனையைப் புறமொதுக்கி விட்டதனாலும் இஸ்லா மிய உலக நாடுகளில் அறிவியல் கலைகள் ஆரோக்கியமாக வளர்ச்சிடைய முடியாமல் போயின. அதனால் இஸ்லாமியக் கருத்தாடலின் மீது ஏற்பட்ட தெளிவின்மையும் ஒதுங்கு மியல்பும் இன்றுவரை நீங்கவில்லை.

மேற்கைப் பொறுத்தவரை, திருச்சபையும் அதன் பிரதானி களும் கட்டவிழ்த்த அத்துமீறல்களால் ஏற்பட்ட எதிர்வினைகள் மதத்தைத் தூக்கி வீசும் நிலைக்கு அதனைக் கொண்டுசென்றன. அன்றிலிருந்து அறிவு என்பதை அப்பழுக்கற்ற 'உண்மைகள்' எனவே மேற்குலகு பார்த்தது. டார்வினிஸம், மார்க்ஸியம் இருப் பியம் முதலிய அனைத்தையும் அது அப்படித்தான் நோக்கியது. விலங்குப் பரிணாமம், சடவாதத் தேட்டம், இயல்பூக்கம் என்ப வற்றின் நேர்கோட்டில் இறுதி நிலையாக மனிதனை நோக்கிய பின்புலத்தில்தான் சிந்தனை, கலாசாரம், கல்வி, நடத்தை, வரலாறு ஆகிய அனைத்தும் அங்கு கருத்தாடலுக்கு உட்பட்டன.

## மேற்கத்தியக் கருத்தாடலின் மேலாதிக்கம்

அறிவியலுக்கும் மத நம்பிக்கைக்கும் இடையில் நிகழ்ந்த பிரிவினையின் காரணமாக, மேற்குலக நாடுகளில் உருவாகிய சமூக-மானிடவியல் சார்ந்த அறிவியல்கலைகளும் நுண்கலை களும் இலக்கியமும் மனிதனையும் அவனது உளவியலையும் பற்றிய சடவாத நோக்கை அடிப்படையாகக் கொண்டே உருவாகின. வெறும் சடவாத அளவுகோல்களின் வழியாகவே அவை மனித இயல்பையும், அவனது நடவடிக்கைகளையும், அபிலாஷைகளையும் விசாரணைக்குட்படுத்தவும் மதிப்பீடு செய்யவும் முற்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்கூறுகளில் மேற்குலகு முழு உலகத்தினதும் கட்டுப்பாட்டைக் கையகப்படுத்திக்

கொண்டபோது நிலைமை இன்னும் அபாயகரமாகியது. தான் காலனியப்படுத்திய நாடுகளில் நிலைபெற்றிருந்த கலாசாரங்களை விளிம்பு நிலைக்குத் தள்ளிவிட்டு, அனைத் துச் சிந்தனைக்கும் கலாசாரத்துக்கும் கருத்தாடலுக்கும் அச்சாணியாகவும் அளவுகோலாகவும் தனது கலாசாரத்தை நிலைநிறுத்த அது முனைந்தது. அவ்வக்கலாச்சாரங்கள் தமது மாறா அடிப்படைகளிலிருந்து விலகி வலு விழந்திருந்ததனாலும், ஆதிக்கக் கலாச்சாரத்தின் மேலாதிக்கத்தினாலும் மேற்கத்தியக் கலாச்சாரத்தின் முன்னால் அவை சரிவடைந்து அழியத் தொடங்கின.

எனினும், இக்கலாசாரப் படையெடுப்புக்கு முஸ்லிம் உம்மா முழுமையாக அடிபணியவில்லை. அதிலிருந்த எதிர்ப்புக் குழுக்கள் அதன் கலாசார-நாகரிக வரலாற்றில் எஞ்சியிருந்தவற்றின் நிழலில் ஒதுங்கி நின்று காலனியக் கலாசாரத்தினுள் கரைந்து விடாமல் தற்காத்துக் கொள்ள முயன்றன. முழுமையாகக் கரைந்து விடாமல் அம்முயற்சி தடுத்தாலும், வினைத்திறன் மிக்க எதிர்ப்புக்கு அவசியமான தரத்தில் அது அமைந்திருக்கவில்லை. விளைவாக, உம்மாவினால் நாகரிக எழுச்சிக்கும் கட்டுமானத்துக்குமான செயல்வாதத்தை மேற்கொள்ள முடியாமல் போனது. பாரம் பரியமாகப் பாது காக்கப்பட்டு வந்த கலாசாரக் கூறுகள் பற்றிய மிக மேலோட்டமான புரிதல் ஒரு புறத்தில் இதற்குக் காரணமாக அமைந்ததெனலாம். வெளியிலிருந்து வந்த கலாசாரத்தை உரிய வகையில் கையாள முடியாமல் போனமை அல்லது அது சுமந்து வந்த சவாலை தடுத்து நிறுத்த முடியாமல் போனமை மற்றொரு காரணமாக அமைந்தது.

பார்க்க: பின்னிணைப்பு -உரு : 3-1

எவ்வாறாயினும், உம்மாவின் சில குழுமங்கள் மேற்கின் நாகரிகப் படையெடுப்புக்கு முன்னால் சரணடைவதையும்,

அதன் வெற்றியைக் கண்டு மயங்குவதையும், அக்கலாசாரத்தை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு அதன் சிந்தனா-நாகரிகக் கருத்தாடலின் பின்னால் இணங்கிச் செல்வதையும் எதனாலும் தடுக்க முடியவில்லை. அக்குழுமங்கள் மேற்குலகை அனைத்து விடயங்களிலும் பின்பற்றின. மேற்கின் முன்னால் பிரமிப்படைந்து அதன் ஊதுகுழலாக மாறுமளவுக்கு அவை சென்றன. உம்மாவின் பின்னடைவைச் சமாளித்து, மேற்கின் நாகரிகப் பயணத்துடன் அதனைப் பிணைத்து விடலாம் என்பதே அக்குழுமங்களின் எண்ணமாக இருந்தது. எனினும், இப் போக்கினால் விளைந்த அறுவடை மிகக் கசப்பானது. அடையா ளத்தை இழத்தல், பார்வைக்கோளாறு, இஸ்லாமிய ஆளுமைப் பிளவு முதலிய விளைவுகளையே அது தந்தது.

## நவீன இஸ்லாமிய சிந்தனையின் உரையாடலைப் புதுப்பிக்கும் தேவை

ஆக, முஸ்லிம் ஆளுமை இன்று தனது முறைமையையும் நிதானத் தையும் பெருமளவு இழந்து நிற்கிறது. அதன் நாகரிகப் பிரசன்னம் சுருங்கி நிற்பது இதற்குச் சான்றாகும். மனிதர்களுக்குச் சான்று பகர்ந்து தலைமை தாங்கும் அதன் தூது இடை நடுவில் நின்று விட்டது. இதனால் அது இன்று வரலாற்றுப் போக்கிற்கும், நிகழ் யதார்த்தத்திற்கும், நாடப்படும் எதிர் காலத்திற்கும் வெளியே நிற்கிறது.

இஸ்லாமியக் கருத்தாடலின் தாக்கம் விரிவுபடாமல் தடுத்து, அதன் யதார்த்தத் தன்மையை இல்லாதொழித்திருக்கும் இன் றைய நாகரிக நெருக்கடிக்கு பெறுமானங்களில் ஏற்பட்ட போதாமையல்ல காரணம். ஏனெனில், பெறுமானங்களை இறைவன் பூரணப்படுத்திவிட்டான். எல்லாக்காலங்களிலும் அவற்றைப் பாதுகாப்பதாகவும் அவன் உறுதியளித்திருக்கிறான். சிந்தனா உற்பத்திக்கு ஏதுவான வகையில் இஸ்லாமியப் பெறு மானங்களின் தொகுப்பைக் கையாளமுடியாத இயலாமையே

இந்நெருக்கடிக்குக் காரணமாகும். ஏனெனில், இத்தகைய சிந்தனா உற்பத்தியால்தான் பெறுமானங்களையும் அவற்றின் இலக்குகளையும் ஒன்றாகப் பிணைக்க முடியும். சரளமான, திறந்த உரையாடலொன்றின் மூலமாக அவற்றை மானிட யதார்த்தத்தின் மீது பிரயோகிக்கவும் அதனால்தான் முடியும். அத்தகைய சிந்தனா உற்பத்தியுடன் அல்-குர்ஆனிய நோக்கும் எப்போதும் இயைந்திருக்கும். புதிய ஆக்க சக்தியொன்று எப்போதும் அதிலிருக்கும். கால, இட வரையறைகளைத் தாண்டி மனித வாழ்வை வரையவும், மானிடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கட்டுச்சாதத்தை வழங்கவுமான ஆற்றலை அது கொண்டிருக்கும்.

மேற்கிலிருந்து படையெடுத்து வரும் சிந்தனையின் அத்துமீறலை சமகால இஸ்லாமிய சிந்தனை தொடர்ச்சியான நிலைபேறுடன் திடமாக எதிர்த்து நிற்க வேண்டுமாயின், அது 'சிந்தனாமுறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்துதல்' என்ற விவகாரத்தை தனது அடிப்படையான விவகாரமாக எடுத்துக் கொள்ளவேண்டும். சமகாலம் தழுவிய இஸ்லாமிய அசல் நிலையை சாத்தியப்படுத்துவதும், உம்மாவின் நாகரிகச் சாட்சியத்தை சாத்தியப்படுத்துவதும் அதன் நோக்கமாக இருக்க வேண்டும். இஸ்லாமிய அசலின் வழிகாட்டலைப் பெற்றுக் கொண்டு, நவீனத்துவத்தை உள்வாங்கிச் செரித்துக்கொண்டு அது பயணிக்க வேண்டும். பிறகு அந்த அனைத்தையும் ஒருமுகப் படுத்தப்பட்ட, பூரண, தளைகளற்ற நவீனத் திட்டமாக அது முன்வைக்க வேண்டும். நெருக்கடிகளற்ற ஆரோக்கியமான சிந்தனை, தவறோ திரிபோ அற்ற தெளிவான முறைமை, பீடைகளற்ற ஆக்கபூர்வமான கலாசாரம், நாகரிகம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு அத்திட்டம் அமைந்திருக்க வேண்டும்.

சிந்தனா முறைமைகளைச் சீர்திருத்துவதாயின், நாம் தாமதமற்ற சுய விசாரணைக்கு முன் வரவேண்டும்; கோளாறுகளையும் பாதிப்புகளையும் இனங்காண வேண்டும்; நெருக்கடியையும்

*அதனை உருவாக்கிய பொறிமுறைகளையும் கண்டறிய வேண்டும்; சமகாலத்துக்குப் பொருத்தமான சிந்தனா உற்பத்தியை நிகழ்த்துவதற்கு அவசியமான பெறுமானங்களை உய்த்தறிய வேண்டும். அத்தகைய சிந்தனா உற்பத்தியே 'நாகரிகச் சாட்சிய' நிலையை மீட்டெடுக்கவும், அதற்கு அவசியமான நீதியினதும் சத்தியத்தினதும் அளவு கோல்களை நிலைநிறுத்தவும் வலிமை பெற்றிருக்கும்.*

*நமது அரசியல் பங்களிப்பை மீள வழங்குவதற்கு அறிவை இஸ்லாமியப்படுத்துதல்அத்தியாவசியமானதாகும்.நாகரிகத்தைப் பிறப்பாக்கம் செய்யும் சிந்தனா - அறிவுக் கட்டுருவாக்கத்தை நோக்கி மனித சக்திகளை வெடித்து வெளிவரச் செய்யவும் இது அவசியமானது.அப்போதுதான் முஸ்லிம் சிந்தையை கலாசார ரீதியாகவும், சிந்தனாரீதியாகவும், நடத்தை ரீதியாகவும் மீட்டுருவாக்கம்செய்வது சாத்தியமாகும். அறிவின் செல்வழியைச் சீரமைத்து, சமநிலையான-முழுமொத்த இலக்குகளை நோக்கி அதனைச்செலுத்தவும் அறிவை இஸ்லாமியப் படுத்துதல் என்ற இப்பணி அவசியமாகும்.*

*ஆயினும், சீர்திருத்தத்தையும் சீராக்கத்தையும் வாழ்வின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தனித்து மேற்கொள்ள முடியாது. அத்துடன் தொடர்புபட்ட ஏனைய பகுதிகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அந்த வகையில்தான், எமது முயற்சிகளை மிக முக்கியமானதும் சிரமமானதுமான விவகாரமொன்றை நோக்கித் திருப்ப முடிவு செய்தோம்: முஸ்லிம் சிந்தையின் இயங்கு முறைகளைச் சீரமைத்து சிந்தனைப் பலத்தைக் கட்டியெழுப்புவதும், அல்-குர்ஆன் மற்றும் அஸ்-ஸுன்னாவின் ஒளியில் கலாசார மூலங்களை தூய்மைப் படுத்துவதுமே அவ்விவகாரமாகும். ஏனெனில், இஸ்லாமிய வாழ்வை மீளத்தொடங்கவும், மானிட நாகரிகத்தைக் கட்டியெழுப்பவும் ஆற்றல் கொண்ட நாகரிகக் குழந்தை கருவுற்று வளர உகந்த கர்ப்பப்பையை உருவாக்க இத்தகைய முன்னெடுப்பே உதவும் என நாம் நம்புகிறோம். ஆனால், நாம் செய்திருக்கும்*

இந்த முன்னரங்கும் தயாரிப்பும் சீர்திருத்த-நாகரிக எழுச்சி இயக்கங்களுக்கான பதிலீடல்ல. மாறாக, நம் அனைவரதும் செல்திசையைத் திருத்தவும், சிந்தனையைப் புதுப்பிக்கவும், நம்பிக்கைக் கோட்பாட்டை மேலுயர்த்தவும், சன்மார்க்கம் நோக்கிய நமது கடமையை மேற்கொள்ளவும் அவசியமான முன் நிபந்தனை இதுவாகும்.

பார்க்க: பின்னிணைப்பு -உரு: 3-2

# அத்தியாயம் நான்கு

## சிந்தனாமுறைமைகளைச் சீர்திருத்துதல் மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்துதல் என்ற திட்டத்தின் பிரதான அம்சங்கள்

### இஸ்லாமியத் திட்டத்தை வடிவமைத்தல்:

எழுச்சியை ஏற்படுத்துவதில் மேற்குமயமாக்கல் திட்டம் தோல்வியடைந்துவிட்டதென்பது தெளிவு. இயக்கம் சார்ந்த இஸ்லாமியத் திட்டமும் தனது இலக்குகளை அடைவதில் தடுமாற்றமடைந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆழ்ந்த மீள்வாசிப்பொன்றினூடாக 'கோளாறு' எங்கேயென்று கண்டறியும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டிய நிர்ப்பந்தம் மேலெழுகிறது. இப்பின்னணியில், உம்மாவின் முழு மொத்த இஸ்லாமிய நோக்கை ஆழ்ந்து நோக்கும்போது, கோளாறு காணப்படுவது அதனுள்ளேதான் என்பதும், சீர்திருத்தப் பணி அங்கிருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதும் நமக்கு முடிவாகக் கிடைக்கிறது.

இக்கண்ணோட்டத்தின்படி, நெருக்கடியைக் கையாளும் வகையிலான பரிபூரணமானதொரு இஸ்லாமியத் திட்டம் வார்க்கப்பட வேண்டிய அவசியம் உருவாகிறது. அத்திட்டம் சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தத்துக்கான சக்திகளைச் செறிவாக்க வேண்டும். 'அறிவை இஸ்லாமியப் படுத்துதல்' என்ற செயல்பாட்டை முனைப்பாக்குவதற்கான முயற்சிகளை அது திரட்சியடையச் செய்ய வேண்டும். அப்போதுதான் அத்திட்டம் வரலாற்றில் அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்த முயற்சிகளின் நீண்ட சங்கிலித் தொடரில் ஒரு

*வளையமாக தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியும். நெருக்கடியைப் பன்மடங்காக்கி விஸ்வரூபம் அடையச் செய்யப் பங்களித்த ஓட்டைகளை அடைப்பதே அதன் நோக்கமாக இருக்க வேண்டும். சிந்தனா நெருக்கடியே மிக முக்கியமானதும் பாரதூரமானதும் என்ற ஏற்பு நிலையை ஏற்படுத்தக் கூடியதாக அதன் உரையாடல் அமைந்திருப்பது அவசியம். இறைவிசுவாசிகளில் ஒரு குழுவினர் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்பதையும், அறிவாய்வு நிறுவனமொன்று அதற்காக ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ப தையும் அந்த உரையாடல் விளக்கமாக முன்வைக்க வேண்டும். ஏனெனில், இத்தகைய ஏற்பாடுகளே 'சிந்தனா முறைமைகளைச் சீர்திருத்துதல் மற்றும் அறிவை இஸ்லாமிய படுத்தல்' என்ற விவகாரம் முனைப்புடன் கவனிக்கப்படுவதையும், அதன் பல்வேறு பகுதிகள் தெளிவுபடுத்தப்படுவதையும், முழுக் கவனத்துடன் கண்காணிக்கப்படுவதையும், அதற்கான முழு முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதையும் சாத்தியப்படுத்தும்.*

*உம்மாவுக்கு வரைந்தளிக்கவென முழுமூச்சுடன் நாம் இறங்கியிருக்கும் இத்திட்டமானது எம்மீது பாரிய பொறுப் பொன்றைச் சுமத்துகிறது. உம்மாவின் இயக்கத்துக்கு அவசிய மான சிந்தனா மற்றும் முறைமையியல் அடிப்படைகளை வகுத்தளிப்பதே அந்தப் பொறுப்பாகும். அதாவது, மாற்றுச் சிந்தனா ஒழுங்கொன்றைக் கட்டியெழுப்புவதற்கு நாம் மிகுந்த பிரயாசையுடனும் தொடர்ச்சி யாகவும் உழைக்க வேண்டியுள்ளது.*

*அவ்வொழுங்கினூடாக முஸ்லிம் சிந்தையை மீட்டுருவாக்கம் செய்வதும், பிரபஞ்சம், வாழ்வு, மனிதன் என்பவை தொடர்பான இஸ்லாமியக் கோட்பாட்டுக்கு இசைவாக அதனைக் கட்டமைப்பதும் நமக்குச் சாத்தியமாக வேண்டும். ஏனெனில் இஸ்லாமியக் கோட்பாடு என்பது அல்லாஹ்வின் வேதத்திலிருந்தும், இறைத் தூதரது ஸுன்னாவிலிருந்தும், பிரபஞ்ச நியதிகளைக் கவனித்தும் பெறப்பட்ட திடமான ஏகத்துவக் கோட்பாடாகும். சத்தியத்தின் ஒருமைப்பாடு,*

*படைப்புகளின் ஒருமைப்பாடு, பிரபஞ்ச வசப்படுத்தல் விதிகள், பிரதிநிதித்துவ அதிகாரத்தைப் பெறுவதற்கான நிபந்தனைகள் முதலிய அனைத்தையும் புரிந்து கொண்ட கோட்பாடாகவும் அது உள்ளது. இத்தகைய கோட்பாட்டாக்கத் தின் மூலமாகத்தான் உம்மாவின் இயக்கத்திற்கு அவசியமான சிந்தனாரீதியான கட்டுச் சாதத்தை நம்மால் வழங்க முடியும்.*

*அதேவேளை, "வாசிப்பீராக!" என்ற வார்த்தை இறக்கப்பட் டது முதல், இன்று வரை இஸ்லாமிய சிந்தனை இயங்கிவந்த ஒழுங்கையும் நாம் மிக நுணுக்கமாகவும் பகுப்பாய்வு ரீதியாகவும் கவனிக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் அச்சிந்தனையையும், அதன் உட்கூறுகளையும், அதில் கலந்துரையாடப்பட்ட பல் வேறு காரணிகளையும் நாம் தெரிந்து கொள்ள முடியும்; அதன் நேர்நிலைப் பண்புகள், எதிர்மறைப் பண்புகள், அது கட்டமையும் வழிகள் என்பவற்றைத் தொகுத்தறிந்து திறனாயவும் முடியும். இத்தகைய அறிவும் திறனாய்வும் - ஒரு புறத்தில்- நமது இயக்கத்தினை அச்சிந்தனையுடன் தொடர்புபடுத்திக் கொள்ள ஏதுவாக அமையும். மறுபுறத்தில், கீழைத்தேய, பகுதியளவான, குழுவாத வாசிப்புகளின் தாக்கத்திலிருந்து உம்மாவை அப்பால் நகர்த்தவும் வாய்ப்பேற்படும். ஏனெனில், அவ்வாசிப்புகள் குறை பாடுடையவை; உள்நோக்கம் கொண்டவை; முன் கற்பிதங்களை வைத்துக்கொண்டு அவற்றைத் தேடியறிய, அல்லது முன் அனுமானங்களை வைத்துக் கொண்டு அவற்றுக்கு ஆதாரம் கண்டுபிடிக்க முயல்பவை. இக்காரணங்களால் அவ்வாசிப்புகள் தற்சார்பின்மையையும் (*objectivity*) அறிவாய்வுப் பண்பையும் இழந்துவிட்டது மட்டுமன்றி, அவற்றினால் கிடைக்க வேண்டிய ஏராளமான நன்மைகளையும் இழந்து விட்டன.*

*ஆக, முஸ்லிம் வெகுமக்கள் தமது நெருக்கடியிலிருந்து வெளி யேறுவதற்கு 'சிந்தனாமுறைமைகளைச் சீர்திருத்துதல் மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்துதல்' என்ற இவ்விஷேடமான இயக்கத்தின் கருத்தாடலையும் செயற்பாடுகளையும் பலப் படுத்த வேண்டும். ஏனெனில், இவ்வியக்கம் உம்மாவின் சிந்தனா*

நெருக்கடியை செயற்பாடுகளின் குவிமையமாகவும், இலக்குகளை நோக்கிய தொடங்கு தளமாகவும் எடுத்துக் கொண்டுள்ளது. உம்மாவின் இயக்கத்துக்குத் தேவையான சிந்தனா எரிபொருளை வழங்கி, இஸ்லாமியக் களத்திலும் சர்வதேசக் களத்திலும் சிந்தனா இயக்கமொன்றைக் கட்டி யெழுப்ப உழைக்கும் பணி அதனுடையது. எனவே, சிறந்த எதிர்காலத்தை ஆசித்து நிற்கும் முஸ்லிம்கள் என்ற வகையில், இக்கூட்டுப்பணியை நாம் புறமொதுக்கி விட முடியாது.

**முன்னைய முயற்சிகளின் தொடர்ச்சி**

'பெரும் தலைமைத்துவம்' என்ற விவகாரத்தை நமது வரலாற்று யதார்த்தத்தில் தோன்றிய சிந்தனா நெருக்கடியின் ஆரம்பப் புள்ளியாகக் கருத முடியும். அத்தகைய தலைமைத்துவத்தின் இயல்பையும் வகிபாத்திரத்தையும் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட குழப்ப நிலையே பின்னர் பகுத்தறிவுக்கும் வஹீக்கும் இடையிலான அனல் பறக்கும் தர்க்கமாக மாற்றப்பட்டது. சிந்தனைத் தலைமை, அரசியல் தலைமை ஆகிய இரு தரப்புகளுக்கிடையில் விரிசல் தோன்றுமளவுக்கு இந்நிலை சென்றடைந்தது. பிறகு பல்வேறு பிறழ்வுகளும் பிளவுகளும் தொடர்ச்சியாக இடம் பெறலாயின. மறு புறத்தில், புலனறியா உலகம், புலவய உலகம் ஆகிய இரு நிலைகளதும் வகிபாத்திரங்கள் குறித்து ஏற்பட்ட குழப்ப நிலையே மேற்குறித்த நெருக்கடியின் தொடங்கு புள்ளியாக அமைந்தது எனவும் நாம் கருத முடியும். ஏனெனில் இக்குழப்ப நிலையானது இறைவனின் முன் நிர்ணயத்தை (அல்-கத்ர்) இறை நம்பிக்கையின் அடிப்படைகளுள் ஒன்றாக ஏற்றுக்கொள்வதற்கும், மனித செயல், நாட்டம், பொறுப்பு என்பவற்றைப் புரிந்து கொள்வதற்குமிடையில் குழப்ப நிலை தோன்ற வழிவகுத் தது. அதன் விளைவாகக் கூட பல்வேறு பிறழ்வுகளும் பிரிவினைகளும் தோன்றின.

மொத்தத்தில், சிந்தனா நெருக்கடியின் தொடக்கப்புள்ளி இதுவாகவோ அதுவாகவோ இருந்தாலும், அதனாலேற்பட்ட

பிறழ்வுகளை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முயற்சிகள் பதிவு செய்யப்பட்டே வந்துள்ளன. அவை குறித்து உம்மாவில் நிகழ்ந்த எதிர்வினைகளும் யாவருக்கும் தெரிந்தவைதான்.

மட்டுமன்றி, ஸுன்னாவைத் திரட்டுதல், இட்டுக்கட்டலி லிருந்தும் கையாடலிலிருந்தும் அதனைப் பாதுகாப்பதற்கான நியமங்களை உருவாக்குதல், பகுத்தறிவுக்கும் வஹீக்கும் இடை யிலான இயங்கு பாத்திரங்களை வரையறை செய்தல், அவ் விரண்டினதும் முறைமையியல்சார் பாத்திரங்களைப் புரிந்து கொள்வதற்கும் வியாக்கியானம் வழங்குவதற்குமான விதிகளை வகுத்தல், இரண்டுக்குமிடையில் முரண்பாடு காணப்படுவதாக தோற்றுவிக்கப்பட்ட மாயையை ஒழிக்கும் வகையில் அல்-குர் ஆனிலும் ஹதீஸிலும் வெளிப்பார்வைக்கு முரண்பாடாகத் தோன்றும் வசனங்களை அறிவுபூர்வமாக அணுக உதவக்கூடிய 'உஸுலுல்ஃபிக்ஹ்' விதிகளை தொகுத் தெழுதுதல், மனிதனது நாட்டம், செயல், தெரிவுச் சுதந்திரம் என்பவை தொடர்பான கருத்தாடல்.. முதலிய அனைத்து அம்சங்கள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட பாரிய முயற்சிகளை இப்பின்னணியில் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அவ்வாறான சில முயற்சி களாவன:

★ இமாம் ஷாபிஈ, இமாம்அஹ்மத், அப்துர்ரஹ்மான் பின் மஹ்தீ முதலியோர் முறைமையியல் சார்ந்த பிரச்சினையை எதிர்கொண்டார்கள்.

★ இமாம்அஷ்அரீ இஸ்லாமிய சிந்தனையாளர்களது கூற்று களைத் திரட்டி, தொகுத்து, பகுப்பாய்வு செய்து, ஒவ்வொரு கூற்றினதும் மூலாதாரத்தைத் தேடிக் கண்டறிய முயன்றார். மட்டு மன்றி, உம்மாவினுள் காணப்பட்ட 'இல்முல்கலாம்' என்னும் தர்க்க இறையியல் சார்ந்த ஆற்றல்களை வெளிக்களத்துக்கு நகர்த்தி, அனைவரும் உடன்படத்தக்க அடிப்படையான நம்பிக்கைகளின் சுருக்கமொன்றை முன்வைக்க முயன்றார்.

★ 'இரு புனிதப் பள்ளிகளின் இமாம்' (இமாம்அல்ஹறமைன்) என அறியப்படும் ஜுவைனி அரசியல் தலைமைத்துவம் சார்ந்த பிரச்சினையை 'நெருக்கடி' என்ற கட்டத்திலிருந்து 'தீர்வு' என்ற நிலைக்கு முன்தள்ளும் முயற்சியில் ஈடுபட்டார்.

★ இமாம் கஸ்ஸாலி கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையில் ஏற்பட்ட விரிசலை 'இஹ்யாஉ உலூமித்தீன்' என்ற நூலிலும், கிரேக்கதத்துவச் சவாலை எதிர்கொண்டு இஸ்லாமியப் பதிலீட்டை முன்வைக்கும் முயற்சியை 'தஹாஃபுத் அல்-ஃபாலாசிபா' என்ற நூலிலும் முன்வைத்தார். மட்டுமன்றி, முஸ்லிம் சிந்தையின் நெருக்கடி சார்ந்த பல பிரச்சினைகளை அணுகி அவற்றுக்கான தீர்வுகளையும் அவர் முன்வைத்தார். முழுமையான இஸ்லாமிய அறிவுக் கோட்பாடொன்றை முன் வைக்கவும் முயன்றார்.

★ இப்னு ருஷ்த் ஷரீஆவுக்கும், அதற்குப் பின்புலமாயுள்ள ஞானத்துக்கும் இடையில் உருவாக்கப்பட்டிருந்த முரண்பாடு என்னும் மாயையைக் களைந்து, முரண்பாட்டு ஃபிக்ஹை- அதன் எதிர்மறையான அம்சங்கள் பற்றிய புரிதலையும் உடன் பாட்டையும் கட்டியெழுப்பக்கூடிய - புதியதொரு ஃபிக்ஹாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார்.

★ இப்னுஹஸ்ம் பல சிந்தனா முறைமையியல் விவகாரங்களைக் கையாள்வதில் முக்கியமான பங்களிப்பைச் செலுத்தினார்.

★ அபூஷாமா தனது 'அல்-ரத்து இலாஅல்-அம்ர்அல்-அவ்வல்' என்ற நூலில், முரண்பாடு தோன்றிய அனைத்து விவகாரங்களும் ஆரம்ப முஸ்லிம்களது முறைமைக்கு திரும்பிச் செல்வதன் மூலமே தீர்க்கப்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

★ இப்னுதைமியா சிந்தனா நெருக்கடியை எதிர்கொண்டு முறைமை வழிப்பட்ட, அறிவார்ந்த, கலாசாரப் பதிலீடொன்றை முன்வைக்க முயன்றார். சிந்தனை, முறைமை, தர்க்கம், நியாயவியல், அரசியல் முதலிய விவகாரங்களை அணுகி, பரந்ததொரு சிந்தனா - கலாசாரச் சீர்திருத்த இயக்கமொன்றை நிறுவினார். அவரது

*அறிவு மரபையும் அவரது மாணவர்களது அறிவு மரபையும் அவதானிப்பவர், மேற்குறித்த ஒவ்வொரு துறையிலும் அவர்களது தனித்துவமான அணுகுமுறைகளைக் கண்டுகொள்ள முடியும்.*

★ *இமாம் ஷாத்திபீ இஸ்லாமிய சிந்தனையின் சட்டமாக (*law*) திகழ்கின்ற 'உஸூல்அல்-ஃபிக்ஹ்' கலையைச் சீர்திருத்துவதை தனது முதன்மைப் பணியாகக் கொண்டார். ஆழமான தர்க்க இறையியல் சார்ந்த பிரச்சினைகளின் பிடிக்குள் அமிழ்ந்திப் போயிருந்த அக்கலையை விடுவித்து வெளியே கொண்டு வர அவர் பெருமளவு உழைத்தார். 'மகாஸித்அஷ்-ஷரீஆ' எனும் ஷரீஆவின் அதியுயர் இலக்குகளை அக்கலையினுள் மிகப் பரவலாகவும் பலமாகவும் வினைத்திறன் மிக்க வகையிலும் உள்நுழைத்து வளர்த்தெடுக்கவும், அதன் உயிரோட்டத்தை மீட்டெடுக்கவும் பாடுபட்டார். 'உஸூல்அல்-ஃபிக்ஹ்' கலை யைச் சீர்திருத்துவதனூ டாக சிந்தனைச் சீர் திருத்தத்தை ஏற்படுத்துவதே இமாம்ஷாத்திபீ யின் நோக்கமாக இருந்தது.*

★ *இஸ்லாமிய நாகரிகத்தின் பயணம் நின்றுவிட்டது மட்டு மன்றி, பின்னோக்கிச் செல்வதையும் அவதானித்த இப்னு ஃகல்தூன் சமூகவியல் கலைகளை இஸ்லாமியக் கண்ணோக்கின் வழியாக ஸ்தாபிக்க ஆரம்பித்தார். இஸ்லாமிய சமூகவியலுக்கு மிகத் தேவையாக இருந்த சிந்தனா உள்ளடக்கத்தையும், கலாசாரச் சட்டகத்தையும் வழங்க அவர் முயன்றார். இஸ்லாமியக் குடியியலானது ஓர் உறுதியான அறிவியல் அடிப்படையின் மீது தனது நாகரிகப் புரட்சியை மீள ஆரம்பிப்பதற்கு அச்சிந்தனா உள்ளடக்கமும், கலாசாரச் சட்டகமும் மிக அவசியமாக இருந்தன. இப்னு ஃகல்தூனின் அச்சிந்தனா - நாகரிக செயல்திட்டம் முழுமை பெற்றிருக்குமாயின், வரலாற்றின் போக்கே மாறியிருக்கும். ஆனால் அவரது முயற்சிகள் இஸ்லாமிய நாடுகளில் தொடரப்படா மல், முழு இஸ்லாமிய உலகும் ஒரு நீண்ட உறக்க நிலைக்குச் சென்று விட்டது. ஆனால் மேற்கத்தியர்கள் அவரது சிந்தனையை உள் வாங்கிக்கொண்டனர். அது அவர்களது எழுச்சியிலும் கணிசமான அளவு பங்களிப்புச் செய்தது.*

இதற்குச் சிறிது காலத்துக்குப் பின்னர் பல்வேறு இடங்களில் பல்வேறு தரப்புகளால் பல சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவையனைத்தும் உம்மாவில் சீர் திருத்தமும் புத்துயிர்ப்புச் செயற்பாடும் அவசியம் என்பதில் உடன்பாடான கருத்தையே கொண்டிருந்தன. ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவி, ஷெய்ஃக் முஹம்மத் பின் அப்துல்வஹ்ஹாப், இமாம் ஷவ்கானி, ஆலூஸி, தபதபாஈ, சனூஸி, மஹ்தீ ஆகியோரது முயற்சிகளையும், பின்னர் ஆப்கானீ மற்றும் அவரது சிந்தனைப் பள்ளி, கவாகிபீ, இப்னுஆஷூர், இப்னுபாதீஸ் முதலியோரின் முயற்சிகளையும் இவ்வகையில் எடுத்துக்காட்டுகளாக குறிப்பிட லாம்.

இவற்றைத் தொடர்ந்து எகிப்திலும் இந்திய உபகண்டத்திலும் வேறு இடங்களிலும் தோன்றி குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்த நவீன இஸ்லாமிய இயக்க முன்னோடிகளான இமாம் ஹஸன்அல்-பன்னா, அபூ அல்-அஃலா மவ்தூதி, செய்யித் குதுப், மாலிக் பின் நபி, தகிய்யுத்தீன் நப்ஹானீ முதலியோரையும் பிறரையும் குறிப்பிடலாம்.

ஆக, நாம் முன்வைக்கும் இப்பணி முற்றிலும் புதியதொரு விவகாரமல்ல. நமது உம்மாவின் வரலாற்றில் அதற்கு ஆழ்ந்த வேர்கள் உண்டு. சிந்தனா நெருக்கடியொன்று பற்றிய ஆரம்ப எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட காலம் தொட்டே இவ்விவகாரம் தொடங்கிவிட்டது. மட்டுமன்றி, இதுபோன்ற பணிகள் எத்தகைய முன் தொடர்புகளுமற்று முற்றிலும் நூதனமாக ஆரம்பிப்பது சாத்தியமானதன்று. ஏனெனில் - எல்லா மானிட விவகாரங்களையும் போன்று- சிந்தனை தொடர்பான விவகாரங்களும் குறித்த சிந்தனையின் தோற்றத்துடனே ஆரம்பித்து விடுகின்றன. ஒரு சிந்தனை சூன்யத்திலிருந்து பிறந்து சூன்யத்தை நோக்கிச் செல்வதில்லை. மாறாக, தொடக்கம், இலக்கு, பகுத்தறிவு, யதார்த்தம், மொழி, காலம், மனிதன், இயக்கம், வரலாறு, வாழ்வு முதலிய அனைத்துடனும் அது இடைவினை ஆற்றுகிறது.

சிந்தனை என்பது அடிப்படையில் ஒரு நாகரிகப் புத்துயிர்ப்பு விவகாரமாகும். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் உம்மாவுக்கு அதனை

வாக்களித்திருக்கிறார்கள். அது புத்துயிர்ப்பைத் தூண்டுகின்ற வாக்கேயன்றி, விதியை நொந்துகொண்டு இயங்காதிருக்கச் சொல்லும் வாக்கன்று. உமர் பின் அப்துல்அஸீஸ், ஷாஃபிஈ, கஸ்ஸாலி, அஷ்அரீ, இப்னுஹஸ்ம், இப்னுருஷ்த், அல்-இஸ் பின் அப்திஸ் ஸலாம், அபூஷாமா, இப்னுதைமியா, இப்னுல் கையிம், ஷாத்திபீ, முஹம்மத் பின் அப்துல்வஹ்ஹாப், ஷவ்கானி, திஹ்லவி, ஆப்கானி, நாஈனி, முஹம்மத்அப்துஹு, ரஷீத்ரிழா, இக்பால், பன்னா, செய்யித் குதுப், மவ்தூதி, நதவீ, இப்னுபாதிஸ், மாலிக் பின் நபி, ஷரீஅத்தி, முதஹ்ஹிரீ, அல்-ஸத்ர், நப்ஹானீ உட்பட அன்றும் இன்றும் இஸ்லாமிய சீர்திருத்தச் சிந்தனையின் அனைத்துத் தலைவர்களும் பேசிய விவகாரம் இதுதான். இந்த ஒவ்வொரு சீர்திருத்தவாதிகளும் அழைப்பாளர்களும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ, சிறியளவிலோ பெரியளவிலோ- உம்மாவின் பிரச்சினைகளைப் பற்றிய அவர்களது புரிதலுக்கும், அவர்கள் வாழ்ந்த சூழமைவு அழுத்தங்களுக்கும் அமைவாக சிந்தனா - கலாசார விவ காரத்தைக் கையாண்டிருக்கிறார்கள்.

இறுதியில், உம்மாவில் தோன்றிய எல்லா சீர்திருத்தச் சிந்தனைகளும் எழுச்சிக்கும் கட்டுருவாக்கத்துக்குமான இரு அடிப்படையான செயல்திட்டங்களில் வந்து முடிந்தன. அவற்றி லொன்று - ஏலவே நாம் குறிப்பிட்டது போல்-நவீன இஸ்லாமிய இயக்கத் திட்டமாகும். இத்திட்டம் ஏனைய அனைத்தையும் விட அதிகமாக இஸ்லாமிய அரசியல் எதிர் வினையைப் பிரதி பலிப்பதாக அமைந்திருந்தது. இரண்டாவது திட்டம், மதச்சார்பற்ற மேற்குமயமாக்கல் திட்டமாகும். மேற்குலகை எவ்விதக் கேள்வியுமின்றி அச்சொட்டாகப் பின்பற்று வதாக இத்திட்டம் அமைந்திருந்தது.

ஒரு சிந்தனை பிறக்கும் போது மிக ஆரோக்கியமானதாகப் பிறக்க முடியும். அல்லது அதன் தொடக்கமும் இலக்கும் ஆரோக்கியமாக அமைந்திருக்க முடியும். ஆயினும், அது பெறு நரைச் சென்றடையும்போது சூழமைவு யதார்த்தக் கூறொன்றின்

தவறுகளால் தாக்கமடைய முடியும். அறிவுத் தவறு ஏற்படுதல் என்பது பொதுவாக நமது மனிதப் பண்பின் வெளிப்பாடுகளுள் ஒன்றுதான். இத்தவறுக்கான காரணங்கள்கூட யாவரும் அறிந்தது தான். மனித சிந்தனையில் அவை ஏற்படுத்தும் இயல்பான, புலவயப்பட்ட, கலாசார, மானிட தாக்கங்களும் நிராகரிக்க முடியாதவை.

இதன் காரணமாகத்தான், மனித அறிவு சிந்தனைச் செயற் பாட்டில் தவறிழைத்துவிடாமல் பாதுகாக்கும் நோக்கில் ஆரம்பகால மெய்யியல் ஞானிகள் தர்க்கவியலை (logic) உருவாக்கினர். அவதானம் மற்றும் சிந்தனையின் படித்தரங்கள் ஆரோக்கியமாகவும் சீராகவும் அமைவதை உத்தரவாதப்படுத்து வதற்கான முறைமைகளையும் அவர்கள் கண்டுபிடித்தனர். இருந்தபோதிலும், மனிதத் தர்க்கம் தவறுகளிலிருந்தோ மானிட முறைமையியல் திரிபுகளிலிருந்தோ தப்பவில்லை. தர்க்கத்தையும் முறைமையையும் திருத்தியமைத்து, மனிதப் பகுத்தறிவை தவறிலிருந்து பாதுகாப்பதற்கு அல்லது தவறின் அளவைக் குறைப்பதற்கான முயற்சிகள் இன்றுவரை தொடர்கின்றன. எவ்வா றாயினும், மானிட அனுபவங்களும், அறிவும், இயலுமைகளும் சார்புத்தன்மை கொண்டவை; வரையறுக்கப்பட்டவை. எனவே, தொடர்ச்சியான புத்துயிர்ப்பு முயற்சிகள் தவிர்க்க முடியாதவை.

அல்குர்ஆனே இச்செயல் திட்டத்தின் அடிப்படையும் மூலா தாரமும்; ஸுன்னாவே அதன் வியாக்கியான வழிகாட்டி.

மனித சிந்தனையில் தோன்றும் தவறுகள், தர்க்கத்தின் பலவீனங் கள், மானிட முறைமைகளில் தோல்விகள் என்பவை குறித்து அல்-குர்ஆன் எச்சரித்திருக்கிறது. இவற்றுள் பல விடயங்கள் குறித்து ஸுன்னாவும் எச்சரித்திருக்கிறது. சிந்தனைச் சிக்கலின் கோரப்பிடியில் சிக்கி விடாமலும், அதனை நோக்கி இட்டுச் செல்லும் தவறுகளை இழைத்து விடாமலும் முஸ்லிம் உம்மாவைப் பாதுகாக்கும் வகையிலான முன் பாதுகாப்புத் திட்டங்களையும் ஏற்பாடுகளையும் இறைத்தூதர் (ஸல்) மேற் கொண்டிருந்தார்கள்

என்றுகூட நாம் கூற முடியும். உதாரணமாக, மனிதனது செயல்களுக்கு அவனே பொறுப்பாக இருத்தல், அவனது தெரிவுச் சுதந்திரம், செயல் சுதந்திரம் என்பவற்றை இறைவனின் 'கத்ர்'என்னும் முன் நிர்ணயத்துடன் தொடர்பு படுத்திப் புரிந்து கொள்வதில் சிலர் குழப்பிக்கொண்ட போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அதனைக் கடுமையாக ஆட்சேபித்ததுடன், குறித்த தர்க்கத்தைப் புரிந்து கொள்வதற்கு கையாளப்பட்ட தவறான முறைமை குறித்தும் எச்சரித்தார்கள். படைப்பாளனுக்கு மட்டுமே தெரிந்த மறைவான உலகம், நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள புலவயமான உலகம், மற்றும் பல்வேறு காலங்களில் அறிவியல் வசதிகளுக்கேற்ப வெளிவரும் மறைவான உண்மைகள் ஆகிய வேறுபட்ட விவகாரங்களை ஒன்றோடொன்று குழப்பிக் கொள்பவர்களை நபிகளார் ஆட்சேபித்திருக்கிறார்கள். ஏனெனில், அத்தகைய குழப்பமான அணுகுமுறையானது மறைவான உலகம் பற்றிய நம்பிக்கையின் வினைத் திறனையும் சாதகமான தாக்கத்தையும் இல்லாது செய்துவிடும். விளைவாக, மனிதன் பலமற்றவனாகவும், புலவய உலகுக்கும் புலவயப்படாத உலகுக்குமிடையில் குழம்பி நிற்பவனாகவும் தென்படத் தொடங்குவான். அவனது செயல்களை விமர்சனம் செய்யவும், மீள்வாசிப்புக்கு உட்படுத்தவும், நியாயப்படுத்தவும், மதிப்பீடு செய்யவும் வாய்ப்பான அதிகாரபூர்வச் சட்டகமொன்றை வரையறுத்துக்கொள்ளவும் வாய்ப்பற்றுப் போகும்.'கத்ர்' தொடர்பாகக் குறிப்பிடும் பல நபிமொழிகளில் இதனை நாம் தெளிவாகக் காணலாம். சில எடுத்துக் காட்டுகள் வருமாறு:

அபூஹுறைறா (றழி) அறிவிக்கிறார்: நாங்கள் 'கத்ர்'குறித்து தர்க்கித்துக்கொண்டிருந்த போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள். அப்போது அன்னாரது முகம் கோபத்தால் மாதுளங்கனி போன்று சிவந்து விட்டது. "இதுவா உங்களுக்கு ஏவப்பட்டது? அல்லது இதைக் கொண்டா உங்களுக்கு நான் தூதராக அனுப்பப்பட்டேன்?" எனக் கேட்ட அன்னார் தொடர்ந்து கூறினார்கள்: "உங்களுக்கு

முன்பு வாழ்ந்தவர்கள் இவ்விடயத்தில் தர்க்கித்து முரண்பட்டுக் கொண்டதனால்தான் அழிந்து போயினர். நீங்களும் அதில் முரண்பட்டுக் கொள்ளாதீர்கள்!" - (திர்மிதீ)

இறைவன் மீது பொறுப்புச்சாட்டுதல் (தவக்குல்) என்பதை விவகாரங்களின் காரண - காரியத்தொடர்பைக் கவனிக்காமல் செயற்படல் என்று சிலர் தவறாகப் புரிந்து கொண்டபோதும் இறைத்தூதர் (ஸல்) அவர்களது எதிர்வினை இதே போன்று தான் அமைந்திருந்தது. அப்புரிதலைத் திருத்தியமைத்த நபி களார், காரண-காரியத் தொடர்பை அனுசரித்துச் செயற் படுவதும் 'தவக்குல்' என்ற கருத்தாக்கத்தின் ஒரு பகுதிதான் என உணர்த்தினார்கள். அந்த வகையில்தான், காரண-காரிய அடிப்படையில் செயற்படுவதைப் புறக்கணித்த ஒரு மனிதருக்கு "உன் ஒட்டகத்தைக் கட்டி வைத்து விட்டு இறைவனிடம் பொறுப்புச் சாட்டு!" என உபதேசித்தார்கள். -(திர்மிதீ)

வணக்கம் என்பதை கடமையான மற்றும் உபரியான சில கிரியைகளோடு மாத்திரம் வரையறுத்துக் கொண்டு, உலக விவகாரங்களை விட்டுத் தூரமாகி வாழ சிலர் முயன்றபோது அத்தவறான புரிதலைத் திருத்தியமைத்த நபிகளார், இறை விசு வாசத்தின் பரிபூரண நாகரிக கருத்தாக்கத்தை மீளவும் இவ்வாறு நிலை நிறுத்தினார்கள்: "விசுவாசம் என்பது எழுபதுக்கும் அதிகமான அல்லது அறுபதுக்கும் அதிகமான கிளைகளைக் கொண்டதாகும். அவற்றில் மிக உயர்ந்த கிளை 'லாஇலாஹ இல்லல்லாஹு' (இறைவனைத் தவிர வேறு கடவுள் இல்லை) என்ற வார்த்தையாகும். மிகத் தாழ்ந்த கிளை பாதையிலிருக்கும் தீங்கை அகற்றுவதாகும். வெட்கமும் விசுவாசத்தின் ஒரு கிளையே". -(ஐந்து கிரந்தங்கள்)

வணக்கம் (இபாதா) என்ற கருத்தாக்கத்தை காய்தல்-உவத்த லிலிருந்து பாதுகாத்து அதன் பரிபூரண சட்டகத்தையும் அன்னார் இவ்வாறு வரைந்து காட்டினார்கள்: "அறிந்து

*கொள்ளுங்கள்: நிச்சயமாக நான் உங்கள் அனைவரையும் விட இறைவனுக்கு மிக அஞ்சுபவன். எனினும், நான் நோன்பு நோற்பது போலவே நோற்காமலும் இருக்கிறேன். இரவில் விழித்துத் தொழுவது போலவே உறங்கவும் செய்கிறேன். பெண்களைத் திருமணம் செய்தும் வாழ்கிறேன். எவர் எனது வழிமுறையைப் புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சார்ந்தவரில்லை". - (புஹாரி, முஸ்லிம், நஸாஈ)*

*கால-இட பரிமாணங்களின் முக்கியத்துவத்தை மனிதர்களுக் குத் தெளிவு படுத்தவும், இலக்குகளையும் நோக்கங்களையும் கவனத்தில் கொள்வது அவசியம் என்பதை வலியுறுத்தவும், சில சட்டங்களின் பொதுத்தன்மைக்கும் வேறு சில சட்டங்களின் குறிப்புத் தன்மைக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்கவும் அன்னார் சில விவகாரங்கள் குறித்துக் கவனயீர்ப்புச் செய்திருக் கிறார்கள்:*

*"அடக்கஸ்லங்களைத் தரிசிப்பதை உங்களுக்கு நான் தடுத் திருந்தேன் இப்போது முஹம்மதுக்கு அவரது தாயின் அடக்க ஸ்தலத்தைத் தரிசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நீங்களும் அவற்றைத் தரிசியுங்கள். ஏனெனில் அவை உங்களுக்கு மறுமையை நினைவு படுத்தும்". -(புஹாரி தவிர்ந்த ஐங்கிரந்தங்கள்)*

*அன்னை ஆயிஷாவை நோக்கி அன்னார் கூறினார்கள்: "உமது சமூகத்தினர் மிக அண்மையில் தான் அறியாமையிலிருந்து வெளி யேறினார்கள் என இல்லாதிருப்பின் நான் கஅபாவினுள்ளிருக்கும் செல்வங்களை இறைவனின் பாதையில் செலவு செய்து விட்டு, அதனை இடித்துக் கட்டி வடக்குப் புறச்சுவருடன் இணைத்து விட்டிருப்பேன்". - (முஸ்லிம்)*

*மூலாதாரத் சட்டகம் (*authoritative framework*) என்ற கருத் தாக்கத்தையும், அதனைக் கையாளும் முறைமையையும் உறுதிப் படுத்தும் நோக்கில் தான் உமர் (றழி) தவ்றாத்தை வாசிக்க முற்பட்டபோது நபிகளார் அதனை ஆட்சேபித்து இப்படிக் கூறினார்கள்: "இறைவனின் வேதத்தோடு நான் இருக்கும்போதே*

*இன்னொரு வேதமா? எனது சகோதரர் மூஸா உயிருடன் இருந்திருந்தால் அவரும் என்னைத்தான் பின்பற்றியிருப்பார்".*

*அதே போன்றுதான், அல்குர்ஆனை ஏட்டில் பதிவு செய்யுமாறு கட்டளையிட்டு, அதற்கென்று எழுத்தர்களையும் நியமித்து, ஒவ்வொரு வார்த்தையையும் அதற்குரிய இடத்தில் இடுமாறு அன்னார் ஏற்பாடு செய்த அதேவேளை, ஸுன்னாவை எழுதிப் பாதுகாக்கும் செயற்பாட்டை தடையும் செய்தார்கள். ஸுன்னாவின் எந்தப் பகுதியும் அல்-குர்ஆனுடன் கலந்து விடக் கூடாது என்பதும், மனிதர்கள் அல்-குர்ஆனையும் அதன் விளக்கங்களையும் விட்டு ஸுன்னாவில் ஈடுபாடு காட்டத் தொடங்கக்கூடாது என்பதுமே இங்கு நபிகளாரின் நோக்கமாக இருந்தது.*

*'ஆகுமானது' (முபாஹ்) என்பதன் வட்டத்தை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்த்தி, செயற்பாட்டுக்கும் முயற்சிக்குமான இயலுமையை மனிதனுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலேயே அன்னார் அதிகமாகக் கேள்வி கேட்பதைத் தடை செய்ததையும் தீவிரத் தன்மை குறித்து எச்சரித்ததையும் புரிந்துகொள்ள முடிகிறது. ஏனெனில் அத்தகைய வீணான கேள்விகளும் தீவிரத் தன்மையும் ஆதாரமற்ற கதையாடல்களும் முரண்பாடுகளுக்கே இட்டுச் செல்லும். மட்டுமன்றி, 'ஆகுமானது' என்ற வட்டத்தையும், அறிவார்ந்த முயற்சியின் வட்டத்தையும்கூட அவை ஒடுங்கச் செய்து விடும். இதனையே அன்னார் இப்படிக்கூறினார்கள்: "இஸ்ரவேலர்கள் அழிந்ததெல்லாம் அவர்களது அதிக மான கேள்விகளாலும் நபிமார்களுடன் கொண்ட முரண்பாடுகளாலும்தான்". (அஹ்மத்)*

*தாம் உயிருடன் இருக்கும் நிலையிலும் இஜ்திஹாத் செய்யுமாறு அன்னார் ஆற்றல் கொண்ட தோழர்களைத் தூண்டிப் பயிற்சியளித்ததையும், குழப்பங்கள் மற்றும் முரண்பாடுகள் தொடர்பான அன்னாரது ஹதீஸ்களையும், கடந்தகாலச் சமூகங்களது முடிவுகள் குறித்த அன்னாரது எச்சரிக்கையையும் இப்பின் புலத்திலேயே நாம் புரிந்து கொள்ள வேண்டும்.*

நபித்தோழர்களது புரிதலுக்கான சிந்தனைச் சட்டகத்தை ஆழமாக வடிவமைப்பதற்குப் பின்புலமாக ஸுன்னாவே தொழிற்பட்டிருக்கிறது. அந்தவகையில், உமர் (றழி) அவர்களது ஆட்சிக் காலத்தில் முன் நிர்ணயம் (கத்ர்) என்ற விவகாரம் மீண்டும் மீண்டும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட போது அவர் விரைந்து செயற்பட்டதுடன், முடிந்தளவு அதனைத் தெளிவுபடுத்தவும் முயன்றார். இவ்விவகாரத்தைப் புரிந்து கொள்வதில் தோழர்களுக்கு மத்தியில் ஏற்பட்ட பிறழ்வு குறித்து அவர் இப்படிக் கூறினார்: "(இப்னு அபீ அல்-அஸ்பஃ என்னும்) அவர் தனக்குத் தரப்பட்ட பொறுப்பைத் தொலைத்து விட்டார்; தனக்குத் தரப்படாத பொறுப்பொன்றை எடுத்துக்கொண்டார்". சிந்திப்புக்கான துறைகளை வரையறுத்துத் தெளிவுபடுத்தும் வகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

'ரித்தத்' என்னும் மத மாற்றம் தொடர்பாக நபித்தோழர்கள் கொண்டிருந்த நிலைப்பாடும், அபூபக்கர் சித்தீக் (றழி) அதனைக் கையாண்ட முறையும் மனித இயல்பையும் அதன் பல்வேறு பக்கங்களுக்கிடையிலான தொடர்புகளின் இயல்பையும் பற்றிய பிரக்ஞை பூர்வமான புரிதலை எடுத்துக் காட்டுகின்றன. ஏனெனில், இத்தொடர்புச் சங்கிலியின் ஏதோவொரு வளையத்தில் ஏற்படும் புரிதல் கோளாறு ஏனைய அனைத்தையும் பாரிய அச்சுறுத்தலுக்கு உட்படுத்தி விட முடியும். புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களிடம் நபித்துவம் மற்றும் ஃகிலாஃபா ஆகிய இரண்டினதும் வகிபாத்திரங்கள் பற்றி ஏற்பட்டிருந்த புரிதல் குறைபாடும், உடல் ரீதியான கடமைகளையும் செல்வம் தொடர்பான கடமைகளையும் அவர்கள் வேறுபடுத்தி நோக்கியமையும்பரந்தமுஸ்லிம்சமூகத்தின்நிலைப்பாட்டிலிருந்து அவர்கள் விலகி நிற்கக் காரணமாய் அமைந்தன. மட்டுமன்றி, உம்மாவிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட 'நாகரிகச் சாட்சியம்' என்ற வகிபாத்திரத்தை அழித்துவிடும் வகையிலும் அது அமைந்தது. அந்த வகையில்தான், அதனை பிரக்ஞை பூர்வமாக மறுதலிப்பதாக அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்களது

நிலைப்பாடு இருந்தது. சன்மார்க்கத்திலிருந்து பின் வாங்கியோர் தமது நிலைப்பாடுகளை நியாயப்படுத்த முன்வைத்த பலவீனமான காரணங்களை அவர் பொருட் படுத்தாததும் இதனால்தான்.

ஒரு முஸ்லிமின் அதிகாரபூர்வச் சட்டகம் (Authoritative framework) எதுவென்பதைப் புரிந்து கொள்வதில் நபித் தோழர்கள் கொண்டிருந்த அற்புதமான கருத்தியல் நிலைப் பாடும் இத்தகையது தான். ஏனெனில், மகத்துவம் மிக்க அல்-குர்ஆன் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. அது இறைத் தூதர்(ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்டது போலவே எவ்விதக் கூட்டல்-குறைத்தலுமின்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையில் தான், அவர்கள் அதனைப் பாதுகாக்கவும், ஒன்று திரட்டிப்பதிவுசெய்யவும்விரைந்துசெயற்பட்டனர்.அதேவேளை, அல்குர்ஆனுக்கும் இஸ்லாத்தின் போதனை களுக்கும் விளக்கமாக அமைந்த ஸுன்னாவைப் பொறுத்த வரை, அது பதிவு செய்யப்பட வேண்டுமென அவர்கள் தூண்டுதலளிக்கவில்லை. ஆரம்பத்தில் அது சொல்லுக்குச் சொல் அறிவிப்புச் செய்யப்பட்டாலும், பின்னர் கருத்தாகவும் ஒவ்வொருவரது புரிதலுக்கேற்பவும் நகர்த்தப்பட்டது. நபிகளாரது ஹதீஸ்களை ஏற்பதிலும் அறிவிப்புச் செய்வதிலும் நபித்தோழர்கள் இறுக்கமான நடைமுறைகளைப் பேணினர். அவை பற்றிய மிக ஈடுபாடு அல்-குர்ஆனை விட்டு மக்களைத் திசைதிருப்பி விடக்கூடாது என அவர்கள் எச்சரித்தார்கள். அவ்வாறு நிகழ்ந்து விட்டால், அல்-குர்ஆன் வசனங்களை உற்று நோக்கிப் புரிந்து கொள்வதற்கான மக்களது ஏற்புநிலை பலவீனமடைந்துவிடும் எனவும், ஹதீஸ் அறிவிப்புகளில் மாத்திரம் தங்கி நின்று அல்-குர்ஆனைவிட்டுத் தூரமாகும் நிலை தோன்றிவிடுமெனவும் அவர்கள் அஞ்சினர். ஆக, இவ்விவகாரத்தையும் முறைமையையும் அவர்கள் தெளிவாகவே புரிந்திருந்தனர். ஆனால் தொடர்ந்து வந்த காலங்களில் முஸ் லிம்கள் இம்முறைமையிலிருந்து விலகிய போது, முதலில் அல்-குர்ஆனைக் கைவிட்டு ஹதீஸ்களில் கவனம் செலுத்த லாயினர். பின்னர் இரண்டையும் விட்டு 'ஃபிக்ஹு' என்னும் சட்ட

நியாயவியலுடன் போதுமாக்கிக் கொண்டனர். அதற்குப் பிறகு முன்னோர்களது 'ஃபிக்ஹு' விளக்கவுரைகளோடும், அடுத்து நூலாசிரியர்களதுவிளக்கவுரைகளோடும்அடிக்குறிப்புகளோடும் போதுமாக்கிக் கொண்டனர்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிய முன்பாகவே தமது தூதை முழுமைப் படுத்தியிருந்தார்கள்; பொறுப்பை நிறைவேற்றியிருந்தார்கள்; சன்மார்க்கத்தை பூர ணப்படுத்தியிருந்தார்கள். அவர்களால் முஸ்லிம் சிந்தைக்கு நேரிய பாதையொன்று வழங்கப்பட்டிருந்தது. விசுவாசிகள் செல்ல வேண்டிய தெளிவான வழியும் ஆரோக்கியமான முறைமையும் சாத்தியமாகி விட்டிருந்தன. மனிதன் அவனது பூரணமான பொறுப்புகளுக்கும் தகுதிக்கும் முழுச் சுதந்திரத்துக் கும் முன்னால் நிறுத்தப்பட்டிருந்தான்:

*"எவர் நேர்வழியில் செல்கிறாரோ அவர் தனது நன்மைக் காகவே நேர்வழியில் செல்கிறார். எவர் வழிகேட்டில் செல்கிறாரோ அவர் தனக்குத் தீங்கான வகையிலேயே வழி கெட்டுச் செல்கிறார். எந்த ஆத்மாவும் மற்றோர் ஆத்மாவின் பாவத்தைச் சுமக்காது. நாம் எச்சரிக்கும் தூதரொருவரை அனுப்பாமல் எந்தச் சமூகத்தையும் தண்டித்ததில்லை". - (அல்-இஸ்ரா: 15)*

*"நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கே நன்மை செய்கிறீர்கள். நீங்கள் தீமை செய்தாலும் அதுவும் உங்களுக்குத்தான்". - (அல்-இஸ்ரா: 15)*

அவ்வாறே, புத்துயிர்ப்புக்கும் புனர் நிர்மாணத்துக்குமான அடிப்படைகளையும் நபிகளார் இட்டு முடித்திருந்தார்கள். அன்னாரது மரணத்திற்குப் பிறகு இறைவிசுவாசிகள் தங்களது வாழ்வில் பயன்பெறவும், அறிவார்ந்த நன்மக்கள் உம்மாவின் தேவைகளை நிறைவேற்றவும் உதவுகின்ற அடிப்படைகளாக அவை அமைந்திருந்தன. காலவோட்டத்தில் உள்ளங்கள் கடினமாகி, புரிதலில் குறைபாடு தோன்றி, சிந்தனை தடுமாறி, இஸ்லாத்தின் கட்டுறுதி தளர்ந்து விடக்கூடாது என்பதற்காகவே

அவ்வடிப்படைகள் இட்டுத் தரப்பட்டன. உம்மா தனது இடை யறாத நாகரிகப் பிரசன்னத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், சன்மார்க்க வாழ்விலும் சமுதாய வாழ்விலும் நடுநிலையைப் பேணவும் அவை அவசியமாக இருந்தன. மட்டுமன்றி, எல் லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் தோன்றக்கூடிய உம்மா வின் தேவைகளை நிறைவேற்றச் சக்தி கொண்டதாகவும், பரிபூரணமானதாகவும், பொதுவானதாகவும், அனைத்து மார்க் கங்களையும் மிகைத்ததாகவும் அதன் சட்ட வழிகாட்டல் திகழ வும் அவ்வடிப் படைகள் அவசியமாக இருந்தன.

இமாமத், ஜிஹாத், இஜ்திஹாத், உம்மாவின் ஒருமைப்பாடு, நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதற்கான விதிகள், வர்த்தக நடவடிக்கைகளையும் அறக்கட்டளைகளையும் அவை போன்ற வற்றையும் ஆள்வதற்கான சட்டங்கள் முதலிய அனைத்தும் இப் பின்புலத்திலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், இவ்வனைத்து அடிப்படைகளிலும் விதிகளிலும் புனர் நிர்மாணம் (தஜ்தீத்) என்ற நோக்கம் அடங்கியிருப்பது தெளிவானது. பகுத்தறிவில் தோன்றக்கூடிய நெருக்கடிகளையும், சிந்தனைத் தேக்கத்தையும் முன்கூட்டியே கையாளும் தன்மையும் அவற்றில் வெளிப்படையாகத் தெரிகிறது.

அந்த வகையில், சிந்தனா நெருக்கடியைத் தீர்ப்பதற்கான அழைப்பை நவீன கால அழைப்பாக மட்டுமே கருதுவது, அல் லது அப்படியொரு நெருக்கடியே இல்லை என மறுப்பது, அல்லது அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவது முதலிய அனைத்தும் சாட்சாத் நெருக்கடியின் வெளிப்பாடுகளும் சான்றுகளாகவுமேயன்றி வேறில்லை.

## இயக்க சிந்தனையின் புத்துயிர்ப்புக்கும், சிந்தனா இயக்கத்தின் ஊக்கத்துக்குமான திட்டம்.

'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' என்ற நமது முன்னைய நூலின் உட்கருவாக அதன் அடிப்படைக் கொள்கைகளையும் செயல் திட்டத்தையும் விளக்குதல் அமைந்திருந்தது. அந்

நூலில் குறிப்பிடப்பட்ட அடிப்படைக் கொள்கைகள் திட மாகவும் தெளிவாகவும் அமைந்திருந்த போதிலும், அங்கு முன் வைக்கப்பட்ட செயல் திட்டம் தற்காலிகமானதாகவும் பல்வேறு பொருள்கோடலுக்கு உட்படுவதாகவும் இருந்ததெனலாம். அச் செயல்திட்டம் 1984ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படத் தொடங்கியிருந்த போதும் ஆரம்பத்தில் அது சித்தாந்தத் திட்டமிடலாகவே அமைந்திருந்தது. அன்றுமுதல் பல்வேறு துறைகளில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந் துள்ளன. இஸ்லாமியக் கருத்தாடலை உயர்ந்த தரத்திலும், அறிவார்ந்ததாகவும், தெளிவான முறைமை கொண்டதாகவும், சரளமானதாகவும் வார்த்தெடுப்பதே அம்முயற்சிகளின் நோக் கமாக இருந்தது. முஸ்லிம் தனிமனிதனுக்கு அவனது சிந்தனா நெருக்கடி பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்தவும், அதி லிருந்து வெளியேறும் மார்க்கங்களைக் காட்டித்தரவும் ஆற்றல் கொண்ட தாக அந்த இஸ்லாமியக் கருத்தாடல் அமைய வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அல்-குர்ஆன் வசனங்களை அட்ட வணைப்படுத்தும் முயற்சிகள், ஸுன்னா தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள், இஸ்லாமிய அறிவுமுதுசங்களை இலகுபடுத்துதல் தொடர்பான முயற்சிகள், மேற்கத்திய சிந் தனை தொடர்பான முயற்சிகள் என்பவற்றை அத்தகைய முனைப் புகளுக்கு எடுத்துக்காட் டாகக் கூறலாம்.

அம்முயற்சிகளின் பருமன் எப்படிப்பட்டதாயினும், அவை ஆய்வுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான், குறித்த செயல்திட்டம் பாதுகாப்பானதா என்பதையும், அடிப்படையான இலக்குகளுக்கு விசுவாசமானதா என்பதையும், முழுமையானதா என்பதையும் நிச்சயப்படுத்த முடியும். கருத்தரங்குகள், ஆய்வுரைகள், கலந்துரையாடல்கள், வெளியீடுகள், தனியான மற்றும் கூட்டு ஆய்வுகள் என அனேகமான வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையும் ஆய்வுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தப்பட்டு பெறுபேறுகள் கண்டறியப்பட வேண்டிய தேவை உள்ளது.

*சிந்தனா நெருக்கடியைக் கையாளும் பணியை மேற்கொள்ள 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்' முன்வந்த போது, தனது நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைப்பதிலும் செயல்படுத்துவதிலும் இஸ்லாமிய சமூகங்களுடன் இடை வினையாற்றாமல் தனித்து நின்றோ தன்னை மட்டும் மைய நிலையில் நிறுத்தியோ செயற்பட முடியாது என்ற பிரக் ஞையுடன்தான் அதற்குத் துணிந்தது. அதனால்தான் பல இஸ்லாமிய நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் தனது அலுவலகங்களையும் கிளைகளையும் திறந்து, முஸ்லிம் உம்மா அனுபவித்துக் கொண்டிருக்கும் நெருக்கடிக்கு முகம் கொடுக்கவும் அதற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய் யவும் தீர்வு காணவும் பிரம்மாண்டமான முயற்சிகளை அது மேற்கொண்டது. ஒரு புறத்தில், இவ்வலுவலகங்களும் கிளைகளும் விடயங்களை உற்றறியும் புலன்களாகவும் சாதனங்களாகவும் தொழிற்படும் அதேவேளை, மறு புறத்தில் நிறுவனத்தின் தூதைப் பரப்புவதற்கான தளமாகவும் அதன் நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்த வழியமைக்கும் கருவியாகவும் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அவற்றுள் சில அலுவலகங்களும் கிளைகளும் சிறந்த பெறுபேறுகளைத் தந்தாலும், வேறு சில எதிர்பார்க்கப்பட்ட விளைவைத் தரவில்லை. அவற்றின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்து, மிகச்சிறந்த ஆற்றுகைக்கான நுணுக்கமான திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும். அதுவே நெருக்கடியின் கோர நகங்களிலிருந்து உம்மாவை வெளியேற்றுவதை நோக்கிய ஆரோக்கியமான பயணத்தை உத்தரவாதப்படுத்தும்.*

*பார்க்க: பின்னிணைப்பு உரு - 4.1*

*ஆக, செயல்திட்டத்துக்கான சிந்தனா-அறிவு உள்ளடக்க மொன்றும், அதனைச் சாதிப்பதற்கான வரையறுக்கப்பட்ட சாதனங்களும் நம்மிடமுள்ளன. இவையிரண்டும் - பல வருடங்கள்*

கழிந்திருக்கும் இந்நிலையில் - மதிப்பீட்டுக்கும் மீளாய்வுக்கும் திருத்தத்துக்கும் புதுப்பித்தலுக்கும் உட்படுத் தப்பட வேண்டும்.

மறைந்த பேராசிரியர் இஸ்மாஈல் அல்-ஃபாறூக்கீ, பேரா சிரியர் அப்துல்ஹமீத் அஹ்மத் அபூசுலைமான் மற்றும் ஏனைய சகோதரர்களுடன் இணைந்து இத்திட்ட வரைவையும், அதன் நடைமுறையையும் கவனிப்பதில் பங்கேற்றிருந்தேன் என்ற வகையில், இத்திட்டத்தின் கொள்கைகள், இலக்குகள், சாதனங்கள், நிபந்தனைகள், படிமுறைகள் என்பவற்றைப் பின் வருமாறு சுருக்கித் தருகிறேன்:

## (அ)பொதுக் கொள்கைகள் (General Principles)

நமது திட்டத்துக்கான பொதுவான கொள்கைகளை 'அறிவை இஸ்லாமியப் படுத்துதல்' தொடரின் முதல் ஆக்கமாகிய "அறிவை இஸ்லாமியப் படுத்தல்: பொதுக் கொள்கைகள், செயல் திட்டம், சாதனைகள்" என்ற நூலில் ஏலவே வரைந் தளித்துள்ளோம். சிந்தனாமுறைமைகளைச் சீர்திருத்தவும், அறி வை இஸ்லாமியப்படுத்தவும் விரும்புகின்ற அனைவருக்கும் பெறுமதியான உசாத்துணையாக அந்நூல் அமைந்திருக்கிறது. எவ்வாறாயினும், அப்பொதுக் கொள்கைகளை இங்கு குறிப்பிடு வது தவறில்லை என நம்புகிறோம். அவை பற்றிய மேலதிக விளக்கங்களைப் பெற விரும்புவோர் மேற்குறித்த நூலை வாசிக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம். அக்கொள்கைகளாவன:

1. 'இறைவன் ஒருவனே' என்ற ஏகத்துவப் பிரகடனம்: இறைவன் ஒருவனே என்பது இஸ்லாத்தின் முதன்மைக் கொள்கையாகவும் அதனை ஆளும் மிக முக்கியமான நியமங்களுள் ஒன்றாகவும் உள்ளது.

2. படைப்பின் ஒருமைப்பாடு: இறைவன் ஏகனாக இருப்பதன் தர்க்க நியாயமே அவனது படைப்பிலும் ஒருமைப்பாடு காணப் படுவதாகும்.

3. உண்மையின் ஒருமைப்பாடு: 'வஹீ'யின் உண்மைகளுக்கும், பிரபஞ்ச உண்மைகளுக்குமிடையில் எவ்வித முரண்பாடோ ஏற்றத்தாழ்வோ இல்லை.

4. வாழ்வின் ஒருமைப்பாடு: இது பூமியில் மனிதனது பிரதி நிதித்துவம், அவன் மீது சுமத்தப்பட்ட பொறுப்பு, அவன் சோதிக் கப்படல் என்பவற்றின் மீது அமைக்கப்பட்டதாகும்.

5. மனித இனத்தின் ஒருமைப்பாடு: மனிதர்கள் அனைவரும் ஒரே படைப்பே. இறை பிரக்ஞை கொண்டன்றி வேறெதன் மூலமும் ஒருவரை விட மற்றொருவர் உயர்ந்தவரல்லர்.

6.'வஹீ'யும் பகுத்தறிவும் ஒன்றையொன்று பூரணப்படுத்துபவை: எழுதப்பட்ட வேதத்தின் உண்மைகளுக்கும், பரந்த பிரபஞ்சத்தின் உண்மைகளுக்குமிடையில் எந்த முரண்பாடு மில்லை.

7. வழிமுறையிலும் சாதனங்களிலும் காணப்படும் முழுமைத் தன்மை: இஸ்லாம் என்பது வாழ்வின் அனைத்துத் துறைகளையும் உட்பொதிந்த மார்க்கமாகும்.

பார்க்க: பின்னிணைப்பு - உரு 4-2

பொதுக் கொள்கைகள் என்ற சட்டகத்தினுள் 'ஆளுகைப் பெறுமானங்கள்'(governing values) குறித்து வலியுறுத்துவது அவசியமாகும். ஏக இறைக் கொள்கையின் பல்வேறு வகை களையே இப்பெறுமானங்கள் குறிக்கின்றன. இறைவனது தெய்வீகத் தன்மையின் ஏகத்துவம், தெய்வீகப்பண்புகளின் ஏகத்துவம், பிரபஞ்சத்தின் வளமான தன்மை, மனிதன் பூமியில் இறைவனது பிரதிநிதி என்ற வகையில் அவனது புனிதத் தன்மை முதலிய அனைத்தும் இப்பெறுமானங்களுள் அடங்கும். இப்பெறுமானங்களை வைத்தே அனைத்தும் உசாவப்படவும் அளக்கப்படவும் வேண்டும். ஏனெனில், ஷரீஆவின் இவ்வுயர் இலக்குகள் கவனத்தில் கொள்ளப்படாமல், 'மறைவான உண்மை

கள் இயற்கை-மனிதன்‘ ஆகிய கூறுகளுக்கிடையிலான சித்தாந்தத் தொடர்பைப் புரிந்து கொள்வது கடினமாகும். மட்டுமன்றி, இந்தத் தொடர்பு பற்றிப்புரிந்து கொள்ளாமலோ, அதன் வழியாக புலவயப்பட்ட உலகுக்கும் புலவயப்படாத உலகுக்கும், எல் லையற்றதற்கும் சார்பியம் கொண்டதற்கும் இடையிலான தொடர்பை அறியும் முறைமையைக் கண்டடையாமலோ ஆரோக்கியமான அறிவொழுங்கொன்றைக் கட்டியெழுப்ப முடியாது.

### (ஆ) இலக்கு (The Goal).

அறிவொளி மிக்க முஸ்லிம் சிந்தையொன்றைக் கட்டியெழுப் புவதே அடிப்படையான இலக்காகும். அறிவாய்வு முயற்சி, புனர்நிர்மாணம், மானிடவளப்படுத்தல் என்பவற்றில் பங்களிப்பு வழங்கச் சக்தி படைத்ததாக முஸ்லிம் சிந்தை உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலமாகவே முஸ்லிம் மனிதன் பூமியில் இறைவனின் பிரதிநிதியாக நிற்கவும், இயற்கைப்படைப்புகளை வசப்படுத்தி ஆளவும், இறைவனால் கொடுக்கப்பட்ட பொறுப் பை நிறைவேற்றவும் சாத்தியமேற்படும். ஏலவே அறிவை ‘இஸ்லாமியப் படுத்தல்’ நூலில் நாம் முன்வைத்த ஏனைய அனைத்து இலக்குகளும் இப்பிரதான இலக்கிலிருந்தே கிளை பிரிகின்றன.

**இவ்விலக்கு பின்வரும் இரு வழிகளில் எட்டப்பட முடியும்:**

ஒன்று: அல்-குர்ஆனையும் அதன் அறிவு முறைமையையும் அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களது சிந்தனா ஒழுங்கை மீட்டுருவாக்கம் செய்தல். அல்-குர்ஆனின் பெறுமானங்களை ஒரு குறிப்பிட்ட சூழமைவின் மீது ஏற்றிக் காணும் முறையை ஸுன்னா சுமந்திருக்கிறது என்ற வகையில் அதுவும் இங்கு அடிப்படையாக கொள்ளப்படும். வஹீயுடன் இணைந்த வகையில் பிரபஞ்சமும் அறிவுக்கான மூலதாரமாக உள்ளது என்ற வகையில் அதுவும் மற்றோர் அடிப்படை யாகக் கொள்ளப்படும்.

இரண்டு: முதலாவதில் குறிப்பிடப்பட்டவற்றை அடிப்படை யாகக் கொண்டு பரிபூரண இஸ்லாமிய அறிவு மாதிரி யொன்றைக் கட்டியெழுப்புதல்.

இவ்விருவழிகளும் ஐந்து அடிப்படையான மையப்புள்ளிகளில் செயற்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன. அந்த ஒவ்வொரு மையப்புள்ளியிலிருந்தும் வேறு அம்சங்களும் கிளை பிரிய முடியும்.

**மையப் புள்ளி ஒன்று: சிந்தனை**

அல்-குர்ஆனில்‘ சிந்தனை’ (ஃபிக்ர்) என்ற வார்த்தை பெயர்ச் சொல்லாக இடம்பெறவில்லை. ஆனால் இருபது இடங்களில் அது இறந்த கால வினையமைப்பிலும் நிகழ்கால வினையமைப்பிலும் இடம் பெற்றுள்ளது. முன்னிலை வினையமைப்பிலும் படர்க்கை வினையமைப்பிலும்கூட அது இடம் பெற்றுள்ளது.

“நிச்சயமாக அவன் சிந்தித்துத் திட்டமிட்டான்”.

“சிலவேளை அவர்கள் சிந்திக்கக் கூடும்”,

“நீங்கள் சிந்திக்க வேண்டாமா!”

முதலிய வசனங்களை இங்கு எடுத்துக்காட்டாகக் கூறமுடியும். வினை என்பது அறபு மொழியில் ஒரு காரியத்தையும் கருத்தா வையும் காட்டுவதாகும். அதாவது ‘அடித்தான்‘ எனப் பொருள் தரும் ‘ளறப’ என்ற வினைச்சொல் ‘அடித்தல்’ என்ற நிகழ்வைக் காட்டும் அதேவேளை, அடிக்கும் செயலை மேற்கொண்ட மனிதனின் இருப்பையும் காட்டும். அதே போன்றுதான், ‘சிந்தித்தான்‘ அல்லது ‘சிந்திக்கிறான்‘ என்று நாம் கூறும் போது அவ்வார்த்தை ‘சிந்தித்தல்’ என்ற செயலையும் அதனை மேற்கொள்கின்ற நபரையும் காண்பிக்கிறது. அந்த நபரையே நாம் ‘சிந்திப்பவர்’ அல்லது ‘சிந்தனை செய்பவர்’ அல்லது ‘சிந்தனையாளர்’ என்கிறோம். இவ்வகையில், அல்-குர்ஆனில் இவ்வார்த்தை பயன்படுத்தப்படும் போது, சிந்தனை என்ற செயற்பாடு ஒரு குறிப்பிட்ட கருத்தாவுடன்

தொடர்புபட்டிருப்பது உணர்த்தப்படுகிறது. ஏனெனில் சிந்தனை என்பது சிந்திப்பவரிலிருந்து தனித்து நிற்க முடியாது. ஒரு சிந்தனை காணப்படும் போது அங்கு சிந்திப்பவரும் காணப்படுவார். அவ்வாறே, சிந்தனை என்பது பயனமற்ற ஒன்றாகவோ, செயலோ இயக்கமோ அற்றதாகவோ உலகில் இருக்க முடியாது.

சிந்தனை என்பது மனிதனின் தனிப்பண்புகளுள் ஒன்று. அந்தப் பண்பு வேறெந்தப் படைப்புக்கும் கிடையாது. மனிதன் மேற்கொள்ளும் சிந்தை சார்ந்த செயற்பாடுகளின் விளைவாகவே சிந்தனை பிறக்கிறது. மனிதனின் சிந்தனைச் செயற்பாட்டை ஒத்த வெளிப்பாடுகள் மிருகங்களிடமும் காணப்பட்டாலும், அவற்றை நாம் சிந்தனை என்று அழைப்பதில்லை. மாறாக, இயல்பூக்கம் சார்ந்த வழிகாட்டல் என்றே அவற்றை அழைக்கின்றோம். புராதன தர்க்கவியலாளர்கள் கூட மனிதனை 'பேசும் பிராணி' என்றுதான் வரைவிலக்கணப்படுத்தினர். மனிதன் சிந்திப்பவன் என்பதே இதன் பொருளாகும். ஆனால் பிற பிராணிகளைப் பொறுத்த வரை அவற்றிடம் இருப்பது 'இயல்பூக்கம்' அல்லது அது போன்ற வேறொன்றாகும். அதுவே அவற்றின் சிந்தனையும் சிந்தையும் பகுத்தறிவும் சக்தியுமாகும்.

சிந்தனையை வரைவிலக்கணப்படுத்தவும், அதன் பொருளை யும் உண்மை நிலையையும் விளக்கவும் -நவீன காலத்தவர்கள் பெருமளவு சிரத்தை எடுத்துக் கொள்ளாவிட்டாலும்- பழைய அறிஞர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். நமது அறிவியல் கலைகள் செழித்தோங்கத் தொடங்கிய ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டிலும், அக்கலைகளைப் பதிவு செய்யும் இயக்கம் மலர்ச்சியடைந்த நான்காம் நூற்றாண்டிலும் வாழ்ந்த நமது அறிஞர்கள் பலர் இவ்விடயம் குறித்துப் பேசியுள்ளனர்; அது குறித்து விரிவாக விளக்கியுள்ளனர்; அதற்கு வரைவிலக்கணம் வழங்கியுள்ளனர். சில நூல்களில் சிந்தனை பற்றியும், அதன் பண்புகள் பற்றியும், நிபந்தனைகள் பற்றியும் சுமார் நூறு பக்கங்கள் கூட பேசப்பட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். வேறு சில மூ லாதாரங்களில் அதனை விட அதிகமாகவும் பார்த்திருக்கிறேன்.

*எவ்வாறாயினும், நமது மூலாதாரப் பனுவல்கள் பல்வேறு பட்டவை. விடயங்களைக் கையாளும் முறையில் அவை ஒவ் வொன்றும் தனித்துவமான வழிகளைப் பின்பற்றுபவை. அந்த வகையில், சிந்தனை என்ற சொற்பிரயோகம் பற்றியும் அதன் வரைவிலக்கணம் பற்றியும் சிலபோது 'தஸவ்வுஃப்' நூல்களிலும், மொழி நூல்களிலும், மெய்யியல் நூல்களிலும், தர்க்க இறையியல் நூல்களிலும், 'உஸூல்' நூல்களிலும் பல்வேறுவிதமாக உங் களால் கண்டுகொள்ள முடியும். இந்த அனைத்துத் துறை சார்ந்தவர்களாலும் அவர்களது கலைக்களஞ்சியங்களாலும் சிந்த னை பற்றியும், அதன் சமசொற்கள், நிபந்தனைகள், வகைகள் பற்றியும் ஏராளமாகப் பேசப்பட்டுள்ளன. அவற்றில் இடம் பிடித் திருப்பவற்றை வாசித்ததனுடாக நான் பெற்றுக் கொண்ட முடிவு இதுதான்:*

*சிந்தனை என்பது மனிதனிடம் காணப்படும் பகுத்தறியும் தன்மை கொண்ட சிந்தனா சக்திகளின் தொடர்ச்சியான செயற் பாட்டைக் குறிக்கும் பதமாகும். அச்சக்திகள் உள்ளமாகவோ ஆன்மாவாகவோ சிந்தையாகவோ இருக்க முடியும். அறிந்த விடயங்களின் அறியாத அர்த்தங்களைத் தேடியறிவதற்காக, அல்லது முடிவுகளைக் கண்டடைவதற்காக, அல்லது பொருட் களுக்கிடையிலான தொடர்பை அறிவதற்காகக் கூர்ந்த அவ தானத்தினூடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடு இதுவாகும். இஹ்யா உலூமித்தீனில் இமாம் அபூஹாமித் அல்-கஸ்ஸாலி குறிப்பிட்டுள்ள பின்வரும் கூற்று இதனை இன்னும் தெளிவு படுத்துகிறது:*

*"இரு அறிவுகளை மனதில் கொண்டுவந்து அவற்றிலிருந்து மூன்றாவது அறிவொன்றை உருவாக்குவதே சிந்தனை என்பதை அறிந்து கொள்ளுங்கள்".*

*அதாவது, இரு தரவுகளைத் தயார்படுத்தி அவற்றிலிருந்து பெறுபேறொன்றுக்குச் சென்றடைவதை இது குறிக்கிறது. உதார ணமாக, "தொழுகையை நிலை நாட்டுங்கள்" என்ற வசனத்தை*

எடுத்துக் கொண்டால், அதனை நாம் பின்வருமாறு சிந்தனா விவகாரமொன்றாக மாற்றியமைக்க முடியும்: "தொழுகையை நிலை நாட்டுங்கள்" என்பது ஒரு கட்டளை. இது ஒரு தரவு. 'நிலைநாட்டுங்கள்' என்பது மொழியில் ஏவல் வினையாகும். உயர்வும் தூய்மையும் மிக்க இறைவனிடமிருந்து அடியார்களை நோக்கி வரும் எல்லா ஏவல்களும் 'கடமை' (வாஜிப்) ஆகும். ஆக, முதல் தரவின் சான்று மொழி நீதியான சான்றாகும். அதாவது அது ஏவல் வினையாகும். இரண்டாவது தரவின் சான்று 'உஸல்' சார்ந்ததாகும். அதன்படி, இறைவனின் ஏவல் என்பது அவசியம் நிறைவேற்றப்பட வேண்டியதாகும். அந்த வகையில், தொழுகை என்பது 'வாஜிப்' (கடமை) என்ற மூன்றாவது தரவு பெறப்படுகிறது.

இதே போன்றுதான், '(ழுஹா போன்ற) ஒரு குறிப்பிட்ட தொழுகை கடமையா அல்லது நன்மை நாடிச் செய்யப்படும் (ஸுன்னத்) வணக்கமா?' என்று ஒருவருக்குத் தெரியாவிட் டால், 'ழுஹா' என்னும் முற்பகல் தொழுகையை இறைத் தூதர் (ஸல்) தொழுதும் இருக்கிறார்கள்; தொழாமல் விட்டுமிருக்கிறார்கள்' என நாம் கூறுவோம். இந்த முதல் தரவு வரலாற்று ரீதியான சான்றாகும். அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்களது செயல் களை அவதானித்ததால் வந்த முடிவாகும். ஏதாவது ஒரு செயலை அன்னார் விட்டு விட்டுச் செய்திருந்தால் அது 'ஸுன்னத்' என்ற வகையில் கருதப்படுமே தவிர 'ஃபர்ழ்' என்னும் கடமையாகக் கருதப் படாது. அந்த வகையில் 'ழுஹா' தொழுகை 'ஸுன்னத்' என்ற முடிவு கிடைக்கிறது. இதுவே மூன்றாம் தரவாகும்.

இந்தச் செயற்பாடுதான் சிந்தனை ஆகும். சிந்தனையை அல்-குர்ஆன் இயங்கு நிலையுடன் தொடர்பு படுத்துகிறது. இயங்காமல் சோம்பியிருக்கும் சிந்தனை வரவேற்புக்குரியதல்ல என இதன் மூலமாக நமக்கு நினைவூட்டப்படுகிறது. ஏனெனில், சிந்தனைக்காக சிந்தனை செய்தல் என்பது பயனற்றது. அதனால் இம்மைக்கும் பயனில்லை; மறுமைக்கும் பயனில்லை. அந்த வகையில், நாம் எதனைச் சிந்திப்பதாயினும் அதன் மூலமாக நமது உலக விவகாரமொன்று அல்லது மறுமை விவகாரமொன்று

சாதிக்கப்பட வேண்டும். சிந்தனைக்காக சிந்தனை செய்தல் என்பது அல்லது உண்மையோ ஆதாரமோ அற்ற வெறும் கற்னைகளுக்குப் பின்னால் கட்டற்று அலைதல் என்பது ஒருவகைக் கற்பனையாக அமையுமேயன்றி, சிந்தித்தல் என்னும் செயற்பாடாக அமையாது. சிந்தனை, கற்பனை, ஆழ்ந்த அவதானம், நல்லறிவுபெறல் முதலிய அம்சங்களுக்கிடையிலான வேறுபாடுகள் குறித்து முன்னைய அறிஞர்கள் நிறையவே பேசியுள்ளனர். அவை குறித்து விரிவாக ஆராயக் கூடிய இடம் இதுவல்ல.

சிந்தனையையும் அதன் உண்மை நிலையையும் புரிந்து கொண்ட பிறகு நமக்கு இரு பணிகள் காத்திருக்கின்றன:

ஒன்று, இஸ்லாமிய சிந்தனையின் பண்புகளையும் முறைமை களையும் தெளிவாக வரையறை செய்தல். இரண்டு, இஸ்லா மிய சிந்தனையின் விவகாரங்களையும் பிரச்சினைகளையும் கையாளல். அல்-குர்ஆனிய அறிவுமுறைமையின் துணை யுடனேயே இதனை நாம் செய்ய வேண்டும். ஏனெனில் அம்முறை மையே ‘வஹீ’யின் வாசிப்பையும், பிரபஞ்ச வாசிப்பையும் ஒன்றிணைப்பதாகும்.

### மையப்புள்ளி இரண்டு: முறைமை (method)

நெருக்கடி அகிலம் தழுவியது என்ற வகையில் அதற்கான தீர்வும் அகிலம் தழுவியதாக இருக்க வேண்டும். இஸ்லாமியத் தீர்வானது சர்வதேசக் கருத்தாடலின் தரத்தில் அமைய வேண்டுமாயின், அல்-குர்ஆனை அடிப்படையாகக்கொண்ட அறிவாய்வு முறைமை யியல் தான் (epistemological methodology) அதற்கான பிரதான நுழைவாயிலாகும். ஏனெனில் அம் முறைமையியலால் மட்டுமே நவீனசிந்தையைமீட்டுருவாக்கம்செய்யவும்,அதன்அறிதல்திறனை ஆரோக்கியமாகக் கட்டியெழுப்பவும் முடியும். ‘முறைமையியல்’ (methodology) என்பதன் மூலம் மனித சிந்தனைக்கான நியமங் களையே நாம் குறிக்கிறோம். சிந்தனைகளைப் பிறப்பாக்கம் செய்வதற்கும் பரீட்சிப்பதற்குமான வழிகளை அடையாளம் காண்பதற்காக இந்நியமங்கள் பொருத்தமான மூலாதாரச் சட்டகமொன்றிலிருந்து பெறப்படுகின்றன.

*இம் முறைமையியலானது தேர்ந்தெடுக்கப்பட்ட சிந்திப்புகளில் தங்கி நின்று கருத்தாக்கங்களைப் பிறப்பாக்கம் செய்யும் நிலையிலிருந்து மனிதப் பகுத்தறிவை வெளியேற்றி, ஒரு குறிப்பிட்ட முறைமையினூடாக உசாவத் தக்க 'மூலாதாரச் சட்டகம்' (*authoritative framework*) ஒன்றினைக் கண்டடையத் தூண்டுகிறது. இச்சட்டகமானது அவதானித்துத் திரட்டப்பட்ட சட்டங்களையும் நியதிகளையும் உள்ளடக்கியிருக்கும். அச்சட்டங் களும் நியதிகளும் கோட்பாடுகளாகவும் விதிகளாகவும் மாறும். பிறகு, அவற்றை ஆளுகை செய்யும் மூலாதாரச் சட்டகத்தின் மூல மாக அவற்றின் இயக்கம் நியமப்படுத்தப்படும். எனவே, அவற்றுக் கிடையில் முரண்பாடோ மோதலோ இசைவின்மையோ தோன்ற வாய்ப்பற்றுப் போகும். இதனால், சிந்தனைகளின் சுற்று வட்டங்கள் எவ்வளவு விரிவடைந்து சென்றாலும், கண்ணுக்குத் தெரியாத இழையொன்றினால் கட்டுண்டது போல் மீண்டும் மையப் புள்ளியை நோக்கித் திரும்பிவிடும்.*

*இந்த வகையில், முறைமையியலானது - தனது பிரதான பணிக்கு மேலதிகமாக- கோட்பாடுகளையும் கருத்தாக்கங்களையும் ஒழுங்கமைக்கும் பணியையும் மேற்கொள்கிறது; சட்டங்களைத் தகவமைத்து ஒன்றோடொன்று பிணைந்தனவாக மாற்றியமைக் கிறது; ஆய்வாளரின் கேள்விகளையும் கருதுகோள்களையும் வார்த்தெடுப்பதில் பங்காற்றுகிறது. அவ்வாறே, ஒவ்வொரு விவகாரத்தையும் கற்று, திறனாய்ந்து, பகுப்பாய்வு செய்து, பின்னர் அதனை மீளப் பொருத்தியமைக்கும் அறிவாய்வியலுடனும் (*epistemology*) அது தொடர்புபட்டிருக்கிறது. ஆக, 'முறைமை யியல்' என்பது பாதையையும், குறித்ததொரு அறிவிலக்கை நோக்கிப் பயணிப்பதற்கு அவசியமான எட்டுகளையும் விளக்கு கின்ற அறிவியல் எனலாம். அதற்கிசைவான 'கருத்தாக்கங்கள்' (*concepts*) என்பவை முறைமையியல் கட்டெழுவதற்கான அத்திவாரக் கற்களாகும். கருத்தாக்கங்களை உரிய இடத்தில் வைத்து வடிவமைத்து அறிவார்ந்த நோக்கங்களைச் சாத்தியப்*

படுத்தும் வகையில் அவற்றை இயக்குகின்ற 'மூலாதாரச் சட்டக'மே (authoritative framework) 'ஒழுங்கமைப் பாளர்' (organizer) ஆகும்.

பிறரைப் பொறுத்தவரை, அறிவு தொடர்பாக அல்லது அதன் வகை வேறாக்கம் தொடர்பாக அல்லது அதன் துறைகள் தொடர்பாக அவர்களிடம் காணப்படும் கோட்பாடுகளின் பல்வகைமைக்கேற்ப முறைமைகளும் முறைமையியலும் பல்வேறு பட்டு அமைந்திருக்க முடியும். ஆனால், 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' செயற்பாடானது 'வஹீ'யையும் பிரபஞ்சத்தையும் ஒன்றாகவாசிப்புக்குஉட்படுத்துகிறது.இவ்விருவகைவாசிப்புக்கும் அது ஒரே முறைமையையே பயன்படுத்துகிறது. இம்முறைமையின் மூலாதாரச் சட்டகம் ஏக இறைக் கொள்கையையும் சத்தியத்தின் ஒருமைத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டது. மதச் சார்பற்ற அறிவாய்வியல் துறைகளைப் போலன்றி 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' துறையானது வஹீயையும் அதன் ஞானத்தையும் பிரபஞ்சத்தின் நோக்கத்தோடும் அதன் காரண-காரிய நியதிகளோடும் இணைத்துப் பார்க்கிறது. 'முறைமை'யை குறிப்பிட்டதொரு துறையின் சிந்திப்புக்கான விதிகளாகவும் ஆய்வு நியமங்களாகவும் பார்ப்பதற்கும், 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' நோக்கில் அந்த 'முறைமை'யைப் பார்ப்பதற்கும் இடையிலான வேறுபாடு இங்கு தெளிவாகிறது.

'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' சட்டகத்தினுள் 'அறிவாய் வியல்' (epistemology), 'முறைமையியல்' (methodology) ஆகிய இரண்டையும் அருகருகே வைத்துப்பார்க்கும்போது சில இடங்களில் ஒன்றுக்கொன்று தொடர்புபட்டனவாகவும், வேறு சில இடங்களில் வேறுபட்டனவாகவும் அமைந்திருப்பதை அவதானிக்க முடியும். வேறு வார்த்தையில் சொன்னால், இரண் டுக்குமிடையில் சில பொதுத் தன்மைகளும் ஒவ்வொன்றுக்குமான தனித்தன்மைகளும் காணப்படுகின்றன. அந்த வகையில், அறிவாய்வியலுக்கு முறைமையியல் அவசியம். மட்டுமன்றி, அறிவாய்வியலானது முறைமையியலின் மீதே தங்கியிருக்கிறது. மறுபுறத்தில், முறைமையியலானது தனக்குரிய செயன்முறை

வடிவத்தை அறிவாய்வியல் சட்டகத்தினுள்ளிருந்தே எடுத்துக் கொள்கிறது. ஆக, இவ்விரண்டும் இணை பிரியாதவை. அறி வாய்வியலானது மிகப் பரந்ததும், அனைத்து வகையான விமர்சன-பகுப்பாய்வு நடைமுறைகளை உள்ளடக்கியதுமான செயற் பாட்டில் தங்கியிருக்கிறது. சமகால அறிவாய்வு எல்லைக்குள் காணப்படுகின்ற அனைத்துக் கூறுகளையும் தரவுகளையும் தொடர்புகளையும் ஆற்றல்களையும் அது பயன்படுத்திக் கொண்டு, சமூக-கலாசாரப் பிரச்சினைகளைக் கண்டடைந்து, முறைமையியலின் சட்டங்களுக்கும் நியமங்களுக்கும் அமைவாக மீளமைக்கும் பணியை மேற்கொள்கிறது. 'அல்-குர்ஆனின் அறிவாய்வு முறைமை' அறிவை இஸ்லாமியப் படுத்துவதில் தனது பங்கை நிறைவேற்ற வேண்டும். 'இருவகை வாசிப்பை ஒன்றிணைத்தல்' என்ற செயற்பாட்டை அது சாத்தியப்படுத்த வேண்டும். அப்போதுதான் சிந்தனா-அறிவு நெருக்கடியின் பல்வேறு மட்டங்களிலிருந்து நாம் வெளியேற முடியும். எனினும், இவ்வனைத்தும் நிறைவேற வேண்டுமானால், 'மறைவான' இறைவனுக்கும் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்பு வெளிக்கொணரப்பட வேண்டும்; அறிவும் அதன் முறைமைகளும் மறைவானதைப் புறக்கணிக்கும் நிலையிலிருந்து அல்லது கண்டுகொள்ளாதிருக்கும் நிலையிலி ருந்துஅல்லது பக்கச்சார்பாக அணுகும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். வேறு வகையில் சொன்னால், இறையியலுக்கும், மானிடவியலுக்கும், பிரபஞ்சம் பற்றிய ஒரு தலைப்பட்சமான வாசிப்புக் கொண்ட தத்துவங்களுக்கும் இடை யிலான பிரிநிலை இல்லாதொழிய வேண்டும்.

அல்-குர்ஆனிய அறிவும், ஏனைய துறைசார் அறிவியல்கள் மீதான போதிய பரிச்சயமும் வாய்க்கப் பெற்றவர்களால் மட்டுமே இப்பணியில் பங்கேற்கவும் அதன் பொறுப்புகளைச் சுமக்கவும் முடியும். அவர்களால்தான் அல்-குர்ஆனுக்கும், மனிதனுக்கும், பிரபஞ்சத்துக்கும் இடையிலான முறை வழிப்பட்ட இடைத் தொடர்பை வெளிக்கொண்டுவர முடியும். பிரபஞ்சத்தின்மீதும்

அதன் இயக்கத்தின் மீதும் மறைவான உலகம் கொண்டிருக்கும் வினைத்திறன் மிக்க தாக்கத்தையும் தொடர்பையும் ஏற்கத் தவறிய எந்த முன்னெடுப்பும் மனித சிந்தையை தவறுகளிலிருந்து பாதுகாக்கும் ஆற்றல் கொண்ட தர்க்கமாக அமைய முடியாது. அவ்வாறே, இப்பரிமாணத்தைக் கவனத்தில் கொள்ளத்தக்க எந்த முறைமையும் அல்-குர்ஆனிலிருந்து மட்டுமே தூய்மையாகவும் ஆரோக்கியமாகவும் பெறப்பட முடியும் என்பதும் கவனிக்கத் தக்கது.

இந்த வகையில், 'அறிவை இஸ்லாமியப் படுத்துதல்' என் பது நன்கு வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட தெளி வான முறைமையாகும். ஒரு புறத்தில் அது இறைவனையும் மறைவான உண்மைகளையும் புறக்கணிக்கும் சடவாதத்துக்குப் பதிலீடாக அமையும் அதேவேளை, மறுபுறத்தில் மனிதனையும் இயற்கையையும் கபளீகரம் செய்து கொண்டிருக்கும் இறையியல் களுக்கும் மத குருத்துவங்களுக்கும் பதிலீடாகவும் அமைகிறது.

'அறிவை இஸ்லாமியப் படுத்துதல்' பற்றிய நமது இன்றைய பிரக்ஞையின்படி, அவ்வுற்பத்தியை ஆளுகை செய்யும் விதிகளான வை - அறிவை இஸ்லாமியப் படுத்தலின் சட்டகத்துக்கும் நோக்குக்கும் அமைவாக - பின்வரும் அடிப்படைகளின் மீதே நிறுவப்பட வேண்டும்:

1. ஆரோக்கியமான இஸ்லாமிய கோட்பாட்டின் உள்ளடக் கத்துக்கும் தனித் தன்மைகளுக்கும் அமைவாக அறிவாய்வு நோக்கொன்றை மீளக் கட்டியெழுப்புதல்.

அப்போதுதான், முழு மொத்த மானிடக் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், அக்கேள்விகளின் எந்தப் பக்கத்தையும் புறக்கணிக் காமல் அவசியமான அறிவாய்வு மாதிரிகளை உருவாக்கவும் ஆற்றல் வாய்ந்த இஸ்லாமிய அறிவொழுங்கொன்று பற்றிய தெளிவு உருவாகும். மட்டுமன்றி, மீளமைக்கப்பட்டதோர் இஸ் லாமிய அறிவு மாதிரியே நமது பழைய முதுசங்களையும் சமகால உற்பத்தியையும் முறைமைசார் ஒழுங்கொன்றின் அடிப்படையில்

*உள்வாங்கித் திறனாயும் ஆற்றலை நமக்கு வழங்கும். முறைமை வழிப்பட்ட அறிவாய்வு உற்பத்தியை மேற்கொள்ளவும், அறி வார்ந்த வியாக்கியானங்களை வழங்கவுமான ஆற்றலையும்கூட அதுவே வழங்கும்.*

*2. 'அல்-குர்ஆனின்அறிவாய்வு முறைமை'யின் வெளிச்சத்தில் இஸ்லாமிய முறைமையியலின் விதிகளை மீளாய்தலும், மீளக் கட்டியெழுப்புதலும்.*

*ஏனெனில், அல்-குர்ஆனை உள் தொடர்பற்ற துண்டுகளா கவும், அதனுடன் பிரபஞ்சத்துக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பைப் புறக்கணித்து அவற்றைத் தனித்தனியாகவும் நோக்கியதால் இம் முறைமையியல் பாரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.*

*3. இம்முறையான நோக்கினூடாக புனித அல்-குர்ஆனை அணுகுவதற்கான முறைமையொன்றைக் கட்டியெழுப்புதல்.*

*அல்-குர்ஆன் என்பது முறைமைக்கும், சட்டத்துக்கும், அறிவுக்கும், இஸ்லாமிய நாகரிக-அபிவிருத்தியின் அடிப் படைகளுக்குமான மூலாதாரம் என்ற நோக்குடன் இம் முறைமை கட்டியெழுப்பப்பட வேண்டும். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்-குர்ஆனியக் கலைகளைக் கூட நாம் சிலவேளை மீளமைக்கவும் மீளக் கட்டியெழுப்பவும் வேண்டியிருக்கும். இத்துறையில் நாம் பாரம்பரியமாகப் பெற்று வந்த பல விடயங்களைத் தாண்டிச் செல்லவும் வேண்டி யிருக்கும். இன்றைய உலகின் நாகரிகக் கட்டமைப்பைக் குறிக்கும் அம்சங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, முன்னைய காலங்களில் அறபிகள் அல்-குர்ஆனை புறவயப் பண்புகளின் (*outward features*) ஒளியிலேயே புரிந்து கொண்டனர் என்று தெரிகிறது. அந்தப் புரிதல் சமூகவியல் ரீதியாகவும் சிந்தனாரீதியாகவும் மிக மெதுவானதாகவும் வரை யறுக்கப்பட்ட அளவிலுமே அமைந்திருந்தது. மொழியியல் மற்றும் அணியிலக்கணக்கலைகள் உத்தியோக பூர்வமாக எழுத் துருப்படுத்தப்பட்ட அக்கால கட்டத்தில் சொற்களையும்*

*வசனங்களையும் - அவை மிகச் சிறிய வெளிப்பாட்டு அலகுகள் என்ற வகையில் - அவதானித்துப் பகுப்பாயும் செயன்முறையே பெரிதும் வழக்கிலிருந்தது. அந்தவகையில், அவற்றிலிருந்து பிறந்த புரிதலும் விதிகளும் அப்போதைய கட்டத்திற்கு ஏற்கத்தக்கவையாகவும் போதுமானவையாகவும் இருந்தன. உண்மையில் அவ்விதிகளை அவற்றின் வரலாற்றுச் சூழமைவில் வைத்துப் பார்க்கும் போது இன்றும்கூட முக்கியத்துவம் கொண் டவையாகவும் பயனுள்ளவையாகவுமே உள்ளன. ஆனால், தற்போதைய காலகட்டம் வித்தியாசமானது; விடயங்களை முறை மை வழியாகப் புரிந்துகொள்ளவும், அவற்றுக்கிடையிலான தொடர்புகளைப் பகுப்பாய்வு ரீதியாகவும் விமர்சனபூர்வமாகவும் அணுகவும் முயல்கின்ற இக்காலகட்டமானது பல்வேறு அறி வியல் விதிளைப் பயன்படுத்துகிறது. அந்த வகையில், வஹீயின் வசனங்களைப் புரிந்துகொள்ளவும் பயன்படுத்தவுமான கலைகள் குறித்தும் சாதனங்கள் குறித்தும் மீளாய்வு செய்யப்படுவது அவசியமாகிறது. வசனத்தின் மீதான வாசிப்பையும் பிரபஞ் சத்தின் மீதான வாசிப்பையும் இணைத்து, முறை வழியான இடைவினையாற்றலுக்கு அம்மீளாய்வு உதவ வேண்டும்.*

*4. முறையான இந்நோக்கினூடாக தூய ஸுன்னாவை அணுகு வதற்கான முறைமையொன்றையும் கட்டியெழுப்புதல்.*

*ஸுன்னா என்பது முறைமை, சட்டம், அறிவு, இஸ்லாமிய நாகரிக - அபிவிருத்திசார் அடிப்படைகள் என்பவற்றுக்கான விளக்கமாக அமைந்துள்ளது என்ற வகையில் அம்முறைமை கட்டியெழுப்பப்பட வேண்டும். ஏனெனில் நபித்துவக் காலமும் நபித்தோழர்களது காலமும் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, அன்னாரது சொல்லும் செய லும் அப்படியே பின்பற்றப்பட்ட காலமாகும்:*

*“உங்களுக்கான வழிபாட்டுக் கிரியைகளை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்”. (முஸ்லிம்)*

*"நான் எப்படித் தொழுவதைக் காண்கிறீர்களோ அப்படியே தொழுங்கள்". (புஹாரி, முஸ்லிம்)*

*பின்பற்றுதல் என்பது இறைத்தூதர் (ஸல்)அவர்கள் வாழ்வி யல் யதார்த்தங்களில் மேற்கொண்ட நடைமுறைச் செயற்பாடு களில் தங்கியுள்ளது. அன்னார் தமது நடத்தை மூலமாக அல்குர்ஆனை ஸ்தூலப்படுத்திக் காட்டினார்கள். அந்த வகையில், அல்-குர்ஆனை யதார்த்தத்தின் மீது நடை முறையாக்கம் செய்வதில் அப்போது எந்தப் பிரச்சினையும் எழவில்லை. நபித்துவ நடைமுறையும் விளக்கமும் அல்-குர்ஆனிய தெய்வீக முறைமையின் உள்ளடக்கத்துக்கும் அறபு - இஸ்லாமிய யதார்த்தத்துக்கும் மத்தியிலான இடைவெளியை முற்றாக அடைத்துவிட்டன. அறபு மாந்தரின் மனப்பாங்கு, அறிவு - சிந்தனா ஆற்றல்கள், அன்றைய யதார்த்தம் கொண்டிருந்த சமூகவியல் மற்றும் அறிவுசார் நிபந்தனைகள், வரையறைகள் என்பனவும் அப்போது முழுமையாக கவனத் தில் கொள்ளப்பட்டிருந்தன. இந்த வகையில்தான், நபித் தோழர்களுள்ளிருந்த ஹதீஸ் அறிவிப்பாளர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களது வாழ்வியலோடு தொடர்புபட்ட எந்தச் சிறுபகுதியும் தவறிவிடக்கூடாது என்பதில் மிக அக்கறையாக இருந்தனர்.ஏனெனில்,அதுவேவாழ்வின்பல்வேறுவிவகாரங்களை ஒழுங்கமைப்பதற்கான முறைமை பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்த உதவும் ஒரே பதிலீடாக அமைந்திருந்தது. ஸுன்னாவில் இறைத் தூதர் (ஸல்) அவர்களது சொற்களும் செயல்களும் அங்கீ காரங்களும் அவ்வளவு பெருந்தொகையாக உள்ளடக்கப் பட்டிருப்பதற்கான காரணம் இதுவே. அவ்வனைத்து விரிவான தகவல்களும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது காலையிலும், மாலையிலும், சமாதானக் காலத்திலும், யுத்த வேளையிலும், கற்பித்தலிலும், நீதித் தீர்ப்பிலும், தலைமைத்துவத்திலும், மானிடச் செயற்பாடுகளிலும் அன்றாடம் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதைக் கவனிப்பதற்கான இயலுமையை நமக்குத் தருகின்றன. யதார்த்தத்தை அணுகுவதில் இறைத்தூதர் (ஸல்) அவர்கள்*

*பின்பற்றிய வழிமுறையையும், அந்த யதார்த்தம் கொண்டிருந்த தனிப் பண்புகளையும் அவை நமக்குத் துலக்குகின்றன. அந்த யதார்த்தம் இன்று நாம் வாழும் யதார்த்தத்திலிருந்து கட்டமைப்பிலும் மனப்பாங்கிலும்- வேறானது. எவ்வாறாயினும், சட்டங்களை உருவாக்குவதற்கான ஏக மூலாதாரம் அல்-குர்ஆனே என்பதும், அல்-குர்ஆனை விளக்கும் ஏக மூலாதாரம் ஸுன்னாவே என்பதும் தொடர்ச்சியாக வலியுறுத்தப் பட்டே வந்துள்ளன.*

*இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது ஸுன்னாவில் அல்-குர்ஆனிய முறைமைக்கும் யதார்த்தத்துக்கும் இடையிலான தொடர்பை ஸ்தூலப்படுத்திக் காட்டியிருப்பதால், அன்னார் இயங்கிய யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் பல விவகாரங்களைப் புரிந்து கொள்வது சிரமமானது. உதாரணமாக, சிலை செதுக்குவதையும் உருவம் வரைவதையும் நபிகளார் தடுத்து, அவ்வாறு உருவம் வடிப்போர் மறுமை நாளில் கடுமையான வேதனைக்கு உட்படுத்தப்படுவர் என்று கூறியிருக்கிறார்கள் எனில், உருவ அழகியல் தொடர்பான நபித்துவ நிலைப்பாடு அதுதான் எனப் புரிந்து கொள்ளப் படலாகாது. அவ்வாறு புரிந்து கொள்ளப்படுமாயின், அது நபி சுலைமான்(அலை) அவர்கள் ஜின்களைக் கொண்டு தான் விரும்பிய சிலைகளை உருவாக்கிக் கொண்டமைக்கும் அதுகுறித்த அன்னாரது புரிதலுக்கும் முரண்பாடானதாகவே அமையும். மறுபுறத்தில், 'அத்தகைய உருவங்களை வணங்கும் நோக்கமோ உணர்வோ எம்மிடமில்லாத போதும் அவற்றை அமைப்பது எமக்கும் ஏன் தடை செய்யப்பட வேண்டும்?' என்றவாறு கேள்வியெழுப்புவோரின் சட்டகத்தினுள் நின்றும் இத்தகைய விவகாரங்கள் புரிந்து கொள்ளப்படலாகாது. இவ்விவரங்களில் சிலவற்றை ஆகுமாக்கி, மற்றும் சிலவற்றைத் தடைசெய்யும் பகுதியளவிலான தீர்ப்புகளை அங்குமிங்கும் தேடியெடுத்துத் தீர்வு பெறப்படவும் முடியாது. மாற்றமாக, இத்தகைய பலவிவகாரங்களில் நபிகளார் சுட்டிக் காட்டிய முறை வழிப்பட்ட நிலைப்பாடே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.*

இவ்வாறானவழிகாட்டல்களைக்கவனத்தில்கொள்ளும்போது, ஸுன்னாவின் ஆதாரபூர்வத்தன்மை குறித்த சர்ச்சைகளுக்கும் இடமில்லாது போய்விடும். ஏனெனில், ஸுன்னா என்பது - இத்தகைய அறிவு முறைமைச் சட்டகத்தினுள் - பின்பற்றுவதற்கு இலகுவான முறைமைசார் விதிகளாக மாறுமேயன்றி, ஒன்றுக்கொன்று தொடர்பற்ற சிதறிய பகுதிகளாக இருக்காது.

அந்த வகையில், சிலைகளை வணக்கத்துக்காகத் தயாரிக்கும் நடைமுறையிலிருந்து அப்போதுதான் விடுபட்டு வந்திருந்த அம்மக்களை அதிலிருந்து முற்றாகத் துண்டித்துவிட வேண்டிய தேவை நபிகளாருக்கு இருந்தது. அந்நிலையில், ஏக இறைக்கொள்கையைப் பாதிக்கக் கூடிய எந்த விடயத்தையும் அன்னார் அவர்களுக்கு அனுமதிக்க முடியாது. எனவே அன்னார் இது போன்ற கறாரான நிலைப்பாடுகளை எடுப்பது தவிர்க்க முடியாதது.

ஆக, இவ்வாறான விவகாரங்களை ஒழுங்குபடுத்தி நியமப்படுத்தக் கூடிய முறைமையொன்றுக்குச் சென்றடைவதும், அவற்றை அறிவு பூர்வமான வாசிப்புக்கு உட்படுத்துவதும் அவசியம். அத்தகைய முறைமையும் வாசிப்புமே ஹதீஸ்களையும் நபித்துவ நடைமுறைகளையும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பகுதிகள் என்ற வட்டத்திலிருந்து வெளியேற்றி, முறைவழிப்பட்ட புரிதலை நோக்கிக் கொண்டு செல்லும். அது இல்லாதபோதுதான் இவ்வாறான பகுதிகள் முரண்பாட்டாளர்களால் - பல்வேறு சட்ட இமாம்களின்அபிப்பிராயங்கள் போன்று- ஒன்றுக்கொன்று முரண்பாடான கூற்றுகளாகவும் தீர்ப்புகளாகவும் மாற்றப்படுகின்றன.

அல்-குர்ஆன் இறங்கிக் கொண்டிருந்த நிலையில், இறைத்தூதர் (ஸல்) அவர்களது சொற்களிலும் செயல்களிலும் அங்கீகாரங்களிலும் இடம் பெறக்கூடிய விரிவான அம்சங்களையும் விளக்கங்களையும் தேடிப் பின்பற்றும் வழக்கத்தை அறபிகள் கொண்டிருந்தனர். தமது வாழ்வு நிலைகளுக்கேற்பப் பின்பற்றத்தக்க விரிவான முறைமையொன்றை ஸ்தூலப்படுத்தும்

நடைமுறை மாதிரியொன்றாக அவர்கள் இறைத்தூதரை எடுத்துக்கொண்டனர். பின்பற்றுதலுக்கான முறைமை பற்றிய இப்புரிதலினூடாகவே நம் அறிவுப் பாரம்பரியத்தில் 'அல்-மஃதூர்' அல்லது 'அல்-மன்கூல்' சார்ந்த கருத்தாக்கங்கள் தோற்றம் பெற்றன. அதன் பிறகு இப்புரிதலின் தாக்கங்களைக் குறைக்கும் முயற்சியாகவே சிலர் உள்ளர்த்தம் கொண்ட வியாக்கியானங்களையும் குறியீட்டு விளக்கங்களையும் வழங்க முற்பட்டனர். 'மஃதூர்' என்ற கருத்தாக்கத்தின் வாக்கியவாத அணுகு முறையிலிருந்து வெளியேறும் முயற்சியாக அது அமைந்திருந்தது. ஆனால், அது இவ்விவகாரத்தை மேலும் குழப்ப நிலைக்கு உள்ளாக்கி விட்டது. அல்-குர்ஆனிய நபித்துவ முறைமை ஒன்றை நோக்கிச் சென்றடைவதே உண்மையில் இதன்போது நிகழ்ந்திருக்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால், அம் முறை மையின் கீழ்அனைத்து விரிவான அம்சங்களும் நியம மாகப் புரிந்து கொள்ளப்படும் சூழ்நிலை வாய்த்திருக்கும்; முழுமொத்த இலக்குகளும் நோக்கங்களும் (மகாஸித்) கூட தெளிவாகியிருக்கும்; எல்லா நிலையிலும் அம்முழு மொத்த இலக்குகள் உசாவப்படும் நிலையும் பரவலடைந்திருக்கும்.

நவீன இஸ்லாமிய சிந்தனைப் பாங்கு எப்போதும் விவகாரங் களைப் புறநிலையாக அணுகி ஒழுங்குபடுத்தவே விழைகிறது. அதன் மூலமாக, முழுமையான பல்பக்கப் பரிமாணங்கள் கொண்ட முறைமையியலொன்றைக் கண்டடைய முயல் கிறது. அந்த வகையில், பகுப்பாய்வு, திறனாய்வு, வியாக்கி யானம் என்பன அங்கு சிந்தனா இயக்கத்தின் புறவயச் சட்டகமாக மாறுகின்றன. அச்சட்டகத்தினுள்ளிருந்தே சிந்தனா இயக்கம் பிரபஞ்ச மற்றும் உள்ளூர் விவகாரங்களைக் கையாள்கிறது. ஏனெனில், இத்தகைய முறைமையின் மூலமாகவே கீர்த்தி மிகு அல்-குர்ஆனின் அதியுயர் இலக்குகளை நோக்கி ஊடுருவிச் செல்வதும், ஸுன்னாவை ஆழ்ந்து புரிந்து கொள்வதும் சாத்தியமாகும். ஸுன்னாவின் வரலாற்று ஓட்டத்தை முற்றாக ரத்துச் செய்து, இறந்த காலம் என்ற சட்டகத்தினுள் மாத்திரம்

அதனைத் தேக்கி வைக்கும் தவறை இது தவிர்க்கும். மட்டுமன்றி, உள்ளூறையான வியாக்கியானங்கள் அல்லது குறைபாடான புத்துயிர்ப்புவாத முயற்சிகள் நிகழாமலும் அது தடுக்கும். ஏனெனில் இத்தகைய குறைபாடான முயற்சிகள் கடந்தகால நடைமுறைகளுக்கு பகுதியளவான திருத்தங்களை அல்லது வியாக்கியானங்களை வழங்கி, கடந்த காலத்தில் இருந்தது போல வே மீளுற்பத்தி செய்ய முயல்கின்றன. இறந்தகாலத்தை புதிய ஆடையிலும் புதிய சொற்பிரயோகங்களிலும் தலைப்புகளிலும் முன்வைக்கும் முயற்சிகளாக அவை உள்ளன.

5. நமது இஸ்லாமிய அறிவு முதுசங்களை விமர்சன பூர்வமாக வும், பகுப்பாய்வு ரீதியாகவும், அறிவார்ந்தும் மீள்வாசிப்புச் செய்வதானது தற்போதைய நமது கையாளலை ஆளுகை செய்யும் மூன்று விதமான சுழல்களிலிருந்து நம்மை வெளியே கொண்டுவரும்:

i முற்று முழுதாக மறுதலித்தல்.

ii. முற்று முழுதாக ஏற்றல்.

iii. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒழுங்கற்றுத் தெரிவு செய்தல்.

ஏனெனில், இம்மூன்று அணுகு முறைகளும் நமது அறிவு முதுசங்களுடன் நாம் உண்மையாக மேற்கொள்ள வேண்டிய தொடர்பாடலைச் சாத்தியப் படுத்துவதில்லை. அம்முதுசங்களி லிருந்து அறிவார்ந்த முறையில் விலக்கிக்கொள்ள வேண்டியதை விலக்கிக் கொள்ளவும் இவை விடுவதில்லை.

6. சமகால மானிட முதுசங்களை அணுகுவதற்கு முஸ்லிம் சிந்தை தற்போது கையாளும் முறைகளிலிருந்து அதனை வெளியே கொண்டு வருவதற்கான முறைமையொன்றைக் கட்டி யெழுப்புதல்.

ஏனெனில், இவ்வணுகுமுறைகள் பிற சிந்தனையை அணுகு வதற்கான யத்தனங்களையும் சட்டகங்களையும் இழந்து நிற்கின்

றன. மட்டுமன்றி, மாற்றுச்சிந்தனையை அவை தனியாக மைய நிலைப்படுத்தி ஒப்பிட்டு இறுதியில் முற்றாக நிராகரிக்கும் நிலைக்குச் செல்கின்றன; அல்லது எவ்விதக் கேள்வியுமின்றி முற்றாக ஏற்றுக் கொள்கின்றன; அல்லது எவ்வித முறைமையையும் பின்பற்றாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொறுக்கிக் கொள்கின்றன.

மேற்குறித்த ஆறு கட்டங்களை அல்லது பணிகளைத்தான் நாம் "அறிவை இஸ்லாமியப் படுத்துவதற்கான அடிப்படை கள்" என அழைக்கிறோம். "அறிவுக்கான ஏகத்துவ முறைமை" அல்லது "சமூகவியல் மற்றும் மானிடவியல் கலைகளை இஸ்லாமியப் படுத்தல்" அல்லது "இயற்கை விஞ்ஞானங்களை இஸ்லாமிய ரீதியாகத் திசைப்படுத்துதல்" என்பதற்கான அடிப்படைகள் எனவும் இவற்றையே நாம் அழைக்கிறோம். ஏனெனில், முஸ்லிம்களாகிய நாம் முதல் தடவையாக படைப்பாளனுக்கும் பிரபஞ்சத்துக்கும் மனித னுக்கும் இடையிலான தொடர்பைத் துண்டித்து, மறைவான உலகத்தைப் புறக்கணிக்கும் விதமாக அறிவியலையும் அறிவுக்கலைகளையும் அவற்றின் கண்டுபிடிப்புகளையும் பயன்படுத்துகின்ற பூகோளநிலைமையொன்றின் முன்னால் நிற்கிறோம். இந்நிலைமையானது அறிவியலையும் பெறுமானங் களையும் வேறுபடுத்தியே பார்க்கிறது. அது பிரபஞ்சம் பற்றி முன்வைக்கின்ற கோட்பாடுகளுள் சில நமது இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு முரணாகவே தோன்றுகின்றன. அவை அப்படியே இருக்கவும் முடியும்; இல்லாதிருக்கவும் முடியும். எவ்வாறாயினும், இங்குள்ள பிரச்சினை அத்தகைய கோட்பாடு களுக்கு இசைவாக அமையக்கூடிய சில சமயக் கூற்றுகளை நாம் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிவு செய்து வைத்துக்கொண்டு 'அவை எங்களிடம் இருக்கின்றன' என்று கூறுவதோ, அல்லது அவற்றை முற்றாக மறுதலித்து 'அவை இறை நிராகரிப்பு' என முத்திரை குத்துவதோ அல்ல. ஏனெனில், அடிப்படையிலேயே இயற்கை விஞ்ஞானம் குறித்த நமது பார்வை

சமயம் சார்ந்ததோ மதகுருத்துவம் சார்ந்ததோ அல்ல. மறுபுறத்தில், இவ்விவகாரத்தில் நாம் பிறரைத்தான் பின்பற்ற வேண்டும் என்று கேட்கப்படவுமில்லை. ஏனெனில், அறிவியலை எதிர்கொள்வதில் அவர்கள் கொண்டிருக்கும் அனுபவம் நமது அனுபவத்திலிருந்து வேறானது. அல்-குர்ஆன் என்பது மதகுருத்துவ - புரோகிதத் தன்மை வாய்ந்த நூலொன்றாக இருந்திருக்குமாயின், அதனை ஒரேயொரு பரிமாணத்தில் மாத்திரமே வாசித்துப் புரிந்து கொள்ள நமக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும். ஆனால் நமக்கு இடப்பட்ட கட்டளையோ அதற்கு மாற்றமானது. அந்த வகையில், நாம் அறிவியலோடு மோதப் போவதில்லை. அல்-குர்ஆனியப் பிரபஞ்சத்திலுள்ள அதே 'வஹீ'தான் இயற்கைப் பிரபஞ்சத்திலுள்ள 'வஹீ'யும் என்பதை நாமறிவோம். எனவே, அறிவியலோடு தொடர்புபட்ட வகையில் ஏதேனும் பிறழ்வுகள் தோன்றுமாயின், அவற்றிலிருந்து அறிவியல் தூய்மைப் படுத்தப்பட வேண்டும். அவ்வாறே, 'வஹீ'யின் வசனங்களோடு விளக்கங்களும் வியாக்கியானங்களும் தொடர்பு படுத்தப்படும் போது, தீவிரத்தன்மை கொண்டோரின் திரிபுகளிலிருந்தும், அறிவிலிகளின் வியாக்கியானங்களிருந்தும், அசத்தியவாதிகளின் இடைச் செருகல்களிலிருந்தும் அவை பாதுகாக்கப்படவேண்டும். அறிவையும் அறிவியல் கலைகளையும் ஒன்றிணைத்து அல்-குர்ஆனிய அறிவாய்வு முறைமையுடன் அவற்றைப் பிணைப்பதற்கான அடிப்படை இதுதான். கடந்த காலங்களில் மதத்தை எதிர்த்த சித்தாந்த நிலையிலான பகுத்தறிவுச் சிந்தனையிடம் சமகால பயனாக்க அறிவியல் இருக்கவில்லை. பாரம்பரிய நேர்நிலைச் சிந்தனையைத் தாண்டிய சிந்தனைப் பள்ளிகள் உருவாகக் காரணமான பயனாக்க அறிவியலின் பெறுபேறுகளும் அதனிடம் இருக்கவில்லை. இன்று நாம் செய்ய வேண்டியது இத்தகைய சிந்தனைப் பள்ளிகளிலிருந்து அறிவியலை மீட்டெடுத்துத் தூய்மைப்படுத்துவதுதான். மட்டுமன்றி, 'வஹீ'யின் வாசிப்பு, பிரபஞ்ச வாசிப்பு ஆகிய இரு வாசிப்புகளையும் இணைத்தல் என்ற தர்க்கத்தின் அடிப்படையில் அந்த அறிவியல் மீளவும் செயல்படுத்தப்பட வேண்டும்.

## மையப் புள்ளி மூன்று: அறிவும் அறிவியலும்

அறிவு என்பது முஸ்லிம்களைப் பொறுத்தவரை வாசிப்புடன் தொடர்புபட்டது. அறபிகள் பொதுவாக எழுத்தறிவற்ற சமூகமாக இருந்தனர். அல்-குர்ஆனுக்கு முன்னர் அவர்களிடம் எந்த நூலும் இருக்கவில்லை. அந்த வகையில், அறிவை நோக்கிய அவர்களது பயணத்தின் தொடங்கு தளமாக அல்-குர்ஆனே அமைந்திருந்தது. 'வாசிப்பு'க்கான சாதனமாகவும் அது அவர்களுக்கு இருந்தது. அதில் இறக்கப்பட்ட முதல் வார்த்தையும் 'வாசிப்பு'தான்:

*"வாசிப்பீராக! படைத்த உமது ரட்சகனின் பெயர் கொண்டு. அவன் மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். வாசிப் பீராக! உமது ரட்சகனே சங்கைமிக்கவன். அவன் எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதன் அறியாததனை அவ னுக்குக் கற்பித்தான்". (அல்-அலக்: 1-5)*

இவ்வசனங்கள் பல கருப்பொருள்களை வரையறுத்துக் கூறும்வகையில் அமைந்திருந்தன. வாசிக்கும்படியான ஏவல் அவற்றுள் ஒன்று. அறிவுக்கும் எழுதுகோலுக்குமான தொடர்பும் இங்கு விளக்கப்பட்டுள்ளது. அறிவின் மூல ஊற்று உயர்வும் தூய்மையும் மிக்க இறைவனே என்பதும் விளக்கப்பட்டுள்ளது. இறைவனால் இரத்தக் கட்டியிலிருந்து படைக்கப்பட்ட மனி தனை நோக்கி இங்கே கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இறைவன் அவனுக்குக் கற்றுக் கொடுக்கும் வரை அவன் அறிந்து கொள்வதில்லை என்பதும் உணர்த்தப்படுகிறது. இங்கு ஏவப்பட்டுள்ள 'வாசிப்பு' உயர்ந்த இறைவனின் பெயர் கொண்டு மேற்கொள்ளப்படும் வாசிப்பு. அவனது துணை கொண்டே அந்த வாசிப்பு பயணிக்க வேண்டும். எழுதுகோல்களால் பதியப்படும் அறிவாக அது மாற வேண்டும். மனிதர்களுக்கு மத்தியில் அது பரவ வேண்டும். இங்கு வாசிப்பு என்பது நூல்களில் எழுதப்படும் வரிகளையும், பிரபஞ்சத்தில் விரவிக்கிடக்கும் உண்மைகளையும் உள்ளடக்கும் வகையில் பரந்த அர்த்தத் தில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அப்போது தான் வேதத்தின் அத்தியாயங்களும் வாசிக்கப்படும்; பிரபஞ்சத்தின் திசைகளும் வாசிக்கப்படும்.

*இந்த இரு வாசிப்புகளும் இணைந்து அவ்விணைப்பிலிருந்தே அறிவுகளும், அறிவியல் கலைகளும், அனுபவங்களும், பரிசோத னைகளும் பிறக்க வேண்டும். இவ்வறிவுக் கலைகளின் மீதும், அனுபவங்களின் மீதும், பரிசோதனைகளின் மீதும்தான் அபி விருத்தியும் இறைவிசுவாச நாகரிகமும் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஆக, இத்தகைய பரிபூரண வாசிப்பே பயனுள்ள அறிவியலுக்கும் அத்தியாவசிய அறிவுக்கும் இட்டுச் செல்லும். அந்த வாசிப்பில் முரண்பாடு தோன்றுமானால், அது தனது அறிவார்ந்த வினைத்திறனையும் விளைத்திறனையும் இழந்துவிடும். நபித்தோழர்கள் காலத்திலும் ஆரம்பகால முஸ்லிம்களிடமும் வாசித்தலின் அடிப்படை நோக்கமாக அமைந்தவை அறிவார்ந்த மனப்பாங்கொன்றைக் கட்டியெழுப்புவதும், அதற்கு அவசிய மான மூலாதாரச் சட்டகத்தை வழங்குவதும், அறிவியல் மாதிரியொன்றை முன்வைப்பதுமே. 'இஜ்திஹாத்' என்னும் அறிவு முயற்சி, புத்தாக்கம் என்பவற்றின் மூலமாக அவர்களுக்குத் தேவையான அறிவுகளையும் கலைகளையும் பிறப்பிக்க அந்த அறிவியல் மாதிரியால் முடியுமாக இருந்தது. வஹீயின் வசனங்கள் மிக வரையறுக்கப்பட்ட சொற்களைக் கொண்டிருந்த போதும், அவை வாழ்வு நிலை பெற்றிருக்கும்வரை தோன்றக் கூடிய எண்ணற்ற நிகழ்வுளையும் முழுப்பிரபஞ்சத்தையும் உள்வாங்கும் திறன் கொண்டவை.*

*ஆரம்பகால முஸ்லிம்கள் 'அறிவியல்' என்பது உயர்ந்த இறைவன் சொன்னதும் அவனது தூதர் (ஸல்) சொன்னதும் என்றே புரிந்து கொண்டிருந்தனர். இஸ்லாமிய அறிவியல் கலைகள் புனித வசனங்களுடன் இறுக்கமான தொடர்பைக் கொண்டிருந்தன. அப்புனித வசனங்கள் அறுதியானவையாக (*absolute*) இருந்த போதிலும், அவற்றுடன் உறவாடும் மனிதன் ஒப்பீட்டளவில் வரையறுக்கப்பட்ட படைப்பு. எனவே அவனது புரிதல் அறுதியானதென்றோ புனிதத் தன்மை வாய்ந்ததென்றோ கூற முடியாது. உண்மையில் அவ்வசனங்கள் இறைவனது வார்த்தைகளுக்கான மொழியியல் வாகனமாக அமைந்தவை*

யாகும். மனிதர்களை நோக்கிய தெய்வீக உரையாக அமைந்த அவ்வார்த்தைகளைப் புரிந்து கொள்வதற்கு மனிதர்களுக்கு அகப்பார்வையும், விளக்கமும், அந்த விளக்கத்தை நியமப்படுத்தும் விதிகளும் அவசியம். இப்பகைப் புலத்தில்தான் இஸ்லாமிய அறிவுக் கலைகள் தோற்றம் பெற்றன. அந்த வகையில், தஃப்ஸீர், ஹதீஸ், இறையியல் கோட்பாடு (அல்லது தர்க்க இறையியல்), உஸூல், நியாயவியல் முதலிய 'மகாஸித்' சார்ந்த கலைகள் முதலில் தோன்றின. அடுத்ததாக மொழி, தர்க்கம் முதலிய அறிவைத் தேடுவதற்கும் வழங்குவதற்குமான கலைகள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் இக்கலைகள் சிதறிய நிலையில் மனன அடிப்படையிலும் செவி வழியாகவுமே வழக்கத்திலிருந்தன. ஹி. 99இல் ஃகலீபா உமர் பின் அப்தில் அஸீஸின் கட்டளைப்படி ஸுன்னாவே முதலில் தொகுத்தெழுதப்பட்டது. எனினும் அதற்கு முன்னரும் ஸுன்னா வின் சிலபகுதிகள் பதிவு செய்யப்படும் மரபு மிகக் குறுகிய அளவில் இருந்திருக்கிறது.

ஆயினும், ஸுன்னாவைப் பதிவு செய்யும் பணி பரந்தளவில் ஆரம்பிக்கப்பட்டது ஹிஜ்ரி143 இல் என ஹதீஸ்துறை இமாம் அல்-ஹாஃபிழ் அல்-தகஃபீ வரையறுத்துக் கூறுகிறார். ஹதீஸ் துறை அறிஞர்கள் 'அறிவியல்'(இல்ம்) என்ற பிரயோகத்தை ஹதீஸ், தஃப்ஸீர் மற்றும் அவை போன்று பின்னர் ஷரீஆக் கலைகள் அல்லது புனித வசனம் சார்ந்த கலைகள் என அறியப் பட்ட கலைகளைக் குறிக்கவே பயன்படுத்தினர். அந்த வகையில், அல்-குர்ஆனிலும் ஸுன்னாவிலும் அறிவுக்கும் கற்றலுக்கும் வழங் கப்பட்டுள்ள தூண்டுதல்கள், அதன் ஒழுக்கங்கள், சிறப்புகள் என்பவற்றை மாத்திரம் அவர்கள் 'இல்ம்' என்ற பதத்தின் மீது கருத்தேற்றம் செய்து கொண்டு, ஏனைய அனைத்தையும் அந்த வட்டத்திலிருந்து வெளியேற்றி விட்டனர்.

பின்னர் 'இல்முல் கலாம்' என்னும் தர்க்க இறையியல் கலை யும், உஸூல் அல்-ஃபிக்ஹ் கலையும், அவை தொடர்பான கருத்தாக்கங்களும் பரவலடைந்து, பிறமொழிகளிலிருந்து பெயர்க்கப்பட்ட தர்க்கவாதங்கள் அவற்றுடன் கலப்புற்ற

போது, தர்க்க இறையியல் அறிஞர்களது சிந்தனையில் 'இல்ம்' என்ற பதம் இன்னொரு கருத்துப் பரிமாணத்தைப் பெற்றது. அந்த வகையில், 'அறிவியல்' (இல்ம்), ஒருவரது புரிதல் தரம், 'அறிவு' (மஅரிஃபா), அந்த அறிவைப் பெறும் வழிகள், அதனைப் பிறப்பாக்கம் செய்யும் முறைமைகள் முதலிய அனைத்தையும் ஒன்றிணைத்து 'இல்ம்'என்ற பதத்தைப் பயன்படுத்தினர். அதே வேளை, ஒரே தலைப்பின் கீழ் அமைந்த பல்வேறு துறைகளையும், கிளைகளையும், அவற்றின் இலக்குகளையும், பயன்களையும் மொத்தமாக ஒன்றிணைத்து 'இல்ம்' என அழைக்கும் நடை முறையையும் அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. இவ்வாறு 'இல்ம்' என்ற கருத்தாக்கத்தை வரையறை செய்வதில் தர்க்க இறையியலாளர்கள் மத்தியில் பெரும் முரண்பாடு காணப்பட்டது. மட்டுமன்றி, அவர்கள் கொடுத்த வரைவிலக்கணத்தை இமாம் றாஸீயும் வேறு பலரும் மறுத்துரைத்து, 'அது உள்ளுணர்வு சார்ந்தது' என்றும், வரைவிலக்கணப்படுத்த முடியாதது என்றும் கூறினர். பிற்கால உஸூல் துறை அறிஞர்கள் வழங்கிய பல வரைவிலக்கணங்களை ஷவ்கானீயும் திரட்டித் தொகுத்திருக்கிறார். அவ்வரைவிலக்கணங்களைக் கூறியோரையும், அவர்கள் வாழ்ந்த காலங்களையும் அவதானிக்கும்போது, அக்கருத்தாக்கம் அவர்களது பயன்பாட்டில் அடைந்திருந்த முன்னேற்றம் பற்றியும், எத்தகைய அவதானங்களோடு அதனை அவர்கள் பயன்படுத்தினார்கள் என்பது பற்றியும் நம்மால் அதிகம் தெரிந்து கொள்ள முடிகிறது.

'அல்-இல்ம்' பற்றிய அனேக பிற்கால முஸ்லிம் அறிஞர்களது முடிவு பின்வருமாறு அமைந்திருக்கின்றது:

"சான்றின் அடிப்படையில், யதார்த்தத்துடன் பொருந்தும் வகையில், மாறாமலும் திடமாகவும் அமைந்த புரிதலை அது குறிக்கும்".

மறுபுறத்தில்'மஅரிஃபா' என்றபிரயோகத்தைப்பொறுத்தவரை, அதுவும் 'அல்-இல்ம்' என்பதும் ஒரே அர்த்தத்திலானவை என்பது ஓர் அபிப்பிராயம். இரண்டும் வேறுவேறானவை என்பது

மற்றோர் அபிப்பிராயம். ஏனெனில், 'மஅரிஃபா' என்பதற்கு முந்திய நிலையாக 'ஜஹ்ல்'(அறியாமை) என்பது இருக்க முடியும். ஆனால் 'இல்ம்' அவ்வாறனதல்ல. அந்த வகையில்தான், ஒருவர் 'அறிந்தவர்' என்ற அர்த்தத்தில் 'ஆரிஃப்' என்று குறிக்கப் படாமல் 'ஆலிம்' என்ற பண்பினால் குறிக்கப்படுகிறார்.

எவ்வாறாயினும், 'இல்ம்', 'மஅரிஃபா' ஆகிய இவ்விரு பதங் களும் ஒன்றுக்கொன்று பகரமாக பயன்படக் கூடியவையாகும். அந்த வகையில், தர்க்கவியல் கலையில் இவ்விரண்டுமே கருத்துருவாக்கத்தையும் பகுத்தறிவு ஒப்புதலையும் முழு மையாகப் புரிந்துகொள்ளுதல் என்ற அர்த்தத்தில் பயன் படுத்தப்படலாம். எழுத்துருப்படுத்தப்பட்ட அறிவியல் கலைகளின் வரைவிலக் கணங்களில் 'இல்ம்', 'மஅரிஃபா' ஆகிய இரண்டினாலும் நாடப்படும் அர்த்தமும் இதுவே.

'இல்ம்' என்ற பிரயோகத்தை தனக்கு முன்பு வாழ்ந்த முஸ்லிம்கள் எவ்வாறெல்லாம் பிரித்து வகைப்படுத்தினார்கள் என்பதை சுருக்கமாகக் கண்டறிய முயன்ற அல்-ஜுர்ஜானீ பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

'இல்ம்'என்பது இரு வகையானது: ஒன்று சாஸ்வதமானது. மற்றையது கால வரையறைக்கு உட்பட்டது. சாஸ்வதமான 'இல்ம்' என்பது இறைவனது மெய்ம்மையில் இருப்பது. மனிதனது கால வரையறைக்குட்பட்ட இல்மை அதனுடன் ஒப்பிட முடியாது. கால வரையறைக்குட்பட்ட 'இல்ம்' என்பது கூட மூன்று உப பிரிவுகளைக் கொண்டது: உள்ளுணர்வானது (Intuitive), இன்றிய மையாதது (necessary), உய்த்தறியப்படுவது (deductive).

இமாம் கஸ்ஸாலி (றஹ்) அறிவியல் கலைகளை (உலூம்) இரு வகைகளாகப் பிரிக்கிறார்: ஒன்று ஷரீஆ சார்ந்தவை. மற் றையது ஷரீஆ சாராதவை. முதல் வகை அறிவு நபிமார்கள் வழியாகப்பெறப்பட்டது. மனிதப் பகுத்தறிவு மூலமாகவோ, அனுபவத்தின் மூலமாகவோ, செவி வழியாகவோ அதனை அடைய முடியாது. இரண்டாவது வகை அறிவு புகழத்தக்கவை,

இகழத்தக்கவை, ஆகுமானவை என மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது. ஷெய்ஃகுல் இஸ்லாம் இப்னுதைமியா அதனை மூன்று வகைகளாகப் பிரிக்கிறார்:

ஒன்று: பகுத்தறிவு சார்ந்தவை. மெய்யியலாளர்கள் இவற்றை தர்க்கம், இயற்கையியல், இறையியல் என்பன சார்ந்த அறிவு களாக நோக்குகின்றனர். அதனால்தான் அவர்களுள் இணை வைப்பாளர்கள், விசுவாசிகள் ஆகிய இரு வகையினரும் காணப் பட்டனர்.

இரண்டு: மதம் சார்ந்தவை. தர்க்க இறையியலாளர்கள் ஆரா யும் அம்சங்களான படைப்பாளனை உறுதிப்படுத்துதல், நபித்துவங் களையும் ஷரீஆ சட்டவாக்கங்களையும் உறுதிப்படுத்துதல் போன்றன இவற்றுள் அடங்கும்.

மூன்று: ஷரீஆ சார்ந்தவை. அல்-குர்ஆன் மற்றும் ஸுன்னா சார்ந்தவர்கள் ஆராயும் அம்சங்கள் இவற்றுள் அடங்கும்.

எனினும்,இப்னுதைமியாவின்மாணவரானஇப்னுல்கையிமிடம் வேறு விதமான பிரிப்பு முறைகாணப்பட்டது. ‘இல்ம்’ என்பது ‘அறிந்த ஒன்றின் வடிவத்தை வெளியேயிருந்து நகர்த்தி வந்து மனதில் பதியச் செய்தலாகும்’ என்பதுஅவரது அபிப்பிராயமாக இருந்தது. அந்தவகையில், உள்ளத்தில் பதிந்திருப்பது உண்மைக்கு இயைபானதாக இருக்குமாயின் அதுவே சரியான ‘இல்ம்’ என அவர் கூறினார். உள்ளத்தில் பதிந்திருக்கும் அல்லது தோன்றும் பல விம்பங்கள் யதார்த்தத்தில் எந்த இருப்பும் அற்றவை. அத்தகைய தோற்றங்களை தன் மனதில் பதித்து வைத்திருப்பவர் அவற்றை ‘இல்ம்’ என எண்ணலாம். ஆனால் அவை யதார்த்தத்தில் இல்லாத அனுமானங்கள் மட்டுமே. மனிதர்களது அனேகமான அறிவுகள் இவ்வகை சார்ந்தனவே. வெளியிலிருக்கும் யதார்த்தத்துடன் ஒத்திசையும் ‘இல்ம்’ இருவகையாகும்:

ஒன்று: தெரிந்துகொள்வதன் மூலமாக ஆன்மா முழுமை யடையும் அறிவு. இறைவனையும், அவனது பெயர்கள், பண்புகள், செயல்கள், வேதங்கள், ஏவல்கள் விலக்கல்கள் முதலியவற்றையும் பற்றிய அறிவு இதுவாகும்.

*இரண்டு: ஆன்மா முழுமையடைவதற்குப் பங்களிக்காத அறிவு. தெரிந்து கொள்வதால் பயனோ, தெரிந்து கொள்ளாத தால் தீங்கோ ஏற்படாத அறிவை இது குறிக்கிறது. நபி (ஸல்) அவர்களும் பயனற்ற அறிவிலிருந்து இறைவனிடம் பாதுகாப்புக் கேட்டிருக்கிறார்கள். வானவியல், அதன் பல்வேறு நுணுக்கங்கள், கிரகங்களின் எண்ணிக்கை, அவற்றின் அளவுகள், மலைகளின் வகைகள், எண்ணிக்கைகள், அவற்றின் பரப்பளவு போன்றவை தொடர்பான அறிவை இவ்வகைக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். இவை பற்றிய அறிவின்மையால் ஒருவருக்குத் தீங்கு நேர்வதில்லை. ஆக, அறிவின் மதிப்பு என்பது அறியப்படுவதன் மதிப்புக்கும், அதன் இன்றியமையாமைக்கும் ஏற்பவே அமை யும். இறைவன் பற்றிய அறிவையும் அதனோடொட்டிய அறிவுகளையும் தவிர வேறெதற்கும் எல்லையற்ற பெறுமதியோ மதிப்போ கிடையாது.*

*கிந்தீ, ஃபாராபீ, இப்னுஸீனா போன்ற 'இஸ்லாத்தின் மெய்யிய லாளர்கள்' என அறியப்பட்டவர்களைப் பொறுத்தவரை, அவர் கள் 'இல்ம்' என்பதற்கு வழங்கியுள்ள பகுப்புமுறையானது - சில இடங்களில் வேறுபாடு காணப்பட்டாலும்- பொதுவாக இரு அடிப்படையான பிரிவு களுக்குள் அடங்கி விடுகின்றன. அந்த இரு பிரிவுகளுள் ஒவ்வொன்றும் மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது. அந்த வகையில், சித்தாந்தஅறிவுக் கலைகள் (*theoretical sciences*) என்ற முதல் பிரிவுக்குள் கணிதவியல், இயற்கை விஞ்ஞானம், இறையியல் என்பனவும், பிரயோக அறிவுக் கலைகள் (*applied sciences*) என்ற இரண்டாம் பிரிவுக்குள் விழுமிய நெறி முறை கள், மனைப் பொருளியல், சிவில் நிர்வாகம் என்பனவும் அடங்குகின்றன.*

*இப்னுஃகல்தூன் அறிவுஞானக் கலைகளை இரண்டு வகை களாகக் குறிப்பிடுகிறார். முதல்வகை, தத்துவஞானம் தொடர் பான கலைகளாகும். இவற்றை மனிதன் இயல்பான சிந்தனை யால் புரிந்து கொள்ள முடியும். இதன் உள்ளடக்கங்களையும் கிளை விவகாரங்களையும் சான்றுகளையும் அவனது புலன்*

களால் அறிந்து கொள்ள முடியும். மனிதன் சிந்தனை செய்பவன் என்ற வகையில் அவனால் இவற்றிலுள்ள சரியையும் தவறையும் பிரித்தறிந்து கொள்ளவும் முடியும். இரண்டாவது வகை, வஹீ மூலமாகவும் ஆதாரபூர்வமாக நகர்த்தப்பட்டு வந்த வசனங்கள் மூலமாகவும் ஸ்தாபிக்கப்பட்ட இஸ்லாமிய சட்டத்துடன் தொடர்பான கலைகளாகும். இவையனைத்தும் இறைத் தூத ரிடமிருந்து நகர்த்தப்பட்ட மரபுகளை ஒட்டியவை என்ற வகையில், மனிதனின் பகுத்தறிவுச் செயற்பாடுகளுக்கு இங்கு இடமில்லை. எனினும், கிளைச் சட்ட விவகாரங்களை அவற்றின் அடிப்படை களோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் அளவில் இங்கு மனிதப் பகுத்தறிவுக்கு இடமுண்டு. ஏனெனில், கால - இட வர்த்தமானங்களுக்கு அமைவாக அவ்வப்போது எழும் அனைத்துக்கிளைப் பிரச்சினைகளையும் அகிலம் தழுவிய ஆதாரபூர்வ வசனங்களுக்குள் அடக்கி விட முடியாது. அந்த வகையில், 'கியாஸ்' (analogy) ஒப்பீட்டு முறை வழியாக அக்கிளை விவகாரங்களை மூலாதார வசனங்களுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது தவிர்க்க முடியாதது. இப்னு ஃகல்தூனின் கூற்றுப்படி, இவ்வனைத்து இஸ்லாமிய சட்டவியல் கலைகளுக்குமான வேர் அல்-குர்ஆனும் ஸுன்னாவுமாகும். அவ்விரண்டும் இறைவனிடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் நமக்கு வழங்கப்பட்டவை. அவற்றிலிருந்து பயன் பெறும் நோக்குடன் உருவாக்கப்பட்ட கலைகளையும் இங்கு சேர்த்துக் கொள்ளலாம்.

இப்னுஃகல்தூனுக்குப் பின் வந்தவர்களும் அறிவு பற்றியும், அதன் யதார்த்தம் பற்றியும், அதன் கிளை விவகாரங்கள் பற்றியும் அடிப்படையில் அதே பார்வையைத்தான் கொண்டிருந்தனர். அவர்களைப் பொறுத்த வரையிலும்கூட, அறிவு என்பது உள்ளடக்கம், வகைப்பாடுகள், எல்லைகள், சிறப்பு முதலியவை தொடர்பான ஆய்வுகளுக்கப்பால் செல்லவில்லை. சன்மார்க்க வசனங்கள் (நுஸூஸ்) மீதான வாசிப்பை மாத்திரமே அது குறித்தது.

'பிரபஞ்சத்தை வாசித்தல்' என்பது அப்போது சில அறி வுக் கலைகளில் மேலோங்கியிருந்ததெனினும், அதுகூட "ஒரு பொதுவான கடமையைச் செய்வதற்கு மற்றொரு

விடயமும் அவசியமாக இருக்குமாயின் அதனைச் செய்வதும் கடமையாகும்" என்ற நோக்கிலேயே இடம்பெற்றது. வானவியல், மருத்துவம், கணிதம், பொறியியல் முதலிய துறைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அதேபோல், ஒளியியல், மருத்துவம் போன்ற வேறுபட்ட துறைகளில் சில அரிதான அறிவியல் ஆளுமைகள் வரையறுக்கப்பட்ட முன்னெடுப்புகளில் ஈடுபட் டிருந்தமையையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அம்முன்னெடுப்புகள் தனக்கென்றொரு முறைமையைக் கொண் ட அறிவாய்வு மாதிரி யொன்றுக்கு (epistemological system) வழியமைக்கவில்லை.

ஷெய்ஃகுல் இஸ்லாம் முஸ்தஃபா சப்ரி "அகிலங்களின் ரட்சகன் பற்றியும் அவனது தூதர்கள் பற்றியும் பகுத்தறிவும் அறிவியலும் விஞ்ஞானியும் கொண்டிருக்கும் நிலைப்பாடு" என்ற தனது பிரபல நூலில், அறிவியல் (இல்ம்) என்பதன் மூலம் நாடுவது ஐயத்துக்கிடமற்ற திடமான அறிவையே. அத் திடமானஅறிவுக்கான அடிப்படையாக புலன்களும் பரிசோத னைகளும்அமைந்திருக்கவும் முடியும்; 'வஹீ' மீதான விசுவாசம் அமைந்திருக்கவும் முடியும். ஏனெனில் முஸ்லிம் மனிதனைப் பொறுத்தவரை, அறிவின் மூல ஊற்று 'வஹீ'யும் பிரபஞ்சமும் ஆகும். அந்த அறிவைப் பெறும் வழிமுறைகளே புலன்களும் பரிசோதனைகளுமாகும். அந்த வகையில், ஒருவர் பகுத்தறிவைப் பயன்படுத்தி 'வஹீ'யின் வழிகாட்டலுடன், அல்லது புலன்களைப் பயன்படுத்தி பரிசோதனை வழியாக நிச்சயமான சில உண்மை களைக் கண்டடைவாராயின், அவையனைத்தும் நம்பத் தகுந்த அறிவினுள் அடங்குபவையே. அனேகமான இஸ்லாமிய அறிஞர் களது அபிப்பிராயத்தின் படி இத்தகைய அறிவு 'நிச்சயத் தன்மை' என்ற பண்பினால் குறிக்கப்பட்ட போதிலும், இறைவன் அல்லாதவற்றுக்குப் பரிபூரண நிச்சயத்தன்மை என்ற பண்பை வழங்குவது சிரமமானது. ஏனெனில், இறைவனின் அறிவு மட்டுமே விவாதத்துக்கு இடமற்ற வகையில் சர்வ நிச்சயமானது. ஆனால் மனிதனைப் பொறுத்தவரை, அவன் முழு நிச்சயமான

உண்மைகளையோ வேறு விபரங்களையோ புரிந்து கொள்ளல் என்பது அவனது புரிதல் தரத்தின் மீது தங்கியிருக்குமேயன்றி குறித்த உண்மைகளின் மீதல்ல. அந்த வகையில், ஒருவர் ஒரு விடயம் பற்றித் திட்டவட்டமாக அறிந்து கொள்ளும் போது அதனை 'அறிவு' (இல்ம்) என அழைக்க முடியும். நியாயமான இடம்பாடு கொண்ட (reasonable certainty) அறிவாக இருந்தால் அது 'அனுமானம்' (ளன்) என அழைக்கப்படும். ஒரு விடயத்தை அவர் உண்மை எனப் புரிந்து கொண்டாலும், சான்றுகள் அதற்கு மாற்றமான நிலையைக் காண்பிக்குமாயின் அது 'அறியாமை' (ஜஹ்ல்) என அழைக்கப்படும்.

நவீன காலத்தில் 'இல்ம்' என்ற கருத்தாக்கம் மேற்கத்தியக் கலாசாரத்தாலும் கருத்தாக்கங்களாலும் பெரியளவு தாக்கமடைந் துள்ளது. மேற்கத்தியக் கலாசாரம் என்பது சார்பியத்தன்மை (relativism) கொண்டது என்பது வெளிப்படையானது. அதன் தோற்றமும் மூலாதாரங்களும் இலக்குகளும் எடுத்தாளும் விவ காரங்களும் விசித்திரமானவையாக இருந்தாலும், மேற்குலக ஆதிக்கமும் கருத்தாக்கங்களும் கொண்டிருக்கும் சர்வதேச வியாபகத்தின் காரணமாக அவை முழு உலகத்தின் மீதும் படர்ந்திருப்பதைக் காணமுடிகிறது. இஸ்லாமிய உலகும் அதற்கு விலக்கல்ல.

பொதுவாக 'இல்ம்' என்ற சொல்லை இயற்கை விஞ்ஞானத்தின் மீதும், பரிசோதனைக்கும் அவதானத்துக்கும் உட்படுகின்ற விவகாரங்கள்மீதும் மட்டுமே பிரயோகிக்கின்ற இம்மேற்கத்தியப் போக்கினால் தாக்கமடைந்த பலர் அதனைப் புலவயப்பட்ட அம்சங்களுக்கும், பரிசோதனைக்கு உட்படக் கூடிய விவகாரங் களுக்கும், அவை தொடர்பான முறைமைகளுக்கும் மாத்திரம் உரியதாக வரையறுத்துக் கொண்டனர். அந்த வகையில், 'யுனெஸ்கோ' நிறுவனம் 'அறிவு' (இல்ம்) என்பதை, "புலனறிவுக்கும் பரிசோதனைக்கும் உட்படக்கூடிய அனைத்தும்" என வரை விலக்கணப்படுத்தியது. சிலர் 'இல்ம்' என்ற பிரயோகத்தை -அதன் விரிந்த பொருளில் - ஒரு குறிப்பிட்ட முறைமையும்

அடிப்படைகளும் ஒழுங்கும் கொண்ட எந்தவொரு அறிவுத் துறைக்கும் வழங்கலாம் எனக்கருதிய அதேவேளை, அப் பதத்தை நுணுக்கமான பொருளில் பிரயோகிக்க விரும்பிய வேறு சிலர் பரிசோதனை அறிவுக்கு மட்டுமே அதனைப் பயன்படுத்தலாம் என்றனர்.

இன்று கூட அறபு எழுத்தாளர்கள் மேற்கத்திய சிந்தனையாளர் களது அர்த்த பேதங்களுக்கேற்ப 'இல்ம்' என்ற பதத்தை வெவ்வேறு அர்த்தங்களில் மீண்டும் மீண்டும் பயன்படுத்திக் கொண்டுதானிருக்கின்றனர். அந்த வகையில்தான், இவ்விவகாரம் அவ்வப்போது மேலெழுவதையும், அதன் பிரயோகம் பற்றிய சர்ச்சை தோன்றுவதையும் பார்க்கிறோம்.

ஆயினும் இன்றைய நிலை போட்டிக்கும் போராட்டத்துக்கு மான நிலையல்ல. நமது நோக்கையும் பாதையையும் தெளிவு படுத்திக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் நமக்கு நாமே உண்மையாக இருப்பதை வேண்டி நிற்கும் நிலை இது. இந்நிலையில், எந்தவொரு தனித்த வாசிப்பும் மனித குலத்தை அதன் நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கப் போதுமானதல்ல.

'இல்ம்' என்ற கருத்தாக்கம் பற்றிய இத்தகைய பழைய-நவீன முரண்பாடும், அப்பிரயோகம் எந்தத் துறைகளைச் சுட்ட முடியும் என்ற முரண்பாடும், அறிவியலின் மேன்மை பற்றிய முரண்பாடும் முஸ்லிம்பிரக்ஞையிலிருந்து எப்போதோ தூர விலக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுதான் 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' பணியின் திடமான நிலைப்பாடாகும். ஏனெனில், முஸ்லிம் பிரக்ஞையானது இருவகையான வாசிப்பை ஒன்றாக இணைத்து தனக்கான அடிப்படையை இட்டுக் கொள்ளும் கடப்பாடு கொண் டது. வஹீ, பிரபஞ்சம் ஆகிய இரு அடிப்படைகளிலிருந்தே அவ்விரு வாசிப்புகளும் பெறப்பட வேண்டும். இவ்விரு மூலாதாரங்களிலிருந்து நிதானமாகப் பெறப்படும் அறிவையே யாவுமறிந்தவனும் தேர்ச்சி மிக்கவனுமாகிய இறைவனும் ஆசீர்வதிக்கிறான். ஏனெனில், அந்த இறைவன்தான் மனிதன் அறியாததை அவனுக்குக் கற்றுக் கொடுத்தான். அனைத்துப்

படைப்புகளையும் வசப்படுத்திக் கொடுத்து, பிரபஞ்சத்தை சத்தியத்தாலும் நீதியாலும் ஆளக்கூடிய பிரதிநிதியாகவும் அவனை ஆக்கினான். பிரபஞ்சம் சீராக இயங்குவதற்கான மாறா நியதிகளையும் வகுத்தளித்தான். அந்த நியதிகளுக்கு மாற்றோ பதிலீடோ கிடையாது. ஆனால் பொருள்முதல்வாதக் கோட்பாடுகளோ பிரபஞ்சத்தின் படைப்பாளனையும், படைப் பின் நோக்கத்தையும் புறக்கணித்தன. இயற்கைத் தோற்றப் பாடுகளை தற்சார்பான தோற்றப்பாடுகளாக அவை பார்த்தன. அத்தோற்றப்பாடுகள் உயர்ந்த சக்தியொன்றின் தலையீடு எதுவு மின்றி தாமாகவே விருத்தியடைந்து புதிய வடிவங்களாகத் தகவமைவதாக அவை கருதின.

ஆனால் 'வஹீ'யை வாசித்தல், பிரபஞ்சத்தை வாசித்தல் ஆகிய இரு வாசிப்புகளையும் ஒன்றிணைப்பதானது அனைத்து அறிவுகளுக்கும் ஒரு கண்ணியத்தைப் பெற்றுத் தருகிறது. ஏனெனில், அவை மனிதனுக்கு இறைவன் வழங்கிய அருள். இறைவன் தனக்கு வழங்கிய பணியை மேற்கொள்வதற்கு மனிதன் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அந்த வகையில்தான், 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' செயல்வாதமானது 'வஹீ' யிலிருந்து பெறப்பட்ட அறிவுக்கும், பிரபஞ்சத்திலிருந்து பெறப்பட்ட அறிவுக்கும் இடையில் மோதல் இருப்பதான வாதத்தை நிராகரிக்கிறது. தமக்குள் பரஸ்பரம் மோதிக்கொண்டு மற்றதை விடத் தன்னை மேலானதாக நிலை நிறுத்திக்கொள்ள முயலும் இரட்டைத் தனிமங்களாக இவ்வறிவுகளை அது நோக்குவதில்லை. அதற்கு மாற்றமாக, 'இஸ்லாமியப் படுத்தல்' என்பது மனித அறிவியல் நாகரிகச் சாதனைகளுக்கும் பல்வேறு தத்துவார்த்தப் பரிந்துரைகளுக்கும் இடையிலான தொடர்பை வேறாக்கி, தெய்வீக வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்ட முறையான அறிவாய்வுச் (epistemological) சட்டகமொன்றினுள் அவ்வறிவியலை மீளப் பயன்படுத்தும் முயற்சியாகும்.

ஆக, 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' என்பது பயனாக்க அறிவியலையும், அறிவியல் அடிப்படைகளையும் இஸ்லாமியப் படுத்துவதாகும். அறிவியலின் நியதிகளுக்கும் விதிகளுக்கும், பிரபஞ்சத்தின் நியதிகளுக்கும் விதிகளுக்கும் இடையிலான ஒற்றுமை பற்றிய புரிதலுடன் இது இடம்பெற வேண்டும். அறிவியலை இஸ்லாமிய நோக்கில் திசைப்படுத்தி, உயர் தெய்வீக இலக்குகளைச் சாதிக்கும் வகையில் அதனைப் பயன்படுத்த வேண்டும். சமூகவியல் கலைகளை இஸ்லாமியப் படுத்துவதும் இக்கருத்தாக்கத்தினுள் அடங்குவதுதான். ஏனெனில், அதன் மூலமாகவே அறிவியல் கோட்பாடுகளுக்கான தத்துவார்த்தப் பரிந்துரைகளை இஸ்லாமியப்படுத்தும் பணியும், படைப்பாளனையும் மறைவான உண்மைகளையும் புறக்கணிக்கின்ற சடவாதப் பரிமாணத்திலிருந்து அவற்றை விடுவிக்கும் பணியும் முழுமையடையும். அந்த வகையில், இவ்வறிவுகளை மீள்வார்ப்புச் செய்வதும், முழுப் பிரபஞ்சப் படைப்பினதும் தெய்வீக நோக்கத்துடன் அவற்றைத் தொடர்பு படுத்துவதன் மூலமாக பிரபஞ்சப்பரிமாணங்களுள் அவற்றைச் சட்டகப்படுத்துவதுமே 'அறிவை இஸ்லாமியப்படுத்த'லின் பணியாகும். எனவே, இக்கட்டத்தில் 'வஹீ'யின் விஞ்ஞானத் தன்மையை வலியுறுத்துவதோ, ஏனைய மூலாதாரங்களின் விஞ்ஞானபூர்வமற்றதன்மையைவலியுறுத்துவதோதேவையற்றது. மட்டுமன்றி, புலன்களையும் பரிசோதனைகளையும் அடிப்படையாகக் கொண்டவற்றின் விஞ்ஞான பூர்வத்தன்மையை வலியுறுத்துவதோ, வேறு மூலாதாரங்களிலிருந்து பிறந்தவற்றின் விஞ்ஞான பூர்வமற்ற தன்மையை வலியுறுத்துவதோ கூட இங்கு அவசியமற்றது.

குறிப்பிட்ட சில ஆய்வுத் தலைப்புகளில் முரண்பாட்டைக் கிளப்பும் வேலையில் 'அறிவை இஸ்லாமியப்படுத்தல்' செயற்பாடு ஈடுபடுவதில்லை. அறிதலுக்கான முறைமையொன்றை வார்த்தெடுப்பதன் மூலமாக அனைத்து அறிவுகளையும் உள்வாங்கவே அது முயல்கிறது. அந்த அறிதல் முறைமையானது

அறிவுகளையும் விதிகளையும் ஆய்வு முறைகளையும் பிரபஞ்சம், வஹீ ஆகிய இரண்டையும் தழுவிய வாசிப்பு முறையொன்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும். அந்தவகையில், 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' பணியானது ஏதோவொரு வழியில் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக அல்லது தனக்குச் சட்டபூர்வ அந்தஸ்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக மானிட அறிவுகள் மீது சமய முத்திரை குத்த முயல்வதில்லை.

'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' இயக்கமானது இந்தக் கட்டத்தை முன்னேற்றகரமான கட்டமாகக் கருதுகிறது. முஸ்லிம்கள் இக்கட்டத்தில் கடந்த நூற்றாண்டில் நிலவிய 'நெருக்கமாதல்' என்ற சிந்தனையையும், சில இடங்களில் இன்றுவரை காணப் படுகின்ற 'ஒப்பிடுதல்' என்ற சிந்தனையையும் தாண்டிச்செல்ல வேண்டும் என அது எதிர்பார்க்கிறது. எனவேதான், - பாரம் பரிய அறிவாயினும் நவீன அறிவாயினும் - அனைத்து மனித அறிவுகளையும் முழுமையான மீளாய்வொன்றுக்கு அது உட் படுத்தி வருகிறது. அத்தகையதொரு மீளாய்வினால் தான் முழு மானிட சிந்தனையையும் தெளிவான எல்லைகளுக்குள் ஒழுங்கு படுத்தும்ஆற்றல்கொண்டசிந்தனையாகஇஸ்லாமியசிந்தனையை (அது கொண்டிருக்கும் அல்-குர்ஆனிய அறிவு முறைமை மூலமாக) மாற்ற முடியும். இணக்கப்படுத்தல் அல்லது மத்தியஸ்தம் வகித்தல் அல்லது மோதுதல் சார்ந்த விவகாரங்களில் ஈடுபடாமலும் அதனை விலக்க முடியும். 'வஹீ' யிலிருந்தும் பிரபஞ்சத்திலிருந்தும் பிறக்கின்ற இவ்வறிவு முறைமையே இன்று மனித இனத்துக்கு மிகவும் தேவைப்படுகிறது. தனது பிரதிநிதித்துவப் பணியை மேற்கொள்ளவும், நாகரிகப்பிரசன்னத்தையும் பொறுப்பையும் நிறைவேற்றவும் சக்தி கொண்டவனாக மனிதனை மாற்றுவதற்கும் இவ்வறிவு முறைமையினால்தான் சாத்தியமாகும்.

### மையப்புள்ளி நான்கு: கலாசாரமும் நாகரிகமும்

'கலாசாரம்' என மொழிபெயர்க்கப்படும் 'ஃதகாஃபா' என்ற சொல் 'ஃதகிஃப' என்ற வினைச்சொல்லிலிருந்து பெறப்பட்ட

தாகும். ஒருவர் திறமை, விவேகம், புரிதல் என்பவற்றைக் கொண்டவராகவும், ஒரு பணியைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டு அதனைச் சாதித்து முடிப்பவராகவும் இருப்பதை - மொழி ரீதியாக - இவ்வினைச்சொல் குறிக்கிறது. கோணலான ஒன்றை நேராக்குதல், சீர்படுத்தல், சரியாக்குதல் என்ற பொருள்களையும் இச்சொல் குறிக்கலாம்.

மொழிரீதியான பொருள்களை அடிப்படையாகக் கொண்டு 'ஃதகாஃபா' என்ற கருத்தாக்கத்தையும், அதன் பரிமாணங் களையும், பொருள் கோடல்களையும் முனைவர் நஸ்ர் முஹம்மத் ஆரிஃப் பின்வருமாறு வரையறை செய்திருக்கிறார்:

1. அறபுமொழியில் 'ஃதகாஃபா' என்ற கருத்தாக்கம் மனிதனின் சுயத்திலிருந்து பிறப்பதேயன்றி வெளியேயிருந்து அவனுக்குள் விதைக்கப்படுவதல்ல. அந்த வகையில், இப்பதமானது மனிதனின் படைப்பியல்பைத் தூய்மைப்படுத்தி, பண்படுத்தி, சீர்படுத்தி அவனுக்குள் மறைந்திருக்கும் அர்த்தங்களை வெளிக்கொண்டுவரத் தூண்டும் செயல்பாட்டையும், மனிதனுக்குத் தேவையான அறி வுருவாக்கத்துக்கான சக்தியை வழங்கும் செயல்பாட்டையும் குறிக்கிறது.

2. அறபு மொழியில் 'ஃதகாஃபா' என்ற கருத்தாக்கம் சத்தியம், நீதி, நன்மை, முதலிய - மனித இருப்பைச் சீர்படுத்தி அதன் கோணலை நேராக்கக் கூடிய - அனைத்துப் பெறுமானங்களையும் தேடிப் பெறுவதைக் குறிக்கிறது. அந்த வகையில் இக்கருத்தாக்கம் மனிதப் பகுத்தறிவுக்கு முன்னால் பயனும் நன்மையும் கொண்ட அனைத்து அறிவுகளுக்குமான வாயிலைத் திறந்து விடுகிறது. அவ்வாயில் வழியாக மனித இருப்பைப் பாழ்படுத்தக் கூடிய அறிவுகளோ பெறுமானங்களோ உள்நுழைய முடியாது. சீர்படுத் துதல், நேராக்குதல் முதலிய பணிகளுக்கு இசைவற்ற அம்சங்களும் அதன் வழி யாக நுழைய முடியாது.

3. 'ஃதகாஃபா' என்பது மனிதனது சூழமைவுக்கும் சமூ கத்துக்கும் இயைந்த வகையில் அவனுக்குத் தேவையான

அறிவின் மீது மாத்திரம் கவனம் குவிக்குமேயன்றி, பொதுவாக எல்லா அறிவுகளிலும் அறிவியல் கலைகளிலும் அது கவனம் செலுத்துவதில்லை. இப்னு மன்ளூர் கூறுவது போல், "அவன் விரைவான புரிதலும் புத்திக்கூர்மையும் கொண்டவன் (ஃதகிஃபுன்). அதாவது, தனக்குத் தேவையானது குறித்த திடமான அறிவு கொண்டவன்". இப்பொருள் கோடலானது 'தஃகாஃபா' என்ற கருத்தாக்கத்தை மனிதன் வாழுகின்ற சமூ கச் சூழமைவுடன் பிணைக்கிறது. இவ்வாறன்றி - culture என்ற கருத்தாக்கம் போன்று - குறிப்பிட்டதொரு கலாசாரத் துடன் ஒப்பிட்டு பிற கலாசாரங்களை வகைப்படுத்துகின்ற எந்த அளவுகோலுடனும் 'தஃகாஃபா' தொடர்பு படுத்தப் படுவதில்லை. ஏனெனில் அப்படியான அளவு கோல்கள் பிற கலாசாரங்களைக் கையாளும் விடயத்தில் திணிப்பையும் போஷிப்பையும் சுய அளவீட்டுத்தன்மையையும் கொண்டிருக்கும். மனிதன் தனது காலத்திலும் சமூகத்திலும் சூழமைவிலும் தனக்கு என்ன தேவை என்பதைப் பற்றிய திடமான அறிவு கொண்டவனாக இருந்தால், அவன் அறபு மொழியில் 'முஃதக்கஃப்' எனப்படுகிறான். அந்த வகையில், 'முஃதக்கஃப்' என அழைக்கப்படுபவன் - அவனது மூளைக்குள் குவிக்கப்பட்டிருக்கும் அறிவுகளுக்கும் தகவல்களுக் கும் அப்பால் - தன் சமூகத்துடனும் அதன் விவகாரங்களுடனும் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டவனாக இருப்பான். மாலிக் பின் நபி கூறுவது போல், சில வேளை அந்த அறிவுகளும் தகவல்களும் இறந்தவையாகவோ பயங்கரமானவையாகவோ கூட இருந்திருக்க முடியும். ஆக, 'தஃகாஃபா' என்பதன் மூலம் நாடப்படுவது சமூக விவகாரங்களையும் அவற்றைச் சீர்படுத்துபவற்றையும் புரிந்து கொள்வதாகும். அந்த வகையில் 'முஃதக்கஃப்' என்பவரது பாத்திரம் சீர்திருத்தவாதியின் பாத்திரமாகும்.

இதற்கு மாறாக, 'தஃகாஃபா' என்பது அறிவுகள், பழக்கவழக் கங்கள், பெறுமானங்கள் என்ற அர்த்தத்தில் புரிந்துகொள்ளப்படுமாயின், அது பல்வேறு மாதிரிகளிலான புத்திஜீவிகள் தோன்றவே வழிவகுக்கும். அத்தகைய புத்தி

ஜீவிகள் ஒன்றில் ஒரு குறிப்பிட்ட நாகரிக மாதிரியே சரியானதும் அறுதி உண்மையானதும் என நம்பி அதனை நடைமுறைப்படுத்துவதற்காகத் தமது சொந்த சமூகத்தை நாசப்படுத்துபவர்களாக இருப்பர்; அல்லது ஒன்றுக்கொன்று முரண்பாடான அறிவுகளையும் தகவல்களையும் குவித்து வைத்திருக்கும் பாத்திரங்களாக இருப்பர்.

4. ‘தஃகாஃபா’ என்பது ஒருபோதும் முடிவடையாமல் புதிது புதிதாக வளரும் செயல்முறையாகும். ஒரு குறிப்பிட்ட மனிதன் அல்லது சமூகம் கலாசாரப் படிநிலைகளின் உச்சத்தைத் தொடுமளவு அறிவுகளையும் அறிவியல் கலைகளையும் பெறுமானங்களையும் பெற்றுவிட்டதாக அது அர்த்தம் தராது. மாறாக, சுய புதுப்பிப்பே பண்படுத்தல் மற்றும் திருத்தியமைத்தல் சார்ந்த கருத்தாக்கங்களின் பொருளாகும். அதாவது, மீள மீளப் பண்படுத்தல், சுய மதிப்பீடு செய்தல், கோணல்களைச் சீர்படுத்தல் என்பவற்றை அது குறிக்கிறது.

5. ஒரு குறிப்பிட்ட கலாசாரம் பிற்போக்கும் காட்டு மிராண்டித்தனமும் கொண்டதா? அல்லது முன்னேற்றமும் நவீனத் தன்மையும் உள்ளொளியும் கொண்டதா?.. என்றவாறாக அதன் தரத்தை நிர்ணயிக்கின்ற விழுமியத் தீர்ப்புகளை ‘ஃதகாஃபா’ என்ற கருத்தாக்கம் கொண்டிருப்பதில்லை. ஏனெனில், பண்படுத்தி விருத்தி செய்தல் என்ற கருத்தாக்கத்தின் தொடக்கப் புள்ளியானது அனைத்துக் கலாசாரங்களையும் - அவ்வச் சமுதாயங்களது விழுமியங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப அவற்றை மதிப்பீடு செய்வதன் மூலமாக - சம அளவான மானிடப் பெறுமானத் தரத்தில் வைக்கிறது.

6. ‘ஃதகாஃபா’ என்ற கருத்தாக்கம் வரையறை செய்யப்பட்டதோ தனியான வேறுபாடு கொண்டதோ அல்ல. அது மனிதனுக்கும் குழுமத்துக்கும் சமூகத்துக்கும் பொதுவானது. அனைத்து வகையான மானிடச் செயல்பாடுகளையும், அவற்றின் பல் வேறு தரங்களையும் அது உட்பொதிந்திருக்கும்.

பொதுவாக பண்படுத்தலும் சீர்திருத்தமும் நிகழ்கின்ற எத்தகைய பகுப்பாய்வுக்கும் அது இடமளிக்கும்.

'நாகரிகம்' (ஹழாறா) என்ற கருத்தாக்கத்தைப் பொறுத்த வரை, இப்னுஃகல்தூன் அப்பிரயோகத்தை civilization என்பதற்கான ஐரோப்பியப் புரிதலின் வேர்களுக்கு இசைவாகவே பயன் படுத்தியுள்ளார் என முனைவர் நஸ்ர் கருதுகிறார். அந்த வகையில்தான், இப்பிரயோகத்துக்கு இப்னு ஃகல்தூன் வழங்கிய அர்த்தங்களுடன் அறபு ஆய்வாளர்களும் நின்று கொண்டனர் என்றும் அவர் கூறுகிறார். ஆனால் 'ஹழாறா' என்பது மனித வாழ்வியக்கத்தைச் சட்டகப்படுத்தி குறிப்பிட்ட விழுமியப் பண்புகளை அதற்கு வழங்குகின்ற முழு நிறைவான கருத்தாக்கம் எனக் கொண்டு இப்னு ஃகல்தூன் அது பற்றிப் பேசவில்லை. மாறாக, அவரது பிரயோகமானது 'முகத்திமா' என்ற அவரது நூல் கொண்டிருக்கின்ற சிந்தனைச் சட்டகத்துக்கும், தேசம் மற்றும் அதன் படிநிலை வளர்ச்சிகள் பற்றிய அவரது கருத்தாடலுக்கும் இசைவான வகையிலேயே முற்றிலும் அமைந்துள்ளது. மட்டுமன்றி, 'தவ்லா' (தேசம்- state) என்பதை அதன் நவீன அர்த்தத்தில் (அதாவது, மக்களும் பிராந்தியமும் அரசாங்கமும் என்ற அர்த்தத்தில்) அவர் பயன்படுத்தவில்லை என்பதும் இங்கு அவதானிக்கத் தக்கது. 'தவ்லா' என்ற பிரயோகத்தை அவர் அரசியல் ஒப்பந்தங்களை அல்லது சமூக ஒழுங்குகளை அல்லது அதிகாரம் பரம்பரையாகக் கைமாறும் செயல்பாட்டை அல்லது ஆளும் குடும்பங்கள் மாறி மாறி ஆட்சிக்கு வருவதைக் குறிக்கவே பயன்படுத்தியுள்ளார். அந்த வகையில், நாகரிகம் என்ற கருத்தாக்கத்தையும் மேற்குறித்த கருத்தாக்கத்தின் அர்த்தங்களிலொன்றை மட்டும் குறிக்கும் வகையில்தான் அவர் பயன்படுத்தியுள்ளார். 'பாலைவனங்களிலன்றி நகர்ப்புறத்தில் வாழ்தல்' என்ற அர்த்தத்தில், 'ஹழர்' என்ற சொல்லிலிருந்து பிரியும் சொல்லாகவே அவரால் அது பார்க்கப்படிருக்கிறது.

இங்கு பிரச்சினை இப்னு ஃகல்தூனின் பிரயோகமல்ல. மாறாக அறபு ஆய்வாளர்கள் தமது பொருள்கோடல்களை

civilization என்ற கருத்தாக்கத்திலிருந்து பெற்றுக் கொண்டார்கள் என்பதிலிருந்தே பிரச்சினை தொடங்குகிறது. இப்பொருள் கோடல்கள் அவர்களிடம் ஓர் அடிப்படையான தளத்தைப் பிரதிபலித்ததுடன், அவர்களது சிந்தைகளில் குறிப்பிட்ட சில தன்மைகளைக் கொண்ட கற்பனா விம்பமொன்றையும் உருவாக்கியிருந்தன. அந்த வகையில்தான் அவர்கள் 'ஹழாறா' என்ற சொல்லை அதன் ஏனைய அர்த்தங்களிலிருந்து விடுவித்து, 'நகர்ப்புறங்களில் வசித்தல்' என்ற பொருள்கோடலை மாத்திரம் எடுத்துக் கொண்டனர். அந்தப் புரிதலுடன்தான் இப்னு ஃகல்தூனையும் பழைய அறபு அகராதிகளையும் கூட உசாவினர். தமது சிந்தையில் பதிந்திருந்த பொருள்கோடலுக்கு நிகரான அறபுப்பிரயோக மொன்றை தேடிப் பெறுவதே அவர்களது நோக்கமாக இருந்தது. அதாவது அவர்களது முயற்சியானது குறித்த கருத்தாக்கம் தொடர்பாக அறபு மொழி எத்தகைய அர்த் தங்களை உட்பொதிந்திருக்கிறது என்பதை அம்மொழியைப் பேசவிட்டே தெரிந்து கொள்வதாக அன்றி, தமது சிந்தைகளில் பதிந்திருந்த புரிதலுக்கு இசைவான அறபுப் பிரயோகமொன்றைத் தேடிப் பெறும் முயற்சியாகவே அமைந்திருந்தது.

'லிசானுல் அறப்', 'அல்-காமூஸ் அல்-முஹீத்', 'அசாஸ் அல்-பலாஙா' முதலிய அகராதிகளும் பிறவும் 'ஹழற' என்ற அடிச்சொல்லுக்கு ஏழு அர்த்தங்களைக் குறிப்பிட்டுள்ளதை நாம் அவதானிக்க முடிகிறது. அவற்றுள் முதன்மையானதும், மிகப் பொதுவானதும், அடிக்கடி பயன்படுத்தப்படுவதுமான பொருள் 'பிரசன்னமாயிருத்தல்' (ஷஹித) என்பதாகும். அதாவது 'மறைந்திருத்தல்' என்பதன் எதிர்ப்பொருளை அது குறிக்கிறது. அந்த வகையில், நாகரிகம் (ஹழாறா) என்பது 'பிரசன்னமா யிருத்தல்' (ஷஹாதா) ஆகும்.

எல்லா மொழி அகராதிகளிலும் தரப்பட்டுள்ள முதல் அர்த் தம் இதுதான். குறித்த பிரயோகத்தின் அடிப்படையாக, அல்லது 'ஹழற' என்பதன் இணைச்சொல்லாக 'ஷஹித' இருப்பதை இது காட்டுகிறது. இருந்தபோதிலும், ஹழாறா என்பதன் மொழி

ரீதியான அடிப்படையை உசாவிய அனை வரும் 'நகர்ப்புறத்தில் வசித்தல்' அல்லது 'நாடோடி வாழ்வுக்கு எதிரானது' என்ற அர்த்தத்திலேயே அதனைக் குறித்தனர்.

'ஹழற' என்பதற்கு 'பிரசன்னமாயிருத்தல்' என்ற மொழிக் கருத்துக்குச் சான்றாகப் பின்வரும் பிரயோகங்களை அல்-குர் ஆனில் நாம் காண முடிகிறது:

"உங்களில் ஒருவருக்கு மரணம் வந்து விட்டால்..(ஹழற)" (அல்-பகறா: 180)

"பாகப் பிரிவினையின்போது நெருங்கிய உறவினர்கள் சமூ கமளித்திருந்தால்... (ஹழற)" (அந்-நிசாஉ: 8)

"உங்களில் அம்மாதத்தை அடைந்தவர் (ஷஹித) அதில் நோன்பு நோற்கட்டும்". (அல்-பகறா: 185)

இவ்வசனங்கள் அனைத்தும் 'ஷஹாதா' அல்லது 'ஹுழூர்' என்ற பொருளையே தருகின்றன.

'ஷஹாதா' என்ற பிரயோகம் அல்-குர்ஆனில் நான்கு அர்த் தங்களைக் கொண்டிருக்கிறது. இந்நான்கு அர்த்தங்களும் ஒன்றிணைந்தே இஸ்லாமியப் புரிதலில் 'ஹழாறா' அல்லது 'ஷஹாதா' என்ற கருத்தாக்கம் பிறக்கிறது. இவ்வர்த்தங்களை வேறு வேறாகப் பிரிக்க முடியாது. அப்படிப் பிரித்தால் அவை தமது உள்ளடக்கத்தையும் பொருளையும் இழந்து விடும். ஏனெனில், இந்நான்கு அர்த்தங்களுள் ஒவ்வொன்றும் 'ஷஹாதா' என்ற கருத்தாக்கக் கட்டமைப்பின் ஒரு பகுதியைப் பிரதிபலிப்பவை. ஆக, இவற்றுள் எந்தவொன்றும் தனியாக நின்று 'ஹழாறா' என்ற கருத்தாக்கத்தை முழுமையாக வெளிப்படுத்தும் என்று சொல்ல முடியாது. அவையனைத்தும் ஒரே நிரலில் திரண்டிருந்தால்தான் குறித்த கருத்தாக்கத்தின் முழுப் பொருள் நிதர்சனமாகும். நான்கு அர்த்தங்களும் பின்வருமாறு:

1. 'ஷஹாதா' என்பது இறைவனது ஏகத்துவத்தை ஏற்று அவனுக்கு அடிபணிதல்; 'உலூஹிய்யத்'திலும் 'றுபூபிய்யத்' திலும்

அவன் ஏகன் என்பதை விசுவாசித்தல். இஸ்லாமிய இறையியல் கோட்பாட்டின் அச்சாணி இதுதான். மனிதன் இறைவனது வழிகாட்டலைப் பேணி ஒழுகுவதா அல்லது அதனை மீறுவதா என்பது இதன் மூலமே தீர்மானிக்கப் படுகிறது.

2. 'ஷஹாதா' என்பது உண்மையைப்பேசுவதும் நீதியின் பாதை யைப் பின்பற்றுவதும்; அல்லது வெளிப்படுத்துவதும் தெளிவு படுத்துவதும்; அல்லது அவதானிப்பதும் கவனிப்பதும். அந்த வகையில், அறிவைப் பெறுவதற்கான வழிகளுள் ஒன்றாகவும் சாதனங்களுள் ஒன்றாகவும் இது உள்ளது.

3. 'ஷஹாதா'என்பது இறைவனின் பாதையில் உயிர்த்தியாகம் செய்தல்; இறை நம்பிக்கையைப் பாதுகாக்கவும், மனிதன் சக மனிதனுக்குத் தலை வணங்கும் நிலையிலிருந்து விடுவித்து ஏக இறைவனுக்குத் தலைவணங்கும் நிலைக்குக் கொண்டு வரவும் அர்ப்பணங்கள் மேற்கொள்ளல்.

4. 'ஷஹாதா' என்பது இந்த 'உம்மா'வின் சாட்சியமளிக்கும் பணி. "இவ்வாறுதான் நீங்கள் மனிதர்களுக்குச் சாட்சியாளர் களாக இருப்பதற்காகவும், தூதர் உங்களுக்குச்சாட்சியாளராக இருப்பதற்காகவும் உங்களை நடுநிலைச் சமுதாயமாக ஆக்கி னோம்".(அல்-பகறா: 143)

இங்கு 'ஷஹாதா' என்ற பதத்தின் அர்த்தம் உலகம், மறுமை ஆகிய இரண்டுக்கும் பொருந்தும். ஏனெனில், 'ஷஹாதா' என்ற கடமையை நன்மையும் நடுநிலையும் கொண்ட ஒரு சமுதாயமே மேற்கொள்ளும். அச்சமுதாயத்தின் இஸ்லாமிய ஆளுமை பிற ஆளுமைகளில் கரைந்து விடாத அல்லது தனது பண்புகளில் எதையும் இழந்து விடாத தனித்தன்மையைக் கொண்டிருக்கும். அதன் மூலமாக, பிறசமுதாயங்கள் நம்பிக்கையுடன் பின்பற்றத் தகுந்த முன்மாதிரியாக அது திகழும். 'மனிதர்களுக்குச் சாட்சி பகர்தல்' என்பது இந்த உம்மா ஒரு சுதந்திரமான - சர்வதேச சக்தியாக இருப்பதாகும். உம்மாவின் ஆரம்ப முஸ்லிம்கள் புரிந்திருந்ததும் அப்படித்தான். அந்த வகையில், நீதியை

அடிப்படையாகக் கொண்டு அது செயற் பட வேண்டும்; பிறரது தெரிவுச் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்; அடியார்கள் அடியார்களுக்குச் சிரம் பணியும் நிலையிலிருந்து விடுபட்டு ஏக இறைவனுக்குச் சிரம் பணியும் பண்பு கொண்ட புதிய சமூகமொன்றை நிலைநிறுத்தும் சுதந்திரத்தை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும். மட்டுமன்றி, மதங்களின் மாச்சர்யங்களிலிருந்து அவர்களை விடுவித்து இஸ்லாத்தின் நீதியை நோக்கி அது அழைத்துச் செல்ல வேண்டும்; உலக வாழ்வின் நெருக்குதலிலிருந்து விடுவித்து, உலகம்-மறுமை ஆகிய பரந்த வாழ்வை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும்.

இந்நான்கு அர்த்தங்களுக்கும் அமைவாக, 'ஹழாறா' (நாகரிகம்) என்பது 'ஹுழூர்', 'ஷஹாதா' ஆகிய இரண்டினதும் முழு அர்த்தங்களையும் உள்ளடக்கியதாகும். இவ்வர்த்தங்களிலிருந்து பிறக்கும் மனித மாதிரியானது இறைவனின் ஏகத்துவத்தையும் தெய்வீகப் பெறுமானங்களையும் உள்வாங்கியிருக்கும்; பிரபஞ்சத்தைப் படைத்து அதன் இயங்கியல் விதிகளையும் நியதிகளையும் ஏற்படுதியவனுடன் தொடர்பைப் பேணும். அந்த வகையில் தான், பிரபஞ்சப் படைப்பாளனின் பிரதிநிதியாக நின்று அவனது பூமியை வளப்படுத்தி முன்னேற்றுவதும், மானிட வாழ்வை அழகாக்குவதும் மனிதனது பணியாகவும் தூதாகவும் அமைகிறது. பூமியின் அதிகாரத்தைப் பொறுப்பேற்று, அதன் செல்வங்களிலிருந்து பயன் பெறுவது அவனது கடமையாகிறது. எனவே அவற்றை அழகிய முறையில் அவன் பயன்படுத்த வேண்டும்; அவையும் இறைவனைத் துதிக்கின்ற படைப்புகள் என்ற வகையில் அல்லது இறைவன் தனக்களித்த வாழ்வாதாரம் என்ற வகையில் அவற்றுடன் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும். அதேபோல், பூமியில் மனிதர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுடன் சகோதரத்துவம், நன்மை, இணக்கம், உலக-மறுமைச் சுபீட்சத்தை நோக்கிய அழைப்பு என்பவற்றின் அடிப்படையிலான உறவொன்றை அவன் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

*'ஹழாறா' என்ற கருத்தாக்கத்திற்கு இஸ்லாமிய மூலாதாரங் களில் காணப்படும் அர்த்தமும், இஸ்லாத்தின் அனுபவத்திற்கு இயைபான வரைவிலக்கணமும் இதுதான். இந்நிலையில், இஸ்லாத்தின் சட்டகத்துக்கு வெளியேயான மனிதப் பரிசோ தனைகளை அல்லது அனுபவங்களை எப்படி நோக்குவது? இஸ்லாத்தை விசுவாசிக்காத அத்தகைய அனுபவங்களுக்கும் இவ்வரைவிலக்கணம் பொருந்துமா? அல்லது - மாற்று அனுப வங்களை ஐரோப்பிய நோக்கு புறம்தள்ளுவது போல் - இத் தகைய அனுபவங்களை 'ஹழாறா' என்ற வட்டத்திலிருந்து வெளியேற்றிவிடுவதா? அல்லது மேலே குறிப்பிட்ட 'ஹழாறா' பற்றிய வரைவிலக்கணம் தனித்துவமானதும், பிற மானிட அனுபவங்களின் மீதும் பரிசோதனைகளின் மீதும் பிரயோகிக்க முடியாததா? அப்படிக் கொண்டால், இஸ்லாம் என்பது எல்லா மனிதர்களுக்குமான மார்க்கம் எனவும், அனைத்துப் பிரபஞ்சத் தோற்றப்பாடுகளையும் அது உட்பொதிந்திருக்கிறது எனவும், "வேதத்தில் நாம் எதனையும் புறக்கணிக்கவில்லை" (அன்-ஆம்: 38) எனவும் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு அது ஏற்புடையதாகுமா?*

*இஸ்லாத்தில் 'ஹழாறா' என்ற கருத்தாக்கத்தின் உட்கரு 'பிரசன்னமாயிருத்தல்' (அல்-ஹுழூர் வ அஷ்-ஷஹாதா) என் பதை மேலே கண்டோம். அந்த வகையில், இப்பொருளிலான நாகரிகமே இஸ்லாத்தின் நாகரிகமாகும்; அல்லது இத்தகைய அகிலத்துவப் பிரசன்னமே இஸ்லாத்தின் பிரசன்னமாகும். ஏனைய அனுபவங்கள், மதங்கள், சிந்தனைப் பள்ளிகள் அனைத்தினது பிரசன்ன மாதிரியும் கூட அவ்வாறானதுதான் என்பது இதன் பொருளல்ல. மாறாக, ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்துவமான பிரசன்னம் இருக்க முடியும். அப்பிரசன்னம் இஸ்லாத்தின் பிரசன்னத்துக்கு அண்மையானதாகவோ சேய்மை யானதாகவோ அமைந்திருக்கவும் முடியும். அந்தவகையில், நாகரிகம் என்ற கருத்தாக்கம் அதன் பொதுவான பொருளில் பொதுவானதொரு பிரசன்னமாகும். அதாவது, தனது*

அனைத்துப் பரிமாணங்களாலும் வாழ்வுக்குத் தேவையான மனித மாதிரியொன்றை வார்க்க முடிந்த எந்தவொரு மனித அனுபவத்தின் பிரசன்ன மாதிரியாகவும் அது இருக்க முடியும். ஏனெனில், ஒவ்வொரு பிரசன்ன மாதிரியும் பிறர் பின்பற்ற மிகப் பொருத்தமான மானிட மாதிரியாக தானே இருப்பதான நம்பிக்கையுடன்தான் பிறருக்குத் தன்னை முன்வைக்கிறது.

ஆக, 'பிரசன்னம்' என்பது எந்தவொரு சமூகத்தின் அனுபவத்திலும் ஒரு முன்னேற்றகரமான படி நிலையாகும். எனினும், பல மானிடசமூகங்கள் 'பிரசன்னம்' இன்றி வெறும் 'இருப்பு'டன் மாத்திரம் நின்று விடுபவையாகத் தான் இருக்கின்றன.அந்த வகையில், 'ஹழாறா' என்ற பிரயோகத்தை அவற்றுக்கு (அவை அறிவு ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் எவ்வளவு உற்பத்திகளை நிகழ்த்தியிருந்தாலும்) வழங்க முடியாது. இங்கு எழும் கேள்வி இதுதான்: பிரசன்னத்துக்கும் இருப்புக்கும் இடையிலான வேறுபாடு என்ன? இருப்பின் வகைமாதிரியை அறிந்து கொள்வதும் மதிப்பீடு செய்வதும் எப்படி? பிரசன்னம் என்பது எப்போதும் மனித வாழ்வுக்குப் பொருத்தமான சிறந்த ஒழுங்கமைப்புத்தானா? இவ்வர்த்தத்தில் 'ஹழாறா' என்பது எப்போதும் நல்ல பெறுமானமாக இருக்குமா? மனித வாழ்வின் முன்னேற்றகரமான கட்டமாகவோ சிறந்த பண்பாகவோ அது இருக்குமா?

எந்தவொரு சமூகமும் உருவாவதற்கு பெறுமானங்கள், அளவுகோல்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள், நடத்தைகள் என்பவற்றாலான ஒழுங்கொன்று அவசியம். அவ்வாறே, கண்டுபிடிப்புகள், சாதனங்கள், நிறுவனங்கள், பௌதீகக் கட்டுமானங்கள், கலைகள், உற்பத்திச் சாதனங்கள், வாழ்வாதாரங்கள் என்பவற்றின் ஒழுங்கொன்றும் அதற்குத் தேவை. குறித்ததொரு சமூகத்தில் இவ்விரு ஒழுங்குகளும் காணப்படுமாயின், பூமியை வளப்படுத்தும் பணியையும், அதன்மீது மனித மாதிரியைக் கட்டியெழுப்பும் பணியையும் அது ஏதோவொரு வகையில் சாதித்திருக்கிறது எனக் கூறலாம். ஆயினும் இது'ஹழாறா'

(நாகரிகம்) என்ற அர்த்தத்தைத்தராது. ஏனெனில், ஒரு சமூகத்தில் வெறுமனே வளம் அல்லது செழிப்பு (prosperity) காணப்படுதல் என்பது அதன் இருப்பை மட்டுமே குறிக்கும். சீனா, மாயா, இன்கா, ஸுலு முதலிய சமூகங்களின் இருப்பை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதற்கு மாறாக, 'பிரசன்னம்' (ஹுழூர்) என்பது 'வளம்' என்பதற்கு மேலாக மனித இனம் பின்பற்றத்தக்க மாதிரியொன்றையும் வழங்க வேண்டும். அதாவது பிற மனிதர் களோடும் பிரபஞ்சப் படைப்புகளோடுமான உறவுகளின் ஒழுங்கொன்றை அது முன்வைக்க வேண்டும். உள்ளடக்கம் எதுவாயினும் பின்பற்றத் தகுந்த அல்லது நன் மாராயம் தரத்தகுந்த மானிட மாதிரியொன்றை அது வழங்க வேண்டும்.

நற்பெறுமானம் எதுவும் சேர்க்கப்படாத நிலையில் நாகரிகம் என்பது - மேற்சொன்ன அர்த்தத்தில் - மோசமானதாகவோ அல்லது நாசகரமானதாகவோ அல்லது மனித வாழ்வுக்குப் பொருத்தமற்றதாகவோ இருக்க முடியும். ஆயினும், பின்வரும் பரிமாணங்கள் காணப்படும் பட்சத்தில் அது 'நாகரிகம்' என அழைக்கப்படுவதில் எந்தத் தடையுமில்லை:

1- மறைவான உலகோடும் தெய்வீகக் கருத்தாக்கத்தோடுமான தொடர்பைத் தீர்மானிக்கக் கூடிய நம்பிக்கை முறையொன் றை அது கொண்டிருத்தல். அவ்வொழுங்கு நேர்நிலையானதாக இருக்கவும் முடியும்; எதிர்மறையானதாக இருக்கவும் முடியும்.

2- பொதுவான பெறுமானங்களையும் விழுமியங்களையும் வழக்காறுகளையும் வடிவமைக்கக் கூடிய சிந்தனா-நடத்தைக் கட்ட மைப்பொன்று அதனிடம் காணப்படல்.

3- கண்டுபிடிப்புகள், கருவிகள், நிறுவனங்கள், ஒழுங்குகள், கட்டட நிர்மாணம், நுண்கலைகள் மற்றும் ஏனைய அனைத்து ஸ்தூல வாழ்வுப் பரிமாணங்களையும் உள்ளடக்கிய பௌதீக மாதிரியொன்று காணப்படல்.

4- பிரபஞ்சத்தோடும் அதன் வளங்களோடுமான தொடர்பாடல் மாதிரியையும், அவற்றுடன் இடைவினையாற்றுவதற்கான விதி களையும் வரையறுத்திருத்தல்.

5- பிற சமூகங்களுடன் உறவாடுவதற்கான மாதிரியை வரை யறுத்திருத்தல். அவற்றுடன் இடை வினையாற்றுவதற்கான அடிப் படைகள், விதிகள், தனது மாதிரி மீது அவற்றைத் திருப்திகாணச் செய்வதற்கான முறைமை, அவ்வாறு திருப்திகாணச் செய்வதன் நோக்கம் முதலியன இம்மாதிரியினுள் அடங்கும்.

இப்பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு மானிட அனுபவங்களை வரைவிலக்கணப்படுத்தவும் மதிப்பீடு செய்யவும் எம்மால் முடியும். அவை இருத்தல்(existence) என்ற நிலையைத் தாண்டி 'பிரசன்னம்' (presence) என்ற நிலையை அடைந்திருத்தல் வேண்டும் என்பது இங்கு முக்கிய மானது. உதாரணமாக, நவீன ஐரோப்பிய நாகரிகத்தை எடுத்துக் கொண்டால், அதற்கு இப்பரிமாணங்கள் பற்றிய வரையறுத்ததொரு நிலைப்பாடு உண்டு. மறைவான உலகம் பற்றியும் கடவுள் குறித்தும் அதனிடம் ஒரு நிலைப்பாடு உள்ளது. அதற்கென ஒரு சிந்தனைக் கட்டமைப்பும் பெறுமானங்களும் நடத்தைகளும்கூட உண்டு. அதே போல், சில தனித்துவப் பண்புகள் கொண்ட சடவாதக் கட்டமைப்பும் அதற்குள்ளது. சூழலோடும் பிற படைப்புகளோடும் இடை வினையாற்றும் முறைமை யொன்றும் அதனிடம் உள்ளது. (ஐரோப்பியரல்லாத) பிற சமூகங்களுடன் உறவாடுவதற்கும் அதனிடம் குறித்ததொரு முறைமையும் வரையறுத்த நோக்கங்களும் உள்ளன. எனவே ஐரோப்பிய நாகரிகத்தை வர்ணிக்க அல்லது அதன் உண்மை நிலையை அறிந்து கொள்ள நாம் விரும்பினால், இப்பரிமாணங்கள் பற்றிய அதன் நிலைப்பாட்டை ஆய்வதும் மனித இனத்துக்கு அது முன்வைக்கும் மனித மாதிரி பிற்பற்றத் தகுந்ததா இல்லையா என்பதை அறிவதும் அவசியம். இதே அணுகுமுறையை வேறு மானிட அனுபவமொன்றின் மீதும் நாம் பிரயோகித்துப் பார்க் கலாம்.

*ஆக, பூமியிலுள்ள அனைத்து மனிதக் குழுமங்களும் தங்களது சொந்த மரபுகளையும் மாதிரிகளையும் உதறித் தள்ளி விட்டுப் பின்தொடரக் கூடிய மிகச் சிறந்த மாதிரியாக ஒரு நாகரிகம் இல்லாதவரை அது பல்பயன் கொண்ட நாகரிகமாக இருப் பது தர்க்கரீதியாகச் சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது. அவ்வாறே, நாகரிகங்களுக்கிடையிலான போட்டியும் மோதலும் மனித இருப்பின் இயல்பில் தவிர்க்க முடியாதது. ஏனெனில், வேறுபாடு என்பது பிரபஞ்சத்தில் இறைவன் ஏற்படுத்தி வைத் திருக்கும் நியதிகளுள் ஒன்று:*

*“வானங்களும் பூமியும் படைக்கப்பட்டிருப்பதும், உங்களது மொழிகளும் நிறங்களும் வேறுபட்டிருப்பதும் அவனது அத் தாட்சிகளைச் சேர்ந்தவை”. (அர்-ரூம்: 22)*

*அதேபோல், ஒவ்வொரு நாகரிகமும் மனிதனுக்கான உயர்ந்த மாதிரியொன்றைச் சுமந்திருக்குமென்று கருத முடியாது. ஏனெனில், ‘நாகரிகம்‘ என்ற சொல் தன்னளவில் ஒரு நல்ல பெறுமானத்தை அல்லது பொருட்களுக்கும் சிந்தனைகளுக்கும் வழங்க முடியுமான ஒரு நல்ல பண்பைக் குறிப்பிடுவதில்லை. மாறாக, அது சார்பியமற்றதொரு சொற்பிரயோகம். அதன் உள்ளடக்கமானது குறிப்பிட்ட பிரசன்ன மாதிரிக்கும் அதன் உட்கூறுகளுக்கும் ஏற்பட மாறுபடக்கூடியது.*

*இத்தொடங்கு தளத்திலிருந்துதான் மனிதனது அனைத்து அறிவுகளும், அறிவியல் கலைகளும், முறைமைகளும், கோட் பாடுகளும், பெறுமானங்களும் பார்க்கப்பட வேண்டும். மனித இனத்தின் தோற்றுவாய் ஒன்றாக இருப்பதனால் மாத்திரம் அதன் அறிவுகளும், அறிவியல் கலைகளும், முறைமைகளும், பெறுமானங்களும் ஒருமித்த தன்மை கொண்டவையாக இருக்கு மென்று கூறுவது தர்க்க பூர்வ மானதல்ல. அப்படி இருக்குமாயின், மேலாதிக்கம் கொண்ட நாகரிகத்தின் அறிவியல் கலைகளையும் கோட்பாடுகளையும் முறைமைகளையும் உலகப் பொது அறிவியல்களாகவும் கோட்பாடுகளாகவும் முறைமைகளாகவும்*

திணிக்கும் நிலையாகத்தான் அது காணப்படும். மனித அடிப்படை ஒன்றே என்பதால் எல்லா அறிவுகளும் அறிவியல் கலைகளும் ஒன்றே என ஆகிவிடாது. ஏனெனில், மனிதன் பிறக்கும்போதே இந்த அறிவுகளையும் அறிவியல் கலைகளையும் கொண்டு வருவதில்லை. வேத வெளிப்பாட்டிலிருந்தும், சூழல், சமூகம், காலம், இடம் என்பவற்றுடனான இடைவினைகளிலிருந்தும், அனுபவத் திரட்சியிலிருந்தும், பாரம்பரியமாகவுமே இவற்றை அவன் பெற்றுக் கொள்கிறான்.

*"இறைவன் உங்களை உங்கள் தாய்மாரின் வயிறுகளிலிருந்து வெளியேற்றினான். அப்போது நீங்கள் எதுவும் அறியாதவர்களாக இருந்தீர்கள். அவனே உங்களுக்கு கேள்வியையும் பார்வையையும் உள்ளங்களையும் வழங்கினான்". (அந் நஹ்ல்: 78)*

கேள்வியும் பார்வையும் உள்ளமுமே மனித அறிவின் நுழை வாயில்கள். அந்த வாயில்கள் மூலமாகத்தான் நமக்கு மத்தியில் சுற்றிக் கொண்டிருக்கும் கோட்பாடுகளையும் முறைமைகளையும் நாம் மீள் பரிசீலிக்கவும் மதிப்பீடு செய்யவும் வேண்டும். 'பிரசன்னம்' என்ற பண்பைக் கொண்ட மாதிரிக்கமைவாக இப்பணி மேற்கொள்ளப்பட்டு, மனித இனம் பின்பற்றத் தக்க வகையில் அது முன் வைக்கப்பட வேண்டும்.

நாகரிகம் என்ற கருத்தாக்கத்தின் இப்பொருள்தான் ஒவ்வொரு மனித அனுபவத்துக்கும் ஒரு தனித்துவத்தையும் தனியான சுவையையும் தருகிறது. எந்தவொரு மானிட அனுபவமும் அது முன்வைக்கின்ற மாதிரியின் அடிப்படையிலன்றி வேறு எந்த வகையிலும் ஏனைய அனுபவங்களை விட உயர்வாகக் கருதப்பட முடியாது. அவ்வாறு அது முன்வைக்கும் மாதிரியானது மனிதனது 'ஃபித்றா' என்னும் படைப்பியல்புக்கு ஒத்திசைவானதாகவும் ஏற்புடையதாகவும் இருக்கவேண்டும்.

இப்பின்னணியில்தான், இன்றைய உலகில் செல்வாக்குச் செலுத்தும் அறிவியலினதும், கோட்பாடுகளினதும், முறைமை களினதும் தகைமையை மீள் பரிசீலனை செய்வது அதீத முக்கியத்

துவம் கொண்டதாகிறது. ஏனெனில், அதன் மூலமாகத்தான் நவீன நாகரிகங்களை சரியாக அறிவதும், மதிப்பீடு செய்வதும், பின்னர் அதனை அடிப்படையாகக் கொண்டு அவை பற்றிய இஸ்லாமிய நாகரிகத்தின் நிலைப் பாட்டை அறிவதும் சாத்தியமாகும்.

## மையப்புள்ளி ஐந்து: இஸ்லாமிய-மானிட முதுசம்

முன்னைய முஸ்லிம்கள் இறைவனது வேத வசனங்களையும் நபிகளாரது வாழ்வியலையும் பற்றிய தங்களது புரிதலை அடிப் படையாகக்கொண்டு, அவை தொடர்பான பல அறிவியல் கலைகளைக் கட்டியெழுப்பினார்கள். அவ்வாறு தோன்றிய உசூல், தர்க்க இறையியல், சட்ட நியாயவியல் மற்றும் நாகரிகம் சார்ந்த அனைத்து முதுசங்களும் குறித்த வசனங்கள் பற்றிய அவர்களது புரிதலையும் விளக்கத்தையும் ஆய்வையும் பிரதிபலிப்பவையாய் அமைந்தன.உண்மையில் அப்புரிதலும் விளக்கமும் அறிவாய்வியல் செயற்பாட்டின் தொடர் வளர்ச்சிக்கு உதவும் காரணியாகவே இருந்திருக்க வேண்டும். எனினும், பின் வந்த சிலர் சங்கை மிகுஅல்-குர்ஆனின் பண்புகளுக்கும் புனித ஸுன்னாவின் பண்புகளுக்கும் நெருக்கமான பண்புகளை அப்புரிதலின் மீதேற்றி அறிவாய்வியல் செயற்பாட்டைத் தடை செய்யும் காரணியாக அதனை மாற்றி விட்டனர். இதனால், அம்முதுசங்களுடன் உறவாடும் பல மாணவர்களும் ஆசிரியர்களும் அவற்றிலிருந்து தமக்குத் தேவையானதை நவீன சொற்பிரயோகங்களில் மீட்டுருவாக்கம் செய்வதுடன் போதுமாக்கிக் கொண்டனர். ஏறக்குறைய அல்குர்ஆனும் ஸுன்னாவும் பதியப்பட்ட காலம்தொட்டு அம்முதுசங்களில் அனேகமானவை விளக்கவுரைகளாகவும், அறிக்கைகளாகவும், அடிக்குறிப்புகளாகவுமே மீட்டுருவாக்கம் செய்யப்பட்டுவந்திருக்கின்றன. இறுதியில் அவை தற்கால விரிவுரையாளர்கள் வழங்கும் குறிப்புகளாகவும் சுருக்கங்களாகவும் மாறுமளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது.அபாயகரமான இத்தோற்றப்பாடு கடந்த காலங்களில் கண்மூடிப் பின்பற்றும் மனப்பாங்கைக் கூர்மைப்படுத்தியது; இன்றும் கூர்மைப்படுத்தி வருகிறது.

இந்தவகையில்தான், நமது இஸ்லாமிய முதுசங்களைப் புரிந்து கொள்வதும், அவற்றை விமர்சனப் பகுப்பாய்வு அடிப்படையில் மீள்வாசிப்புச் செய்வதும் அவசியமாகிறது. அத்தகைய புரிதலும் மீள்வாசிப்புமே தற்காலத்தில் நமது முதுசங்களைக் கையாளும் முறைகளை பெரும்பாலும் ஆளுகை செய்கின்ற மூன்று சுழல்களிலிருந்து நம்மை வெளியே கொண்டு வரும். மொத்தமாக நிராகரித்தல், மொத்தமாக ஏற்றுக்கொள்ளல், தன்னிச்சையாகவும் தாறு மாறாகவும் தேர்ந்தெடுத்தல் ஆகிய அம்மூன்று சுழல்கள் பற்றி முன்னரும் விளக்கியிருக்கிறோம் என்பதை இங்கு நினைவூட்டுகிறோம். அம்மூன்று சுழல்களும் இன்று நமக்குத் தேவையான அறிவுத்தொடர்பாடல் புரட்சியை ஏற்படுத்த எவ் வகையிலும் உதவப்போவதில்லை. அன்று முதல் இன்று வரை பயன்படுத்தப்பட்டு வரும் இவ்வணுகுமுறைகளே தற்காலத்தில் நமது முதுசங்களைத் தடைக்கற்களாகவும், எதிர்காலத்தைச் சூறையாடுபவையாகவும் மாற்றியிருக்கின் றன.

'வஹீ'யின் வழிகாட்டலையும் பிரபஞ்ச விதிகள் பற்றிய புரிதலையும் அடிப்படையாகக் கொண்டு ஓர் ஆரோக்கியமான அறிவாய்வு முறைமையூடாக நமது முது சங்கள் மீள்வாசிப்புச் செய்யப்படுமானால், இம்மூன்று சுழல்களிலிருந்தும் வெளியேற அதுவே போதுமானது. இஸ்லாமிய முதுசம் தொடர்பான முடிபுகளை மேற்கொள்ளும் போது இப்பண்புகள் கவனிக்கப் படுவது அவசியமாகும். அது இவ்விவகாரங்களில் மட்டுமன்றி, முஸ்லிம் சிந்தையானது பல்வேறு காலப்பகுதிகளில் மானிட-பிரபஞ்சத் தோற்றப்பாடுகளைக் கையாள்வதற்குப் பயன்படுத்திய முறைமையை விளக்குவதற்கும் கூட அவசியமானது.

இஸ்லாமிய அறிவு முதுசம் என்பது காலத்தையும் இடத் தையும் தாண்டிச் செல்லும் சிந்தனையல்ல. மாறாக, அது எந்தக் காலத்திலும் இடத்திலும் தோன்றியதோ அந்த எல்லைகளுடன் வரையறுக்கப்பட்ட ஒன்று. எந்தவொரு மனித சிந்தனையையும் போலவே காலம், இடம், மனிதர்கள் என்றளவில் அதுவும் ஒப்பீட்டளவிலான சிந்தனைதான். இஸ்லாமிய அறிவு முதுசம்

கால - இட எல்லைகளைக் கடந்த தெய்வீக வசனங்களைத் தனது தொடங்கு தளமாகக் கொண்டது என்ற வகையில், ‘வஹீ’ யிலிருந்து அறுபட்ட சிந்தனைகளைவிட அதில் உண்மையின் விகிதாசாரம் அதிகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆயினும், இதனால் அது இறைவன் தனது வேத நூலுக்கு வழங்கியிருக்கும் ‘இஸ்மத்’ (தவறுகளிலிருந்துபாதுகாக்கப்படல்) என்ற பண்பை முழுமையாகப் பெற்றதல்ல. அந்த வகையில் இஸ்லாமிய அறிவு முதுசங்கள் அவற்றுக்குரிய விகிதாசார முக்கியத்துவத்துடன் பார்க்கப்படுவது அவசியமாகும். அம் முதுசங்கள் மாறிக்கொண்டிருக்கும் யதார்த்தமொன்று குறித்தான சிந்தனைகளும், கையாளல் முறைகளும், வியாக்கியானங்களுமேயன்றி வேறில்லை. எனவே, நமது முதுசங்களைப் புரிந்துகொள்வதனூடாகவும் அவற்றை மீளக் கண்டடைவதனூடாகவும் சில வரையறுத்த நோக்கங்களை சாதித்துக்கொள்ள நாம் முயல வேண்டும். குறிப்பாக அவற்றின் தொடர்ச்சி, திரட்சி, அவற்றில் ஆதிக்கம் செலுத்திய அறிவாய்வு முறைமைகள் என்பவற்றை அறிந்து, அவற்றிலிருந்து நமது காலத்துக்கும் இடத்துக்கும் பொருத்தமான சிந்தனைகளையும் புரிதல்களையும் பயன்படுத்திக்கொள்ள நாம் முயல வேண்டும்.

இதே அணுகுமுறை நவீன மானிட முதுசங்களுக்கும், குறிப்பாக மேற்கு முதுசங்களுக்கும் பொருந்தும். இம்முதுசங்களுடன் உறவாடும் முறைமையொன்று நமக்கு அவசியம்; அதன் மூலமாகவே முஸ்லிம் சிந்தையானது தற்போதைய அணுகுமுறைகளிலிருந்து வெளியே வர முடியும். ஏனெனில், இவ்வணுகுமுறைகளிலிருந்து உருவான தோராயப்படுத்தல் முயற்சிகளும் ஒப்பீடுகளும் இறுதியில் மூன்றிலொரு சுழலுக்கே முஸ்லிம் சிந்தையைக் கொண்டு வந்து சேர்த்தன: ஒன்றில், அவற்றை முற்றாக நிராகரித்தல்; அல்லது ஆன்மாவைப் பறிகொடுத்து அவற்றை முற்றாக ஏற்றல்; அல்லது எந்த நியமமான முறைமையோ, அறிவாய்வு வாசிப்போ, மனித அறிவிலுள்ள கலாசார-நாகரிக வேறுபாடுகளின் தாக்கம் பற்றிய புரிதலோ இன்றி தாறுமாறாகத் தேர்ந்தெடுத்தல்.

*ஆக, மேலே விளக்கிய ஐந்து மையப்புள்ளிகளுள் ஒவ்வொன்று தொடர்பாகவும் நாம் ஓர் ஆய்வை அல்லது ஆய்வுத் தொகுப்பைத் தயாரிக்க வேண்டியுள்ளது. உம்மாவின் அனைத்து அங்கத் தவர்களையும் நோக்கிய உரையாடலாக அது அமைய வேண்டும். இச்செயல்பாடானது பின்வரும் மூன்று விடயங்களூடாக அளவிடற்கரிய சாதனையைப் படைக்க நமக்கு இடமளிக்கும்:*

*ஒன்று: அது குறித்து உம்மாவிலுள்ள கற்றறிவாளர்களது கவனத்தைக் கிளர்த்துதல்.*

*இரண்டு: சாதிக்கும் ஆற்றல் கொண்ட வளவாளர்களை அதில் பயிற்றுவித்து உருவாக்குதல்.*

*மூன்று:அனைத்து கல்வி, ஊடக, கட்புல-செவிப்புலச் சாதனங்களின் வழியாகவும் உம்மாவினால் எடுத்தாள முடியுமான கலாசார-அறிவாய்வு உள்ளடக்கமொன்றை முன்வைத்தல்.*

*மேற்குறித்தவற்றைச் சாதிக்க உதவக்கூடிய முக்கிய அம்சங்களாகப் பின்வருவன அமைய முடியும்:*

*1. மேற்குறித்த ஐந்து மையப்புள்ளிகள் தொடர்பாகக் காணப்படுகின்ற ஆய்வுகளையும் பாடப்புத்தகங்களையும் பற்றிய கணக்கெடுப்பை மேற்கொள்ளல்.*

*2. அவற்றை வகைப்படுத்தல்.*

*3. அவற்றை மதிப்பீட்டுக்கும் திறனாய்வுக்கும் உட்படுத்தல்.*

*4. அவற்றுள் மிகச் சிறந்தவற்றையும் அதிகம் பயனுள்ளவற்றையும் தேர்ந்தெடுத்தல்.*

*5. தேர்ந்தெடுக்கப்பட்டவை பற்றிய எழுத்து வடிவிலான சுருக்கங்களை முன்வைத்தல்.*

*6. சிறந்த ஆய்வுகளைப் புதுப்பித்து வெளியிடல்.*

*7. கருத்தரங்குகளையும் கலந்துரையாடல்களையும் நடாத்துதல்.*

*8. சர்வதேசக் கருத்தரங்குகளை நடாத்தி ஆய்வுகளின் பெறுபேறுகளை வெளியிடல்.*

9. அவ்வாய்வுகள் பற்றிய விரிவுரைகளை நடாத்தி அறிமுகம் செய்தல்.

10. முடியுமான அனைத்து வழிகளிலும் அவ்வாய்வுகள் பற்றிய கலந்துரையாடல்களுக்கு அழைப்பு விடுத்தல்.

11. அவற்றுடனான உம்மாவின் இடைவினையிலுள்ள முன்னேற்றத்தை அவதானித்து தொடர்ச்சியான மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

12. எதிர்வினைகளைத் திரட்டி, ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான திட்டங்களைத் தயாரித்தல்.

13. கல்வி முறைகளிலும் பாடத்திட்டங்களிலும் அவற்றை நுழைவிப்பதற்கு உழைத்தல்.

14. முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பற்றிய திறனாய்வுகளையும் கலந்துரையாடல்களையும் இஸ்லாமிய நோக்கில் தொடர்ச்சியாக மேற்கொண்டு முஸ்லிம்களிடம் விமர்சன மனப்பாங்கைக் கட்டியெழுப்புதல். அதேவேளை, மேம்போக்கான உள்ளடக்கங்களை அவை 'இஸ்லாமிய' என்ற அடைமொழி கொண்டு வர்ணிக்கப்பட்டாலும் - நீக்கிவிடல்.

இந்த அனைத்தையும் நாமே நேரடியாக மேற்கொள்வது நமது பணியல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நிச்சயமாக அது நமது இயலுமைக்கு அப்பாற்பட்டதும்கூட. இதனை உம்மாவினதும் அதன் கற்றறிவாளர்களதும் கவனத்துக்குக் கொண்டு சென்று அவர்களது விவகாரமாக நாம் மாற்ற வேண்டும். அந்த வகையில், இதில் நமது வகிபாத்திரத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

1- குறித்த விவகாரத்தைத் தெளிவுபடுத்தி, அதன் பல்வேறு பரிமாணங்களை விளக்குதல்.

2- தெளிவின்மையின் காரணமாக இவ்விவகாரம் நிராகரிப்புக்கும் புறக்கணிப்புக்கும் உட்படாமல் பாதுகாக்கும் வகையில் விரிவான மாதிரிகளை முன்வைத்தல். மேம்போக்கான

தன்மையினால் இவ்விவகாரம் தோல்வியடைந்து விடாமலும், நீர்த்துப்போன முன்வைப்பாலும் அதீத பொதுமைப்படுத்த லாலும் அது விளைதிறனற்றதாக மாறிவிடாமலும் பாதுகாக்க இவ்விரிவான மாதிரிகள் உதவும்.

பார்க்க: பின்னிணைப்பு உரு: 4.3

3- ஒன்று திரட்டுதல்; நுணுகிக் கவனித்தல்; பகுப்பாய்தல்; விளக்குதல்; வழிகாட்டுதல்; விமர்சித்தல்; மதிப்பிடல்; சரிசெய்தல்.

4- பணிகளையும் தொடர்பாடல்களையும் செறிவாக்குவதன் மூலமாகப் பல்கலைக்கழகங்களிலும் கலாநிலைங்களிலும் வள வாளர்களையும் ஆதரவுத்தளங்களையும் கட்டியெழுப் புதல்.

5- திட்டம் பற்றியும், அதன் பல்வேறு அம்சங்கள் மற்றும் வழிமுறைகள் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்; நடை முறைப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களுக்கு அதனை முன் வைத்தல்; நடைமுறைப்படுத்த உதவுதல்; அவர்களது பணிகளை அவதானித்து நமது திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் திருத்தியமைத்தல்.

இவ்வாறு செயல்படுவதன் மூலமாக, இவ்விவகாரத்தைத் திட்டமிட்டு வினையூக்கப்படுத்துகின்ற சிந்தனையாளர்களின் பாத்திரத்தை நாம் வகிக்கிறோம். அந்த வகையில், இங்கு நாம் சுமப்பதற்குப் பதிலாக ஒத்துழைக்கிறோம்; நிதி வழங்குவ தற்குப் பதிலாக உதவி செய்கிறோம்; விரிவான விபரங்களில் முயற்சிகளைச் செலவிட்டு சக்தி விரயம் செய்வதற்குப் பதிலாக வழி காட்டுகிறோம்; திறனாய்வு செய்து மதிப்பிடுகிறோம்; வழி காட்டி நெருக்கமாக்குகிறோம்; சாதாரண தனி நபர்களால் சாதிக்க முடியாத அடிப்படையான அம்சங்களைச் சாதித்துக் கொள்கிறோம்.

இது தொடர்பில் பின்வரும் பணிகளை மேற்கொள்வதும் பயனுள்ளதாக அமைய முடியும்:

1. நமக்கென ஓர் அலுவலகம் அல்லது பிரதிநிதி அல்லது ஒத்துழைப்பு நிறுவனம் காணப்படும் ஒவ்வொரு முஸ்லிம் நாட்டிலும் தொடர்ச்சியான கருத்தரங்குகளையும் பாடநெறி களையும் நடாத்துவதற்காக மேற்குறித்த ஒவ்வொரு மையச் சிந்தனை தொடர்பாகவும் விரிவான பத்திரங்களைத் தயா ரித்தல். அடுத்த கட்டமாக, உம்மாவின் நெருக்கடி பற்றிய விழிப்புணர்வைக் கிளர்த்தக்கூடிய ஏதாவதொன்றைச் சாதிக்கும் நோக்குடன் சர்வதேசக் கருத்தரங்குகளை நடாத்துதல்.

2. சாத்தியமான எல்லா வழிகளிலும் அவசியமான திரட்டுக் களை உருவாக்கிக் கொள்ளும் நோக்குடன் பொருத்தமான அறிவுற்பத்திகளைக் கால தாமதமின்றிப் பிரசுரித்தல்.

3. அறிவியல், சிந்தனா, கலாசார ஆளுமைகளோடும், பல் கலைக்கழகங்களிலும் உயர் கலா நிலையங்களிலும் உள்ள பொறுப்பாளர்களோடுமான தொடர்புகளைச் செறிவாக்கி, மேற் சொன்ன மையச் சிந்தனைகளை நோக்கி அவர்களது கவனத்தைத் திசைப்படுத்தல்.

4. பல்கலைக்கழகங்களிலுள்ள பிரிவுத் தலைவர்களோடும் பேராசிரியர்களோடும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்; சிந்தனைகளையும், அறிவியல் முன்னெடுப்புகளையும், கருத்திட்டங்களையும், செயல்திட் டங்களையும் அவர்களுக்கு முன்வைத்து அவற்றைத் தத் தெடுக்குமாறு அழைப்பு விடுத்தல்.

பார்க்க: பின்னிணைப்பு: உரு: 4.4

5. உயர்கல்வி மாணவர்களைத் தொடர்பு கொண்டு இம் மையச் சிந்தனைகளுடன் தொடர்புடைய ஆலோசனைகளையும் அறிவியல் திட்டங்களையும் முன்வைத்தல்.

6. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள கல்வி சார் வளவாளர்களைக் கவர்ந்திழுக்கத் தகுந்த தனிச்சிறப்பான சமூக விஞ்ஞான நூலகங் களை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துதல்.

7. மேற்குறித்த மையச் சிந்தனைகளுக்கு உட்பட்ட வகை யிலான கணிசமான முதுகலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வுத் திட்டங்களை உருவாக்கி உயர்கற்கைப் பிரிவுகளில் விளம்பரப் படுத்தல்.

8. இம்மையச்சிந்தனைகளைத் தெளிவு படுத்துவதற்கு அவசிய மான ஆய்வுத் தலைப்புகளைத்தெரிவு செய்து, அவற்றுக்குப் பொருத்தமான திட்டங்களையும் பத்திரங்களையும் தயாரித்து, அத்தலைப்புகளில் எழுத முன்வருவோருக்குத் தேவையான மானியங்களை ஒதுக்குதல்.

இஸ்லாமிய சிந்தனா முறைமைகளைச் சீர்திருத்துவதற்கும் அறிவை இஸ்லாமியப் படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்யக் கூடிய வகையில் சமகால இஸ்லாமியக் கருத்தாடலைப் புதுப்பிப் பதற்கான மையப் புள்ளிகளும் அணுகுமுறைகளும் இவையே என நாம் கருதுகிறோம்.

# அத்தியாயம் ஐந்து

## உரையாடலும் உரையாடப்படுவோரும்

### உரையாடலின் பண்புகளும் உரையாடப்படுவோரின் வகை களும்

உரையாடப்படுவோரது வகைக்கேற்பவே இஸ்லாமிய அறிவாய்வுக்கருத்தாடலின் பண்புகளும் தீர்மானிக்கப்படுகின்றன. உரையாடப்படும் நபர்கள் பல் வகைப்படுவர் என்ற வகையில் உரையாடலின் வடிவங்களும் பல் வகையாக அமைவது அவசியம். உரையாடலின் உள்ளடக்கம் எல்லோருக்கும் ஒன்றுதான் என்றாலும், ஒவ்வொருவருக்கும் ஏற்பவே அந்த உரையாடல் அமைய வேண்டும். 'சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்தல்' செயல்வாதத்தின் சட்டகத்துக்குள் ஒவ்வொருவரும் எதனைச் செய்ய இயலுமையும் பொறுப்பும் கொண்டிருக்கிறாரோ அதற்கேற்பவே அவரை நோக்கிய உரையாடல் அமைய வேண்டும்.

உரையாடப்படும் அனைத்து வகையினரையும் இச்சுருக்கமான ஆய்வில் முழுமையாகக் குறிப்பிடுவது சிரமமானது. ஏனெனில், மனித சமூகங்களைச் சேர்ந்த பருவமடைந்த, புத்தி சுவாதீனம் கொண்ட அனைத்துத் தனி மனிதர்களும் இவ்வகைப்பாட்டின் கீழ் அடங்கக் கூடியவர்கள்தான். அதேபோல், அவர்கள் ஒவ்வொருவருக்குமான உரையாடலின் உள்ளடக்கத்தையும் பண்புகளையும் வரையறுத்துக் கூறுவதும் இங்கு கடினமானது. ஆயினும், உரையாடப்படுவோருள் பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என நாம் கருதும் மாதிரித்

தொகுதியினருக்கான பண்புகளையும் உள்ளடக்கங்களையும் இங்கு விளக்க முயல்கிறோம். இத்தரவுத் தொகுதியானது (Sample) இஸ்லாமிய உலகில் காணப்படும் பின்வரும் வகையினரை உள்ளடக்குகிறது:

1. அதிகாரிகள்.

2. மதமற்றவர்கள்.

3. இஸ்லாமிய இயக்க உறுப்பினர்கள்.

4. சமயப் பல்கலைக்கழகங்களதும் கல்லூரிகளதும் பட்ட தாரிகள்.

5. விவகாரங்களை மேலோட்டமாக அணுகுபவர்கள்.

6. தேர்ந்தெடுத்துப் பின்பற்றவும் சமரசம் செய்யவும் கூடிய வர்கள்.

7. பொதுமக்கள்.

8. பல்கலைக்கழக மாணவர்கள்.

9. கல்வியியலாளர்கள் (ஆய்வாளர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள்)

பார்க்க: பின்னிணைப்பு உரு 5.1

**1) அரசு/ அதிகாரிகள்:**

இஸ்லாமிய சிந்தனா விழிப்புணர்ச்சி மற்றும் உயர் கலாசாரப் பிரக்ஞை குறித்து இஸ்லாமிய உலகிலுள்ள பெரும்பாலான அதிகார பீடங்கள் முன்னெச்சரிக்கையுடனேயே நடந்து கொள் கின்றன. அதற்குப் பல காரணங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை இங்கு நாம் விரிவாக விளக்க வேண்டியதில்லை. எவ்வாறாயினும், இஸ்லாமிய நோக்கிலான கலாசார-அறிவாய்வுப் பதிலீடொன்றை முன்வைப்பதானது நடைமுறையிலுள்ள கல்வி-கலாசார ஒழுங்குகளை ஆளுகின்ற கொள்கைகளுக்கு மாற்றமாக

இருப்பது அக்காரணங்களுள் ஒன்றாக இருக்க முடியும். ஒற்றைத் தன்மையான இருப்புக்குப் பழகிப் போன அதிகார பீடங்கள் எந்தத் துறையிலேனும் தமது பரிந்துரைகளுக்குப் போட்டியாக அமையும் முன்னெடுப்புகளை மனதார ஏற்பதில்லை.

ஆயினும், அவற்றின் அணிகளுக்கிடையில் நாம் எந்த இடத் தையும் பெற்றுக் கொள்ள முடியாது என்பது இதன் பொரு ளன்று. ஏனெனில், தாம் நிர்வகிக்கும் நிறுவனங்களூடாகவும் பணி புரியும் நிலையங்களூடாகவும் பயனுள்ள அம்சங்களை நடைமுறைப்படுத்த விரும்புகின்ற பெரும் எண்ணிக்கையிலான கல்வியியலாளர்களும் புத்திஜீவிகளும் இருக்கவே செய்கின்றனர். அவர்களில் சிலர் நமது விவகாரம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த உதவ முடியுமானவர்கள்; வளங்களைத் திரட்டித் தரவும் ஆற்றல் கொண்டவர்கள். இவ்வாறான நேர்நிலை மனப்பாங்கு கொண்டவர்களைக் கண்டடைவதற்கு தேடலும் அவதானமும் அவசியம். அந்த வகையில், இங்கு நம்மால் எதுவும் செய்ய முடியாது என பொத்தாம் பொதுவாகச் சொல்லி விட முடியாது.

நமது இப்பணி பல நெருக்கடிகளுக்குத் தீர்வாக அமையக் கூடியது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் இவர் களுக்கு நாம் தெளிவை முன்வைப்பது அவசியம். அத்துடன் இம்மாற்றங்கள் அவர்களது தனிப்பட்ட ஆர்வங்களோடும் விவ காரங்களோடும் தொடர்புபடுத்தப்படும்போது நமது பணி க்கு அவர்கள் தடையாக அமையாமல் உதவக்கூடியவர்களாக மாறுவார்கள். மட்டுமன்றி, அனேகமான அரசுகள் தமது கல்வி யொழுங்குகளில் காணப்படும் பல குறைபாடான பக்கங்களை உணரத் தொடங்கியுள்ளன. அவற்றுள் சில தமது கல்வித்திட்டங் களைச் சீர்திருத்துவதற்கு உகந்த வழிவகைகளை இதய சுத்தி யுடன் தேடவும் ஆரம்பித்திருக்கின்றன. இத்துறைகளில் தேவை யானோருக்கு தேவையான நேரத்தில் வழங்க முடியுமான வகை யில் நாம் நிபுணர்களை உருவாக்க வேண்டியுள்ளது என்பதையே இது காட்டுகிறது. அந்த வகையில், 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்' மேற்கொண்ட முயற்சி

களும், கல்விச் செயன் முறையின் சில கூறுகளில் சீர்திருத்தங் களை ஏற்படுத்த உதவி கோரிய தனிநபர்களுக்கும் நிறுவனங் களுக்கும் அது வழங்கிய நிபுணத்துவ உதவிகளும் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் உரிய விளைவைத் தந்திருக் கின்றன. கல்வி மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளில் சீர்திருத்தம் மேற்கொள்வதற்கு நாம் நமது ஆற்றல்களையும் தேர்ச்சிகளையும் இன்னும் பன்மடங்காகப் பெருக்க வேண்டியுள்ளது. மட்டுமன்றி, சித்தாந்த மட்டத்திலும், செயற்பாட்டு மட்டத்திலும், தனிநபர் மட்டத்திலும், சிந்தனைகள், நிறுவனங்கள், நிகழ்ச்சித் திட் டங்கள் என்பவற்றின் மட்டத்திலும் இத்துறையில் நாம் தரவுத்தளமொன்றைக் கட்டியெழுப்ப பெருமுயற்சி எடுக்க வேண்டியுள்ளது. அது நமது உம்மாவுக்குப் பெரும் பயனைக் கொண்டு வரும்.

பார்க்க: பின்னிணைப்பு உரு 5. 2

**2) மதமற்றவர்கள்:**

மதமற்றவர்கள் அல்லது மதச்சார்பின்மைக் கோட்பாட்டாளர் களைப் பொறுத்தவரை அவர்கள் அனவரையும் ஒருமித்த மனப்பாங்கு கொண்டவர்களாக அல்லது பிரபஞ்சத்தையும் வாழ்வையும் பற்றிய ஒருமித்த பார்வை கொண்டவர்களாக நாம் நோக்க வேண்டியதில்லை. அவர்களது ஒவ்வொரு குழுவிலும் ஒரு மேல்தட்டு வர்க்கமும் பொதுவான பின்பற்றாளர்களும் இருப்பர். எனவே, அந்த மேல்தட்டினரைத் தாண்டி பொதுவான பின்பற்றாளர்களிடம் சென்று நேரடியாக உரையாடவும் நமது செய்தியைத் தெளிவாக முன்வைக்கவும் முடியுமானால், அவர்களில் பலரை நாம் வென்றெடுக்க முடியும். மாற்றத்தை ஏற்படுத்தி, உம்மாவை மீளக் கட்டியெழுப்பி, அதன் நாகரிகப் பிரசன்னத்தை மீட்டெடுக்க விளைபவர்களே நாம் என்ற நம்பிக்கையை அவர்களிடம் ஏற்படுத்த முடியுமாயின் இதனைச் சாத்தியப்படுத்தி விட முடியும். மட்டுமன்றி, குறித்த மேல்தட்டு

வர்க்கமே உம்மாவின் அபிலாஷைகளையும் இலக்குகளையும் சாதிக்கத் தகுதியானவர்கள் என்ற எண்ணத்துடன் அமைதி காக்கும் பெரும்பான்மையினரையும் இதன் மூலம் நாம் வென் றெடுக்க முடியும். அந்நிலையில், மேல்தட்டுச் சமய மறுப்பாளர் கள் மாத்திரமே தமது நிலைகளைப் பாதுகாத்துக்கொள்ளப் போராடுவார்கள்; நம்மை எதிர்க்கவும் நமது சிந்தனைகள் மீது சேறு பூசவும் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்வார்கள். உலகத்தின் இயல்பும் அதுதான். எனினும் அந்த இழுபறியில் இறுதி வெற்றி பெறப்போவது இறையச்சம் கொண்டவர்கள் தாம். அவர்களில் சிலர் முன்பு நமது இப்பணியை எள்ளி நகையாடிய போதும், இப்போது தமது நிலைப்பாட்டைச் சுயவிசாரணை செய்யத் தொடங்கியுள்ளனர்; நமது பணியையும் அதன் நோக்கங்களையும் அறியாதிருந்ததற்காகவும், அந்த அறியா மையின் காரணமாக அவசரப்பட்டு அதன் மீது தாக்குதல் தொடுத்தமைக்காகவும் மன்னிப்பும் கேட்கின்றனர்.

மேலும், இப்பிரிவினருடனான இடைவினையானது ஒரு சந்தர்ப் பமாக மாற்றப்படவும் முடியும். அதே சமயச் சார்பற்ற வட்டாரங் களுக்குள் எதிர்ச் செல்நெறியொன்றை ஏற்படுத்த முயல்வதனூ டாக இதனைச் சாதிக்கலாம். அத்தகைய எதிர்ச்செல்நெறியானது தனக்கென்று ‘அறிவை இஸ்லாமியப் படுத்துதல்’ தொடர்பான ஆய்வுகளைக் கொண்டிருப்பது அவசியம். சமயச் சார்பின்மைக் கோட்பாட்டாளர்கள் கொண்டிருக்கும் அறிவு மற்றும் சிந்தனை சார் நம்பிக்கைகளை ஆட்டங் காணச் செய்வ தற்கு இவ்வாய்வுகள் பயன்படுத்தப்பட முடியும். மேற்கு நாகரிகத்தின் அறிவுசார் அடிப்படைகளை விஞ்ஞான பூர்வமாகவும் தீர்க்கமாகவும் விமர்சனத்துக்கு உட்படுத்துவதனூடாக இதனைச் சாதிக்க முடியும். இத்துடன் மேற்கத்திய ஆய்வுகள் பற்றிய விமர்சனத்தை இன்னும் விரிவுபடுத்திக்கொள்ளுமாறு அவர்களையும் நாம் தூண்டும் போது இஸ்லாமிய அறிவாய்வியலின் புறமாக அவர்களில் சிலரை ஈர்த்துக் கொள்ள அது வழியமைக்கும்.

மதச்சார்பற்றவர்கள் வழக்கமாக நமது ஒவ்வோர் அசைவையும் உன்னிப்பாகக் கவனிப்பார்கள். நாம் விடும் சிறு தவறைக்கூட

விரைந்து விமர்சிப்பார்கள். குறைபாடுகளைப் பகிரங்கப்படுத்து வார்கள். இவ்வாறு அவர்கள் நமது திட்டங்களையும் பரிந்துரை களையும் துருவி ஆராய்வதைக்கூட நாம் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு நமது குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளவும் கட்டுமானப் பணியைத் தொடரவும் முடியும். இப் பிரிவினருடன் தொடர்பாடுவதால் கிடைக்கும் மற்றொரு நன்மை இதுவெனலாம்.

மறுபுறத்தில், இந்த அணியினரின் வெவ்வேறான வகை மாதிரிகளுக்கேற்ப அவர்களது எதிர்வினைகளின் தரங்களும் வேறுபட்டிருக்கும். அந்த வகையில், ஒரு குழுவினர் இவ் வறிவார்ந்த முன்மொழிவை சீர்திருத்தத்திற்கான புதிய முயற்சி யாகவும், விவேகமான முயற்சியாகவும், கலந்துரையாடப்படத் தகுதி கொண்ட முயற்சியாகவும் கருத முடியும். இன்னொரு பிரிவினர் தங்களது சிந்தனா-கலாசார-அறிவு சார் அதிகா ரங்களிலிருந்து தங்களை நீக்கம் செய்வதற்கான முயற்சியாக இம்முன்மொழிவைக் கருதி இதனை நிராகரிப்பதுடன், இதன் மீது தாக்குதல் தொடுக்கவும் முடியும். இடையில் ஒரு சாரார் இந்த முன்மொழிவின் உண்மை நிலையைப் புரிந்து ஏற்றுக் கொண்டு, மதச்சார்பற்றவர்கள் என்ற நிலையிலிருந்து இஸ்லா மியர்களாக மாறி, இஸ்லாமியவாதிகளது விவகாரங்களையும் அறிவாய்வுகளையும் தத்தெடுக்கும் தயார் நிலையை விரைவில் அடைவோராக இருக்க முடியும்.

முன்னர் வெவ்வேறு சிந்தனா இயக்கங்களுக்கும் செயற்பாடு களுக்கும் சேவை புரிந்து கொண்டிருந்த பெருமளவு சிந்தனை யாளர்களை இவ்வாறு கவர்ந்திழுத்ததன் மூலமாக மிகச் சிறந்த அறிவாளுமைகளின் குழுவொன்றை வென்றெடுக்க முடிந்ததற் காகவும், நவீன இஸ்லாமிய சிந்தனையை மேலும் வளப்படுத்த அவர்கள் பங்களிப்புச் செய்ததற்காகவும் நன்றியுடன் இறைவ னைப் புகழ்கிறோம். இவர்கள் இஸ்லாமியத் தலைவர்களது அனுபவங்களை விரிவுபடுத்த உதவியிருப்பதுடன், உம்மாவி லுள்ள ஏனைய குழுமங்கள் மீதான நம்பிக்கையையும் மீட்டுத்

தந்திருக்கின்றனர். அக்குழுமங்கள் வெறுமனே சில மாற்றுச் சிந்தனைகளை ஏற்றிருந்ததற்காக, அல்லது உம்மாவுக்கு நன்மை கிட்டலாம் என்ற நம்பிக்கையுடன் அவற்றைத் தத்தெடுத்திருந்த தற்காக அவர்களை மதம் மாறியவர்கள் என்றோ சன்மார்க்கத் திலிருந்து வெளியேறியவர்கள் என்றோ குற்றம் சாட்டாதிருக்கும் பக்குவத்தையும் இவ்வனுபவங்கள் நமக்கு வழங்கின.

'இறந்த காலத்தில் தேங்கிக் கிடக்கும்' சிலரால் முன் வைக்கப் பட்ட விமர்சனக் கண்டனங்களையும் சிலபோது குற்றச்சாட்டு களையும் கூட தாங்கிக் கொண்டு 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்' தனது பயணத்தைத் தொடர்ந்தது. கெய்ரோ வில் நடைபெற்ற 'பக்கச் சார்பு' என்ற தலைப்பிலான கருத்தரங் கில் கலந்து கொண்டு, அதன் கலந்துரையாடல்களைச் செவி மடுத்தவர்களுக்கு 'இஸ்லாமிய நாகரிகத் திட்டம்' நோக்கி நமது நிறுவனம் -இறையருளால்- மிகப் பாரிய எட்டொன்றை எடுத்து வைத்திருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்திருக்கும். அத்திட் டத்தை இனி உம்மாவிலுள்ள எந்தவொரு குழுவினாலும் தனித் துத் தத்தெடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. மட்டு மன்றி, 'அறிவுசார் நுழைவாயில்' தான் உம்மாவின் அனைத்து வளங்களையும் திரட்டுவதற்கு -ஏனையவற்றை விட- மிக வெற்றிகரமான நுழைவாயில் என்பதையும் இதனூடாக நமது நிறுவனத்தினால் உறுதிப்படுத்த முடிந்தது. ஏனெனில், இந் நுழைவாயில் மூலமாகவே உம்மாவின் அனைத்து வேறுபட்ட நிபுணத்துவ அறிவையும், 'ஒருமுகப் படுத்தப்பட்ட அல்-குர்ஆ னிய அறிவு முறைமை' யையும் ஒன்றாகத் திரட்டி உம்மாவின் அடுத்த நாகரிகத் திட்டத்தை -இறையுதவியுடன்- முன்வைக்க முடியும். 'இறந்த காலத்தில் தேங்கிக் கிடத்தல்' என்ற நிலைப்பாடு எவ்வளவு வீரியத்துடன் முழங்கினாலும் அது அழிந்தே தீரும்.

பார்க்க: பின்னிணைப்பு: உரு 5-3

### 3) இஸ்லாமிய இயக்க அங்கத்தவர்கள்:

பொதுவாக தற்கால இஸ்லாமிய இயக்கங்களிடம் 'சலஃபி' எனப்படும் போக்கே ஆதிக்கம் கொண்டிருக்கிறது. பிறரால் இப்போக்கு இப்படி அழைக்கப்படுவது மட்டுமன்றி, அது கூட தன்னை அப்படித்தான் அழைத்துக் கொள்கிறது. எதைப்பற்றி யுமான உரையாடலை 'அகீதா' சார்ந்த -அல்லது அதிக பட்சம் 'ஃபிக்ஹு' சார்ந்த- உரையாடலாக ஆக்கிக்கொள்ள முயலும் போக்கையே இப்பதம் இன்று குறிக்கிறது.

இஸ்லாமிய உலகில் ஏற்பட்ட சிக்கலான நிலைமைகள், ஒடுக்குமுறை, வாழிடங்களிலிருந்து துரத்தப்படல், அமைதி யின்மை, புரட்சி என்பவற்றின் காரணமாக இஸ்லாமிய இயக் கங்களின் அறிவுசார் தலைமைகள் தனிநபர்களாக நிலைமாற்றம் அடைந்தன. இச்சூழ்நிலைகள் அவர்களுக்கு முரண்பாட்டுக் களத்துக்கு வெளியிலான அனுபவங்களையோ தேர்ச்சிகளை யோ சிந்தனா-அரசியல் செயற்பாட்டு வழிமுறைகளையோ பெற் றுக் கொள்ளும் வாய்ப்பை அளிக்கவில்லை. மட்டுமன்றி, தாம் எதிர் கொண்டிருக்கும் விவகாரங்களின் அறிவார்ந்த பரிமாணம் மற்றும் நாகரிக அணுகுமுறை என்பவற்றின் முக்கியத்துவத் தையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் போனது.

மேலும், உலகில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களைத் தொடர்ந்து இஸ்லாமிய எகிப்தினதும் ஷாம் பிராந்தியத்தினதும் வகிபாத்திரம் பலவீனமடைந்து, வளைகுடா இஸ்லாமியப்பள்ளி யின் தாக்கம் ஒரு சிந்தனா-நம்பிக்கை-நியாயவியல் தலைமை யாக மேலெழுந்தது. அதனால் இஸ்லாமிய இயக்கங்களின் செல் திசையிலும் அவற்றின் கலாசாரக் கட்டமைப்பிலும் சிந்தனை பெற்றிருந்த வகிபாத்திரம் பலவீனமடைந்தது. இதனையடுத்து, அவற்றுள் பெரும்பாலானவை இன்று நாம் அடையாளப்படுத்தும் அறிவுப்பிரச்சினையையும், அறிவு சார் நெருக்கடியையும், அறிவு சார் நுழைவுப் புள்ளியையும் (Epistemological entry point) ஒரு வகை புத்திஜீவித்துவ இன்பமாக (Intellectual luxury), அல்லது உம்மாவின் நெருக்கடியை இனங்காண்பதில் ஏற்பட்ட தவறாக, அல்லது

தமது இயக்க ஒழுங்குகளுக்கும் வழிமுறைகளுக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தலாக, அல்லது பகுத்தறிவுவாத முயற்சியொன்றாக, அல்லது தமக்கு மாற்றீடொன்றை முன்வைக்கும் சதித்திட்டமாக, அல்லது பொதுமக்கள் தங்களது தலைமை மீது வைத்திருக்கும் நம்பிக்கையைப் பலவீனப்படுத்தித் தமது திவால் நிலையை அம்பலப்படுத்துவதற்காகப் போடப்பட்ட வகைமாதிரியான சிந்தனைத் திட்டமாகப் பார்க்கத் தொடங்கின. ஏனெனில், இவற்றுள் சில இயக்கங்கள் தங்களது தலைமைத்துவத்தின் மீதான வெகுமக்களது நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொள்வதே தமது பலம் என நம்புகின்றன. அவற்றின் எண்ணப் படி, வெகுமக்களது இந்நம்பிக்கையே அவர்களது சுய விழிப் புணர்வுக்கும் தூது பற்றிய விழிப்புணர்வுக்குமான இலகுவான பதிலீடாக அமைந்துள்ளது.

ஆனால், ஆரம்பக் கட்டத்திலிருக்கும் நமது சிந்தனா-கலாசாரத் திட்டத்தின் நோக்கம் வெகுமக்களைக் கவர்ந்திழுப் பதோ இயக்க ரீதியான அடிப்படைகளை நிறுவுவதோ அல்ல. ‘அறிவை இஸ்லாமியப் படுத்தல்’ என்ற இச்செயல்வாதத்தின் நோக்கம் இன்று களத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்லாமிய இயக்கங்களுக்கான பதிலீடாகத் தன்னை முன்னிறுத்துவதுமல்ல. மாறாக, சிந்தனை, அறிவு, கலாசாரம் என்பவற்றில் நிலவும் இடைவெளிகளை நிரப்புவதே தனது பணி என அது கருதுகிறது. ஏனெனில், இந்த இடைவெளிகள் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றன; அல்லது குறைந்தபட்சம் அவை உரிய வகையில் கவனயீர்ப்புப் பெற வில்லை. சிந்தனா, அறிவாய்வு, கலாசார, நாகரிக முன்னரங்கு களில் ஏற்பட்டிருக்கும் இடைவெளிகளை நிரப்பும் முன் னெடுப்பே நமது பணி என்ற இவ்வுறுதியுரையானது ‘இச் செல்வழி, பாதுகாக்கும் செல்வழியேயன்றி அச்சுறுத்தும் செல்வழியல்ல’ என்ற உத்தரவாதத்தை வேண்டி நிற்போருக்குப் போதுமான உத்தரவாதமாகும். உம்மாவின் சாதனங்களைத் தூய்மைப் படுத்தி, அதற்கு உண்மையாக உதவும் பயணமாகவே இப்பணி அமைந்துள்ளது. உம்மாவைக் கடைத்தேற்ற இதய

சுத்தியுடன் உழைப்பவர்களுக்கு இது உதவுமேயன்றி, அவர்களது உலக விவகாரங்களில் போட்டிக்குச் செல்லாது. அவர்கள் ஏலவே செயற்பட்டுக் கொண்டிருக்கும் முன்னரங்குகளில் முண்டியடிக் கவும் முயலாது.

மேலும், 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' என்ற இத்திட்ட மானது தனது அறிவாய்வுத் திட்டங்களது இயல்பின் காரணமா கவும், கொள்கைகளின் காரணமாகவும் நம்பிக்கைக்கோட்பாட்டு ரீதியான கவனக் குவிப்பைத் தாண்டிப் பயணிக்கவே விரும்பு கிறது. ஏனெனில், 'அகீதா' என்னும் நம்பிக்கைக் கோட்பாடு மீதான கவனக் குவிப்பானது பிறரை -அவர்கள் தனி மனிதர் களாயினும், சமூகங்களாயினும், சிந்தனைப்பள்ளிகளாயினும்- சன்மார்க்கத்தை விட்டு வெளியேறியவர்களாக (தக்ஃபீர்) முத்திரை குத்தும் தவறை நோக்கிச் சறுகச் செய்யும் தன்மை கொண்டது; பிற குழுக்களோடும் அமைப்புகளோடுமான மோதலுக்கும் முரண்பாட்டுக்கும் இட்டுச் செல்லக் கூடியது. ஆனால், 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' செயல்வாதத்தின் அறிவார்ந்த அணுகுமுறையானது பிரிப்பதை விட ஒற்றுமைப் படுத்துவதை அடிப்படை விதியாகக் கொண்டது. பிறர் மீது மதவெளியேற்றக் குற்றச்சாட்டுச் சுமத்துவதையும் தீர்ப்பு வழங்குவதையும் முடிந்தவரை அது தவிர்த்துக் கொள்கிறது. ஏனெனில், அதன் அறிவார்ந்த அணுகுமுறையானது நிலைமை களைப் பகுப்பாய்வு செய்வதற்கும், அவற்றின் பின்னணியை யும் அறிவுசார் பண்புகளையும் அவற்றுக்கான ஊக்கிகளையும் கண்டறிவதற்குமே இயல்பாக நம்மைத் தூண்டும். அதன் சிந்தனையும் தீர்வுகளும் கொண்டிருக்கும் அடிப்படைகள் அறி வார்ந்த அடிப்படைகளாக இருக்குமேயன்றி, பிறரை நிராகரிப் பாளர்களாக முத்திரை குத்தும் அடிப்படைகளாக இருக்க மாட்டா.

ஷரீஆவின் உண்மை ஆன்மாவையும் அதியுயர் இலக்குகளையும் பருகிய இவ்வணுகுமுறையானது குறித்த பிரச்சினையை மிகை எளிமைப்படுத்தி இவருக்கும் அவருக்கும் எதிரான 'ஃபத்வா'வாக மாற்றி விடுவதில்லை. மாறாக, அதனை ஒரு பிரச்சினையாக உணர்ந்து கையாளவும் ஆய்வு செய்யவுமே அது முற்படும்.

நமது இப்பணியை இவ்வியக்கங்களின் இளைஞர்களிடமும் கற்றறிவாளர்களிடமும் அழகிய முறையிலும் பொருத்தமாகவும் முன்வைப்பதற்கான வழிவகைகளைத் தீர்க்கமாக ஆளுகை செய்ய நம்மால் முடியுமானால் அவர்களில் பலர் நிச்சயம் இதனைத் தத்தெடுப்பார்கள்; அல்லது இதன் பல அம்சங்களி லிருந்து பயன் பெறுவார்கள்; அல்லது தமது நிகழ்ச்சிகளிலும் திட்டங்களிலும் இணைத்துக் கொள்வார்கள்; அல்லது தங்களது ஆய்வுகளிலும் கையாளல் முறைகளிலும் மீள முன்வைப்பார்கள். முன்னரும் இந்த இயக்கங்களில் பல ஷவ்கானீ, ஷாஹ் வலிய்யுல்லாஹ் திஹ்லவி, ஜமாலுத்தீன் ஆப்கானீ, முஹம்மத் அப்துஹு போன்ற பல சீர்திருத்த-புத்தாக்க அழைப்பாளர்களது அறிவார்ந்த முன் மொழிவுகளை ஏற்றுச் செயல்படுத்தி இருக்கின்றன. அவ்வாறே, இன்று சில நாடுகளிலும் சில இயக்கங்களிலும் ஏற்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சிகள் நமது இவ்விவகாரத்தை மொத்தமாகவோ பகுதியளவிலோ தத்தெடுக்க வேண்டிய நிலைப்பாட்டை நிச்சயம் அவற்றுக்குக் கொண்டு வரும். எனவே நமது விடா முயற்சியிலும், அழகிய முன்வைப்பிலும், வேறுபட்ட அணுகு முறைகளிலும், விவேகமாக உறவுகளைக் கட்டியெழுப்புவதிலும், உபகாரம் செய்தவருக்கு நன்றியறிதலிலும், உபத்திரவம் செய்தவருடன் பொறுமை காண்பிப்பதிலுமே நமது வெற்றி தங்கியிருக்கிறது.

மட்டுமன்றி, இவ்வியக்கங்களின் சில தலைவர்கள் நமது சிந்தனைப் பள்ளி முன்வைத்த கருத்துக்களை உண்மையாகவே உள்வாங்கத் தொடங்கியுள்ளனர். சிலர் அவற்றைத் தமது சொந்த நடையில் மீள எழுதி நமது நிறுவனத்தின் பெயரையோ ஆசிரியர்களையோ குறிப்பிடாமல் தமது பின்பற்றாளர்கள் மத்தியில் பரப்பும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இது -நான் உட்பட- நமது நிறுவனத்தைச் சேர்ந்த சிலருக்குச் சங்கடத்தை ஏற்படுத்திய போதிலும், அவ்வியக்கங்களைச் சேர்ந்த சிலரைச் சந்தித்த போது மிக மகிழ்ச்சியடைந்தேன். அவர்களிடம் அவர்களது தலைவர்கள் வெளியிட்ட சில நூல்களுடன் நமது நிறுவனத்தின் நூல்களும் இருந்தன. அவர்கள் என்னிடம் இப்படிக் கூறினர்:

*“எங்கள் தலைமைகளிடம் உங்களது நூல்களை உள்ளபடியே அங்கீகாரம் பெறச் செய்ய முடியாமல் போன போது அவற்றுள் ஏற்கத் தக்கதை மாத்திரம் சுருக்கி அவர்களது பெயர்களிலேயே வெளியிடுமாறு செய்தோம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?”*

*இந்த நளினமான அணுகுமுறைக்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்தேன். தேவைப்படும் போதெல்லாம் அப்படிச் செய்து கொள்ளுமாறு அனுமதியும் கொடுத்தேன். ஏனெனில், ஆரோக்கியமான சிந்தனா உள்ளடக்கம் உம்மாவின் அங்கத்த வர்களைச் சென்றடைவது முக்கியமே தவிர, எப்படி, எந்தப் பெயரின் கீழ், எந்தச் சுலோகத்துடன் அது சென்றடைகிறது என்பது முக்கியமல்ல. இந்த உண்மையை அறியாத இவ் வியக்கங்களின் இளைஞர்களில் சிலர் ஒரே வகையான சிந்தனை களைக் கொண்டிருக்கும் தமது இயக்கங்களில் நாம் இணைந்து கொள்ளாதிருப்பதற்காக நமது நிறுவனத்தின் மீது கண்டனத்தை வெளிப்படுத்துவதுண்டு! அறிவுப் பின்னடைவு நிலையில் குழுவாதச் சிந்தனைகள் “உம்மா” என்ற கருத்தாக்கத்தின் மீது எத்தகைய அபாயத்தை ஏற்படுத்தும் என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள்; அல்லது மறந்து விட்டதாக பாவனை செய்கிறார் கள்.*

*அவ்வாறே, நாம் புறக்கணிக்கக் கூடாத மற்றொரு அடிப் படையான விவகாரமும் உள்ளது. இஸ்லாமிய இயக்கம் என்பது சிந்தனா-கலாசாரச் சீர்திருத்த முயற்சிகளின் நீண்ட சங்கிலித் தொடரில் ஓர் அருள் பொருந்திய வளையமே என்பதுதான் அவ்விவகாரமாகும். இஸ்லாத்தின் முதல் மூலாதாரமான அல்-குர்ஆனை எழுதிப் பாதுகாக்கும் முயற்சியுடன் அவ்வியக்கம் ஆரம்பித்தது. இரண்டாவது மூலாதாரத்தைத் திரட்டிப் பாதுகாத்து, ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டு முடிவதற்குள்ளாக அதற்குரிய முறைமையை வகுத்து, எழுதி, ஒன்று திரட்டியமை அடுத்தகட்ட முயற்சியாக அமைந்திருந்தது. அதற்கடுத்தகட்டமாக சிந்தனா-கலாசாரப் புத்துயிர்ப்புவாத முயற்சிகள் இடம்பெற்றன. ஆரம்ப நூற்றாண்டுகளைச் சேர்ந்த இமாம்களாலும், அவர்*

களைத் தொடர்ந்து வந்த இமாம்களாலும் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்னு ஜுறைஜ், இமாமுல் ஹறமைன் அல்-ஜுவைனி, அபூயூசுஃப், கஸ்ஸாலி போன்றோரை இங்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். சலாஹுத்தீன் அய்யூபியின் யுகத்துக்கு வழியமைத்த இமாம்கள், இப்னுஹஸ்ம், இப்னுருஷ்த், இப்னுல்கையிம், இப்னுஃகல்தூன் முதலானோரும் இத்தொடரில் அடங்குவர். அவர்களைத் தொடர்ந்து நவீன கால சீர்திருத்த முன்னோடிகள் இடம் பெறுகின்றனர். 'இஜ்திஹாதும் பின்பற்றலும்' என்ற மிக முக்கியமான சிந்தனைச் சீர்திருத்த விவகாரத்தைக் கையாண்டமை இவர்களது இயக்கங்களின் தனித்தன்மை எனலாம். ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவி, முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப், ஷவ்கானீ, ஆஃப்கானி, நாஈனீ, முஹம்மத் அப்துஹு, ரஷீத் ரிழா முதலியோர் இவர்களுள் அடங்குவர். இவர்களை அடுத்து நவீன இஸ்லாமிய சீர்திருத்த இயக்கத் தலைவர்களைக் குறிப்பிடலாம். ஆசான்களான மவ்தூதி, இப்னு பாதீஸ், பன்னா, கொமைனி, முதஹ்ஹிரீ, சத்ரு, ஷரீஅத்தீ, குதுப் முதலியோரையும் பிறரையும் இவர்களுள் அடக்கலாம்.

நமது பணியை இவ்வாறு பொதுவான இஸ்லாமிய சீர்திருத்த இயக்கத்துடன் தொடர்புபடுத்துவதானது இவ்வியக்கங்களது சில தலைமைகளுக்கு நம்பிக்கையூட்டுவதாக அமைய முடியும்; இவ்விவகாரத்தைப் புரிந்து ஜீரணித்து வரவேற்பதற்கான சக்தியையும் அவர்களுக்கு வழங்க முடியும். இக்கருத்தை வலியுறுத்துமாறு தான் இறைத்தூதர் (ஸல்) அவர்களும் அல்லாஹ்வினால் ஏவப்பட்டார்கள்:

"(நபியே) கூறும்: இறைத்தூதர்களில் நான் புதிதாக வந்த ஒருவனல்ல". (அஹ்காஃப்: 09)

நாம் கவனம் செலுத்த வேண்டிய மூன்றாவது விடயமொன்றும் உள்ளது. இத்தகையவர்களிடம் சில முக்கியமான பதங்கள் கவனயீர்ப்பைப் பெற்றிருக்கும். ஓர் உரையாடலில் அப்பதங்கள் வெளிப்பட்டு விட்டால் குறித்த உரையாடலை அவர்கள்

எச்சரிக்கையுடன் அவதானிக்கத் தொடங்கி விடுவார்கள். வெகுமக்களால் நிராகரிக்கப்பட்ட சில செல்நெறிகளோடு அதனைத் தொடர்புபடுத்திப் பார்க்கவும் முற்பட்டு விடுவார்கள். அவ்வாறே, வேறு சில சொற்கள் அவர்களிடம் நம்பிக்கையையும் மன அமைதியையும் ஏற்படுத்த வல்லவை. எனவே, நமது எழுத்துகளிலும் உரையாடல்களிலும் இவ்விடயம் கவனத்தில் கொள்ளப்படுவது அவசியம். அதேபோல், குறுங்குழுவாதத் திலிருந்தும் முரண்பாட்டுக்குரிய புள்ளிகளிலிருந்தும் நாம் விலகியிருப்பது மோதலுக்கான காரணிகளை விட்டு நமது பணியைத் தூரமாக்கிக் கொள்ள உதவியாக அமையும். உரிய வேளை வரும் போது அவர்கள் அனைவருக்குமான அதிகார பூர்வ அறிவு மூலாதாரமாக நமது விவகாரத்தை முன்னிறுத்தவும் அது உதவும்.

நாம் மேலே குறிப்பிட்டவற்றைக் கவனத்தில் கொண்டு கலாசாரத் தலைமைகளோடு நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள அக்கறை செலுத்துவதும், படித்த இளைஞர்களோடு நேரடியாக உரையாடுவதும், கலாசார நிகழ்வுகளில் முடிந்தளவு பங்கேற் பதும் புரிந்துணர்வின் எல்லையை விசாலிக்கச் செய்வதோடு -இறைவன் உதவியால்- அச்சங்களைக் களையவும் உதவும். மட்டுமன்றி, தடைகளை வாய்ப்பாக மாற்றிக்கொள்வதற்கும் அது வழிகுக்கும். கடந்த இரு தசாப்தங்களில் மேற்கொள்ளப் பட்ட புத்தாக்க முயற்சிகளைத் தோல்வியடையச் செய்த மிக முக்கிய காரணி இப்புத்துயிர்ப்பு இயக்கங்களுக்கிடையிலான மோதலும், அவை ஒன்றையொன்று தாக்கிக்கொண்டிருந்ததுமே ஆகும்.

பார்க்க: பின்னிணைப்பு உரு 5-4

### 4) சன்மார்க்கக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்ற பட்டாதாரிகள்:

ஃபிக்ஹு, உசூல், ஹதீஸ், மொழி போன்ற பாரம்பரியக் கலைகளைக் கற்றிருக்கும் இப்பிரிவினரும், இவர்களின் பல

கிளைக் குழுக்களும், தனி நபர்களும் இஸ்லாத்தின் அதிகார பூர்வப் பேச்சாளர்களாகத் தம்மை முன்னிறுத்துவதில் அதீத ஆர்வம் காண்பிப்பார்கள். 'இல்ம்', 'மஃரிஃபா' ஆகிய வேறுபாடின்றி இஸ்லாமிய அறிவுத் துறையில் தமக்கிருக்கும் அனுபவத்தின் காரணமாக இஸ்லாத்தைப் பற்றிப் பேசும் அதிகாரம் தமக்கு மட்டுமே இருப்பதாகவும், அதனைத் தமது கௌரவமாகவும் கருத இவர்கள் பழக்கப்பட்டிருப்பர். எனவே இம் மைய நிலையிலிருந்து அவர்களைப் பின்னகர்த்துகின்ற அல்லது அவர்களது வகிபாகத்தை விளிம்பு நிலைக்குத் தள்ளு கின்ற எத்தகைய முன்னெடுப்பையும் அவர்களுள் சிலர் ஏற்க மாட்டார்கள் என்பது மட்டுமன்றி, எரிச்சலடைந்து எதிர்க்கவும் முற்படுவர்.

அறிவையும் சிந்தனையையும் இஸ்லாமியப் படுத்தல் என்ற நமது இவ்விவகாரம் உம்மாவின் நோய்களையும் பிரச்சினை களையும் இனங்கண்டு அவற்றுக்கு மருந்தாக இஜ்திஹாதையும் காலோசிதச் சிந்திப்பையும் முன்வைக்கும் முயற்சியாகும். அந்த இஜ்திஹாத் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டியதுதான் என இவர்களுள் சிலர் கூறினாலும் அதனைச் செயல்படுத்துவ தில்லை; அல்லது அதற்குத் துணிவதில்லை. ஏனெனில், இஜ்திஹாத் என்பது பொறுப்பு; ஆயாசம்; சிரமங்களும் அபாயங்களும் நிறைந்த பணி. 'தக்லீத்' என்னும் பின்பற்றல் தான் அனைத்தையும் விட நிம்மதியானது.

'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' முயற்சியானது இஸ்லாத்தை முன் வைப்பதற்கு 'இல்முல்கலாம்' என்னும் தர்க்க இறையியல் பயன்படுத்திய பழைய முறைமைகளைத் தாண்டிச் செல்ல முயல்கிறது. மட்டுமன்றி, பகுதியளவான சட்ட-நியாயவியல் பார்வையையும் தாண்டிச் செல்ல முயல்கிறது. ஏனெனில், தர்க்க இறையியலை நியமப்படுத்தக் கூடிய அடிப்படை விதிகளின்றி அதன் வழியாக விவகாரங்களை அணுகுவது ஆபத்தானது. அவ்வாறே, சட்ட நியாயவியலுக்குரிய நிபந்தனைகளின்றி அதனூ டாக விவகாரங்களை அணுக முற்படுவதும் பிளவுகளுக்கு

வழி வகுக்கக் கூடியது. நமது அணுகுமுறையோ மானிட- கால- இடப்பரிமாணங்களும், முழுமொத்த அம்சங்களும், அதியுயர் இலக்குகளும், ஆளுகைப் பெறுமானங்களும் கவனத்தில் கொள் ளப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது. அதனால்தான் இவற்றுள் ஒவ்வொன்றையும் அதற்குரிய இடத்திலும் சட்டகத் தினுள்ளும் அது இடுகிறது.

ஆனால் நாம் மேலே குறிப்பிட்டோருள் பெரும்பான்மையினர் பாரம்பரிய வரலாற்று-நியாயவியல் அறிவை அதே வடிவத்தில் பின்பற்றுவதுடன் போதுமாக்கிக் கொள்பவர்களாவர். நமது பணி வேண்டி நிற்கும் பொறுப்புகளை அவர்கள் மேலதிக வேலைகளாகவும் சுமைகளாகவுமே பார்க்கின்றனர். அவற்றை அவர்களால் சுமக்க முடிவதில்லை; அல்லது அதற்கான தகைமை அவர்களிடமில்லை. மட்டுமன்றி, அப்பணிகள் அவர்களைச் சங்கடத்துக்கு உட்படுத்துபவையாகவும் உள்ளன. அவசியமான வழிவகைகளையும் சாதனங்களையும் விரைந்து திரட்டிக் கொள் ளாத பட்சத்தில் அவர்களது இயலாமையையும் தோல்வியையும் அவை அம்பலப்படுத்திவிடும் என்பதே இச்சங்கடத்திற்குக் காரண மாகும். அதேவேளை, இவ்வழிமுறைகளையும் சாதனங் களையும் விரைவாகத் தேடிப் பெறுவது அவ்வளவு இலகுவா னதுமல்ல.

இவர்கள்பொறுப்புகளைப்பிறர்மீதேசுமத்திப்பழக்கப்பட்டவர் கள். முழு இஸ்லாமிய விவகாரங்களையும் இவர்கள் சில உபதே சங்கள், போதனைகள், வழிகாட்டல்கள், மார்க்கத்தீர்ப்புகள் என்பவற்றுக்குள் சுருக்கி விடுவார்கள். பிறர் அவற்றைப் புரிந்து செயல்படுத்த வேண்டும் என்பதுதான் அவர்களது எதிர்பார்ப்பு. அதாவது, அனைத்துப் பிறழ்வுகளுக்கும் தவறுகளுக்கும் குறை பாடுகளுக்கும் பின்னடைவுகளுக்கும் அடுத்தவர்களே பொறுப்பு எனச் சொல்வது போல் இவர்களது உரைகள் அமைந்திருக்கும். 'நான் சொல்வதை மக்கள் கேட்டுச் செயல்பட்டால் உலக விவகாரம் சீராகி விடும்; மறுமையிலும் சுவனம் செல்லலாம்' என்பதுதான் இவர்களது பாணி. தாம் சொல்வதை மக்கள் எப்படி நடைமுறைப் படுத்துவார்கள்? அதற்கு அவசியமான வழிகளும்

*சாதனங்களும் எவை? செயல் படுத்துவதற்கான திட்டம் என்ன? அத்திட்டத்தைப் புரிந்து ஜீரணிக்கக் கூடிய வகையில் அடுத்த தலைமுறைகளை வளர்ப்பது எப்படி...? இவையெல்லாம் -இவர் களைப் பொறுத்தவரை- மற்றவர்களது பணி.*

*பொறுப்புகளைப் பகிர்ந்தளித்து, பாத்திரங்களை வரையறை செய்து, எல்லாத் தனிநபர்களும் குழுக்களும் தங்களது பொறுப் புகளைச் சரியாகப் புரிந்து இதயசுத்தியுடன் நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்தக் கூடிய எத்தகைய சிந்தனையையும் இப்பிரிவினர் சந்தேகத்துடனேயே நோக்குவர். அந்த வகையில் நமது அணுகுமுறையை இவர்கள் எதிர்ப்பதுடன், நமது பணியை எதிர்ப்பவர்களின் அணியிலும் இணைந்து கொள்வார்கள். எதிரிகளும் நமது பணிக்கெதிராக இவர்களைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.*

*எவ்வாறாயினும் இத்தகைய தடையை நாம் சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்ள முடியும். இவர்களுள் பொதுவான பல மனிதர்களுடன் நாம் பின்பற்றும் சிறந்த அணுகுமுறை மூலமாக நமது பணியின் பாகமொன்றாகவும் அதனைப் பாதுகாப்போரா கவும் அவர்களை மாற்றிக் கொள்ள முடியும். ஏனெனில், இவர் களுள் அனேகமானோர் இதயசுத்தியும் நம்பகத் தன்மையும் கொண்டவர்கள். நாம் மேலே குறிப்பிட்டவாறான இவர்களது கருத்துக்களுடன் மோதாத வரையில் இஸ்லாத்துக்கு உதவியாக அமையும் அனைத்துமே இவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியது தான்.*

*இவர்களது சிறப்புத் துறைகள் பற்றிய பல நுட்பமான ஆய்வுகள் (*Technical studies*) நமது பணிகளுக்கு அவசியப்படு கின்றன. இவர்களிலுள்ள நல்ல, வலுமிக்க வாலிபர்களைத் தனிப்பட்ட மற்றும் குழுரீதியான ஆய்வுத் திட்டங்களிலும், இஸ்லாமிய முதுசங்களை எளிமைப்படுத்தும் பணிகளிலும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும். கருத்தரங்குகளிலும் மாநாடு களிலும் கருத்தாடல்களிலும் அவர்களைப் பங்கேற்கச் செய்ய முடியும். அவர்களில் சிலர் சிறப்பாக மேற்கொள்ளக் கூடிய*

பணிகளிலும் துறைகளிலும் அவர்களது ஆலோசனைகளையும் அனுபவங்களையும் பெற முடியும். அவர்களுக்குப் பொருத்த மான செயற்பாடுகளையும் ஆலோசனைகளையும் நாமும் வழங்க முடியும்.

இவ்வாறு நிகழும் போது, இப்பணியானது -உம்மாவிலுள்ள பிற குழுமங்களுடன் சேர்த்து- தமக்கும் ஒரு முக்கிய பாத்திரத்தை வழங்குகிறது என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள் வார்கள். அப்பாத்திரம் ஒரு புறத்தில் அவர்களது அறியாமை யையும் மறதியையும் விலக்கி விழிப்புணர்வூட்டும் அதே வேளை, உஸ்மானியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பிறகு அவர்கள் அடைந்திருந்த விளிம்பு நிலை வகிபாத்திரத்திலிருந்து மீட்டெடுப் பதையும் அவர்கள் கண்டு கொள்வார்கள். இப்படி நமது பணியில் அவர்களுக்கென்று முக்கியமான பாத்திரமொன்று உள்ளதென்பதை நம்மால் விளக்கவும், அவர்களால் புரிந்து கொள்ளவும் முடியுமாயின் அவர்களில் பலர் நமது வளங்களாகவும் நமது பணிக்கு உதவி புரிபவர்களாகவும் நிச்சயம் மாறுவர். அவ்வாறே, நமது பணி பற்றியும் அதன் இலக்குகள் பற்றியும் பொதுவான விழிப்புணர்வொன்று ஏற்படுத்தப்படும் போது அவர்களுள் பொதுவானவர்களையும் இப்பணிக்கு உதவியாக நாம் மாற்றிக் கொள்ள முடியும்.

இப்பணியுடன் தொடர்பான ஆய்வுகளைத் தமக்குக் கிடைக்கும் புதிய அதிகாரமொன்றாகக் கருதி, (சமூக, மானிட விஞ்ஞானங் கள் போன்ற) வேறு கலாசாரக் களங்கள் மீது அவற்றைப் பிரயோகிக்கலாம் என அவர்களுள் சிலர் சிந்திக்க இடமுள்ளது. அத்தகைய சிந்தனைப் போக்கு தடுத்து நிறுத்தப்படுவது அவசியமாகும். அனைத்துச் சிறப்புத் தேர்ச்சியாளர்களது வகி பாத்திரங்களையும் விளக்கி வரையறுத்தளிக்கக்கூடிய அறிவியல் உற்பத்திகள் அவர்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும். அதன் மூலமாக இம்மயக்கமும் தெளிவின்மையும் நீக்கப்பட்டு நமது பணியின் தூய்மை பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வோர் அறிவுத்துறையினதும் வகிபாத்திரம் முறையாக

வரை யறுக்கப் படுவதோடு, பல்வேறு துறைசார் நிபுணர்களது வகிபாத்திரங்களும் வரையறை செய்யப்பட வேண்டும்.

பார்க்க: பின்னிணைப்பு உரு 5.5

### 5) விவகாரங்களை மேலோட்டமாக அணுகுபவர்கள்:

சங்கைமிகு அல்-குர்ஆன் இலகுத்தன்மைக்கு எடுத்துக்காட்டாகத் தன்னை முன்வைக்கும் அதேவேளை, ஓர் அற்புதமாகவும் அமைந்துள்ளது. பின்வரும் வசனத்தில் அதன் இலகுத்தன்மை குறிப்பிடப்பட்டுள்ளது:

*“நிச்சயமாக நாம் இந்த அல்-குர்ஆனை நினைவு படுத்திக் கொள்ளும் பொருட்டு இலகுவாக்கி வைத்துள்ளோம். எனவே இதிலிருந்து நல்லுணர்ச்சி பெறக் கூடிய எவருமுண்டா?” (அல்-கமர்: 18)*

அல்லாஹ் அல்-குர்ஆனை மக்கள் முன் ஒரு சவாலாக வைத்திருக்கிறான். அதன் அற்புதத் தன்மையைப் பல வசனங்களில் விளக்கியும் இருக்கிறான். பின்வரும் வசனத்தில் அவன் இவ்வாறு பிரகடனம் செய்கிறான்:

*“இந்த அல்-குர்ஆனைப் போன்று ஒன்றைக் கொண்டு வருவதற்கு மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து முயன்று, அவர்களில் சிலர் மற்றும் சிலருக்கு உதவியாக அமைந்தாலும், இது போன்ற ஒன்றை அவர்களால் கொண்டு வர முடியாது என (நபியே) கூறும்”. (அல்-இஸ்ராஉ: 88)*

நமது இவ்விவகாரம் முதல் தரத்தில் அல்-குர்ஆனிய விவகாரமாகும். மகத்துவம் மிக்க அல்லாஹ்வின் வஹீயாகிய அல்-குர்ஆனும், அவனது தூதரது வாழ்வியலுமே சிந்தனையின் தொடங்கு தளமாக அமைய வேண்டும் என்பதுதான் நமது இலக்கு. கலாசாரம், அறிவு, அபிவிருத்தி, நாகரிகப் பிரசன்னம்

என்பவற்றுக்கான மூலாதாரமாகவும் அவ்விரண்டுமே அமைய வேண்டும் என நாம் நம்புகிறோம்.

அந்த வகையில், நமது விவகாரம் இலகுவானதாகவும் எளிதானதாகவும் அமைந்திருப்பது அவசியம். அது கற்றறிவாளர் களை நோக்கிப் பேசுவதுடன் மாத்திரம் நின்று விடாமல் பொது மக்களை நோக்கியும் செல்ல வேண்டும். வெகுமக்களைப் புறக் கணித்து மேல்தட்டு மக்களுடன் மாத்திரம் உறவாடாமல், முழு உம்மாவையும் சென்றடையக் கூடிய எளிமைப் பண்பை அது பெற்றிருக்க வேண்டும். இதற்கு உதவக் கூடிய பல வழி முறைகள் காணப்படுகின்றன. அவை பற்றி நாம் நன்குணர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வழி முறைகளை அறிமுகப்படுத்தக் கூடிய எண்ணற்ற மாதிரிகள் சங்கைமிகு அல்-குர்ஆனிலும் தூய ஸுன்னாவிலும் காணப்படுகின்றன. எளிமைப்படுத்தல் செயல்பாடு என்பது மிகச் சிக்கலான ஒரு விவகாரத்தைக் கூட எளிமையாகவும், எத்தகைய அறிவுத் தரம் கொண்டவரும் முழுமையாகப் புரிந்து கொள்ள உதவும் வகை யிலும் முன்வைப்பதாகும். எளிமையான முன்வைப்பு, இலகு வான எடுத்தாளல், உதாரணங்களையும் எடுத்துக்காட்டுகளை யும் முன்வைத்தல் என்பவற்றின் மூலமாக குறித்த விவகாரத்தின் அனைத்துப் பரிமாணங்களையும் புரிந்து கொள்ளும் வாய்ப்பை அது எல்லோருக்கும் தர வேண்டும்.

ஆனால், ‘விடயங்களை மேலோட்டமாக அணுகுதல்’ என்பது இதிலிருந்து வேறானது. ஒன்றின் வெளிப்படையான அம்சங் களை அல்லது மேலோட்டமான விடயங்களை மாத்திரம் அறி முகப்படுத்தும் அறிவுச் செயற்பாடாக அது இருக்கும். ஒன்றைப் பற்றிய மேலோட்டமான முன்வைப்பு அதன் பல்வேறு பரிமா ணங்கள் பற்றிய முழுமையான தெளிவை வழங்குவதில்லை. அதன் வெளிப்புறத்தை மாத்திரமே அது படம் பிடித்துக் காட்டும். ஏனெனில், ஒன்றின் வெளிப்புறம் என்பது அதன் ஒரு பகுதியே தவிர முழுவதுமல்ல.

மேலோட்டமான முன்வைப்பு முயற்சிகளுக்கென்று சில வழி முறைகள் உண்டு. அவற்றுள் சில வழிமுறைகள் எளிமையாக்கல் முயற்சிகளைப் போல் தோன்றுவதும் உண்டு. எனவே, இவ்விரு அம்சங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை நாம் கவனமாகப் புரிந்து கொள்வது அவசியம். உதாரணமாக, சுருக்குதல் அல்லது சாராம்சப்படுத்துதல் மூலமாக எளிமையாக்கத்தைச் சென்றடைய முடியும். ஆயினும் அச்செயற்பாடு கச்சிதமாக மேற்கொள்ளப் படாத போது மேலோட்டமான முன்வைப்புக்கு இட்டுச் சென்று விட முடியும். உள்ளடக்கத்தை விட்டு வெளித் தோற்றத்தில் கவனம் செலுத்துவதாலும் மேலோட்டமான அணுகுமுறை தோன்ற முடியும். பிறரது ஆதரவை விரைவாகத் திரட்டிக் கொள் ளும் ஆசையினாலும் அது உருவாக முடியும். விளைவுகளை அவசரமாகவும் அபரிமிதமாகவும் காண விரும்பும் போதும் அந்நிலை தோன்ற முடியும். வேறு பல காரணங்களால் கூட அது தோன்ற முடியும்.

நமது இவ்விவகாரத்தை மேலோட்டமான விவகாரமாக மாற்றி விடக்கூடியவர்கள் என நாம் அஞ்சத்தக்க மனிதர்கள் இரு வகையினர்:

**ஒன்று:** எதிர்த்து நிராகரிப்பவர்கள். இவர்கள் நமது இப்பணியை மிக மேலோட்டமாக முன்வைத்து இப்பணியை மேற்கொள் வோரது அபிலாஷைகளைக் கேலி செய்யவும், இது சாத்தியமற்ற ஒன்று என நிரூபித்து மக்களது ஆதரவைத் தடுக்கவும், அதனை விட்டுத் திருப்பி விடவும் முயல்வார்கள். கலாநிதி ஸகீ நஜீப் மஹ்மூத் ‘அல்-அஹ்றாம்‘ பத்திரிகையில் எழுதிய கட்டுரை யொன்றையும், ரியாதில் வெளியாகும் ‘அல்-யமாமா’ சஞ்சிகை யில் எழுதிய கட்டுரையையும் இத்தகைய முயற்சிகளுக்கு உதாரண மாகக் குறிப்பிடலாம். அதேபோல், இவ்விவகாரம் தொடர்பாக எழுதிய செய்யித் யாஸீன், மஹ்மூத் அமீன் அல்-ஆலம், அல்-தீபீ, ளியாஉத்தீன் சர்தாரீ முதலியோரையும் இவ்வகையில் அடக்கலாம்.

இத்தகையோர் நமது திட்டத்தைத் தோல்வியடையச்செய்து விடாமல் அதன் எல்லாப் பரிமாணங்களோடும் தொடர்ச்சியாக நாம் உம்மாவுக்கு முன்வைக்க வேண்டும். பல நெருக்கடிகளுக்கான தீர்வுகளுடன் இத்திட்டத்தை நாம் தொடர்புபடுத்த வேண்டும். அதன் தேவையை ஆழமாக மக்களுக்கு உணர்த்தும் வகையில் உதாரணங்களையும் எடுத்துக் காட்டுகளையும் தர வேண்டும். அதன் சிந்தனைகளை உரிய அறிவியல் ஆய்வுகள் மூலமாக ருசுப்படுத்த வேண்டும். அந்த வகையில், இஸ்லாமிய உலகின் சிந்தனை மற்றும் கலாசாரம் சார்ந்த நெருக்கடிகளையும், அபி விருத்தி, ஐக்கியம், ஜனநாயகம், மனித உரிமைகள் சார்ந்த நெருக்கடிகளையும் தொடர்புபடுத்தி விளக்கும் பல ஆய்வுகளை நாம் ஏலவே பிரசுரித்திருக்கிறோம். அவ்வாறே, இவர்கள் முன்வைக்கும் கருத்துகளை நாம் பல்வேறு புறவயமான அணுகுமுறைகள் மூலமாக விமர்சனத்துக்கு உட் படுத்துவதும் அவசியமாகும். இம்முன்னெடுப்புகள் அனைத்தும் நமது திட்டத்தின் முக்கியத்துவத்தையும் ஆழத்தையும் பற்றிய பிரக்ஞையை மக்களிடம் ஆழப்படுத்தி, அவர்களது நம்பிக்கை யையும் பலப்படுத்தும்.

**இரண்டு:** இஸ்லாத்தை மேலோட்டமாகப் புரிந்து கொண்ட மனிதர்கள். ஒன்றை இஸ்லாமியப் படுத்துவதற்கு அதனை முன்வைப்பவர் முஸ்லிமாக இருப்பதும், அதனை அவர் வெளிப்படையான இஸ்லாமியச்சட்டகமொன்றினுள் முன்வைப் பதும் மாத்திரம் போதுமானது என இவர்கள் கருதுவர். இத் தகைய ஒருவருக்கு மதச்சார்பற்ற ஒருவர் (அவர் மேற்கத்திய ரோ கிழக்கத்தியரோ) அறிவாய்வியல் தொடர்பாக அல்லது நாகரிகம் தொடர்பாக எழுதிய ஆக்கமொன்று பிடித்து விட்ட தென்று வைத்துக் கொள்வோம். உடனடியாக அவர் அதனை இஸ்லாமியப் படுத்த விரும்பினால் அதனுடன் இணைந்திருக்கும் 'மதச்சார்பற்ற' அல்லது 'மேற்கத்திய' அல்லது வேறேதாவது பதப் பிரயோகத்தை நீக்கி விட்டு அந்த இடத்தில் 'இஸ்லாமிய' என்ற பிரயோகத்தை இணைத்துக் கொண்டால் போதுமானது

என நம்புவார். இதன் மூலமாக அவர் ‘இஸ்லாமியப்படுத்தல்’ என்ற செயல்வாதத்தைச் சில வெற்று வார்த்தைகளுக்குள் அடக்கி விடுகிறார். ஏதாவதொரு சட்டகம் அல்லது வடிவம் அல்லது சுலோகம் மாத்திரம் அவருக்குப் போதுமானது. இரு வேறு அணுகு முறைகளுக்கிடையிலான சித்தாந்த, முறைமை மற்றும் அறிவுசார் வேறுபாடுகளை அவர் கவனிப்பதில்லை. வேறு வகையில் சொன்னால், சிந்தனா-கலாசார விவகாரங்களைக் கையாள்வதில் ஒருவரது மானிட-பகுத்தறிவுப் பார்வையும், அதன் சிந்தனா-கலாசார உட்கூறுகளும் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவர் கவனிப்பதில்லை. கோட்பாடுகளின் இயல்புகளையும், அவை புரிந்து கொள்ளப்படும் விதங்களையும், நடைமுறைப்படுத்தப்படும் முறைகளையும் கூட அவர் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறார். இதனால் நமது பணிக்கு உதவுவதாக எண்ணிக் கொண்டே தீங்கிழைத்து விடுகிறார்.

ஒரு புறத்தில் இது, இருப்பதை அப்படியே பிரதி செய்தல் (தக்லீத்) என்ற புற்று நோயின் அடையாளங்களுள் ஒன்றாக இருக்கும் அதேவேளை, இன்னொரு புறத்தில் புத்திஜீவித்துவ வெறுமையைக் காண்பிப்பதாகவும் உள்ளதெனலாம். பல் வேறு காரணிகளால் உந்தப்படும் இத்தகையோர், தமக்கு முன்வைக்கப்படும் எந்த ஆய்வேட்டையும் சில வடிவங்களிலும் வார்ப்புகளிலும் வார்த்தைகளிலும் சுருக்கி முழுமொத்த விவகாரமும் அவைதான் என - குறித்த ஆய்வேட்டின் உரிமையாளர்களையும் முந்திக் கொண்டு - சமர்ப்பித்து விடுவார்கள். இவ்வகையான மனிதர்களுக்கான ஏராளமான மாதிரிகளை நுணுகிக் கவனிப்பவர்களால் கண்டு கொள்ள முடியும்.

இத்தகையோரை அவதானித்துப் பின்தொடர்ந்து அவர்களுள் நல்லெண்ணம் கொண்டவர்களுடன் தொடர்பேற்படுத்திக் கொள்வது நமக்குப் பயனுள்ளதாக அமையும். முடிந்தால் அவர்களுள் சிலரை நமது பணியை விளம்பரப்படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் முயலலாம். ‘அறிவை இஸ்லாமியப் படுத்தல்’ என்ற செயல்வாதத்தின் மிக முக்கியமான அம்சங்

களைத் தெளிவு படுத்துவதன் மூலமாக அவர்களது புரிதல் களையும் நாம் சீர்படுத்தவும் முடியும். அதனூடாக அவர்கள் தமது மனப்பாங்குகளை மாற்றிக் கொண்டு நமது திட்டத்துக்கு உதவும் சரியான பாதையில் பயணிக்க வாய்ப்பேற்படும்.

இப்பணியை முற்றுகையிட்டுத் தனிமைப்படுத்தும் தீய எண்ணத் துடன் செயல்படுவோரைப் பொறுத்த வரை, அவர்களது சிந்தனைகள் அம்பலப்படுத்தப்பட்டு மதிப்பிறக்கம் செய்யப்பட வேண்டும். ஏனெனில், அவர்கள் நல்ல நாணயங்களை முற்றுகை யிட்டு நீக்கம் செய்யும் நோக்குடன் போலி நாணயங்களைப் புழங்க விடுபவர்களாவர்.

பார்க்க: பின்னிணைப்பு உரு 5.6

### 6) சமரசத்தையும், தெரிந்தெடுக்கும் அணுகுமுறையையும் ஆதரிப்பவர்கள்:

சிந்தனா-அறிவு ரீதியாகச் சமரசம் செய்வதையும், தெரிந்தெ டுக்கும் அணுகுமுறையையும் பிரதிபலிக்கின்ற செயற்பாடுகள் கூட பொதுவாக நமது பணியின் அறிவு நோக்கை மேலோட்டமாகவே பார்க்கின்றன என்ற போதிலும், அச்செயற்பாடுகள் மூன்று படிநிலைகளில் காணப்படுவது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

### 1. முதலாவது படிநிலை:

தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் தோன்றும் போது, இணக்கம் காணல் செயல்பாடுகளை ஆளுகை செய்யும் முழு மொத்த அடிப்படைகளையும் விதிகளையும் பரிசீலிக்காது முற்றி லும் 'மேற்கத்திய மூலாதாரச் சட்டகத்துக்கு' இயைபாகத் தெரிவு செய்தல்.

உண்மையில், தேர்ந்தெடுத்தலுக்கும் இணக்கம் காணலுக்கும் இடையிலான வேறுபாடு மிக மிகப் பெரியது. ஏனெனில் இம்முதலாம் படிநிலையில் இருப்பவர் இஸ்லாத்திலிருந்தும் அதன் முதுசங்களிலிருந்தும் நாகரிகத்திலிருந்தும் தனது முன்

முடிவுகளுக்கு வாய்ப்பானவற்றை மாத்திரம் தெரிவு செய்து எடுத்துக் கொள்வார்; அல்லது அவ்வாறான சிந்தனைகளை வலுக் கட்டாயமாக இஸ்லாத்துடன் இணைத்துக் கொள்வார்.

இச்செயற்பாட்டிலுள்ள அபாயம் என்னவென்றால், இதனை மேற்கொள்பவர் தான் இஸ்லாமிய முதுசங்களை நன்றாகப் படித்து விட்டதாகவும், அதன் வரலாற்றுப் பகைப்புலத்தை நன்கு புரிந்து கொண்டதாகவும் கூறிக் கொண்டு மேற்குமயப் படுத்தல் முயற்சியில் ஈடுபடுவார்; நவீன மேற்கத்திய முறைமைகளை இஸ்லாத்தின் மீதும் அதன் மூலாதாரங்களின் மீதும் பிரயோ கிக்கவும் முயல்வார். மேலோட்டமாகப் பார்க்கும் போது இத்தகைய முன்னெடுப்பு கச்சிதமான ஒழுங்கு கொண்டதாகவும் வினைமைமிக்கதாகவும் தோன்றிய போதிலும், உண்மையில் இங்கு காணப்படுவது முறைமையின் வெளித்தோற்றமும் வடிவமும் (Appearance and form of methodology) மட்டுமேயன்றி, முறைமைக்குரிய அடிப்படைகளோ உள்ளடக்கமோ அல்ல. அத்துடன், 'இஸ்லாமிய மூலாதாரச் சட்டகம்' (Authoritative Islamic framework) மற்றும் 'மேற்கத்திய மூலாதாரச் சட்ட கம்'(Authoritative western framework) ஆகிய இரண்டுக்குமிடை யிலான அடிப்படையான வேறுபாடுகளையும் இவ்வணுகுமுறை புறக்கணிக்கிறது. 'முறைமை ரீதியான பொருத்தப்பாடு' (Methodo logical fitness) குறித்து ஆராய்ந்து பார்க்க அது எந்த முயற்சியும் செய்வதில்லை. மட்டுமன்றி, அது இஸ்லாமிய ஆய்வுகளுக்குப் பொருத்தமற்ற முறைமைகளை அவ்வாய்வுகளின் மீது திணிக்கிறது; இஸ்லாமிய அறிவியல் பாரம்பரியத்தின் பிரதான அடிப்படை களான உஸூல் அல்-ஃபிக்ஹை (fundamentals of jurisprudence) புறக்கணிக்கிறது; ஆய்வையும் விவாதத்தை யும் நெறியாள்கை செய்கின்ற விழுமியக் கோட்பாட்டு அடிப் படைகளையும் புறக்கணிக்கிறது.

### 2. இரண்டாவது படிநிலை:

இரண்டாவது படிநிலையில் நிகழும் தெரிந்தெடுத்தல் செயற்

பாடுகள் பாரம்பரிய மூலாதாரச் சட்டகமொன்றுக்கு அமைவாகவே நிகழ்கின்றன. அச்செயல்பாடுகள் யதார்த்தத்தையோ, புதிது புதிதாக உருவாகும் அதன் முக்கியமான பரிமாணங்களையோ கவனிப்பதில்லை. வேறுபாடுகள் பற்றிய அறிகைக்கும் அவை முக்கியத்துவம் கொடுப்பதில்லை. முழு இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியமும் எவ்விதத் தவறுகளுமற்ற புனிதப் பாரம்பரியம் என்ற நோக்கிலிருந்தே இந்தப்படிநிலையிலுள்ளோர் தமக்கான அணுகுமுறையை வரித்துக்கொள்கின்றனர். விளைவாக, முற்கால அறிஞர்கள் தாம் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளையும் சூழ்நிலைகளையும் சமாளிப்பதற்குப் பின்பற்றிய அணுகுமுறைகளைக் கவனிப்பதற்குப் பதிலாக, அந்தப் பாரம்பரிய இஸ்லாமிய மாதிரிகளை இன்றைய யதார்த்தத்தின் மீது அப்படியே மீள்பிரயோகம் செய்தல் போதுமானது என இவர்கள் கருதுகின்றனர். நவீன காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கத் தவறி, வரலாறு பற்றியோ முதுசங்கள்பற்றியோ நிகழ்காலம் பற்றியோ எதிர்காலம் பற்றியோ எவ்விதப்பிரக்ஞையுமின்றி, இஸ்லாமிய முதுசங்களை வெறுமனே அசை போடுவதனாலேயே இவ்வகையான மேலோட்டமான அணுகுமுறை உருவாகிறது.

### 3. மூன்றாவது படிநிலை:

இம்மூன்றாவது படிநிலையில் இருப்பவர்கள் நல்லெண்ணத்துடனும் விரைவாகத் தீர்வுகளை முன்வைக்கும் அவசரத்திலும் ‘அறிவை இஸ்லாமியப்படுத்தல்’ என்ற இச்சிந்தனையைத் தம்முடன் இணைத்துக் கொள்கின்றனர். எனினும், ‘அறிவை இஸ்லாமியப்படுத்தல்’ செயற்பாடானது இன்னும் அதன் ஆரம்பக் கட்டங்களிலேயே உள்ளது. தனக்கான அடிப்படைகளை நிறுவுவதற்கும் தெளிவு படுத்துவதற்குமான கட்டத்தில் அது உள்ளது. அதன் சிந்தனை, அறிவு முறைமை முதலிய எல்லாப் பரிமாணங்களும் இன்னும் முழுமையாகவும் தெளிவாகவும் நிறுவப்படவில்லை. எனவே, அது முன்வைத்திருப்பவை சிந்தனைகளாகவும் கொள்கைகளாகவும் திட்டங்களாகவுமே

உள்ளன. அவற்றுள் பல இன்னும் கல்வியியல் அல்லது இயங்கியல் சட்டகத்தினுள் நுணுக்கமாகவும் முழுமையாகவும் பரீட்சிக்கப்பட வேண்டியுள்ளன. (இத்திசையில் இப்போது சில முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் இங்கு கூறிக் கொள்கிறோம்.)

இந்த உண்மையை மனதில் கொண்டு, நமது பணியின் கொள்கைகளையும் அடிப்படைகளையும் ஸ்திரப்படுத்தி, அதன் உட்கூறுகளைத் தெளிவுபடுத்தும் யத்தனங்கள் தொடர்வது அவசியம். புத்தாக்கம் நிறைந்த அம்சங்கள் தொடர்ச்சியாக அவற்றில் இணைக்கப்பட வேண்டும்.

அதே போல், நமது இப்பணி குறித்து வலிமையாகவும் திடமாகவும் எழுதக் கூடிய ஆற்றலுள்ளவர்களை நம்முடன் சேர்த்துக் கொள்வது அவசியம். அத்தகைய எழுத்தாளர்கள் அறிவுலகில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றியவர்களாக இருப்பதுடன், இஸ்லாமிய உலகின் ‘புலமைத்துவ வரைபடம்‘ (Intellectual map) பற்றிய பிரக்ஞை கொண்டவர்களாகவும், நமது செயல்வாதத்தின் வடிவம், ஆன்மா, உள்ளடக்கம் என்பவை பற்றிய பிரக்ஞை கொண்டவர்களாகவும் இருப்பது அவசியம்.

ஆக, சிந்தனையையும் அறிவையும் இஸ்லாமியப்படுத்தல் என்ற விவகாரம் தொடர்பாக இன்று காணப்படும் ஆக்கங்கள் போதுமானவையோ முடிவானவையோ அல்ல. இந்நிலையில், இவ் விவகாரத்தைத் தத்தெடுப்பவர்கள் அதனைச் சுருக்கி விளக்குவதுடன் நின்று விடுகிறார்கள்; அல்லது அதன் சிந்தனைகளுக்கும், ஆரம்ப நிலை ஆய்வுகளுக்கும் இடையில் ஒரு வகை ஒட்டுக்கலவையை மேற்கொள்வதுடன் நின்று கொள்கிறார்கள். இது ‘மேலோட்டமாக்கல்’ செயற்பாட்டின் அபாயகரமான பரிமாணம் என்பதில் ஐயமில்லை. நமது இக்கருத்தியலை விரைவாகப் பரப்ப வேண்டுமென்றும், அது தொடர்பாக பல ஆய்வுகளையும் தலைப்புகளையும் வெளிக்கொணர வேண்டுமென்றும் நன்னோக்கத்துடன் தான் அவர்கள் இதனை மேற்

கொள்கின்றனர். இருந்த போதிலும், 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' செயல்வாதமானது ஆய்வு மற்றும் சிந்தனா உற்பத்தி யில் - எண்ணிக்கை அடிப்படையிலும் தர அடிப்படையிலும் -நுணுக்கமான சமநிலையொன்றைப் பேண முயல்கிறது. அந்த வகையில், தனித்தன்மையும் தரமும் வாய்ந்த ஆய்வுகளை உற்பத்தி செய்வதன் முக்கியத்துவத்தை அது வலியுறுத்துகிறது. அதிலும் குறிப்பாக, ஒட்டுக்கலவை மேற்கொள்ள முயலும் பல குழுக்கள் (அவை பாரம்பரியக் குழுக்களாயினும் மேற்கு மயமாக்கல் குழுக்களாயினும்) காணப்படும் இன்றைய சூழ் நிலையில் இது மிக முக்கியமானது.

இந்த வகையில்தான், இத்துறைகளில் தனித்துவமான சிந்தனா-கலாசார உற்பத்திகளை நிகழ்த்தச் சக்தி கொண்ட வளவாளர்களைக் கண்டடையும் முயற்சிகள் தொடராக மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளன. நமது பணியின் சிந்தனைகளும் திட்டங்களும் மக்களுக்குத் தெளிவு படுத்தப்பட வேண்டும். அடிப்படைகள் பலப்படுத்தப்பட வேண்டும். 'அறிவை இஸ்லா மியப்படுத்தல்' செயல்வாதத்தின் ஒழுங்குமுறையான வழிப்ப டுத்தல் பற்றியும், அதன் ஆரம்ப கால உற்பத்திகளின் இயல்பு பற்றியுமான பிரக்ஞை ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வாரம்ப உற்பத்திகள் பரிசோதனைக் கட்டத்துக்குரியவை என்பதும், முழுமையற்றவை என்பதும், மேலதிகத் தெளிவை வேண்டி நிற்பவை என்பதும், சேர்க்கவும் நீக்கவும் கூடிய நிலையிலி ருப்பவை என்பதும் உணர்த்தப்பட வேண்டும். கட்டுக்கோப்பான, முறைமை சார்ந்த அளவுகோல்களுக்கு அமைவாக அவற்றுள் பல உற்பத்திகள் இன்று நிதானமாகவும் ஆழமாகவும் மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளன. இதன் போது, ஷரீஆவின் அடிப்படைகளும் விதிகளும் பிரதான அதியுயர் இலக்குகளும் அகவயமான கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவது போலவே, நிகழ் யதார்த்தமும் அதன் முக்கியமான தரவுகளும் கூட கவனத்தில் கொள்ளப்படுவது அவசியம். அதேவேளை, யதார்த்தத்தின் முறையற்ற அழுத்தங்களுக்கு இச்செயல்பாடு

பணிந்து விடாமலும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' பணியின் ஆரம்ப அறிவுற் பத்திகள் மற்றும் அவற்றின் வகைமாதிரியான பரிசோதனைகள் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றிய இப்பிரக்ஞை பரந்தளவு ஏற்படுத்தப் படுமாயின், - கலாசார, அறிவு, சிந்தனா, நாகரிகத் துறையில் இன்னும் முயற்சிகளைச் செறிவாக்குவதனூடாக - பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை நாம் எய்த முடியும். மட்டு மன்றி, இப்பணியை மேலோட்டமான விவகாரமொன்றாக மாற்ற (உள்ளிருந்தும் வெளியிலிருந்தும்) முயல்கின்ற அனைத் துப் போக்குகளையும் கூர்ந்து அவதானிப்பதன் மூலமாக உறுதியான அடிப்படைகளின் மீது அவற்றைத் தகவமைப்பதும் சாத்தியமாகும். உண்மையான பிரக்ஞை, தேவைகளுக்கேற்ற தொடர்ச்சியான பங்களிப்பு, முறைமை வழிப்பட்ட ஈடுபாடு, அறிவாய்வுப் பார்வை முதலிய பண்புகளைக் கொண்டனவாய் அவ்வடிப்படைகள் அமைந்திருக்கும்.

பார்க்க: பின்னிணைப்பு உரு 5.7

### 7) பொதுமக்கள்:

பொதுமக்கள் என்பவர்கள் அறிவு ரீதியாக அல்லது கலாசார உள்ளடக்கம் தொடர்பாக உரையாடுமளவுக்குக் கல்வித் தரமற்ற பாமரர்கள் என்றே உம்மாவிலுள்ள படித்தவர்கள் கருதப் பழகியிருக்கின்றனர். இப்பாமரப் பொதுமக்களால் சில குறிப் பிட்ட வகை உரையாடல்களை மாத்திரமே புரிந்து கொள்ள முடியுமாக இருக்கும் அதேவேளை, சிந்தனையாளர்களாலும் கற்றறிவாளர்களாலும் அத்தகைய உரையாடல்களைத் திறம்பட மேற்கொள்ள முடியாது எனவும் அவர்கள் கருதுகின்றனர். இதனால், பல்வேறு நவீன அறிவு மற்றும் கலாசார உரை யாடல்கள் கிடைக்கப் பெறாமல் வெகுமக்கள் புறக்கணிக் கப்பட்டிருக்கின்றனர். சிலபோது சில அமைப்புகள் இவர்

களுக்குக் கோஷங்களையொத்த சில உரையாடல்களை மட்டும் முன்வைப்பதுடன் போதுமாக்கிக் கொள்கின்றன. ஆனால், இந்த அணுகுமுறை அனைத்து முஸ்லிம் நாடுகளிலுமுள்ள பொது மக்களது அறிவு-கலாசாரத் தளத்தின் வீழ்ச்சியை அதிகப்படுத்தியுள்ளதோடு, சமுதாயத்தில் ஒரு வகை அரை குறை அறிவு கலந்த- வெளிப்படையான கல்வியறிவின்மை பரவலடையவும் வழியேற்படுத்தியுள்ளது. மட்டுமன்றி, முஸ்லிம் சமூகங்களில் இன்று போலித்தனமும், மூட நம்பிக்கையும், மாய மந்திரங்களும் பரவிக் காணப்படுகின்றன. கண்மூடிப் பின்பற்றல், இஜ்திஹாத் நின்று போனமை, அறிவு பூர்வமாகச் சிந்திக்காமை என்பவற்றின் சில விளைவுகளே இவையாகும். உம்மாவிலுள்ள அறிஞர்களும் புத்திஜீவிகளும் கூட 'தக்லீத்' என்னும் பின்பற்றலின் கவர்ச்சிக்குட்பட்டு இஜ்திஹாதைக் கை விட்டுப் பாமர வெகுமக்களின் மனநிலை கொண்டவர்களாக மாறியிருக்கும் போது, பாமர வெகுமக்களின் நிலை எவ்வளவு மாற்றமடைந்திருக்கும்!

இன்று பொதுமக்களிடமும் அரைகுறைப் படிப்பாளிகளிடமும் சிந்தனையை ஒரு விதமாக அவமதிக்கும் போக்கும், கலாசாரத் தைக் கேலி செய்து சிறுமைப்படுத்தும் போக்கும் பரவியுள்ளன. சிந்தனையும் கலாசாரமும் செல்வந்தர்களதும் சொகுசு வாழ்வு நடாத்துபவர்களதும் விவகாரம் எனவும், பாட்டாளி மக்களுக்கு அது உகந்ததல்ல எனவும் பார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. அப்படிப் பாமர வெகுமக்களில் எவராவது அதில் ஆர்வம் காட்டினால் கூட, அவர் புரிந்து கொள்ளக் கூடிய வகையிலான எந்த உரையாடலையும் கண்டு கொள்ள முடியாது; ஏனெனில், உரைஞர்கள் அவரைத் தமது கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை என்ற எண்ணமே பலரிடமும் காணப்படுகிறது.

ஆனால் இம்மனநிலை மனிதனது பிரதிநிதித்துவப் பொறுப்பை யும், அல்-குர்ஆனிய உரையாடலின் இயல்பையும் பற்றிய அதீத அலட்சியத்தையே வெளிப்படுத்துகிறது. ஏனெனில், அல்-குர்ஆன் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வகையிலேயே

உரையாடுகிறது: அசிரத்தையாய் இருப்போரின் கவனத்தை ஈர்க்கிறது; வழிதவறிச் சென்றோரை நேர்வழிக்கு அழைக்கிறது; நிராகரிப்போரை விசுவாசத்துக்கு அழைக்கிறது; நயவஞ்சகர்களை இதய சுத்தியை நோக்கி அழைக்கிறது; இறை விசுவாசிகளை தம் விசுவாசத்தை இன்னும் அதிகரித்துக் கொள்ளுமாறு அழைக்கிறது. ஆக, பாமரப் பொதுமகனும் இவர்களுள் ஒருவர்தான். ஒருவரது கலாசாரப் பண்புகளைப் பார்த்தோ, கல்வித்தரத்தைப் பார்த்தோ, பல்கலைக்கழக பட்டச் சான்றிதழைக் கவனித்தோ அல்-குர்ஆன் மனிதர்களுடன் உரையாடுவதில்லை; பொறுப்புச் சுமத்துவதுமில்லை. இறைவனின் முன்னால் பொறுப்புக் கூற வேண்டிய அனைவரையும் உள்ளடக்கிய வகையிலேயே அதன் உரை அமைந்துள்ளது. பருவமடைந்த, புத்தி சுவாதீனமுள்ள மனிதனே அங்கு முன்னிறுத்தப்படும் மனிதன். அந்த வகையில், கலாசார விவகாரங்களில், அதிலும் குறிப்பாக சிந்தனை சார்ந்த விவகாரங்களில், சாதாரண மனிதர்கள் விதிவிலக்காக நோக்கப் படவோ, சிந்தனா-கலாசார ஊற்றுகளிலிருந்து பருகும் வாய்ப்பு அவர்களி டமிருந்து பறிக்கப்படவோ கூடாது.

இந்த அறிவாய்வு விவகாரங்களை அனைத்து வகுப்பினரும் புரிந்து கொள்ளக் கூடிய சட்டகமொன்றினுள் அமைத்து முன் வைப்பதே நமது பணியாகும். சிந்தனைத் தொடர்பாடலில் ஈடுபடக் கூடிய அனைத்து அலைவரிசைகளும் கையாளக்கூடிய உள்ளடக்கமாக அவற்றை நாம் வழங்க வேண்டும். அந்த வகையில், சிந்தனைச் சிக்கல் சார்ந்த எந்த விவகாரத்தையும் பல்வேறு வழிமுறைகளூடாக முஸ்லிம் மனிதனுக்கு முன் வைக்க முடியும் என நாம் நம்புகிறோம். பிழையாகப் புரிந்து கொள்ளப்பட்ட இறைநியதி (கத்ர்), நிர்ப்பந்தம் (ஜப்ர்), மனிதனது சுதந்திரமான தெரிவும் செயலும், மனித கண்ணியமும் அந்தஸ்தும், காரணிகளுக்கும் விளைவுகளுக்கும் இடையிலான தொடர்பு என்பன உட்பட முஸ்லிம் மனிதன் புரிந்து கொள்ளப் பணிக்கப்பட்ட பல விவகாரங்களை இவற்றுக்கு எடுத்துக் காட்டாகக் கூற முடியும். அல்-குர்ஆனின் ஒழுங்கமைப்பு, மொழி நடை,

அணியழகு என்பவற்றையொத்த இன்னொன்றைக் கொண்டு வருமாறு அல்லாஹ் மனு வர்க்கத்துக்கும் 'ஜின்' வர்க்கத்துக்கும் சவால் விடும் அதேவேளை, புரிந்து கொள்வதற்கும் சிந்திப்பதற்கும் இலகுவாக அந்த அல்-குர்ஆனை அவன் அமைத்திருக்கிறான்:

*"இவர்களும் அவர்களுமாகிய இரு சாராருக்கும் உலகின் வாழ்க்கை வசதிகளை நாம் வழங்கிக்கொண்டு தான் இருக் கிறோம். உமதிறைவனின் அருட்கொடை எவருக்கும் தடுக்கப் படவில்லை". (இஸ்ராஉ: 20)*

இவ்வாறு, புரிந்து கொள்ளக் கூடிய இலகுத் தன்மையும், மொழி லாவண்யமும் ஒன்றாக இணைந்திருப்பது கூட அல்-குர்ஆனின் அற்புதத் தன்மைகளுள் ஒன்று போலும்.

ஆக, நமது கருத்தாடல் உயர் மக்களுக்கானது எனக்கூறிக் கொண்டு அதனை சிக்கலாக்கிக் கொள்ள நியாயம் தேடுவது ஏற்புடையதன்று. ஏனெனில், ஒரு செய்தியை எடுத்துச் சென்று முன்வைக்கும் பலரை விட அவர்களிடமிருந்து செவிமடுப்பவர்கள் அதிக புரிதல் கொண்டவர்களாக இருக்க முடியும். "தனது தூதை எங்கே அருள வேண்டுமென்று இறைவனுக்கு நன்கு தெரியும்". எனவே நமது உரையாடல் மக்களுக்குக் கடினமாக இருக்குமெனில், அல்லது அது அவர்களுக்குப் புரியவில்லையெனில், அதற்காக நம்மை நாம் கடிந்து கொள்ள வேண்டுமேயன்றி, அவர்களது அறிவையோ புரிதல் மட்டத்தையோ அல்ல. நமது கருத்தாடல் முறைகளைத் திருத்தி யமைக்கவே நாம் முயல வேண்டும். மீண்டும் மீண்டும் அவற்றைப் பரிசீலனை செய்து, நமது உரையாடல் படித்த வர்க்கத்துக்கு மாத்திரமே உரியது என்ற நெருக்கடி நிலையிலிருந்து நாம் வெளியேற வேண்டும்.

நமது பணியை எதிர்ப்பவர்கள் அல்லது நிராகரிப்பவர்கள் சாதாரண வெகுமக்களை அதற்கெதிராகத் தூண்டி விட முயல் வார்கள். மக்களின் அன்றாட, உடனடிப் பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பும் முயற்சிகளின் ஒரு பகுதியாக இவ்விவகாரத்தை அவர்கள் சித்தரிப்பார்கள். ஆயினும், இஸ்லாமிய சிந்தனைச்

சீர்திருத்தத்தோடும் புத்தாக்கத்தோடும் மக்களது பிரச்சினை களையும் நலன்களையும் தொடர்பு படுத்துவதற்கும், அவற் றுக்கான இஸ்லாமிய அறிவுச்சட்டகத்தைக் கட்டியெழுப்பு வதற்கும் நமக்குப் பல வழிகள் உண்டு. அவர்களிடம் நம்பிக் கையை ஏற்படுத்தத் தக்க உதாரணங்களை எடுத்துக் காட்டு வதும் நமக்கு இயலாத காரியமல்ல. வெகுமக்களது நலன்களை யும் அவர்கள் ஆர்வம் காட்டும் பிரச்சினைகளையும் தத்தெடுக் கவும், தெளிவு படுத்தவும், இஸ்லாமிய சிந்தனா-கலாசார-நாகரிக நிலைக்களனிலிருந்து அவற்றுக்குத் தீர்வுகளை முன் வைக்கவும் நமக்கு வழிகள் உள்ளன. ஆயினும், எண்ணங்கள் தூய்மையாக அமைய வேண்டும்; அறிவு சிறப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும்; தொடர்ச்சியான உழைப்பு இடம் பெற வேண்டும்; நமது விவகாரம் நெகிழ்வுத் தன்மையும் விளக்கமும் கொண்ட மாதிரிச் சட்டகமொன்றினுள் முன்வைக்கப்பட வேண்டும். இவ் வளவும் நிகழுமாயின் மேற்குறித்த அனைத்து நோக்கங்களும் -இறை நாட்டத்தால்- இலகுவாக நிறைவேறக்கூடியவை தான். இவ்விவகாரங்களில் பாமரப் பொதுமக்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுவது அவர்களும் அறிவாய்வுற்பத்திகளில் ஈடுபட வேண்டும் என்பதல்ல. மாறாக, இவற்றை அவர்கள் மொத்தமா கப் புரிந்து கொண்டு ஆதரவளிக்க வேண்டும் என்பதும், பொருத் தமான விவகாரங்களில் சாதகமாக இடைவினையாற்ற வேண்டும் என்பதும், உம்மாவின் விவகாரங்களில் நேர் நிலையான நோக் கையும் அக்கறையையும் காண்பிக்க வேண்டும் என்பதும்தான். மொத்தத்தில், உயிரோட்டமும் செயலூக்கமும் கொண்ட நமது சிந்தனைகள் பல்வேறு தராதரங்களிலுள்ள மனிதர்களால் புரிந்து கொள்ளக்கூடியவையாக இருப்பது முக்கியமானது.

பார்க்க: பின்னிணைப்பு உரு 5:7

### *8) பல்கலைக்கழக மாணவர்கள்:*

*பொதுவாக முஸ்லிம் மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியை ஆரம்பிக்கும் போது அவர்களது இஸ்லாமியப் புரிதலானது வீட்டில் அல்லது ஆரம்ப-இடைநிலைக் கல்வியில் அல்லது இரண்டிலும் இஸ்லாத்தைப் பற்றிப் பெற்றுக் கொண்ட சொற்ப அறிவைத் தாண்டியதாக இருப்பதில்லை. இஸ்லாத்தைப் பற்றிய இந்தளவிலான அறிவு அம்மாணவர்களிடம் இஸ்லாமிய நோக் கையோ இஸ்லாமிய சிந்தனையையோ உருவாக்குவதற்குப் போதுமானதல்ல என்பது தெளிவு. தவறான தாக்கங்களிலிருந்து அல்லது மாற்றங்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கப் போது மான இஸ்லாமிய அடையாளத்தை இவ்வறிவு அவர்களுக்கு வழங்க முடியாது.*

*ஆக, தெளிவான இஸ்லாமிய நோக்கற்ற நிலையிலும், பல்வேறு புறத்தாக்கங்களுக்கு உட்படக் கூடிய நிலையிலுமே மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியை ஆரம்பிக்கின்றனர். கல்வியை ஆரம்பிக்கும் போது சிலவேளை அவர்களுக்குள் இஸ்லாமிய உணர்வு காணப்பட்டாலும் அங்கு இஸ்லாமிய சிந்தனை இருப்பதில்லை. அவ்வாறு காணப்படும் உணர்வுகூட பல்கலைக் கழகத்தில் 'புற நிலை நோக்கு' (Objectivity) என்ற அடை மொழியுடன் சமூக-மானிடவியல் கலைகளால் முன் வைக்கப் படும் சிந்தனைகளுக்கும், உண்மைகளுக்கும், தீர்ப்புகளுக்கும் முன்னால் நின்று பிடிப்பதில்லை. ஏனெனில், இச் சமூக- மானிட வியல் துறைகளை அவர்கள் முற்றிலும் மேற்கத்தியச் சட்டகத் திலிருந்தும், மேற்கத்திய நோக்கிலிருந்துமே கற்கின்றனர். அந்தளவிலான கருத்தாதிக்கத்தை எதிர் கொள்வதற்கு ஆற்றல் கொண்ட இஸ்லாமிய நோக்கு நிலையோ தற்காப்புச்சாதனங் களோ பொதுவாக அம்மாணவர்களிடம் இருப்பதில்லை. உயிரோட்டமுள்ள இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் சிறு பகுதியாவது இங்கு அவர்களுக்குத் தேவை. அந்த உயிரோட் டமான நம்பிக்கைக் கோட்பாடே அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுடன் தொடர்பான சிறந்த சிந்தனைகளுக்கான தொடங்கு தளமாக அமைய முடியும்.*

சிந்தனைத் தளத்தைப் பொறுத்தவரை, பொதுவாக இஸ்லாமிய உலகிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கத்திய நம்பிக் கைகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி யுள்ளது. இஸ்லாத்தைப் பற்றிய மிக நலிந்த வலுவெதிர்ப்புடன் இந்நம்பிக்கைகளும் சித்தாந்தங்களும் அவர்களுக்கு முன்வைக் கப்படுகின்றன. மேற்குலகின் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங் களிலும் மேற்கத்திய சிந்தனைகளும் நோக்கும் கற்பிக்கப்படுகின்ற அதே பலத்தோடும் வளத்தோடும் இஸ்லாமிய சிந்தனையையும் நோக்கையும் ஆழமாகக் கற்பிக்கின்ற கல்வி நிறுவனம் ஒன்றுகூட இஸ்லாமிய உலகில் கிடையாது. அதாவது ஒத்திசைவோடும், விரிவான முறையிலும், வினைமையோடும், எல்லாத் தரப்பினரது ஈடுபாட்டோடும் கற்பிக்கக் கூடிய ஏற்பாடுகள் இஸ்லாமிய உலகில் இல்லை.

‘சிந்தனா முறைமைகளைச் சீரமைத்தலும் அறிவை இஸ்லாமியப் படுத்தலும்’ என்ற நமது பணியின் எதிர்காலமும் அதன் காப்பா ளர்களும் முஸ்லிம் மாணவர்களே என நாம் கருதுகிறோம். எனவே, அவர்கள் இச் சிந்தனையை பிரக்ஞை பூர்வமாகப் புரிந்து கொள்ள வேண்டும்; அதனை மூலாதார அடிப்படையில் தகவமைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அதனைப் புத்தாக்கம் செய்கின்ற உத்தரவாதமாக அவர்கள் அமைய வேண்டும். நமது சீர்திருத்தத் திட்டத்தில் மாணவன் என்பவன் ஆசிரியர், கல்வி முறைமை, கற்பித்தல் செயன்முறைச் சட்டகம் என்பவற்றிலிருந்து வேறானவனில்லை என்றாலும், பிரதான அஸ்திவாரக் கல் அவன்தான். ஆசிரியர்களுடன் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளும், கல்வித்திட்டம் தொடர்பான நமது முன்னெடுப்புகளும் மாணவனைக் கட்டியெழுப்புவதற்கும் மீட்டுருவாக்கம் செய்வதற்குமான மார்க்கங்களேயன்றி வேறில் லை. ஏனெனில், இச்சிந்தனையைப் புரிந்து கொள்ளவும் பரப் பவும் ஆற்றல் கொண்ட முஸ்லிம் மாணவர்களே அதற்காகப் போராடுபவர்களாகவும், - கிட்டிய எதிர்காலத்திலும் நீண்ட எதிர்காலத்திலும் - அதனைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பிறருக்

*குக் கொண்டு சேர்ப்பவர்களாகவும் இருப்பார்கள் என நாம் நம்பு கிறோம்.*

*அந்தவகையில், நாம் கவனம் செலுத்தும் துறைகளில் காணப் படும் திறமையான மாணவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். குறிப்பாக உயர்கற்கை மாணவர்களையும், முனைவர் கற்கையைப் புதிதாக நிறைவு செய்தவர்களையும் இனங்கண்டு, அவர்களது சிறப்புத் துறைகளில் அவர்களுக்குப் பயிற்சி வழங்க வேண்டும். இஸ்லாமிய சிந்தனை மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்தல்விவகாரங்களில்தமது புரிதலையும்ஆற்றலையும்இன்னும் விரிவுபடுத்த விரும்புபவர்களை 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவன'த்தின் செயல்திட்டங்களில் ஈடுபாட்டுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சிறப்புத் தேர்ச்சியாளர்களூடாகப் பயிற்றுவித்துப் பலப்படுத்த வேண்டும்.*

*பார்க்க: பின்னிணைப்பு - உரு 5.9*

### *9) கல்வியியலாளர்கள் (ஆய்வாளர்களும் விரிவுரையாளர் களும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும்):*

*இன்றைய நிலையில் நமது இஸ்லாமிய உலகின் பல்கலைக் கழகங்களும், கல்வி நிறுவனங்களும், ஆய்வு நிலையங்களும் ஒரு தடையாக அமைந்திருந்த போதிலும் அவற்றை நாம் ஒரு சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்ள முடியும். உண்மையில் ஒரு தீர்வாக இருக்க வேண்டிய இந்நிறுவனங்கள் தமது பிரச்சினை களாலும் சிக்கல்களாலும் புதிராக மாறி நிற்கின்றன. மேற்கு லகைப்பொறுத்த வரை, பல்கலைக் கழகங்களே மேற்கத்திய சிந்தனையைப் பிறப்பாக்கம் செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் திருத்தியமைப்பதற்குமான மிகப் பெரும் சாதனமாக உள்ளன. மட்டுமன்றி, மேற்கத்தியக் கலாசார மாதிரியைக் கட்டியெழுப் பிப் பலப்படுத்தும் கருவியாகவும் அவை தொழிற்படுகின்றன. சமூகவியல் பிரச்சினைகளைப் படித்து, பகுப்பாய்வு செய்து,*

தீர்வுகளை முன்வைக்கும் ஆய்வுக் கூடங்களாக அவை உள்ளன; சிந்தனையையும் கலாசாரத்தையும் உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளாகவும், சமூகத்துக்கு அவற்றைக் கொண்டு சேர்க்கும் அலை வரிசைகளாகவும் திகழ்கின்றன.

நமது இஸ்லாமிய உலகில் பல்கலைக்கழகங்கள் திறக்கப் பட்டபோது, வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் மேற்குலகுக் குச் சிந்தனாரீதியாகவும் கலாசாரரீதியாகவும் அடிபணியும் நிலையைப் பலப்படுத்துவனவாகவே அவை அமைந்தன. அவற் றின் கல்வியியல் சட்டகத்தில் மிகப் பெரும் விரிவாக்கமும், பல்கலைக்கழகங்களினதும் அவற்றுக்கு மாணவர்களை வழங் கும் கல்லூரிகளினதும் எண்ணிக்கையில் பெருமளவு அதிகரிப் பும் காணப்பட்ட போதிலும், அவற்றில் இஸ்லாமியக் கற்கை களின் நிலை மிக மோசமாகவே உள்ளது. உதாரணமாக, கல்வி யையும் கல்வி முறைமைகளையும் இஸ்லாமியப் படுத்தும் நடவடிக்கையை எடுத்துக் கொண்டால், மேற்கத்தியப் பாணியில் நிறுவப்பட்ட பாடசாலைகளும் கல்லூரிகளும் பல்கலைக்கழகங் களும் ‘வஹீ’யை தமது மூலாதாரச் சட்டகங்களிலிருந்தும் அறிவு மூலாதாரங்களிலிருந்தும் விலக்கிப்பார்க்கின்ற அறிவுக் கோட்பாட்டையே வரித்துக் கொண்டிருக்கின்றன. மட்டுமன்றி, ‘வஹீ’ யையும் அதிலிருந்து பிறக்கும் அறிவையும் அவை மூட நம்பிக்கையாகவே பார்க்கின்றன; அல்லது அதிகபட்சம் அவை அறிவியல் தன்மை அற்றவை எனப் பார்க்கின்றன. இது மிகப் பெரும்பாலான இளைஞர்கள் நெறிபிறழ்வதற்கும் இஸ்லாத்தின் போதனைகளிலிருந்து தூரமாவதற்கும் காரணமாகி விட்டது.

அதே வேளை, ‘ஷரீஆக் கலைகள்’ என அறியப்படும் பாரம்பரிய இஸ்லாமியக் கலைகளின் கல்வியிலும் வழிமுறைகளிலும் தங்கி நிற்கும் நிறுவனங்களோ தமது மூல வளங்களை முன்னோர் விட்டுச் சென்ற அறக்கட்டளைகளுடன் மாத்திரம் மட்டுப் படுத்திக் கொண்டுள்ளன. அந்த அறக்கட்டளைகளும் பின் வந்தவர்களது தாக்குதல்களிலிருந்து தப்பவில்லை. அந்த வகையில், அவற்றுள் பெரும்பாலானவை புறக்கணிப்புக்கும், தனிப்பட்ட

அல்லது உத்தியோகபூர்வச் சுரண்டலுக்கும் பலியாகியுள்ளன. இந்நிலையானது தமது வகிபாத்திரத்தை நிறைவேற்ற முடியாத இயலாமையை அவற்றிடம் இன்னும் அதிகப்படுத்தியுள்ளது. அதேபோல், இவற்றில் படித்து வெளியேறியவர்களைப் பார்த்துப் பின்னால் வருவோரும் ஊக்கம் பெறத்தக்க வகையிலான அனுகூலங்கள் எதுவும் அப்பட்டதாரிகளுக்கு வழங்கப்படாத நிலையே காணப்படுகிறது.

இப்பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் நடைமுறைப் படுத்தப்படும் கல்வித் திட்டங்கள் கூட பெரும்பாலும் முன்னோரும் மூதாதையரும் விட்டுச் சென்ற பாரம்பரிய அறிவையே பிரதி பலிக்கின்றன. இக்கல்வித் திட்டங்களால் சுதந்திரமும் ஆரோக்கியமும் ஆக்க சக்தியும் கொண்ட முஸ்லிம் சிந்தையை உருவாக்குவது மிகச் சிரமமானது. அத்தகைய சிந்தையை உருவாக்கும் ஆற்றலை இஸ்லாமிய அறிவூற்றுகள் கடந்த காலங்களில் கொண்டிருந்தமை கண்கூடு. மக்கள் சரியான வழியைப் பின்பற்றுவார்களாயின், அந்தச் சக்தி இன்றும் அவற்றுக்கு உண்டு.

அதேவேளை, இவ்வாறான பாடசாலைகளில் கற்று வெளியேறும் சிலர் தனிச் சிறப்பான ஆற்றல்களைக் கொண்டிருக்கிறார்கள் எனில், இறையுதவியுடன் அவர்கள் மேற் கொள்ளும் தனிப்பட்ட முன்னெடுப்புகளும் முயற்சிகளுமே அதற்குக் காரணமாகும்.

ஆக, உம்மாவினுள் காணப்படும் மதச்சார்பற்ற மேற்குக்கல்வி முறை மற்றும் இஸ்லாமிய பாரம்பரியக் கல்வி முறை ஆகிய இந்த இரண்டு சட்டகங்களும் உம்மாவின் கலாசார-அறிவு நெருக்கடிக்கு வெளிப்படையான சான்றாக உள்ளன எனலாம். அத்துடன், உம்மாவின் கலாசாரப் பிரசன்னமின்மையையும் அவை கூர்மைப்படுத்துகின்றன. குறிப்பாக, பட்டக்கற்கைகளே இன்று உம்மாவில் புதிய நெருக்கடிகளைத் தோற்றுவிப்பவையாக மாறியுள்ளன. அந்நெருக்கடிகளுள் சில ஆபத்தானவையும் கூட. மேற்கத்திய சமூகவியல் கலைகளைக் கற்று அதனால்

தாக்கமடைந்திருப்பவர்களுக்கும், பாரம்பரியக் கலைகளைக் கற்றிருப்பவர்களுக்கும் இடையில் மட்டுமன்றி, உம்மாவின் பல் வேறு பிரிவுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டையும் வேறு வகையான முரண்பாடுகளையும் அந்நெருக்கடிகளுக்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். எந்தவொரு விவகாரம் தொடர் பாகவும் எந்தவொரு முஸ்லிம் சமூகமும் ஒரே அணியில் நிற்க முடியாதளவு அதன் அணிகள் இன்று சின்னாபின்னமாகிக் கிடக்கின்றன. வெளிப்படையான மற்றும் மறைமுகமான வேலை வாய்ப்பின்மையையும், அதனால் உருவாகிய சமூக-பொருளாதார சிக்கல்களையும் மேற்குறித்த நெருக்கடிகளின் மிகக் குறைந்த நிலையாகக் குறிப்பிடலாம்.

மொத்தத்தில், பல்வேறு வகையான கல்வித்திட்டங்கள் உம்மா வின் கலாசாரத் தேவையை நிறைவேற்றுவதில் தோல்வி யடைந்து விட்டன. அதில் குறிப்பிடத்தக்க எந்தப் பாத்திரத் தையும் வகிக்க அவற்றினால் முடியவில்லை. மேற்குமாதிரியை அடிப்படையாகக் கொண்ட மதச்சார்பற்ற கல்வி மூலமாக கடந்த இரு நூற்றாண்டுகளில் முஸ்லிம்களால் முன்னேற்றத்தைச் சாதிக்கவோ உண்மையான எழுச்சியொன்றை ஆரம்பித்து வைக்கவோ முடியவில்லை. புத்தாக்கத்திலும், தேர்ச்சியிலும், சமூக விவகாரங்களை உரிய தகுதியோடும் வினைத்திறனோடும் கையாள்வதிலும் மேற்கத்திய நேரிணையாளர்களுடன் போட்டி யிடக்கூடியவர்களை உருவாக்கும் ஆற்றலுள்ள ஒரு கல்வி நிறுவ னத்தைக் கூட இன்று வரை அவர்களால் ஏற்படுத்த முடிய வில்லை.

இஸ்லாமிய உலகப் பல்கலைக்கழகங்களினதும் கலாநிலையங் களினதும் தாழ்ந்த தரத்திலான கல்வியியல் செயற்பாடுகள் என்ற பிரச்சினையைப் பொறுத்த வரை, வழக்கமாக பிற சமுதாயங்கள் அதனையொத்த பிரச்சினைகளைக் கையாளும் அதே வழிமுறை களைப் பயன்படுத்தித் தீர்ப்பது கடினமானது என்ற நிலையே அங்கு காணப்படுகிறது. இஸ்லாமிய உலகில் ஓர் இஸ்லாமிய நோக்கு அல்லது மாதிரி இல்லாதிருப்பதே இதற்குக் காரணமாகும்.

இந்த உம்மாவின் நம்பிக்கைக் கோட்பாட்டிலிருந்து பிறக்கக்

கூடிய அல்லது குறைந்தபட்சம் அதனுடன் முரண்படாத அறிவுக் கோட்பாடொன்று இல்லாமல் அறிவு பற்றிய நேர்மை யான தேடலொன்று இடம்பெற முடியாது. இக்கோட்பாடு ஒரு மனிதனின் ஆன்மா போன்றது. வேற்றுடலிலிருந்து அதனை நகர்த்தி வரவோ, பிரதி செய்து எடுத்து வரவோ, பிறரால் நடப்பட்ட விதைகளிலிருந்து அதனை முளைக்கச் செய்யவோ முடியாது.

இஸ்லாமிய உலகில் பொதுவாக கல்வித்துறையிலும் குறிப்பாக கல்வியியல் கட்டமைப்பிலும் மேற்குறித்த நோக்குக் காணப்பட வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். முஸ்லிம் நாடுகளி லுள்ள கல்வித்துறை முன்னோடிகளிடம் மேற்கத்திய மனித னிடம் காணப்படுவது போன்ற தொலை நோக்குக் கிடையாது. மட்டுமன்றி, அறியாமை, சோம்பல், இலக்கின்மை, ஊக்க மின்மை என்பவற்றின் காரணமாக இஸ்லாமிய நோக்கையும் அவர்கள் இயல்பாகவே இழந்து நிற்கின்றனர்.

பொருள் முதல்வாதத்துக்குப் பலியாகிப் போன இக் கல்வித் துறைத் தலைமைகளிடம் உண்மையான அறிவோ இலக்கோ இல்லை. ஏனெனில், மேற்குலகில் கல்வி கற்ற பெரும்பாலான விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் (குறிப்பாக சமூக-மானிடவியல் கலைகளைக் கற்றவர்கள்) இஸ்லாமிய நோக்கி னடியாக தங்கள் கற்கைகளை ஆரம்பிக்கவில்லை. அவர்களது ஊக்கங்கள் பெரும்பாலும் பொருள்முதல்வாதப் பண்பு கொண்ட வையாகவே இருந்திருக்கின்றன. அத்தகைய பொருள்முதல்வாத முனைப்பினால் உம்மாவுக்குத் தேவையான அறிவைப் பெற உழைக்குமாறும் பாடுபடுமாறும் மாணவர்களை உந்தித் தள்ள முடியாது. இந்த வகையில்தான், அவர்களிடம் கற்று வெளியேறிய மாணவர்களால் மேற்கத்தியப் பட்டதாரிகள் தங்களது சமுதாயத்துக்கு வழங்கியது போன்ற எந்தப் பங்களிப்பையும் வழங்க முடியவில்லை. அவர்கள் கற்று ஜீரணித்த விடயங்களையும் இவர்களால் கற்று ஜீரணிக்க முடியவில்லை. அறிவு, உண்மை, மனிதன், பிரபஞ்சம் என்பவை பற்றிய இஸ்லாமிய நோக்கிலிருந்து

பிறக்கும் 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' முயற்சிகளிலும் இவர்களால் ஈடுபட முடியவில்லை.

மேற்குலகப் பல்கலைக்கழகங்களில் கற்றுப் பட்டம் பெற்றவர்களுள் பெரும்பான்மையினர் அப்பட்டத்துடன் நாட்டுக்குத் திரும்பி வந்து சமூக அந்தஸ்தொன்றையும் பொருத்தமான உத்தியோகமொன்றையும் பெறுவதற்காகவே அவ்வாறு செய்தனர். ஆனால், தற்போது இஸ்லாமிய உலகின் பல்கலைக்கழகங்களில் போதிக்கப்படும் பாடங்களும் கல்வித் திட்டங்களும் மேற்கத்தியச் சரக்குகளதும் கோட்பாடுகளதும் வளர்ச்சியடையாத பிரதிகளாகும். அவற்றுக்கென்று தனித்தன்மை எதுவும் இருக்குமானால், மேற்குலகின் பாடங்களும் கல்வித் திட்டங்களும் - மேற்கத்திய நோக்கில் - வெற்றி பெறுவதற்கு எத்தகைய நோக்குக் காரணமாக இருந்ததோ அந்நோக்கு இஸ்லாமிய உலகின் பாடங்களுக்கோ கல்வித்திட்டங்களுக்கோ இல்லை என்பது மட்டும்தான் அத்தனித்தன்மையாகும். மட்டுமன்றி, இஸ்லாமிய நோக்கும்கூட அவற்றிடம் கிடையாது. அந்த வகையில், சிலபோது அவை குறைபாடான அல்லது தீமையான கல்விச் சாதனங்களாகவே அமைந்துள்ளன. குறிப்பாக அவற்றின் சமூக-மானிடக் கலைகள் பெரும்பாலும் முஸ்லிம் மாணவர்களை அவர்களது வேர்களையும் நாகரிகத்தையும் விட்டுத் தூரமாக்குவதுடன், அவர்களது அடையாளத்தையும் இழக்கச் செய்கின்றன. 'பின்னடைவு' என்ற தடையைத் தாண்டும் வகையில் அவை எவ்வகையிலும் உம்மாவை வலுவூட்டவில்லை. மட்டுமன்றி, 'பின்னடைவு' என்ற இப் பிரயோகமே மேற்கத்தியக் கல்வி நிறுவனங்களையும் அவற்றின் உள்ளடக்கங்களையும் இஸ்லாமிய உலகுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நியாயமாகவும் பயன்படுத்தப் பட்டது.

இங்குள்ள அனேகமான பேராசிரியர்கள் - சர்வ நிச்சயமாக - இஸ்லாமிய நோக்கையும் இஸ்லாமிய அறிவியல் பிரக்ஞையையும் இழந்து விடுகிறார்கள் என்பதே இவ்வகையான கல்விக் கட்டமைப்புக்கு ஏற்படக் கூடிய மிகப் பெரிய அனர்த்தமாகும்.

'சிந்தனா முறைமைகளைச் சீர்திருத்தல் மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்தல்' என்னும் நமது செயல்வாதத்தின் முதல் பரிசோதனைக்களமாகக் கருத முடியுமான கல்விக் கட்டமைப்பு பல்கலைக்கழகமே. ஆயினும், -ஆசிரியர், மாணவன், கல்வி முறைமை உள்ளிட்ட- அந்த ஒட்டுமொத்தக் கட்டமைப்பு இன்று எந்த வகையிலும் அதற்கு உகந்ததாயில்லை. எனவே அக் கட்டமைப்பை மாற்றியமைப்பதும் முழுமையாகச் சீர்திருத்தம் செய்வதும் நமது பணியின் பிரதான இலக்குகளுள் ஒன்றாக இருப்பது அவசியம். அந்த வகையில், இக்கல்விக்கட்டமைப்பின் உண்மை நிலையையும், அதனை எவ்வாறு கையாள்வது என்பதையும் புரிந்து கொள்வதுதான் சிந்தனை மற்றும் அறிவு தொடர்பான நமது பணியைக் கச்சிதமாக அமைத்துக் கொள்ள அவசியமான முதல் கட்டமாகும். இந்தப்புரிதலே இப்போது நம் முன்னுள்ள உடனடிச் சவாலுமாகும்.

நமது அறபு-இஸ்லாமிய உலகில் உருவாகிய கட்சிகளும் இயக்கங்களும் சங்கங்களும் குழுக்களும் அறிமுகப்படுத்திய அறிவுக்கலாசார நிகழ்ச்சிகள் முறைசார் கல்வியில் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப முயன்றன. ஆயினும், உம்மாவின் மட்டத்தில் அவை எந்த முன்னேற்றத்தையும் சாதிக்கவில்லை. ஏனெனில், அவை தத்தமது பிரத்தியேகப் பணிக்கேற்பக் கற்போரைத் தகவமைக்க உதவுகின்ற அறிவுக் கலாசாரத்தின் மீதே கவனத்தைக் குவித்திருந்தன. குழு அல்லது இயக்க நோக்கி லான அவ்வகை அறிவினால் இடைவெளியை நிரப்பவோ தேவையை ஈடுகட்டவோ முடியவில்லை.

ஆக, இத்துறையில் நிலவும் உம்மாவின் நெருக்கடி பற்றிய பிரக்ஞை பரவலாக்கப்பட வேண்டும். அப்போதுதான் -பலரது சிந்தையில் பதிந்திருப்பது போல்- பாரம்பரிய மேற்கத்திய வடிவிலான கட்டமைப்புக்கும், முன்னேற்றம், புத்துயிர்ப்பு, எழுச்சி என்பவற்றுக்கும் இடையில் சிருஷ்டிக்கப் பட்டுள்ள மாயப் பிணைப்பிலிருந்து உம்மா விடுபட முடியும்.

பேராசிரியர், மாணவர், கல்வி முறைமை உள்ளிட்ட

முழுமொத்தக்கல்விக்கட்டமைப்பும்மதிப்பீட்டையும்சீர்திருத்தத் தையும் வேண்டி நிற்பதால் இம்மூன்று மட்டங்களிலும் நாம் பணியாற்ற வேண்டியுள்ளது. நம்மிடம் காணப்படுகின்ற அனைத்து வசதி வாய்ப்புகளையும் அவற்றுக்காக அதிகபட்சம் முதலீடுசெய்யவேண்டும்.அந்தவகையில்,பின்வரும்விடயங்களை நாம் மேற்கொள்ளலாம்:

***ஒன்று:*** *பேராசிரியர் மட்டத்தில்...*

1. முழு நேரமாக அறிவாய்வுப் பணியில் ஈடுபடும் வழிகளை உருவாக்கிக் கொள்ளும் வளவாளர் குழுக்களை உருவாக்குதல். இக்குழுக்கள் சிந்தனை மற்றும் அறிவு சார்ந்த பணிகளுக்கு உதவக் கூடிய அறிவியல் செயல்திட்டங்களை மேற்கொள்வதோடு, இத்துறையிலுள்ளோருக்கு இடையிலான தொடர்புகளைப் பலப்படுத்தி, அவர்களிலுள்ள மிகச் சிறந்த வளவாளர்களுடன் இடைவினையாற்றி ஒத்துழைக்க வேண்டும்; நமது பணி பற்றிய ஆர்வத்தை அவர்களிடம் தூண்டி அதன் பொறுப்புகளைச் சுமப்பதில் பங்கேற்கச் செய்ய வேண்டும்.

2. சிந்தனை, கலாசாரம், கல்வி சார்ந்த தலைப்புகளில் கற்கை களை மேற்கொள்ளக் கூடிய ஆய்வுக் குழுக்களை உருவாக்குதல். இத்தலைப்புகள் இஸ்லாமிய உலகின் சிந்தனா, கலாசார வரைபடத்தை கணிப்பீட்டுக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்த உதவும். இப்பணியின் வளவாளர்களாக இவர்களை ஆக்குவதற்கு அவசியமான பிரக்ஞை ஏற்படுத்தப் படுவது அவசியம்.

3. உம்மாவின் விவகாரங்களையும், அதன் சிந்தனா-அறிவு நெருக்கடியையும் கலந்துரையாடுவதற்கான பல்வேறுபட்ட கருத்தரங்குகளுக்கு அழைப்பு விடுத்தல். இக்கருத்தரங்குகளில் முன்வைக்கப்படும் தரமான ஆய்வுப் பத்திரங்கள் குறித்து விவா திப்பதன் மூலமாக முன்மொழியப்படும் விஷயங்களில் ஆர்வத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். எதிர்பார்க்கப்படும் இஸ்லா மியக் கலாசார மாதிரியின் அடிப்படைகளை உருவாக்குவதற்கு

இது பங்களிப்புச் செய்வதுடன், சிந்தனா நெருக்கடியைக் கையாளும் வழிகளை உருவாக்கவும் உதவும்.

இவையனைத்தும் சேர்ந்து, சிந்தனா நெருக்கடியைக் கையாள வும், இஸ்லாமியக் கலாசார மாதிரியைக் கட்டி யெழுப்பவும் கூடிய சிந்தனைகளை முன்வைப்பதற்கு பேராசிரியர்களுக்கு உதவி புரியும். இது அவர்கள் விரிவுரைக் கூடங்களில் நிகழ்த்தும் பாட போதனைகளாகவும் அமையலாம்; உயர் கற்கை ஆய்வு களில் தலைப்புகளைத் தெரிவு செய்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டும் வடிவிலும் அமையலாம். இப்புதிய அறிவாய்வுத் துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவக்கூடிய தலைப்பு களைத் தெரிவு செய்யுமாறு சிந்தனா-சமூக-மானிடவியல் சிறப் புத் துறைகளைச் சேர்ந்த முதுகலை மற்றும் முனைவர் பட்ட மாணவர்களை உற்சாகப்படுத்துவதனூடாக இதனைச் சாதிக் கலாம்.

**இரண்டு:** *பாடத்திட்ட மட்டத்தில்...*

கல்விக்கட்டமைப்பில் பாடத்திட்டத்தின் முக்கியத்துவம் ஐயத்துக்கிடமற்றது.மேற்கத்திய மதச்சார்பற்ற கல்வி முறைமைகள் நமது கல்விக்கட்டமைப்பின் மீது ஆதிக்கம் செலுத்துவது ஒரு சவாலாகும். சிந்தனா-அறிவாய்வியல்-கலாசாரப் பதிலீட்டுச் செயற்பாடுகளுக்கும், முஸ்லிம் புத்திஜீவிகளைத் தயார் படுத்தும் முயற்சிகளுக்கும் இது தடையாக அமைந்துள்ளது. இஸ்லாமிய சிந்தனைச் சீர்திருத்தம், இஸ்லாமிய சமூகவியல் கலைகளின் உருவாக்கம், அறிவை இஸ்லாமியப் படுத்தல் என்பவற்றுக்கும் கூட இது தடைக்கல்லாக உள்ளது. மட்டுமன்றி, அடிப்படையான அறிவாய்வுத் திட்டங்களுக்கும் தடையாக உள்ளது. நவீன மேற்கு சிந்தனையையும் அறிவுற்பத்திகளையும் பற்றிய ஆய்வுகள், இஸ்லாமிய முதுசங்கள் பற்றிய ஆய்வுகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய இவ்வடிப்படையான ஆய்வுகளே கல்வி முறைமைகளைக் கட்டியெழுப்பவும், மாணவர்களுக்கும் ஆசான்களுக்கும் அவசியமான பிரக்ஞையை உருவாக்கிக் கொள்

ளவும் அவசியமானவையாகும். அப்பிரக்ஞை நமது கடந்த காலத்தையும் முதுசங்களையும் பற்றியதாகவும் இருக்கலாம்; சமகால நாகரிகத்தையும் கலாசாரத்தையும் பற்றியதாகவும் இருக்கலாம். ஏனெனில், முதுசங்கள் பற்றிய பிரக்ஞை முஸ்லிம் கற்றறிவாளன் தன்னை தனது பாரம்பரியவேர்களுடன் தொடர்பு படுத்திக் கொள்ள உதவும். சமகாலநாகரிகம் பற்றிய பிரக்ஞை அது குறித்து விமர்சனபூர்வமான நிலைப்பாடொன்றை எடுக் கவும், அதனைத் தொடர்ந்து சிந்தனா-உளவியல் சுயாதீனத் தன்மையை நோக்கி நகரவும் அவனுக்கு உதவும். இத்துடன் இஸ்லாமிய உலகின் சிந்தனா யதார்த்தம் பற்றிய பிரக்ஞையும் முஸ்லிம் கற்றறிவாளனுக்கு அவசியம். அப்போதுதான், அதில் நிலவும் சிந்தனைச் செல்நெறிகளை வரையறுத்துத் தெரிந்து கொள்வதும், மிக முக்கியமான செல்நெறிகளைத் திறனாய்ந்து மதிப்பீடு செய்வதும் அவனுக்கு இலகுவாக அமையும்.

இந்த வகையில், பல்வேறு சமூக-மானிடக் கலைகளுக்குரிய பிரதான நுழைவாயில்களைக் கட்டியெழுப்பும் செயற்பாடு மிக முக்கியமான எட்டாகும். இந்நுழைவாயில்கள் சமூக-மானிடக் கலைகளுக்கான ஆரம்பமாக அமைவதுடன், கல்வி நிறுவனங் களில் பரிசோதனைகளை மேற்கொள்ள இடமளிக்கும் ஸ்தூல மாதிரிகளாகவும் அமையும். ‘கலாசார மாற்று மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்தல்’ என்ற சிந்தனையை உள்வாங்கிப் பிரதி பலிக்கும் ஆற்றல் கொண்டவையாகவும் அவை அமையும். இச்செயற்பாடானது சிந்தனை, கல்வி முறைமை, அறிவு, கலாசாரம், நாகரிகம், முதுசம் முதலிய அடிப்படையான மையப்புள்ளிகளுடன் தொடர்பான - இடையறாததும் திரட்சி மிக்கதுமான - உற்பத்திக்கு இயைந்ததாக அமைவது அவசிய மாகும்.

**மூன்று:** மாணவர் மட்டத்தில்...

சிந்தனைச் சீர்திருத்தம், அறிவை இஸ்லாமியப் படுத்துதல், மற்றும் இவ்விரு பணிகளுக்குமான வளவாளர்களை உருவாக்

குதல் சார்ந்த நமது திட்டத்தின் அத்திவாரக் கற்கள் உயர் கற்கை மாணவர்களே. எனவே, நாம் பல்வேறு சமூக-மானிடவியல் சிறப்புத் துறைகளில் திறமையான பட்டதாரிகளை இனங்கண்டு தெரிவு செய்வது அவசியம். அவர்களே ஆற்றலும், உயர் கல்வித்திறனும், இஸ்லாமிய அறிவும் கொண்ட சிறந்த வளவாளர் களாக பின்னர் மாற்றமடைவர். அத்தகைய பட்டதாரிகளது கல்வி ஆய்வுகளை நாம் திசைப்படுத்துவதுடன், 'சிந்தனா முறை மைகளைச் சீர்திருத்துதல் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்துதல்' என்ற நமது பணியின் மைய உள்ளடக்கங்களுள் ஒன்றாகவும் அவற்றை ஆக்கிக்கொள்வது அவசியம். அது நமது பணியின் கருத்துருக்களைத் துலக்கிக்கொள்ள உதவுவதுடன், நவீன அறிவியல் பிரயோகங்களுக்கும் உதவியாக அமையும். இச்செயன்முறையானது வினைமை மிக்க, பரிபூரண, இலக்கு மையக் கருத்தாடலொன்றினூடாக இடம்பெறலாம். பின்வரும் வழிகளில் அக்கருத்தாடல் வடிவமைக்கப்பட முடியும்:

1. நமது பணியையும், அதன் முக்கியமான பொதுக்கொள்கை களையும், செயல் திட்டத்தையும் மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தக் கூடிய பல்வேறு தலைப்புகளில் பயிலரங்குகளை நடாத்துதல். அவற்றினூடாக இப்பணி பற்றிய பிரக்ஞையை பாரியளவில் பரவலடையச் செய்தல். அவ்வாறே, உயர் கற்கை மாணவர்களுக்காக பல்வேறு மானிட-சமூகவியல் துறைகளில் விஷேட பயிலரங்குகளை நடாத்துவதற்கான தயாரிப்புகளை மேற்கொள்ளல். இவை சூழமைவுகளைக் கவனத்தில் கொண்டு - 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவன' தலைமையகத்திலோ அதன் கிளை அலுவலகங்களிலோஒழுங்கு செய்யப்படலாம். இஸ்லாமிய நோக்கில் கற்பித்தலை மேற் கொள்ளக் கூடிய அனுபவமும் ஆற்றலும் இயலுமையும் கொண்ட வர்களது உதவி இப்பயிலரங்குகளில் பெறப்பட வேண்டும்.

2. கற்கையைத் தொடர வசதியற்றிருக்கும் திறமையான மாண வர்களுக்குக் கடன் வசதிகளையும் மானியங்களையும் ஏற்பாடு செய்து கொடுத்தல். மட்டுமன்றி, சிந்தனைச் சீர்த்திருத்தம் மற்றும்

அறிவை இஸ்லாமியப்படுத்தல் செயற்பாட்டுக்கு அவசியமான முக்கிய தலைப்புகள் தொடர்பான சிறப்புத் தகவல்களைத் திரட்டுவதற்காகவும் குறுங்கால மானியங்களை வழங்குதல்.

3. நமது நிறுவனத்தினால் அவ்வப்போது நடாத்தப்படுகின்ற சிந்தனை சார்ந்த கருத்தரங்குகளில் திறமையான மாணவர்கள் பங்கேற்க வசதி செய்து கொடுத்தல். கருத்தரங்கின் தலைப்புத் தொடர்பான சிறந்த ஆய்வுகளை முன்வைப்பதன் மூலமாகவும், கருத்துப் பரிமாறல்களில் ஈடுபடுவதன் மூலமாகவும் இப்பங்கேற்பு இடம்பெற முடியும். அது இவ்வளவாளர்களுக்கு உயர்தரத்திலான பயிற்சியாக அமைவதுடன், அவர்களது பார்வைகளையும் அகலிக்கச் செய்யும். மேலும், கலந்துரையாடல்களிலும் கருத்தாடல்களிலும் வினைத்திறன் மிக்க வகையில் கலந்து கொள்ளும் ஆற்றலையும், நமது பணிக்குள் அடங்கியிருக்கும் சிந்தனைகளில் தெளிவு பெறும் ஆற்றலையும், ஆய்வுக்கும் தத்தெடுப்புக்கும் தகுந்த விவகாரங்களைக் கிளர்த்தும் ஆற்ற லையும் இது அவர்களுக்கு வழங்கும்.

இம்முயற்சிகள் மூலமாகவும், இவற்றை விருத்தி செய்வதன் மூலமாகவும் கல்விச் சட்டகத்தை நமது பணிக்கு உதவக் கூடிய ஆக்கபூர்வமான சாதனமாகவும் சந்தர்ப்பமாகவும் மாற்றிக் கொள்ள முடிவதுடன், யதார்த்தத்துக்கு வாய்ப்பாகவும் மாற்றிக் கொள்ள முடியும் - இன்ஷாஅல்லாஹ்.

பார்க்க: பின்னிணைப்பு - உரு 5.10

# அத்தியாயம் ஆறு

## தடைகளும் இடர்பாடுகளும்

### 1. விளிம்பு நிலைப் பிரச்சினைகள்.

*நமது பணியை எதிர்ப்பவர்கள் பல்வேறு கிளைப் போராட்டங் களை நோக்கி இயன்றவரை நம்மைத் திசை திருப்பப் பிரயத்தனம் செய்வார்கள். நமது கனவுகளை நீர்த்துப்போகச் செய்ய எல்லா வழிகளிலும் முயல்வார்கள். வசதியாகவும் சொகுசாகவும் இருந்து கொண்டு சித்தாந்தக் கற்பனையில் உழல்பவர்கள் என சிலபோது நம்மைக் குற்றம் சாட்டுவார்கள். 'முஃதஸிலாக்கள்' போன்று 'ஸுன்னா'வை விட்டு விலகிப் பகுத்தறிவை முதன் மைப் படுத்துபவர்கள் என இன்னும் சிலபோது குறை கூறு வார்கள். இஸ்லாத்தின் மூல வசனங்களைப் பொறுப்பற்ற வகையில் கையாள்வதாகவும், உம்மாவையும் அதன் உண்மைப் போராளிகளையும் அவர்களது உண்மையான பிரச்சினைகளை விட்டுத் திசை திருப்ப முயல்வதாகவும் கூட அவர்கள் நம்மைக் குற்றம் சாட்டுவார்கள். இவ்வாறு பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து, செயற்கையாகச் சிருஷ்டிக்கப்பட்ட விளிம்பு நிலைப் போராட்டங்களை நோக்கி நம்மை இழுத்துச் சென்று, நமது பிரதான பணியிலிருந்து திசை திருப்பி விட முயல்வார்கள். நமது வரையறுக்கப் பட்ட சொற்ப வளங்களைக் கொண்டு தற்காப்பு முயற்சிகளில் ஈடுபடவும், பிறரைத் தாக்கும் முயற்சிகளில்ஈடுபடவும்நம்மைத் தூண்டுவதே இங்கு அவர்களது நோக்கம்.*

இந்தப் படுகுழியில் நாம் விழுந்து விடக் கூடாது. நாம் உம்மா வின் நெருக்கடியை அடையாளம் காணத் தவறி விட்டோம் எனவும், அதன் ரோகங்களுக்கு நாம் முன்வைக்கும் சிகிச்சை பலனற்றது என்றும் உம்மாவை நம்ப வைக்க எதிரிகளுக்கு நாம் சந்தர்ப்பம் தரக் கூடாது. அப்படித் தருவோமாயின், உம்மாவின் அலட்சியப் போக்கு மேலும் தொடரும். இச்சிந்தனையைப் புறக்கணித்து, நெருக்கடியிலேயே தொடர்ந்தும் அது வாழத் தொடங்கி விடும். எனவே, இந்த உதிரிப்போராட்டங்களையும் அவற்றை உருவாக்குபவர்களையும் நாம் தாண்டிச் செல்ல வேண்டும். அவர்களது நோக்கங்களையும் நமது பணியையும் நாம் உம்மாவுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். நமது பணியை நேர்நிலையாக முன்வைப்பதனூடாகவும், நமது சிந்தனை களையும் கோட்பாடுகளையும் முன்வைப்பதற்கான புதிய வழிகளைக் கண்டடைவதன் மூலமாகவும் எதிரிகளின் முயற் சிகளைஅவற்றுக்குள் மூழ்காமலே - நாம் செயலிழக்கச் செய்ய வேண்டும். அப்போது நாம் அதிகரிப்போம்; அவர்கள் குறை வடைவார்கள். நாம் பரவலடைவோம்; அவர்கள் சுருங்குவார்கள். இறையுதவியால் நமது பக்கம் பலமடைந்து அவர்கள் பலவீனம் அடைவார்கள்.

நமது விவகாரங்களைத் தெளிவு படுத்திக்கொள்ளவும், நமது தீர்வுகளைப் பரிந்துரைக்கவுமான வாய்ப்பாகக் கூட எதிரிகளது சில முயற்சிகளை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும். நமது கண்ணோட்டங்களை முன்வைத்து, சிந்தனா ரீதியாகவும் கலா சார ரீதியாகவும் பிறரிடம் காணப்படும் தவறுகளைத் தெளிவு படுத்தவும், அவர்களது தீர்வுகளை விமர்சனத்துக்கு உட்படுத்தவும் இச்சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தலாம். அதன் மூலமாக, நாம் முன்வைப்பதையும் அவர்கள் முன்வைப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க மக்களுக்கும் வாய்ப்புக்கிட்டும். எனவே அவர்களது முயற்சிகள் குறித்து நாம் வருந்த வேண்டியதில்லை.

வினைமையும் இதய சுத்தியும் கொண்ட விமர்சனத்துக்கும், உள்நோக்கம் கொண்ட விமர்சனத்துக்கும் இடையிலான வேறு

பாட்டையும் கூட இங்கு நாம் பிரித்தறிந்து கொள்ள வேண்டும். ஒரு குழுவின் மீது நமக்குள்ள குரோதம் சிலபோது அவர்களது விமர்சனங்களில் அல்லது அவதானங்களில் அடங்கியிருக்க முடியுமான உண்மையைப் பார்க்காமல் நம்மைத் தடுத்துவிடக் கூடாது. அதேவேளை, எதிரிகள் நம்மை மூழ்கடிக்க முனையும் கிளைப்போராட்டங்கள் வெறுமனே நமது செயல்களும் சிந் தனைகளும் திட்டங்களும் சரியானவை என்பதற்கான சாட்சியங் களாக இருப்பதாக நாம் கருதிக்கொள்ளவும் கூடாது. மாற்றமாக, நமது செயல்களினதும் சிந்தனைகளினதும் அனைத்துப் பக்கங் களையும் பற்றி நாம் மேற்கொள்ளும் மீள்பார்வையும் சுய விமர் சனமும் வினைமைப் பண்பைப் பெறும் வகையில் அவை பற்றி எழுப்பப்படும் எல்லா விமர்சனங்களிலிருந்தும் நாம் பயன் பெற வேண்டும்.

## 2. நமது சொந்தத் தவறுகள்.

நமது சொந்தத் தவறுகளே மிகப் பாரதூரமான தடைகள் என நான் கருதுகிறேன். இப்பணியைச்சுமப்பவர்கள் என்ற வகையிலும், தற்போதைக்கு இப்பணியைத் தத்தெடுத்திருக்கும் ஒரேயொரு நிறுவனத்தை நிர்வகிப்பவர்கள் என்ற வகையிலும் நமது தவறுகள் மிகக் கடுமையான இடையூறுகளாகவும், தீங்கு மிக்கவையாகவும் அமைந்து விட முடியும். இவ்வாறு நாம் விடக் கூடிய தவறுகளில் பிரதானமாக பின்வருவனவற்றைக் குறிப் பிடலாம்:

1) இப்பணி பற்றி அவசியமான விழிப்புணர்வை உம்மாவிடம் முழுமையாக ஏற்படுத்த முன்னர் அச்செயற்பாட்டை இடையில் நிறுத்தி விடல்.

தேவையான கட்டங்களில் பணியை முன்னெடுத்துச் செல் லக்கூடிய போதிய வளவாளர் குழுவொன்றை உருவாக்கு வதை நாம் உத்தரவாதப்படுத்திக்கொள்ள வேண்டும். பல்கலைக் கழகங்களிலும் பிற கல்வி நிறுவனங்களிலும் வெற்றிகரமாகக் கற்பிக்கக் கூடிய பாடநெறியொன்றுக்கு அவசியமான உள்ளடக் கமொன்றையும் நாம் வழங்க வேண்டும். ஏனைய ஊடகங்களும்

நமது செய்தியை நகர்த்துவதற்கான தொடர்பாடல் முக்கியத் துவம் கொண்டவை என்ற வகையில் அவற்றுக்குச் சமாந்தரமான உள்ளடக்கங்களையும் நாம் உருவாக்குவது அவசியம். இதன் வெற்றிக்காகஉழைக்கக்கூடியவகையில்பல்கலைக்கழகங்களையும் பிற கல்வி நிறுவனங்களையும் நாம் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

2) தொடர்ச்சியான சுயதிருத்தத்தை உறுதிப்படுத்தும் வகை யில் நமது பயணம் பற்றி அறிவியல் பூர்வமாகவும் நடைமுறை ரீதியாகவும் தொடர்ச்சியான சுய விமர்சனமும் மதிப்பீடும் செய்வதை நிறுத்திக் கொள்ளல்.

3) ஒரு தலைப்பட்ச நிலைப்பாடும், நாம் முன்வைக்கின்ற விடயம் மட்டுமே உம்மாவின் அனைத்து ரோகங்களுக்கும் நெருக் கடிகளுக்கும் போதுமான தீர்வு எனநினைத்தலும்.

4) குறுங்குழுவாதத்தையும் துருவப்படுத்தலையும் அங்கீகரித் தல். இது நமது முழுப்பணியையும் பாழ்படுத்தி விடக்கூடியது மட்டுமன்றி, உம்மாவின் ஏனைய குழுக்களை விட்டு அதனைத் தனிமைப்படுத்திவிடவும் கூடியது.

5) இப்பணியின்கொள்கைகள்,அதியுயர்இலக்குகள்என்பவை தொடர்பாக அதன் செயற்பாடுகளும் பின்பற்றாளர்களும் முரண்பட்ட ஆய்வுப் பரிந்துரைகளை முன்வைத்தல். இத் தவறு குறித்து நாம் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். ஏனெனில், இத்துறைகளில் பல்வகைப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்படுவதானது இப்பணியின் செயற்பாட்டாளர் களிடம் போதிய சிந்தனைத் தெளிவின்மையைக் காட்டுவதாக அர்த்தம் கொள்ளப்படலாம். இப்பணியில் ஈடுபடுபவர்களது மாறுபட்ட சிறப்புத் தேர்ச்சிகளின் விளைவாக ஓரளவு மாறு பட்ட திட்டங்கள் தோன்ற முடியுமாயினும், அடிப்படைக் கொள்கைகளிலும் அதியுயர் இலக்குகளிலும் அந்த வேறுபாடு தோன்றக் கூடாது; அவர்களது கலாசாரப் பின்புலங்களும், இப்பணியை அவர்கள் எடுத்தாளும் முறைகளும் எவ்வளவு

*வேறுபட்டிருந்தாலும் சரியே. அந்த வகையில், இவ்விவகாரம் தொடர்பாக நம்மத்தியில் தொடர்ச்சியான உரையாடல் நிகழ் வதை உறுதி செய்து கொள்ள வேண்டும். சிந்தனைகளைத் தெளிவு படுத்திக் கொள்ளவும், கொள்கைகள் மீதும் இலக்குகள் மீதுமான ஒருமித்த நோக்கைக் கட்டியெழுப்பவும் இது உதவும். அவ்வாறே, நமது பணியின் பின்வரும் அடிப்படைக் கொள்கைகளை நமக்கு நாமே தொடர்ச்சியாக நினைவு படுத்திக்கொள்வது அவசிய மாகும்:*

- *சிந்தனை, கலாசாரம், அறிவு, நாகரிகம் என்பவற்றின் அடிப்படை மூலாதாரங்களாக வஹீயையும் பிரபஞ்சத்தையும் ஆக்கிக் கொள்ளல்.*

- *இஸ்லாமியப் பாரம்பரியம், நவீன மானிடப் பாரம்பரியம், சமூக-மானிடவியல் துறைகள் என்பவற்றை நுணுக்கமாகவும் விமர்சனபூர்வமாகவும் அவதானித்தல். நேர்நிலையானதையும், நன்மையானதையும், இஸ்லாமியக் கோட்பாட்டுடனும் அல்-குர்ஆனிய அறிவு முறைமையோடும் உடன்படக்கூடியதையும் எதிர்மறையானதிலிருந்தும், தீமையானதிலிருந்தும், இஸ்லாமியக் கோட்பாட்டுடனும் அல்-குர்ஆனிய அறிவு முறைமையோடும் முரண்படக் கூடியதிலிருந்தும் பிரித்தெடுப்பதற்கு இது நமக்கு அவசியம். மட்டுமன்றி, இவ்வாறு பிரித்தெடுப்பவற்றை ஆரோக் கியமான முறைமையொன்றின் வழியாக நாம் ஒன்றிணைக்க வேண்டும்; மயக்கமானதைத் தெளிவுபடுத்த வேண்டும்; தவறைத் திருத்த வேண்டும். அதன் மூலமாகத் திரண்டெழும் சாரமே உம்மாவின் சிந்தனைப் பாங்கையும் உளவியலையும் இஸ்லாமிய வடிவில் வார்த்தெடுக்க உதவும்; எழுச்சியை ஏற்படுத்தவும் வளப்படுத்தலைச் சாதிக்கவும் வழி வகுக்கும்.*

- *உம்மாவின் வாழ்வுக்கான முன்னுரிமைப் பட்டியலை கவனத் தில் கொள்ளல். உம்மாவின் அன்றாடப் பிரச்சினை களிலிருந்தும் யதார்த்தத்திலிருந்தும் ஒதுங்கி, நடைமுறையுடன் தொடர்பற்ற வெற்றுச்சிந்தனையிலும் அது சார்ந்த விவாதங்களிலும் ஈடுபடுவது குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அறிவார்ந்த, சமூக*

இயல்பு கொண்ட சிந்திப்பை நோக்கி அழைப்பவர்களாகவே நாம் எப்போதும் இருக்க வேண்டும்; உம்மாவையும் அதற்கே பழக்கப்படுத்த வேண்டும்.

- தனிப்பட்ட அபிப்பிராயத்தையும் சொந்த விருப்பையும் மனச் சாய்வையும் உயர்ந்த சிந்தனை போன்றும் புத்தி ஜீவித்துவ உற்பத்தி போன்றும் காட்டிக் கொள்வது குறித்தும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில், தனிப்பட்ட விருப்பங்களும் இச்சைகளும் மனச்சாய்வுகளும் உணர்ச்சி சார்ந்த விவகாரங்கள். ஆனால் சிந்தனை என்பது முடிவுகளையும் பெறுபேறுகளையும் சென்றடைவதற்கு ஏதுவான முதற்கோள்களை (Premises) தர்க்க ஒழுங்கிலும் அறிவியல் ரீதியாகவும் பகுத்தறிவு பூர்வமாகவும் நிரல் படுத்துவதாகும். அது ஆய்வோடும் விசாரணையோடும் தொடர்பு பட்டது. சிலவேளை சிந்தனையாளன் தனது விருப்பங்களுக்கும் மனச்சாய்வுகளுக்கும் மாற்றமான பெறுபேறுகளைக்கூடக் கண்டடையலாம். ஆயினும், அப் பெறுபேறுகளுக்குள் அவன் எந்த மாற்றத்தையும் உள் நுழைக்க முடியாது.

'சிந்தனாமுறைகளைச் சீரமைத்தல் மற்றும் அறிவை இஸ்லா மியப்படுத்தல்' என்னும் நமது இப்பணி எதிர்கொள்ளும் மிக முக்கியமான தடைகளையும் இடையூறுகளையும் பற்றிய இக்குறிப்பின் இறுதியில் ஒரு விடயத்தை வலியுறுத்த விரும்பு கிறோம். இத்தடைகள் பற்றிய பிரக்ஞையானது அவற்றை வாய்ப்புகளாக மாற்றிக் கொள்ள நமக்கு உதவ முடியும் என்பதே அவ்விடயமாகும். தடைகளைச் சரியாகப் புரிந்து உரிய முறையில் கையாள்வதன் மூலமாகவும், இஸ்லாமிய நோக்கு வரைந்தளிக்கும் உரையாடல் சார்ந்த அடிப்படைக் கொள்கைகளின் உதவியோடும் அவற்றை நாம் பயனுள்ள முதலீடுகளாக மாற்ற முடியும்.

நிச்சயமாக இத்தடைகள் நமது பணியைத் தடுப்பவையாகவோ, அறிவார்ந்த முன்னெடுப்புகளுக்கு முட்டுக்கட்டையாகவோ இருக்க முடியாது. இத்தடைகள் பற்றி அறிந்து கொள்வதே அவற்றைக் கையாள்வதற்கும், உரிய தீர்வுகளைப் பரிந்துரைப்பதற் குமான சரியான பாதையின் ஆரம்பமாகும். அதன் மூலமாக

அவற்றை நாம் வாய்ப்புகளாகவும் பயனுள்ள முதலீடுகளாகவும் மாற்றிக் கொள்ளலாம். வாய்ப்புகளாக மாற்றிக்கொள்ளத் தகுந்த இவ்வாறான விவகாரங்களின் பன்முகத்தன்மையானது அவற்றுக்குள் மற்றொரு அனுகூலமும் அடங்கியிருப்பதை உறுதிப்படுத்துகிறது. பல்வேறுபட்ட இத்தடைகளை எதிர்கொள்ளும் வகையிலான பல்வேறுபட்ட வாய்ப்புகளும் காணப்படுவதே அந்த அனுகூலமாகும். இந்த வகையில், அவை சிந்தனைக் களத்தில் செயற்பட முடியுமான ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுகளை நமக்கு உருவாக்கித் தருகின்றன. இம்மாற்றுகள் உம்மாவின் வெவ்வேறு மட்டங்களிலுள்ள பல்வேறு குழுக்களிடம் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தத்தக்க பரிசோதனைக் களங்களாக அல்லது அடைவுகளாகப் பார்க்கப் பட முடியும்.

அதேபோல், இம்மாற்றீடுகளுக்கும் பல்வேறு செயற்பாட்டுத் துறைகளுக்குமான முன்னுரிமைப் பட்டியலை உருவாக்குவது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய அவசியமும் நமக்குள்ளது. முன்னுரிமைகளை அமைக்கும் இச்செயல் முறையானது கால-இட அடிப்படையில் பொருத்தமான செயல்திட்டங்களூடாக மேற்கொள்ளப்பட வேண்டும். முஸ்லிம்களது பல்வேறு ஏற்பு நிலைகளும் சாதகமான நிலைகளும் கூட இங்கு கவனிக்கப்பட வேண்டும். (அதாவது, அறிவியலாளர்கள், ஆய்வாளர்கள், வெகுமக்கள், இயக்கங்கள், சிந்தனைப்போக்குகள் முதலிய வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.)

இப்பணியைச் சுமக்க முன்வருபவர்கள் அதிகபட்ச நெகிழ்வுத் தன்மையை வெளிப்படுத்தி ஆக்கபூர்வ முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். அம்முன்னெடுப்புகள் இப்பணியின் வேர்களை ஆழப்படுத்தி, அதன் பல்வேறு பரிமாணங்களை விளக்குவதில் பங்கேற்பதாகவும் அமையலாம்; இத்துறையில் பணியாற்றுவோரின் அணியில் இணைந்து கொள்ளுமாறு மற்றவர்களைத் தூண்டுவதாகவும் அமையலாம். இது ஒன்றையொன்று முழுமைப்படுத்தும் திரட்சியான முயற்சிகளை வேண்டி நிற்கும் ஒரு துறையாகும். அதேவேளை, இம்முயற்சிகளை

மேற்கொள்வோர் தமது செயற்பாட்டுச் சுதந்திரத்தின் வரம்பு களைச் சரியாக அறிந்திருப்பது அவசியம்.

பிரச்சினைகளை முன்வைப்பது அல்லது ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்வது கூட மேற்குறித்த முன்னெடுப்புகளுள் அடங்கு பவையே. 'சிந்தனா முறைமைகளைச் சீரமைத்து அறிவை இஸ் லாமியப்படுத்தல்' என்ற இவ்விவகாரத்தை ஒரு சிந்தனா-கலாசார-நாகரிக அசைவியக்கமாக மாற்றுவதற்கான நீண்ட காலத்திட்டமொன்றை வகுப்பது கூட இத்தகைய முன்னெடுப்பு களுள் ஒன்றுதான். இதன்போது, செய்து முடிப்பதை அளவிடு வதற்கான தர நிலைகள் பற்றியும், அளவீடு செய்யும் முறைகள் பற்றியும் கூட சிந்திப்பது அவசியமாகும். அப்போதுதான், உண்மையில் கிட்டாத பெறுபேறுகளை நாம் தவறாகக் கற்பனை செய்து கொள்ளும் விபத்தைத் தவிர்க்க முடியும்.

'சிந்தனா முறைமைகளைச் சீரமைத்தல் மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்தல்' என்பது ஒரு நாகரிக-கலாசார-சிந்தனைச் செயல்வாதம் என்ற வகையில், அது பற்றியும், அதன் வெற் றியை அளவிடும் தரநிலைகள் பற்றியும் விரிவான கோட்பாட் டாக்கமொன்று எழுதப்பட வேண்டும். குறித்த விவகாரத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு பெரிய, நீண்டகால செயல்திட்டமாக அக்கோட்பாட்டாக்கம் இருக்க வேண்டும். இப்பணி ஒரு சிந்தனா இயக்கமும், இயக்க சிந்தனையும் ஆகும். இதன் கிளை நிறுவனங்கள் தாய் நிறுவனத்துடன் நெகிழ்வுத் தன்மை,ஆற்றல்மிக்க முன்னெடுப்பு என்பவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைந்திருக்கும்.

இது நீண்ட காலம் தள்ளி வைக்க முடியாத ஒரு விவகாரம். அவ்வாறு நீண்ட காலம் காத்திருப்பதானது நிலைமையை இன்னும் மோசமடையச் செய்து, பிரச்சினைகளைத் திரட்சியடையச் செய்து விடும். ஒரு சிந்தனா இயக்கம் வெறும் பார்வையாளரால் நிர்வகிக்கப்பட முடியாது. பிரக்ஞையும் முன்னெடுப்பும் கொண்ட ஒருவரால் மட்டுமே அது பரிபூரணமாக மேற்கொள்ளப்பட முடியும். அவ்வாறான ஒருவரே சிந்தனையை அல்லது மீளாய்வை

*அல்லது உழைப்பை அல்லது இயக்கத்தை வேண்டி நிற்கும் வகையில் புதிது புதிதாகத் தோன்றும் எல்லா மாற்றங்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருப்பார்.*

*பார்க்க: பின்னிணைப்பு- உரு 6-1; 6-2*

# *முடிவுரை*

## *1. இடைவெளியும் பதிலீடும்*

*மாற்றுகள் பற்றிய சிந்தனையும் ஒருதலைப் பட்சமான முன் மொழிவுகளும் இஸ்லாமியக் களத்தில் இன்று பரவலாகிக் கிடக்கின்றன. ஒவ்வொரு குழுவும் மற்றக் குழுக்களெல்லாம் இலக்குத் தவறி விட்டதாகவும், தான் மட்டுமே உம்மாவைக் கடைத்தேற்றி, அழிந்து போனதை மீளக்கட்டியெழுப்பப் போவதாகவும், தான் மட்டுமே சத்தியத்தின் மீது இருப்பதாகவும் உரிமை கோரத் தொடங்கியுள்ளன. இந்நிலையானது பல்வேறு குழுக்களுக்கிடையில் முரண்பாட்டையும் பிரிவினையையும் மட்டுமன்றி, மோதலையும் கூட தோற்றுவித்து விட்டிருக்கிறது. அந்த வகையில், பல சீர்திருத்த இயக்கங்கள் தங்களது எழுத்துகள் மூலமாகவும், உரைகள் மூலமாகவும், தங்களது தலைவர்களால் முன்வைக்கப்படும் ஆய்வுப்பத்திரங்கள் மூலமாகவும் ஏனைய அனைத்து இயக்கங்களுக்குமான மாற்றீடு தாமே என உரிமை கோரத் தொடங்கியிருப்பதைப் பார்க்கிறோம்.*

*இஸ்லாமியக் களத்திலிருக்கும் ஒரே இயக்கத்தின் உட் குழுக் களுக்கும், பின்னர் அவற்றுக்கும் உம்மாவின் பிற குழுக்களுக் கும் இடையில் நாம் காணும் பிரிவினையும் மோதலும் முரண் பாடும் இஸ்லாமிய இயக்கத்துக்கு மட்டுமன்றி முழு உம்மா வுக்கும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் முன்னறிவிப் பாகும். இவ்வாறான ஒருதலைப்பட்ச நிலைப்பாடும், ஒவ்வொரு குழுவும் தன்னையே ஏனைய அனைத்துக் குழுக்களுக்குமான பதிலீடாகவும், இஸ்லாத்தினதும் உம்மாவினதும் உத்தியோக*

பூர்வப் பேச்சாளர்களாகவும் கருதிக் கொள்வது எல்லாக் குழுக் களையும் பரஸ்பர மோதலில் சிக்க வைத்து ஆற்றல்களைச் சிதறடிப்பதுடன் உம்மாவின் உயர் நோக்கங்களையும் தொலைந்து போகச் செய்திருக்கிறது. போதாததற்கு, இயக்கத்துக்கும் அதன் தலைமைக்கும் காண்பிக்கப்படும் விசுவாசமானது இஸ்லாத் துக்குக் காண்பிக்கப்படும் விசுவாசமே என்பதான கட்டளைகள் நிலைமையை இன்னும் மோசமாக்கி விட்டன. இதனால், குழுக்கள் என்பவை சாதனங்கள் என்ற நிலையிலிருந்து இலக்காக மாறின. இயக்க ஒழுங்கமைப்புகளே அடிப்படை நோக்கமாக மாறிப் போயின.

எவ்வாறாயினும், 'ஒற்றைப்பதிலீடு' என்னும் இச்சிந்திப்புக்கு மாற்றமாக 'இடைவெளிகளை நிரப்புதல்' என்ற நமது சிந்தனா இயக்கம் இன்று வலுப்பெற்றுப் பலமடைந்து வருவதை அவதா னிக்க முடிகிறது. நடைமுறை பூர்வமான இச்சிந்தனா இயக்க மானது இதய சுத்தியுடன் உழைக்கும் ஒவ்வொரு இயக்கமும் உம்மாவின் ஒவ்வொரு முன்னரங்கிலும் நின்று இடைவெளி களை நிரப்பும் பணியை மேற்கொள்ள வேண்டியவையே எனக் கருதுகிறது. ஒவ்வோர் இயக்கமும் அதன் முன்னரங்கைப் பாதுகாக்கவும் இலக்குகளைச் சாதிக்கவும் பிற இயக்கங்கள் ஒத்துழைப்பும் உதவியும் வழங்குவது கட்டாயமானது எனவும் அது வலியுறுத்துகிறது.

'சிந்தனாமுறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ் லாமியப் படுத்தல்' என்ற இச்செயல்வாதம் மிக முக்கியமான இடைவெளியொன்றை நிரப்புகிறது என்பது உண்மையே எனி னும், உம்மாவில் நிரப்பப்பட வேண்டிய இன்னும் ஏராளமான இடைவெளிகளும் இருக்கின்றன.

உம்மாவுக்குரிய சிந்தனா-கலாசார-அறிவுத் தளத்தை முன்வைப் பதே நமது பணியாகும். இஸ்லாமிய இயக்கத்தின் சீரிய பயணத் துக்குரிய சரியான ஆரம்பப் புள்ளியை அப்பணி வரையறுக்க வேண்டும்; முதன்மைப் பணிகளின் பட்டியலை வரைந்தளிக்க வேண்டும்; யதார்த்தத்தையும் அதன் பிரச்சினைகளையும் முறை

*யாகக் கையாள்வதற்கான விதிகளைக் கட்டமைக்க வேண்டும்; யதார்த்தத்துடன் உறவாடும் பிரதான வழிமுறைகளை வரை யறுத்துக் கூற வேண்டும்; உம்மாவின் மையப் பிரச்சினைகளைத் தீர்த்து அதன் நிலைபேறுக்கு உதவும் காரணிகளைப் பாது காப்பதற்கான மாற்று வழிகளை முன்மொழிய வேண்டும். இவ்வனைத்துப் பணிகளும் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படை களையும் விதிகளையும் அதியுயர் இலக்குகளையும் முழுமொத்த அம்சங்களையும் பேணிய வகையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், உம்மாவினுள் புத்துயிர்ப்புக்கும் இஜ்தி ஹாதுக்குமான முறைமைகளும் மீள உயிர்ப்பிக்கப் பட வேண்டும்.*

*‘சிந்தனாமுறைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லா மியப்படுத்தல்’ என்ற இச்செல்நெறியானது இஸ்லாமிய நம் பிக்கைக் கோட்பாட்டுக்கும் சிந்தனைச் செயற்பாட்டுக்கும் மத்தி யில் இடைவெளி காணப்படுகிறது என்ற மாயையை நீக்கம் செய்ய முயல்கிறது. இவ்விரண்டுக்குமிடையில் முரண்பாடு காணப்படுவதாகக் கூடச் சிலர் எண்ணுவதுண்டு. ஆனால், அல்-குர்ஆனிய நோக்கு பல்வேறு சிந்தனைச் செயற்பாடுகளுக்குத் தெளிவான ஒப்புதலளித்துள்ளதோடு சிந்திப்பை நோக்கி அழைப் பும் விடுக்கிறது. நம்பிக்கைக் கோட்பாட்டுக்கும் சிந்தனைக்கு மிடையே காணப்படுவதாக ஊகிக்கப்படும் இவ்விடைவெளியை நிரப்ப நாம் எடுக்கும் முயற்சியானது இவ்விரண்டுக்குமிடை யிலான உறவின் தன்மை பற்றிய நமது நோக்கிலிருந்து எழுவதாகும். உதாரணமாக, நம்பிக்கைக் கோட்பாட்டையும் அதிலிருந்து பிறக்கும் பெறுமானங்களையும் புரிந்து கொள்வ தற்கு உதவும் அடிப்படைக் கருவியாக சிந்தனைகள் அமை கின்றன. அந்த நம்பிக்கையையும் பெறுமானங்களையும் வாழ் வியல் யதார்த்தமாக மாற்றிக்கொள்ளவும் சிந்தனைகள் உதவு கின்றன. அதே வேளை, சிந்தனை இயங்குவதற்கான எல்லைச் சட்டகத்தை நம்பிக்கைக் கோட்பாடு வழங்குகிறது. அந்த வகையில், தனக்கான அடித்தளமாகவும், ஆதார சுருதியாகவும், தொடங்கு தளமாகவும் இருக்கின்ற நம்பிக்கைக் கோட்பாட்டை*

ஆரோக்கியமான சிந்தனையால் புறமொதுக்க முடியாது. அவ் வாறே, நம்பிக்கைக் கோட்பாடு நிகழ் யதார்த்தத்தின் மீது ஸ்தூலப் பிரயோகம் பெறுவதற்குச் சிந்தனை அவசியமானது. நம்பிக்கைக் கோட்பாட்டின் நடைமுறைப் பயன்பாட்டிற்கு அவசி யமான நிபந்தனைகளையும் வழிவகைகளையும் சிந்தனையே வரைந்தளிக்கிறது. மட்டுமன்றி, நம்பிக்கைக் கோட்பாடு நடை முறைக்கு வரத் தடையாக அமையும் காரணிகளையும் சிந்த னையே எதிர்த்து நிற்கிறது. சுருங்கச் சொன்னால், ஆரோக்கி யமான தொரு நம்பிக்கைக் கோட்பாடு சிந்தனைக்கு உதவியாகவும் ஆதரவாகவும் இருக்கும்; அதன் வினைத்திறனைத் தூண்டும். தெளிவானதும், ஆரோக்கியமானதும், அறிவியல் பூர்வமாக நியமப்படுத்தப் பட்டதுமான முறைமையொன்றுக்கு இசைவான வகையில் உம்மாவின் விவகாரங்களைக் கையாள்வதற்கு சிந்தனை யின் இயலுமைகளை அது பயன்படுத்திக் கொள்ளும்.

பல இஸ்லாமியவாதிகள் நாகரிகத் திட்டத்துடன் தொடர் புடைய அனைத்தையும் நம்பிக்கைக் கோட்பாட்டின் ஒரு பகுதியாக மாற்றிக்கொள்வதில் ஆர்வமாக உள்ளனர். உம்மாவை இயங்கச் செய்வதற்கு உதவும் என்ற எதிர்பார்ப்பில் நம்பிக்கைக் கோட்பாட்டையும் உம்மா எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் தொடர்புபடுத்த அவர்கள் முயல்கிறார்கள். உம்மாவின் வாழ் வில் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு வகிக்கும் முக்கிய பாத்திரத்தைக் கருத்தில் கொண்டு சில குழுக்கள் 'தக்ஃபீர்' சார்ந்த பிரச்சினைகளுக்குள்ளும் வேறு பிரச்சினைகளுக்குள்ளும் நுழைந்து, உம்மாவின் நெருக்கடிகளை இன்னும் பூதாகாரப் படுத்தும் நிலையை அடைந்து விட்டன.

சிந்தனை பற்றிய விவாதமும் அதன் முக்கியத்துவத்தை வலி யுறுத்துவதும் நம்பிக்கைக் கோட்பாட்டின் மீதான கவனத் தைப் பலவீனப்படுத்தி விடுமென்று அல்லது நம்பிக்கைக் கோட்பாட்டிற்கான பதிலீடாக அமைந்து விடுமென்று கூட அவர்களில் சிலர் எண்ணினர். இன்னும் சிலர் அவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று நிகரான வார்த்தைகளாகக் கருதி, சிந்தனை

மீதும் முஸ்லிம் சிந்தனையாளர்கள் மீதும் கடுமையான தாக்கு தலைத் தொடுத்தனர். அச்சிந்தனையாளர்களுக்கும் வரலாற்றில் வாழ்ந்த 'முஃதஸிலா'க்களுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பிருப்பதாக அவர்கள் கற்பனை செய்து கொண்டனர். நம்பிக்கையைச் சீரமைத்துக் கொள்வதற்கான அழைப்பானது சிந்தனைச் சட்டகமொன்றை வேண்டி நிற்பதை அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ புறக்கணித்து விடுகின்றனர். ஆனால் அத்தகைய சிந்தனைச் சட்டகமே நம்பிக்கைக் கோட்பாட்டின் அர்த்தத்தை வரையறுத்து, உம்மாவின் வாழ்விலும் நாகரிகக் கட்டமைப்பிலும் வினைத்திறன் கொண்ட இயக்கமாக அதனை மாற்றக்கூடியதாகும். ஒரு சிந்தனையுடன் ஆரம்பித்து, பின்னர் கோட்பாடாக மாறி, பின்னர் சான்று மூலமாக அல்லது பின்பற்றல் மூலமாகப் பலப்படுத்தப்பட்டு, உள்ளம் ஈடுபாட் டுடன் பற்றுக் கொள்ளும் நிலையை எட்டாத ஒரு நம்பிக்கைக் கோட்பாடு இருக்க முடியுமா?

'சிந்தனா முறைகளைச் சீரமைத்தல் மற்றும் அறிவை இஸ்லா மியப் படுத்தல்' என்பது உண்மையில் உம்மாவை நோக்கிய உரையாடல் என்ற வகையில், அது இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் அடிப்படைகளையோ கொள்கைகளையோ கவனிக்கத் தவறுவதில்லை. மட்டுமன்றி, அந்த நம்பிக்கைக் கோட்பாடுதான் முழுச் சிந்தனா உலகமும் தங்கி நிற்கின்ற அடித்தளம் எனவும் அது கருதுகிறது. அனைத்துக்கும் மேலாக, அறிவுக்கும் கலாசாரத்துக்கும் நாகரிகத்துக்கும் மூலாதாரமாய் நிற்பது 'வஹீ'யே. அந்த வகையில், நம்பிக்கைக் கோட்பாட்டிலிருந்துதான் முழுப் பிரபஞ்சத்தையும், அதன் தொழிற்பாடுகளையும், தொடர்புகளையும், நாகரிக இயல்பை யும், அபிவிருத்தியையும் பற்றிய நமது கருத்தாக்கம் ஆரம்பிக் கிறது. நம்பிக்கைக் கோட்பாடு என்ற அந்த அடிப்படையின் மீதுதான் முழு உம்மாவும் ஒன்றிணைந்து தனது அடையாளத் தையும் வழித்தடங்களையும் உருவாக்கிக்கொள்கிறது. அந்த அடிப்படையின் மீதுதான் உம்மாவின் பிரக்ஞைக்கான அனைத்

*துக் கூறுகளும் தர நிலைகளும் கட்டமைகின்றன: அந்தப் பிரக்ஞை சுயம் சார்ந்ததாகவும் இருக்கலாம்; பிறர் பற்றிய தாகவும் இருக்கலாம்; சூழமைவு பற்றியதாகவும் இருக்கலாம்.*

*மேலும், நம்பிக்கைக் கோட்பாடானது - பல்வேறு துறைகளில் பல்வேறு தர நிலைகளில் மேற்கொள்ளும் இவ்வாறான பல பணிகளுக்கு மேலதிகமாக - அறிவு, கலாசாரம், சிந்தனை என்பவற்றுக்கான அடிப்படைகளாக அமைந்துள்ள அசல் இஸ்லாமிய மூலாதாரங்களை எவ்வாறு நாம் கையாள வேண் டும் என்ற வரையறைகளையும் வகுத்துத் தருகிறது. அந்த வகையில், உம்மாவின் உளப்பாங்கை வடிவமைப்பதிலும், மன வமைப்பைக் கட்டியெழுப்புவதிலும், நாகரிக வளர்ச்சிக்கான அசைவியக்கத்தைத் தீர்மானிப்பதிலும் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு அசலான அந்தஸ்தை வகிக்கிறதெனலாம்.*

*நமது கருத்தாடலானது முக்கியத்துவமும் முழுமைத்துவ அணுகு முறையும் கொண்டதெனினும், நாம் உம்மாவின் முன்னரங்குகளில் ஒன்றை மட்டுமே நிரப்புகிறோம் என்பதையும், நாம் எவருக்கும் பதிலீடல்ல என்பதையும் ஒரு கணம் கூட மறந்து விடவில்லை. நமது உரையாடல் முழு உம்மாவுக்குமானது. அந்த வகையில், இஸ்லாமியவாதிகள் தங்களது 'கலாசாரப் பிரசன்னமின்மை' (*Cultural absence*) நிலையிலிருந்தும், இறந்த காலத்தினுள் வாழும் நிலையிலிருந்தும் வெளியே வர வேண்டுமென நாம் அழைக்கிறோம். அதேபோல், மேற்குமயப்படுத்தலாலும் மேற்குக் கலாசாரத்தை நுகர்ந்ததாலும் விளைந்த 'கலாசாரப் பிரசன்ன மின்மை' நிலையிலிருந்து வெளியே வரு மா று உம்மாவின் ஏனைய குழுக்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம்.*

*உம்மாவின் எல்லைகளைத் தாண்டி, அறிவியலுக்கும் விழுமியங் களுக்கும் இடையிலான பிளவினால் ஏற்பட்ட நெருக்கடி யிலிருந்து ஒட்டுமொத்த உலகை மீட்பதற்காக உயர்ந்து வரும் குரல்களுள் ஒன்றாகவும் நமது குரல் உள்ளதெனலாம். ஏனெனில் உலகின் அறிவியலாளர்களும் கற்றறிவாளர்களும் சிகிச்சை தேடிக் கொண்டிருக்கும் இப்பிரச்சினை தொடர்பாக நமது பணியும்*

கரிசனை கொண்டிருக்கிறது.

அந்த வகையில், 'சிந்தனாமுறைமைகளின் சீரமைப்பு மற்றும் அறிவை இஸ்லாமியப்படுத்தல்' என்ற கருத்தாடல் இஸ்லாமிய வாதிகளுக்கும் அவர்களது அறிவுசார் தலைமைத்து வத்துக்கும் மாத்திரம் பிரத்தியேகமானதல்ல. உம்மாவினுள் சிந்தனா ரீதியா கவும் கலாசார ரீதியாகவும் மாறுபட்ட செல்நெறி களுடன் பரந்து பட்டுக் கிடக்கும் ஏராளமான குழுக்களுக்கும் உரியதாக அது உள்ளது. மட்டுமன்றி, அச்செல்நெறிகளின் மேற்கத்திய நாகரிக வேர்களை நோக்கிக் கூட அது நீள முடியும்.

'சிந்தனா முறைமைகளைச் சீரமைத்தல் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்தல்' பணியானது முதல் பிரிவாகிய இஸ்லாமியவாதிகளுடன் உரையாடும் போது அவர்களது புத்தி ஜீவித்துவ முன்மொழிவுகளை நெறிப்படுத்தியும், மதிப்பீடு செய்தும், மேலதிகமாகச் சேர்த்தும், பலப்படுத்தியும் விருத்தி செய்வதே அதன் நோக்கமாகும். இரண்டாவது பிரிவினராகிய மதச்சார்பற்றவர்களுடன் உரையாடும் போது, அவர்கள் முன் வைத்த அறிவாய்வுகள் உம்மாவின் நம்பிக்கைக் கோட்பாடு, அடையாளம், யதார்த்தம் என்பவற்றிலிருந்து தூரமானவை எனவும், அதனால் அவை தமது வினைத்திறனையும் நம்பகத் தன்மையையும் உம்மாவின் சக்திகளை ஒன்று திரட்டும் வலிமை யையும் இழந்து விட்டன எனவும் புரிய வைக்க முனைகிறது.

சுருங்கச் சொன்னால், 'சிந்தனா முறைமைகளைச் சீரமைத்தல் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்தல்' என்ற விவகாரம் அதீத முக்கியத்துவம் கொண்டதாக இருந்த போதிலும், தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். இஸ்லாமிய உலகில் காலனிய ஊடுருவல் நிகழ்ந்து, உம்மாவின் அறிவு-கலாசார-கல்வி மாதிரி மேற்கத் தியக் கலாசாரத்துக்கு அடிபணிந்த மாதிரியொன்றாக மாறியதி லிருந்தே இந்நிலை ஆரம்பித்து விட்டது. பின்னர் பல முஸ்லிம் நாடுகள் இராணுவ-அரசியல் காலனியத்திலிருந்து விடுபட்டா லும், சிந்தனா-கலாசாரக் காலனியத்திலிருந்து இன்று வரை

அவற்றினால் விடுபட முடியவில்லை. இச்சிந்தனா-கலாசாரக் காலனியம் முஸ்லிம் சிந்தையை உள்ளீர்த்து மீள வடிவமைத் ததுடன் மேற்குலகுக்கு முழுமையாக அடிபணியும் இயல்பு கொண்டதாகவும் மாற்றி விட்டது.

ஆக, இவ்வாறான அறிவு-கலாசார-சிந்தனா-நாகரிக-முறைமை சார் அடிபணிதலிலிருந்து உம்மாவை விடுவிப்பதற்கு சிந்தனா முறைமையின் சீர்த்திருத்தம் நோக்கியும், கலாசார மாதிரியைக் கட்டியெழுப்புவதை நோக்கியும் அதன் கரம் பற்றி நாம் அழைத் துச் செல்ல வேண்டியிருக்கிறது.

2. ‘சிந்தனாமுறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்தல்’ என்ற விவகாரமும் அரசியல் கட்சிகளும்

‘சிந்தனாமுறைமைகளின் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லா மியப் படுத்தல்’ என்ற விவகாரத்தை எவ்வகையில் சேர்ப்பது என்ற குழப்ப நிலை சிலருக்கு ஏற்படலாம். அது ஒரு இயக்கமா அல்லது குழுவா அல்லது கட்சியா அல்லது வேறொன்றா? யதார்த்தத்தில், நமது பணி இத்தகைய எந்த வகைப்பாட்டினுள்ளும் அடங்காது என்பதே உண்மையாகும். உம்மாவின் பிரச்சினைகளைக் கையாள் வதற்கு அது தனது சிந்தனா-நாகரிகத் திட்டத்தை முன்வைக்கும் அதேவேளை, எந்த வொன்றுக்குமான பதிலீடாகத் தன்னை முன்னிறுத்துவதில்லை என்பதை நாம் முன்னர் விளக்கினோம்.

ஓர் அரசியல் இயக்கமாகவோ கட்சியாகவோ இருப்பது இப் பணியின் நோக்கமல்ல. ஏனெனில், சீர்த்திருத்தச் செயல்வாதத் தில் தனது முழுமையான நாகரிகப் பாத்திரம் எவ்வாறானது என்ற பிரக்ஞை அதற்குள்ளது. இன்னுமின்னும் அதிகமாக அரசியல் குழுவாதங்களும் இலக்குச்சிதறலும் உம்மாவுக்கு அவசிய மில்லை. அந்த வகையில், இப்பணியானது இயல்பிலேயே ஓர் ஒருங்கிணைக்கும் இயக்கமாகும். உம்மாவின் சிந்தனை, அறிவு, கலாசாரம், நாகரிகம், முறைமை, ஐக்கியம் என்பவை தொடர்பான விவகாரங்களிலேயே அது கரிசனைகொண்டிருக்கிறது.ஏனெனில், நாகரிகப் பிரசன்னம் என்ற இலக்கைச் சென்றடைவதற்கு இவை

யனைத்தும் மிக முக்கியமான நிபந்தனைகளாக உள்ளன. இதய சுத்தி கொண்ட ஒவ்வோர் இயக்கமும் அல்லது குழுவும் இது குறித்துத் தனது பாத்திரத்தை நிறைவேற்றும் கடப்பாட்டைக் கொண்டதென அது கருதுகிறது.

அதேவேளை, 'இஸ்லாமிய சிந்தனைச் சீர்திருத்தம் மற்றும் அறிவை இஸ்லாமியப் படுத்தல்' என்னும் இப்பணி ஒரு கலாசாரச் செல்நெறியாக ஒவ்வொரு கட்சியையும் குழுவையும் சென்றடைய வேண்டும். பிறர் அதிலிருந்து எல்லா வகையிலும் பயன்பெற வேண்டும். கட்சிவாதத்துக்குள் அல்லது குறுங் குழுவாதத்துக்குள் அது சிறைப்பட்டு விடக் கூடாது. மாறாக, அதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு பரவலடைய வேண்டும். அதன் மூலமே குறிப்பிட்டதொரு கட்சிக்கு அல்லது இயக்கத்துக்கு இரையாகி விடாமல் அது பாதுகாக்கப்படும்.

இப்பணி முழு உம்மாவினதும் விசுவாசத்துக்குரியது. அந்த வகையில், இதனைப் பரந்த கலாசார-சிந்தனாஇயக்கமொன்றாக மாற்றுவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். இது ஓர் ஆன்மாவாக உம்மாவில் ஊடுருவி அதன் எல்லா அங்கத்தவர் களையும் குழுக்களயும் சென்றடைய வேண்டும்; ஆரோக்கியமான இஸ்லாமிய சிந்தனையின் மீதும் சீரிய அல்-குர்ஆனிய முறைமை மீதும் அனைவரையும் ஒன்றிணைத்து எழுச்சியைச் சாத்தியப் படுத்த வேண்டும்; அபிவிருத்தியைச் சாதிக்க வேண்டும். அதன் மூலமாக உம்மா தனது நாகரிகப் பிரசன்ன வகிபாத்திரத்தை மீட்டெடுத்து, மனிதர்களை இருள்களிலிருந்து ஒளியை நோக்கி அழைத்து வர வேண்டும்.

இஸ்லாமியப் பணியில் இன்று காணப்படும் பல்வேறு சட்ட கங்களைத் தாண்டிய தெளிவான இந்நிலைப்பாட்டுக்குப் பிறகும்கூட நமது இப்பணி யதார்த்தத்திலிருந்து தொடர்பறுந்த வெறும் கற்பனைச் செயற்பாடு என்றோ அறிவியல் இன்ப மென்றோ எவரும் குற்றம் சாட்ட முடியாது. அப்படிக் குற்றம் சாட்டுபவர்கள் சிந்தனைச் செயற்பாட்டின் உண்மையான இயல்பையும், சீர்திருத்தம், அபிவிருத்தி, நாகரிகம் என்பவற்றில்

அதன் வகிபாத்திரத்தையும் அறியாதவர்களாகவே இருப்பர்; அல்லது அறியாதவர்களைப் போல் நடிப்பவர்களாய் இருப்பர். ஏனெனில், அறிவை இஸ்லாமியப் படுத்தல் செயல்வாதமானது இணைபிரியாத இரு விடயங்களைக் கொண்டது. இயக்க சிந்தனை மற்றும் சிந்தனா இயக்கம் என்பனவே அவ் விரண்டுமாகும். உம்மாவின் நாகரிகத் திட்டத்துக்கு இஸ்லாமிய சிந்தனைத் திட்டம் அத்தியாவசியமானது என்பதையும், அத் திட்டம் எவ்வித நியாயமுமின்றி ஓரங்கட்டப்பட்டிருக்கிறது என்பதையும் இதன் மூலமாக அது வலியுறுத்துகிறது. சிந்தனைத்தளமானது சரியான இயக்கத்துக்கும் ஆரோக்கிய மான செயற்பாட்டுக்கும் முந்தியது என்ற பிரக்ஞையையும் அது வெளிப்படுத்துகிறது. அச்சிந்தனைத் தளம் இல்லாத போது பெரும் குழப்பமும் மயக்கமுமே எஞ்சும்.

சில இயக்கங்களால் வாழ்வியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள அல்லது அதனை உரிய முறையில் கவனத்திற் கொண்டு இடைவினையாற்ற முடியாமல் போனமைக்குக் காரணம், 'இஸ்லாமியப் படுத்தல்' செயன்முறையையும் அதன் சிந்தனா-கல்வி-கலாசார-அறிவுத் தேவைகளையும் உள்வாங்க முடியாமல் போனதே ஆகும். 'இஸ்லாமியப் படுத்தல்' என்ற மொத்தமான செயல்வாதத்தின் ஒரு பகுதியாகவே 'அறிவை இஸ்லாமியப்படுத்தல்' பணி தன்னைக் கருதுகிறது. ஏனெனில், 'இஸ்லாமியப்படுத்தல்' என்பது பெறுமானமும் நாகரிகமும் சார்ந்த பொதுவானதொரு சட்டகம். தனிமனிதன், சமூகம், சிந்தனை, செயல், கற்றல், செயற்படல், அறிவு, ஒழுங்கமைப்பு, குடிமகன், ஆட்சியாளன், உலகம், மறுமை முதலிய அனைத்தையும் உட்பொதிந்த சட்டகம் அது. அதன் வழியாக முஸ்லிம் மனிதன் சத்தியம், நீதி, வளப்படுத்தல், சீர்திருத்தம் என்பவற்றை மேற்கொண்டு உயர்ந்த இறைவனின் திருப்தியை எதிர்பார்க்கிறான்.

'இஸ்லாமியப் படுத்தல்' கட்டமைப்பின் அடிப்படையான கூறு 'அறிவை இஸ்லாமியப் படுத்தல்'தான். அது சிந்தனை, கருத்துப் படிவம், மானிட - பெறுமான உள்ளடக்கம், அந்த உள்ளடக்கம் கட்டமைக்கப்படும் முறை, உள்ளம், பகுத்தறிவு, மனச்சாட்சி

என்பவற்றுடன் அதற்குள்ள தொடர்பு முதலியவற்றை உள்ள டக்கிய செயற்பாடாகும். அந்த வகையில் 'இஸ்லாமியப் படுத் தல்' என்பது ஓர் ஆழமான இஸ்லாமிய முறையியல் ஆகும். ஷரீஆவின் அதியுயர் இலக்குகள், நோக்கங்கள், முழுமொத்த அடிப்படைகள், யதார்த்தம் பற்றிய தரவுகள், அதன் தேவைகள் என்பவை பற்றிய மானிடப்புரிதலின் வெளிச்சத்தில் 'வஹீ'யை அது திசைப்படுத்துகிறது. மட்டுமன்றி, இஸ்லாத்தின் சம நிலைத் தராசு கொண்டும், அதன் பரிபூரணப் பெறுமானங்கள், வழிகாட்டல்கள், இலக்குகள் என்பவற்றின் ஒளியிலும் பரிசீலிக் கப்பட்ட அறிவியல்-நாகரிக ஆற்றல்களையும் சாதனைகளையும் அது பிரதிபலிக்கிறது.

'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' என்பது வெறுமனே பெறு மானங்களும் இலக்குகளுமல்ல. தனிநபர் சிந்தனைகளு மல்ல. வரலாற்று முதுசங்கங்களுமல்ல. மாறாக, அது அறிவியல், கலாசாரம், சிந்தனை, சமூக-மானிட-இயற்பியல்-பிரயோகவியல் சார் அறிவு முதலிய அனைத்திலிருந்தும் அறிவாதார முறைமை சார்ந்த மனப்பாங்கொன்றை உருவாக்கும் வழியாகும். இந்த அனைத்திலும் அது தனது இயலுமைகளையும், வஹீயின் தரவுகளையும், பகுத்தறிவையும், சிந்தனையையும், முஸ்லிம் முறைமையையும் முதலீடு செய்து உம்மாவின் தேவையை நிறைவு செய்யவும், அது எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் முயல்கிறது. உம்மாவின் துணை நலங்களையும் ஒழுங்குகளையும் கட்டியெழுப்பும் பயணத்தை வெற்றியடையச் செய்வதற்கு அவசியமான வலு, அறிவாற்றல், நோக்கு, சிந்தனா-நாகரிகக் கருத்துருக்கள் என்பவற்றையும் அது வழங்குகிறது.

'அறிவை இஸ்லாமியப் படுத்தல்' பணியானது உம்மாவின் சிந்தனையினதும் உளவியலினதும் உள்ளடக்கமாகத் தன்னைத் தகவமைத்துக் கொள்ள முனைகிறது. அதன் வழியாக, தீர்க்க மான எட்டுகளை எடுத்து வைத்து மாற்றச் செயல்வாதத்தையும், பரிபூரண நாகரிகச் சீர்திருத்தத்தையும் அப்பியாசம் செய்ய விளைகிறது. அந்த வகையில், தனது வார்த்தையின் அடிப்படை


*உருவாக்கமும், உள்ளடக்கமும், அதியுயர் இலக்குகளும், கிளை நோக்கங்களும், வழிமுறைகளும், சாதனங்களும் தூய்மையாக இருக்க வேண்டுமென்ற முழுப் பிரக்ஞை அதற்குள்ளது. தீர்க் கமும் திடமும் கொண்டவை அதன் வேர்கள். வானளாவ உயர்ந் தவை அதன் கிளைகள். ஏக இறைக் கோட்பாட்டுடன் இறுகப் பிணைந்தவை அதன் சிந்தனையும் இயக்கமும். அது வேண்டி நிற்பது தூய்மையும் உயர்வும் மிக்க இறைவனின் திருப்தியொன்றை மட்டுமே!*

*“நான் விரும்புவதெல்லாம் முடிந்தவரை சீர்திருத்தம் செய்வ தொன்றே. இறைவனைத் தவிர எனக்கு வேறெந்த உதவியும் கிடையாது. அவனிடமே பொறுப்புச்சாட்டி அவனிடமே மீள் கிறேன்”.*


*புகழனைத்தும் சர்வ உலகங்களின் ரட்சகனான அல்லாஹ்வுக்கே.*

# பின்னிணைப்பு


**உரு: 1.1**


பின்னடைவைத்
தாண்டிச் செல்லும்
விருப்பம்
நாகரிக முன்னேற்றத்-
துடன் இயைந்து
பயணிக்கும்
விருப்பம்
கலாசார படை-
யெடுப்பின் முன்
சரணாகதி அடைதல்
அதீத
உற்சாகத்துடன்
வரவேற்றல்
அடையாளத்தை
இழத்தல்
தெளிவற்ற
நோக்கு
ஆளுமையை
இழத்தல்
சிந்தனைச்
சிக்கல்
கலாசாரப்
பிரசன்னமின்மை
அறிவியல்
பின்னடைவு
பல்வேறு சீர்திருத்தத்
திட்டங்கள்


**உரு: 1. 2**


பல்வேறு சீர்திருத்தத் திட்டங்கள்
மேற்கையும் மேற்கத்திய சிந்தனையையும் ஏற்றுப் பின்பற்றுவதை அடிப்படையாகக் கொண்ட திட்டம்
இஸ்லாமியத் திட்டம்
கலப்புத் திட்டங்கள்
மேற்கத்திய சிந்தனையின் சர்வ தேசத் தன்மை
அரசியல் செயற்பாடுகள் மூலமாக
நம்பிக்கைப் பகுதியை சீர்திருத்தல்.
அரசியல் பகுதியை சீர்திருத்தல்
சமயம் சார்ந்த பாடங்களை அதிகரித்தல்
நம்பிக்கையையும் சிந்தனையையும் வேறுபடுத்திப் பார்க் காத குழப்ப நிலை
பலப் பிரயோகம் மூலமாக
கலாசாரத்தையும் சிந்தனையையும் குறுக்கி நோக்குதல்
அறிவுக்கு மதமில்லை என்ற மாயை

**உரு 1.3**


மேற்கை அல்லது மேற்குமயப்பட்ட எதனையும் பின்பற்று வதை அடிப்படையாகக் கொண்ட திட்டம்
இஸ்லாமியச் சூழமைவு
இஸ்லாமிய அறிவு முதுசம்
இஸ்லாமிய வரலாறு
அறபு மொழி
முஸ்லிம் தனிமனிதர்கள்
சிந்தைக் கட்டமைப்பு
அறிவுக் கட்டுருவாக்கம்
உளவியல் கட்டமைப்பு
மறுத்தல்
புரிதலின்மைசெயல்
நேர்த்தியின்மை
இடைவினையின்மை
முஸ்லிம் சிந்தையை நுணுக்கமாகப் பகுத்து நோக்க வேண்டிய தேவை
திட்டத்தை மீள முன்வைக்க வேண்டிய தேவை
இஸ்லாமிய கலைச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை.


**உரு 1.4**


மேற்கு மயமாக்கல் திட்டத்தின் தோல்வி
முஸ்லிம் சிந்தையை நுணுக்கமாகப் பகுப்பாய்தல்
திட்டத்தை வளப்படுத்திச் செறிவூட்டுதல்
இஸ்லாமிய கலைச் சொற்களைப் பயன்படுத்தல்.
அறிவார்ந்த எதிர்ப்பை இல்லா தொழித்தல்
முஸ்லிம் சிந்தையை நோக்கிய செயற்பாடுகளைச் செறிவாக் குதல்
கலாசார எதிர்ப்பை இல்லா தொழித்தல்
மனிதர்களது உளவியல் கட்டமைப்பை மீளக் கட்டமைத்தல்
பாரம்பரியக் கருத்தாக்கங் களை வீழ்த்துதல்
பாரம்பரிய இஸ்லாமியக் கலைச் சொற்களிலிருந்து பயன்பெறல்
முதுசங்களை மீள்வாசிப்புச் செய்தல்
கலைச் சொற்களை வசதிக் கேற்ப பயன்படுத்துதல்
மேற்குத் திட்டத்தை புதிய தோற்றத்தில் முன்வைத்தல்.


### உரு 3.1

முதல்கட்டம் (மேற்கத்திய சீர்திருத்தத் திட்ட எதிர்ப்பின் உக்கிர நிலை)

வரிப்படம் 1




வரிப்படம் 2 இரண்டாவது கட்டம் (மேற்கத்திய சீர்திருத்தத் திட்ட எதிர்ப்பின் பலவீன நிலை)



## உரு - 3.2

## இஸ்லாமிய சிந்தனையைப் புதுப்பிப்பதற்கான திட்டம்

உள்ளடக்கம்

- சிந்தனா முறைமைகளின் சீர்திருத்தம்.
- கலாசார மாதிரியை கட்டியெழுப்புதல்.

நோக்கம்

- சமகாலம் தழுவிய இஸ்லாமிய அசல் நிலையை சாத்தியப் படுத்தல்.
- நாகரிகச் சான்று பகரும் ஆற்றலை உம்மாவுக்குப் பெற்றுக் கொடுத்தல்.


வழிமுறை

- அசலின் வழிகாட்டலைப் பெறல்.
- நவீனத்தை உள்வாங்கிச் செரித்தல்.

வடிவம்

- சமகாலம் தழுவிய, ஒருமுகப்படுத்தப்பட்ட, தளைகளற்ற, பரிபூரண இஸ்லாமியத் திட்டம்.
- நெருக்கடியற்ற, சீரிய சிந்தனை.
- தவறோ திரிபோ இல்லாத தெளிவான முறைமை.
- குறைபாடுகளற்ற ஆரோக்கியமான கலாசாரம். - தடைகளற்று முழுமையாகச் சான்று பகரும் நாகரிகம்.

**உரு - 4.1**


மேற்கு நாகரிகத்தைக் கையாளல்
சமகால இஸ்லாமிய யதார்த்தத்தின் வீழ்ச்சி
சிரமம்
கடமையும் பொறுப்பும்
சீர்திருத்தத்தின் அவசியம்
சிந்தனா முறைமைகளைச் சீரமைத்தல்
கலாசார மாதிரியைக் கட்டியெழுப்புதல்
பாரம்பரிய அசலிலிருந்து வழிகாட்டலைப் பெறல்
நவீனத்துவத்தை ஜீரணித்தல்
செயல்பாட்டில் வினைத்திறனையும் தாக்கத்தையும் ஏற்படுத்தல்
பணியின் இயல்பை புரிந்து கொள்ளல்
வழங்கப்பட்ட பணி பற்றிய வாக்குறுதி
கடமை பற்றிய விரிந்த அறிவு

**உரு - 4.2**

## இஸ்லாமியத் திட்டம்

*கொள்கையை/ திட்டத்தை விளக்குதல்*

தெளிவுபடுத்துதல்/ விளக்குதல் /விரித்துரைத்தல்

*திட்டத்தைப் பாதுகாத்தல்*

*முன்வைப்பிலும் பொதுமைப்படுத்தலிலும் தெளிவின்மை, ஆழமின்மை, முரண்பாடு என்பன தோன்றா வண்ணம் விரிவான மாதிரிகளை முன்வைத்தல்*

*திட்டத்தை விருத்தி செய்தல்*

*அவதானம் / பின்தொடரல் / பகுப்பாய்வு / வியாக்கியானம் / வழிகாட்டல் /திறனாய்தல் /மதிப்பிடல் / திருத்துதல்*

*திட்டத்தை அறிமுகம் செய்தல்*

*திட்டம் பற்றியும் அதன் பல்வேறு அம்சங்கள் பற்றியும் அறிமுகம் செய்தல் / ஊழியர் குழுவையும் அடித்தளங் களையும் கட்டியெழுப்புதல் / பங்களிக்க முடியுமானோ ருக்கு உதவுதல் / வழிகாட்டல் வழங்கி அவர்களது பணிகளைத்திருத்தியமைத்தல்*

உரு 4.3

**இலக்கு**

அக ஒளி பெற்ற சிந்தையை உருவாக்குதலும் உம்மாவை பிரக்ஞை நிலைக்குக் கொண்டுவரலும்.

**எதற்காக?**

- இறைவன் வழங்கியபிரதிநித்துவப் பணிக்கு முஸ்லிமை தயார் படுத்துவதற்காக.
- பூமியின்மேற்பார்வையாளர் என்ற பொறுப்பை மேற் கொள்வதற்காக.
- வலிமைபெறல் என்ற நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக.
- இறைவன் தந்த அமானிப் பொறுப்பை மேற்கொள்வதற்காக.

**எப்படி?**

- சிந்தனா முறைமையை மீளொழுங்குபடுத்துவன் மூலமாக.
- அறிவாய்வு மற்றும் கலாசாரமாதிரியைஉருவாக்குவதன் மூலமாக.


**எதன் மூலமாக?**

- சிந்தனைச் சீர்திருத்தம் மூலமாக.
- முறைமையை விளக்குவதன் மூலமாக.
- அறிவியலை செழுமைப்படுத்துவதன் மூலமாக.
- அறிவை இஸ்லாமியப்படுத்துவன் மூலமாக.
- கலாசாரத்தை மேலும் வளப்படுத்துவதன் மூலமாக.
- நாகரிகத்தைக்க ட்டியெழுப்புவதன் மூலமாக.
- முதுசங்களைப்பேணுவன் மூலமாக.

**ஒவ்வொரு மையக்கருத்திலும்**

- அது பற்றிய ஆர்வத்தை உம்மாவிடம் கிளர்த்துதல்.
- ஆற்றல் கொண்ட வளவாளர்களைத் தயார்படுத்துதல்.
- உம்மா இலகுவாக கையாளக்கூடியவாறு அதுபற்றிய அறிவார்ந்த உள்ளடக் கத்தை முன்வைத்தல்.

உரு 4.4


உதவிச் சாதனங்கள்
நுணுகிக் கவனித்தல்
தொடர்ச்சி
வகை வேறாக்கம் - மதிப்பீடு - விமர்சனம் - தெரிவு - சுருக்குதல் பிரசுரித்தல் - கலைந்துரையாடல்
ஆய்வுகள்/ஆய்வுப் பத்திரங்கள்/ கட்டுரைகள்/ நூல்கள்/ அறிக்கைகள்
முதன்மைப் பணிகள்
உம்மாவின் ஆர்வத்தைத் தூண்டுதல்
தகுதி வாய்ந்த வளவாளர்களை தயார்படுத்தல்
உம்மா இலகுவாக கையாளத் தக்கஅறிவார்ந்த உள்ளடக்கத்தை முன்வைத்தல்
மையப்பணிகள்
சிந்தனை - முறைமை - அறிவும் அறிவியலும் கலாசாரமும் - நாகரிகம் - கலந்துரையாடல்

உரு 5.1

## அடிப்படையான நிகழ்ச்சித் திட்டம்

| | |
|---|---|
| 1 | ஒவ்வொரு மையக்கருத்துத்தொடர்பாகவும் நன்கு ஆய்வு செய்யப்பட்ட விரிவான ஆய்வுப்பத்திரங்களைத் தயார் செய்தல். |
| 2 | தேவையான உள்ளடக்கங்களைத்திரட்டிக் கொள்ளும் நோக்குடன் பொருத்தமான அறிவுற்பத்திகளை உடனுக்குடன் பிரசுரித்தல். |
| 3 | சிந்தனா-அறிவாளுமைகள், பல்கலைக்கழக மற்றும் கல்லூரிப் பொறுப்பாளர்கள் முதலானவர்களுடனான தொடர்புகளைச் செறிவாக்கி, பிரதான பணிகளை நோக்கி அவர்களது கவனத்தைத் திசைப்படுத்தல். |
| 4 | பல்கலைக்கழகப் பகுதித்தலைவர்களோடும் பேராசிரியர்களோடும் இறுக்கமான உறவுகளை ஏற்படுத்தி, மையப்பணிகள் தொடர்பான சிந்தனைகளைத் தத்தெடுக்குமாறு அழைப்பு விடுத்தல். |
| 5 | உயர் கற்கைகளில் ஈடுபடும் மாணவர்களைத் தொடர்பு கொண்டு, மையப்பணிகளுடன் தொடர்புடைய ஆலோசனை களையும் அறிவியல் செயல்திட்டங்களையும் முன்வைத்தல். |
| 6 | தனிச்சிறப்பு வாய்ந்த சமூக விஞ்ஞான நூலகங்களை உருவாக்கு வதில் கவனம் செலுத்தல். |
| 7 | மையப் பணிகளுக்கு இயைபான வகையில் பெருமளவு உயர் கற்கைத் திட்டங்களை உருவாக்கிப் பல்கலைக் கழகங்களில் விளம்பரப்படுத்தல். |
| 8 | மையப் பணிகளைத் துலக்குவதற்கு அவசியமான ஆய்வுத் தலைப்புகளைத் தெரிவு செய்து, அவை தொடர்பாக எழுதுவோருக்கு மானியங்கள் வழங்குதல். |

உரு 5.2

## உரையாடப்படுவோர் : அரசு / அதிகாரிகள்

இவர்களது பண்புகள்:

தனியுரிமைக்குப் பழக்கப்பட்டவர்கள்.
போட்டியாளரை விரும்பாதவர்கள்.
எந்தத்துறையிலும் தமது பரிந்துரைகளுக்கு மாறாக இருப்பதை நிராகரிப்பவர்கள்.

இவர்கள் ஏன் முக்கியம்?

கல்வித்துறை, விழிப்புணர்வூட்டல், ஊடகம் என்பவற்றை அரசே கட்டுப்படுத்துகிறது.
பதவி, அந்தஸ்து என்பவற்றின் மீதான நாட்டமும், நடைமுறையி லிருக்கும் கொள்கைக்கு மாற்றமான முன்னெடுப்புகளால் அவை பறிபோய் விடுமென்ற அச்சமும்.

புதியன பற்றி இவர்களது நிலைப்பாடு:

எச்சரிக்கையுணர்வும் தயக்கமும்.
சிலபோது உள்நாட்டு மட்டத்திலும் சர்வதேச அளவிலும் நிறுவப்பட்ட கொள்கைகளை நடைமுறைப் படுத்த முயலல்.

தொடர்பாடும் வழிகள்:

தாம் மேற்பார்வை செய்யும் நிறுவனங்களூடாக பயனுள்ள வற்றை உள்நுழைப்பதற்கு இவர்கள் காட்டும் ஆர்வம்.

### உரை

உரையின் வடிவம்:

அவர்கள் திருப்தியடையும் வகையில் நமது விவகாரத்தை முன்வைத்தல்.
அவர்கள் எதிர்கொள்ளும் பல நெருக்கடிகளுக்கு இப்பணிதீர்வாக அமை யும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தல்.நமது விவகாரத்தை அவர்களது பிரச் சினைகளோடும் ஆர்வங்களோடும் தொடர்புபடுத்திக் காட்டுதல்.

நோக்கங்கள்:

-நமது விவகாரத்தைப் பிறரிடம் எடுத்துச் செல்ல உதவக்கூடியோராக அதிகாரிகளை மாற்றுதல்.
-அதுபற்றியவிழிப்புணர்வைஅவர்கள்தாமாகவேபிறரிடம்ஏற்படுத்துவதும், அதற்குத் தேவையான வளங்களை அவர்களே திரட்டித்தருவதும்.

## உரு 5. 3
## உரையாடப்படுவோர் : மதச்சார்பற்றவர்கள்

இவர்களது பண்புகள்:

வகை 1: கலந்துரையாடலில் நம்பிக்கை கொண்டோர்.
வகை 2: நிராகரித்துத் தாக்குதல் தொடுப்போர்.
வகை 3: ஏற்றுப் புரிந்து கொள்வோர்.

இவர்கள் ஏன் முக்கியம்?

-சில இஸ்லாமிய நாடுகளின் அரசுகளது சமயச்சார்பற்ற போக்கு.
-மேற்கத்திய சிந்தனைப் படையெடுப்பு

நமது பணி தொடர்பாக
இவர்களது நிலைப்பாடு:

வகை1: விவேகமான முயற்சியும் கலந்துரையாடத் தகுதியும்.
வகை 2: அதிகார பீடங்களிலிருந்து தூரப்படுத்தும் முயற்சி.
வகை3: பரிந்துரையின் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்ளல்.

தொடர்பாடும் வாய்ப்புகள்:

வகை 1: கலந்துரையாடலுக்கான இவர்களது தயார்நிலை.
வகை 2: விவகாரத்தின் உண்மைத் தன்மையை ஏற்றிருத்தல்.

### உரை

உரையின் வடிவம்:

-மதச் சார்பற்றவர்களிலுள்ள மேல்தட்டினரைத் தாண்டி பொது மக்களை நோக்கிச் செல்லல்.
-பின்வரும் செயற்பாடுகளூடாக அதே வட்டங்களிலிருந்து அவற்றுக்கு எதிர்நிலைப்பட்ட செல்நெறியொன்றை உருவாக்கு தல்:
-மேற்குநாகரிகத்தின் அறிவுசார் அடிப்படைகளை விஞ் ஞான பூர்வமாகவும் தீர்க்கமாகவும் விமர்சனத்துக்கு உட்படுத்தல்.
மதச்சார்பற்ற ஆய்வுகளை விஞ்ஞான பூர்வமாகவும் தீர்க்கமாக வும் விமர்சனத்துக்கு உட்படுத்த ஆர்வமூட்டல்.

நோக்கங்கள்:

-நமது பணியை எடுத்துச் சொல்லவும் தெளிவுபடுத்த வுமான உரையாடலுக்குரிய வழிகளைத் திறத்தல்.
-இப்பணியைப் புரிந்து கொள்பவர்கள் நிராகரித்தல் அல்லது எதிர்த்தல் என்ற நிலையிலிருந்து ஏற்று நம்பிக்கைக் குரியவர்களாக மாறுவதற்கான வழியைத் தயார்படுத்தல்.

உரு 5.4

## உரையாடப்படுவோர் : இஸ்லாமிய இயக்கங்கள்

இவர்களது பண்புகள்:

-சலஃபியப் போக்கின் செல்வாக்கு.
-எகிப்து மற்றும் ஷாம் பிராந்தியச் செல்வாக்கு பலவீன மடைந்தமை.
-பாரம்பரிய வளைகுடா சிந்தனைப்பள்ளியின் செல்வாக்கு வெளிப்படல்.

தோன்றிய காரணங்கள்:

-சிந்தனையின் வகிபாத்திரம் நலிவடைந்து அனைத்து உரையாடல்களும் அகீதா மற்றும் ஃபிக்ஹு உரையாடலாக மாறியமை.
-சிந்தனைத் தலைமைத்துவ மையங்கள் பொது வேலைத்திட்டத்திற்கு அவசியமான அனுபவமோ தேர்ச்சியோ அற்றவர்களுக்கு நகர்ந்தமை.
-சிந்தனைப் பரிமாணம் மற்றும் நாகரிக அணுகுமுறை என்பவற்றின் முக்கியத்துவத்தை அறிவுத் தலைமைத்துவம் புரிந்து கொள்ளாமை.

நமது விவகாரத்தை அவை எப்படி நோக்குகின்றன?

- புத்திஜீவித்துவ இன்பம்.
- நெருக்கடியை அடையாளம் காண்பதிலேற்பட்ட தவறு.
- இயக்க ஒழுங்குக்கெதிரான அச்சுறுத்தல்.
- இயக்க முறைமைக்குப் பதிலீடொன்றை முன்வைப்ப தற்கான பகுத்தறிவு முயற்சி.
- இயக்கத்தின் மீதான விசுவாசத்தை மாற்றியமைக்கும் நோக்கம்.
- இயக்கத்தின் திவால் நிலையையும் இயலாமையையும் எடுத்துக் காட்டி அதன்மீதான நம்பிக்கையைப்பலவீனப்படுத்தல்.
- பிறர் மீதான அறிவு மேலாண்மையை வெளிப்படுத்தும் நோக்கம்.

உரு 5.4 (தொடர்ச்சி)

தொடர்பாடும் வாய்ப்புகள்:

- இஸ்லாமிய இயக்கங்கள் தமது விவகாரங்களை அழகாக முனவைப்பதிலும், அதற்காக பல்வேறு உத்திகளை மேற்கொள்வதிலும், தமது இருப்பை உத்தரவாதப் படுத்திக் கொள்வதிலும் எப்போதும் ஆர்வம் கொண்டிருக்கும்.
- எதிராளிகளுக்கு முகம் கொடுப்பதற்குஅவற்றுக்கு அறிவு சார் கட்டுச்சாதம் தேவை.

**உரை**

உரையின் வடிவம்:

- நமது பணியை இஸ்லாமிய சீர்திருத்த இயக்கத்துடன் தொடர்புபடுத்தல்.
- சில முக்கியமான பதப்பிரயோகங்களைத் தவிர்த்தல்.
- கலாசாரத் துறைகளிலும் நிகழ்வுகளிலும் பங்கேற்றல்.
- குறுங்குழுவாதங்களிலிருந்து விலகியிருத்தல்.
- தலைமைத்துவங்களுடன் சினேகபூர்வ உறவுகளை வளர்த் தல்.
- படித்த இளைர்களுடன் நேரடியாக உரையாடுதல்.

நோக்கங்கள்:

- இயக்கங்கள் இப்பணியை தத்தெடுத்தல்.
- அவை தமது திட்டங்களுள்இதனையும் உள்வாங்குதல்.
- இப்பணியின் பல்வேறு பக்கங்களிலிருந்து அவை பயன் பெறல்.
- இப்பணிபற்றிய புரிதல் எல்லை விரிவடைதல்.
- அச்சங்களைக் களைந்து ஏற்பு நிலையை ஏற்படுத்தல்.

உரு 5.5

## உரையாடப்படுவோர் : சன்மார்க்கக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்ற பட்டதாரிகள்

பண்புகள்:

- தாம் இஸ்லாத்தின் உத்தியோகபூர்வப் பேச்சாளர்களாக இருப்பதில் அக்கறை கொண்டிருப்பர்.- இஸ்லாம் குறித்து என்ன பேசப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சட்டபூர்வ அதிகாரம் தமக்கே இருப்பதாக நம்பு வர்.
- பாரம்பரியப் பின்பற்றலில் தங்கியிருப்பர்.
- பிறர் மீது பொறுப்பைச் சுமத்தப் பழகியிருப்பர்.
- இஸ்லாமிய விவகாரங்களை உபதேசங்களாகவும் உரைகளாகவும் மார்க்கத் தீர்ப்புகளாகவும் மாத்திரம் சுருக்கிக் கொண்டிருப்பர்.
- பிறழ்வு, தவறு, குறைபாடு, பின்னடைவு என்பவற்றுக்கு அப்பாற்பட்டவர்களாக தங்களைக் கருதுவர்.
- திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் சார்ந்த பணிகளை பிறர் மீது சுமத்துவர்.
- தங்களது அந்தஸ்தைப் பாதிக்கின்ற அல்லது தங்களது பாத்திரத்தை விளிம்பு நிலைக்குத் தள்ளுகின்ற அனைத்தையும் நிராகரிப்பர்.

இவர்கள் முக்கியத்துவம் பெறு வதற்கான காரணங்கள்:

- பாரம்பரிய ஃபிக்ஹு போதுமானது என நம்பி அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளும் போக்கு இவர்களிடம் செல்வாக்குப் பெற்றிருத்தல்.
- அறியாமையின் பரவலும், சமூகத்தில் இஸ்லாத்தின் வகிபாத்திரத்தை விளிம்பு நிலைக்குத்தள்ளலும்.

நமது விவகாரத்தை அவர்கள் எப்படி நோக்குகின்றனர்?

- மேலதிக சுமை
- தகுதியின்மை
- இயலாமையும் தோல்வியும் வெளிப்படுவதால் தோன்றும் சங்கடம்

உரு 5.5 (தொடர்ச்சி)

இவர்களுடன் தொடர்பாடும் வாய்ப்புகள்:

- இவர்களது இதய சுத்தியும் தூய்மையும்.
- இவர்களது அந்தஸ்தையோ முக்கியத்துவத்தையோ பாதிக்காத வகையில் இஸ்லாத்துக்கு உதவக் கூடிய அனைத்தும் இவர்களை மகிழ்விக்கும்.

**உரை**

வடிவம்:

- கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் பங்கேற்கச் செய்தல்.
- நல்ல இளைஞர் சக்திகளை ஆய்வுத்திட்டங்களில் பங்கேற்கச் செய்தல்.
- சிலர் சிறப்பாக மேற்கொள்ளக் கூடிய துறைகளில் அவர்களது அனுபவங்களிலிருந்தும் ஆலோசனைகளிலிருந்தும் பயன்பெறல்.
- அவர்களுக்குப் பொருத்தமான செயல்பாடுகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

நோக்கங்கள்:

- அவர்களுக்கும் ஒரு முக்கிய பாத்திரத்தை வழங்குதல்.
- அவர்களது அறியாமையையும் மறதியையும் இல்லாதொழித்தல்.
- உஸ்மானிய சாம்ராஜ்யம் வீழ்ந்தது முதல் அவர்கள் அனுபவித்த விளிம்பு நிலையிலிருந்து மீட்டெடுத்தல்.
- அவர்களில் பலரை நமது பணியின் பாகமாகவும், அதற்கு உதவும் காரணியாகவும் மாற்றிக் கொள்ளல்.

உரு 5.6

## உரையாடப்படுவோர் : விவகாரங்களை மேலோட்டமாக அணுகுபவர்கள்

பண்புகள்:

இரு குழுவினர்
1.முயற்சியை நிராகரிப்பவர்கள்
2. இஸ்லாத்தை மேலோட்டமாக விளங்கிக்கொண்டவர்கள்

இஸ்லாமியப்படுத்தல் செயல்முறையை அர்த்தமற்ற நிலைக்கு மாற்றுவர்.
கோட்பாட்டுக்கும் சிந்தனைக்கும் இடையிலுள்ள தொடர்பைப் புரிந்துகொள்ளத் தவறுவர்.
எண்ணக்கருக்களின் இயல்புகளையும் அவை புரிந்துகொள்ளப் பட்டு பிரயோகிக்கப்படும் வழிகளையும் பற்றிய விளக்கமில்லை.

இவர்கள் முக்கியத்துவம் பெறு வதற்கான காரணங்கள்:

போலியாகப் பிரதிபண்ணுதல்
உள்ளடக்கத்தைவிட வடிவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
மற்றவர்களை வென்றெடுத்து தீவிர ஆதரவு தேடுதல்
அறிவுரீதியான, விஞ்ஞானரீதின வெறுமை

நமது விவகாரத்தை அவர்கள் எப்படி நோக்குகின்றனர்?

எதிர்க்க மாட்டார்கள். அதன் அடிப்படையை நம்புவார்கள்.
ஆனால் அதனை மேலோட்டமானதாகக் காட்டுவர்
அதனை முன்வைப்பவர்களின் அபிலாஷைகளைப் பரிகாசம் செய்வர். மக்களை அதை விட்டும் திசை திருப்புவர்
முயற்சியை நீர்த்துப்போகச் செய்து அது பயனற்றது என்பர்.

இவர்களுடன் தொடர்பாடும் வாய்ப்புகள்:

மெய்யான நோக்கம் காணப்படுதல்
முயற்சியின் கருத்துக்களை வலுப்படுத்தவும் அதற்கு அத்தியவாரமிடவும் ஆற்றலுள்ளவர்கள் இருத்தல்

உரு 5.6 (தொடர்ச்சி)

**உரை**

வடிவம்:

முயற்சியை அதன் வெவ்வேறு பரிமாணங்களில் தொடர்ந்து முன்வைத்தல்
கருத்துக்களின் தோற்றுவாயை நிறுவுதல்
உதாரணங்களையும் மாதிரிகளையும் வழங்குதல்
தொழிநுட்ப நெருக்கடியை சிந்தனை-கலாசார நெருக்கடி யுடன் தொடர்புபடுத்தும் ஆய்வுக் கட்டுரைகளையும் ஆய்வுகளையும் பிரசுரித்தல்
அவர்களுடைய கருத்துக்களை தேவைக்கேற்ப மாற்றியமைத்-தல்
அவற்றின் பெபேறுகளை அவதானித்தல்
அவர்கள் முன்வைப்பதை அகவயமாக விமர்சித்தல்

நோக்கங்கள்:

அவர்களில் முயற்சியின் எண்ணக்கருக்களை திடப்படுத்தல்
இஸ்லாமிய சட்டவியல், இலக்கியம்இ ஆய்வு, விவாதம் பே-ான்ற முறைமைசார் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்குமாறு அவர்களைத் தூண்டுதல்
நெருக்கடி, அதற்கான தீர்வு என்பன பற்றிய அவர்களது கருத்-துக்களை மாற்றியமைத்தல்.

உரு 5.7

## உரையாடப்படுவோர் : சமரசத்தையும், தெரிந்தெடுக்கும் அணுகு முறையையும் ஆதரிப்பவர்கள்

பண்புகள்:

- முன்முடிவுகளை வைத்துக் கொண்டு அவற்றுக்கு வாய்ப்பானவற்றை மாத்திரம் இஸ்லாத்திலிருந்தும், அதன் அறிவுப் பாரம் பரியத்திலிருந்தும் நாகரிகத்திலிருந்தும் தேர்ந்தெடுத்தல்.
- இவர்களிடம் இருப்பது முறைமையின் வடிவமும் வெளித் தோற்றமுமேயன்றி அதன் அடிப்படைகளோ உள்ளடக்கமோ அல்ல.
- மேற்கத்திய மூலாதாரச் சட்டகத்துக்கும் இஸ்லாமிய மூலாதாரச் சட்டகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கண்டுகொள்வதில்லை.

இவர்கள் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்:

- இஸ்லாமியப் பாரம்பரியம் தவறுகளிலிருந்து புனிதமானது என்ற எடுகோளுடன் அதனை முன்வைத்தல்.
- இஸ்லாமியப் பாரம்பரிய மாதிரிகளை எவ்வித மாற்றமுமின்றி அப்படியே இன்றைய உலகின் மீது மீள்பிரயோகிக்க முயலல்.

நமது பணியில் இவர்களது நிலை: பார்க்க: உரு 5.4

இவர்களுடன் தொடர்பாடும் வாய்ப்புகள்: பார்க்க உரு: 5.4

**உரை**

வடிவம்:

- இவர்கள் முன்வைக்கும் விடயங்களை விடயவாரியான விமர்சனத்துக்கு உட்படுத்தல்.
- கண்மூடிப் பின்பற்றலின் நோய்க்குறிகளையும், சிந்தனை மீதும் சமூகத்தின்மீதும் அதன் கேடுகளையும் எடுத்துக்காட்டல்.
- யதார்த்தத்தையும் புதிய மாற்றங்களையும் கவனத்தில் கொள்ளல்.
- 'உஸூல்' சார்ந்த மாதிரிகளை முழுமையாகவும் இலகுவான முறையிலும் முன்வைத்தல்.

நோக்கங்கள்:

- இப்பணியின் அடிப்படையான அம்சங்கள் பற்றிய புரிதலை இவர்களிடம் அதிகரிக்கச் செய்தல்.
- தகுதியும் ஆற்றலும் கொண்டவர்களை இப்பணிக்குப் பங்களிப்புச் செய்ய உற்சாகப்படுத்தல்.

உரு 5.8

## உரையாடப்படுவோர் : பொது மக்கள்

பண்புகள்:

- சிறிது அறிவு கலந்த அறியாமையின்வியாபகம்.
- போலித்தனமும், மூடநம்பிக்கையும், மாய மந்திரங்களும் பரவிக் காணப்படல்.

இவர்கள் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்:

- கண்மூடிப் பின்பற்றும் பண்பு.
- கல்வியறிவின்மை.
- அறிவையும் சிந்தனையையும் இகழ்தல்.

நமது பணியில் இவர்களது நிலை:

படித்தவர்களதுவெற்றுப் பேச்சு

இவர்களுடன் தொடர்பாடும் வாய்ப்புகள்:

அவர்களது தரத்துக்கு இறங்கி அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் உரையாடுதல்.

**உரை**

வடிவம்:

- எளிமைப் படுத்திப் பல்வேறு வழிகளில் முன்வைத்தல்.
- கத்ர், ஜப்ர், தெரிவுச் சுதந்திரம், செயல் சுதந்திரம், மனித கண்ணியம் முதலிய விவகாரங்களில் கவனம் குவித்தல்.
- காரணிகளுக்கும் விளைவுகளுக்கும் இடையிலான தொடர் பை விளக்குதல்.

நோக்கங்கள்:

- மனிதப் பொறுப்பு பற்றியும் அதன் அடிப்படை பற்றியுமான அதீத அறியாமையை எதிர்த்துப் போராடல்.
- அல்-குர்ஆனிய உரையாடல் பற்றியும் அதன் வழிகாட்டல் பற்றியுமானஅறியாமையை எதிர்த்துப் போராடல்.
- பொதுமக்களைப் புறக்கணிக்காமல் சிந்தனாரீதியாகவு ம் கலாசாரரீதியாகவும் அவர்களைத்தர முயர்த்துதல்.

உரு 5.9

## உரையாடப்படுவோர் : பல்கலைக்கழக மாணவர்கள்

பண்புகள்:

- இஸ்லாமிய நோக்கின்மை.
- பல்வேறு தாக்கங்களுக்குஉட்படக் கூடிய நிலை.
- இஸ்லாமிய உணர்வு காணப்பட்டாலும் இஸ்லாமியக் கோட்பாடுகள், சிந்தனைகள், நம்பிக்கைகள் என்பவற்றில் ஆழமின்மை.

இவர்கள் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்:

- வஹியைப் புறக்கணித்த அறிவைப் பெற்றிருத்தல்.
- இஸ்லாத்தின்போதனைகளைவிட்டுத்தூரமாயிருத்தல்.
- சிந்தனாரீதியாகவும் கலாசாரரீதியாகவும் மேற்குலகுக்கு அடிபணியும் நிலை.

நமது பணியில் இவர்களது நிலை:

வேலையின்மையையும், சமூக பொருளாதார நாகரிக நெருக்கடிகளையும் யதார்த்தபூர்வமாக அணுகுகின்ற தீர்வுத் திட்டங்களை ஏற்கும் தயார் நிலை.

இவர்களுடன் தொடர்பாடும் வாய்ப்புகள்:

- நெருக்கடியைத் தீர்ப்பதில் இவர்களுக்குள்ள ஆர்வம்.
- மேற்குலகுடன் போட்டி போடும் ஆர்வம்.
- எழுச்சிக்காக உழைக்கும் விருப்பு.

**உரை**

வடிவம்:

- நெருக்கடி பற்றிய பிரக்ஞையைப் பரப்புதல்.
- இஸ்லாமிய நோக்கைத் தெளிவுபடுத்தல்.
- இஸ்லாமிய அறிவியல் உணர்வை வளர்த்தல்.

நோக்கங்கள்:

- பங்களிக்கும் ஆற்றல் கொண்ட வளவாளர்களை உருவாக்குதல்.
- பல்கலைக்கழக மாணவர்களது ஆர்வத்தைத் தூண்டி பொறுப்புகளைச் சுமப்பதில் அவர்களையும் பங்கேற்கச் செய்தல்.
- நமது பணிக்கு உதவக் கூடிய வகையிலான ஆய்வுக் கட்டுரைகளை எழுத பல்கலைக் கழகங்களில் வழிகாட்டல்களை வழங்குதல்.

உரு 5.10

## உரையாடப்படுவோர் : பல்கலைக்கழகப்பேராசிரியர்கள்

பண்புகள்:

- மதச்சார்பற்றவர்கள்; மேற்கு மயப்பட்டவர்கள். சிந்தனா ரீதியாகவும் கலாசாரரீதியாகவும் மேற்குலகுக்கு அடிபணியும் முறைமையையும் கலாசாரத்தையும் பின்பற்றுபவர்கள்.
- பாரம்பரியசிந்தனைப் பாங்கு கொண்டவர்கள். சுயாதீன மான அறிவு முயற்சிகளில் ஈடுபடும் முஸ்லிம்சிந்தையை உருவாக்க முடியாத பாரம்பரியக் கல்விமுறையை ஏற்றிருப்பவர்கள்.

இவர்கள் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்:

- மேற்குத் திட்டத்திற்கு எந்தப்போட்டியும் இல்லாமை.
- வினைத்திறன் மிக்க இஸ்லாமியச் சட்டகமொன்றை ஏற் படுத்த முடியாத குறைபாடான கல்வித்திட்டங்கள்.
- இஸ்லாமிய நோக்கொன்று இல்லாமை.

நமது பணியில் இவர்களது நிலை:

(மேலே குறிப்பிட்ட இரு வகையில் எவ்வகையைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பொறுத்தது.)

இவர்களுடன் தொடர்பாடும் வாய்ப்புகள்:

- முழு நேர அறிவியல் செயற்பாட்டில் இவர்களுக்குள்ள ஆர்வம்.
- சிந்தனா, கலாசாரப் பணியில் பங்கேற்பதற்கான இவர்களது தயார் நிலை.

உரு 5.10 (தொடர்ச்சி)

**உரை**

வடிவம்:

- மேற்கத்திய சிந்தனை தொடர்பாக ஆக்கபூர்வமான நிலைப் பாடொன்றை எடுப்பதோடு, சிந்தனா ரீதியாக சுயாதீனமாக உழைக்கக் கூடியவர்களை உற்சாகப்படுத்தல்.
- உம்மாவின் விவகாரங்களையும் சிந்தனா நெருக்கடியையும் வெளிக் கொணர்ந்து கலந்துரையாடுதல்.
- கல்விமுறைகளைத் தெளிவுபடுத்தவும், ஆய்வுகளைத் திசைப்படுத் தவும் உதவக்கூடிய சிந்தனைகளில் கவனம் குவித்தல்.

நோக்கங்கள்:

- சிந்தனைச் செல்நெறிகளை வரையறுத்து அறிந்து விமர்சனத் துக்கும் மதிப்பீட்டுக்கும் உட்படுத்தல்.
- சிந்தனா, கலாசார, கல்வித்தலைப்புகளில் ஈடுபாடு காட்டக்கூடிய ஆய்வுக் குழுக்களை உருவாக்குதல்.
- செயல்திறன் மிக்க சிறந்த நபர்களுடனான தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்ளல்.

## உரு 6.1
## நமது உரையாடலின்பொதுப்பண்புகள்

இயல்பில்...

- அது உயர் வர்க்கத்துடன் நிற்காமல் வெகுமக்களோடும் உரையாடும்.
- வெகுமக்களைப் புறக்கணித்து உயர் வர்க்கத்துடன் மட்டும் உறவாடாது.
- பிறரை விடவும் தானே வெகு மக்களைத்திரட்டிக் கொள்ள வேண்டும் என முயற்சிக்காது.
- இயக்கக் கட்டமைப்புகளை உருவாக்க முயற்சிக்காது.
- இஸ்லாமிய இயக்கங்களுக்கும் கட்சிகளுக்கும் பதிலீடாக தன்னை முன்னிறுத்தாது.
- பிறருக்கு இஸ்லாத்தை முன்வைப்பதில் முழு மொத்தத் தர்க்க இறையியல் கண்ணோட்டத்தைத் தாண்டிச் செயல்படும்.
- பகுதியளவிலான சட்ட நியாயவியல் நோக்கை தாண்டிச் செயல்படும்.
- மானிடப் பரிமாணம், கால-இடப்பரிமாணங்கள், முழுமொத்த விதிகள், அதியுயர் இலக்குகள் என்பவற்றைப் பிடிவாதமாக கவனத்தில் கொள்ளும்.
- பிறரை நிராகரிப்பாளர்களாக அடையாளப்படுத்தப் பிடிவாதமாக முற்படும் 'அகீதா' சார்ந்த அணுகுமுறையை விட்டு விலகிச் செல்லும்.

வடிவத்தில்

- சிந்தனை, அறிவு, கலாசாரம்என்பவை சார்ந்த இடைவெளிகளை நிரப்பும் இலட்சியம் கொண்டிருத்தல்.
- உம்மாவிடம் காணப்படும் சாதனங்களை வலுப்படுத்தப் பாடுபடுவதோடு உம்மாவைக் கடைத்தேற்ற இதய சுத்தியுடன் உழைப்பவர்களுக்கு உதவுதல்.
- சீர்திருத்தம் என்பதை வெறும் சட்ட முடிவுகளாகவும் தீர்ப்புகளாகவும் சுருக்கிக்கொள்ளாமல், கையாளப்பட வேண்டிய பிரச்சினையாக நோக்குதல்.
- சிந்தனா, அறிவு, கலாசார, நாகரிக முன்னரங்குகளைப் பாதுகாப்பதற்காக உழைத்தல்.

செயற்பாட்டில்...

- புரிந்துகொள்ளத்தக்க எளியமையான முன்வைப்பும் இலகுவான கையாளலும்.
- முழு உம்மாவையும் சென்றடையக்கூடிய ஆற்றலும் இலகுத் தன்மையும்.

## உரு 6.2
## உரையாடுபவர் குறித்த நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1 | பின்வருவனவற்றைச் சாதிக்கும் வரை இடைவிடாது செயற் படல்:<br>- இப்பணி பற்றி அவசியமான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.<br>- அவசியமான கட்டங்களைச் சாதிக்கப் போதுமான வளவாளர் குழுவை உருவாக்குதல்.<br>- வெற்றிகரமான கற்பித்தலுக்கு அவசியமான உள்ளடக்கத்தை வழங்குதல்.<br>- பல்கலைக்கழகங்களிலும் பிற கல்வி நிலையங்களிலும் 'அடைகாப்புக்கருவிகளை'(incubators) தயார்படுத்தல். |
| 2 | நமது நிறுவனத்தின் (IIIT) பயணம் பற்றிய மதிப்பீட்டையும் விமர்சனத்தையும் தொடராக மேற்கொள்ளல். |
| 3 | ஒரு தலைப்பட்ச நிலைப்பாட்டை அல்லது நமது நிறுவனம் முன்வைப்பது மட்டுமே அவசியமான தீர்வு எனக்கருதுவதை அல்லது குறுங் குழுவாதத்தைத் தவிர்த்தல். |
| 4 | பணியின் அடிப்படைக் கொள்கைகளிலும் இலக்குகளிலும் முரண்பட்ட பரிந்துரைகள் தோன்றுவதைத் தவிர்த்து இரு அடிப்படைகளில் செயற்படல்:<br>சிந்தனை, கலாசாரம், அறிவு, நாகரிகம் என்பவற்றுக்கான அடிப்படை மூலாதாரங்களாக வஹியையும் பிரபஞ்சத்தையும் ஆக்கிக் கொள்ளல்.<br>சமூக மானிடவியல் துறைகளிலான இஸ்லாமிய முதுசங்களையும் மானிட முதுசங்களையும் உற்றுக் கவனித்தல். |
| 5 | உம்மாவின் வாழ்வில் முதன்மைப்படுத்தப்பட வேண்டிய அம்சங்களைப் புறக்கணிக்காதிருத்தல். |
| 6 | உம்மாவின் பிரச்சினைகளை விட்டு ஒதுங்க மறுத்தல். |
| 7 | வெற்றுச் சிந்தனையில் மூழ்குவதைத் தவிர்த்தல். |
| 8 | அவசியமான நெகிழ்வுத் தன்மையையும், புத்தாக்கம் மிக்க முன்னெடுப்பையும் பேணல். |
| 9 | இப்பணியைப் பலப்படுத்துவதிலும், இதற்காக உழைப் போரின் அணியில் இணைந்து கொள்ளுமாறு பிறரைத் தூண்டுவதிலும் பெருமளவு பங்கேற்றல். |
| 10 | தனிப்பட்ட விருப்பங்களையும் மனச்சாய்வுகளையும் சிந்தனை போன்றுமுன்வைக்காதிருத்தல். |



கெய்ரோவின் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் ஈட்டிக் கொண்ட தாஹா ஜாபிர் அல் - அல்வானி (1935 - 2016), ஐக்கிய அமெரிக்காவின் Graduate School of Islamic and Social Sciences (GSISS), Fiqh Council of North America ஆகியவற்றின் தலைவர். The International Institute of Islamic Thought இன் ஸ்தாபக உறுப்பினர், முன்னாள் தலைவர். OIC Islamic Fiqh Academy உறுப்பினர். அறபு மொழியில் வெளிவந்துள்ள அன்னாரின் ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் ஏராளம். ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள ஆக்கங்களில் குறிப்பிடத்தக்கன:

Source Methodology of Islamic Jurisprudence; Towards a Fiqh for Minorities; The Ethics of Disagreement in Islam; Ijtihad; The Quran and the Sunnah: Time – Space Factor; Issues in Contemporary Islamic Thought; Islamic Thought: An Approach to Reform.

தமிழ் மொழியில் வெளிவந்து கலாநிதி அல்வானி அவர்களது நூல்கள்: குர்ஆனும் சுன்னாவும் - கால, இட பரிமானங்கள்; இஸ்லாமிய சட்டவியலில் பெண்களின் சாட்சியம்; முரண்பாடுகள் பற்றிய இஸ்லாமிய ஒழுக்க நெறிகள்; இஸ்லாத்தில் மதம் மாறுதல்; இஸ்லாத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரின் உரிமைகள்; முரண்பாட்டு ஒழுக்கத்திலிருந்து முரண்பாட்டு தவிர்ப்பை நோக்கி....

Published by
**Fuzin Texts**
23/3 Market Road, Dharga Town 12090
Sri-Lanka.

INTERNATIONAL INSTITUTE OF ISLAMIC THOUGHT

ISBN 978-624-5832-06-4